த. பா. நி. (க.வெ) வரிசை எண்—539

இந்துச் சட்டம்

ஆசிரியர் :

செந்தில்நாதன், பி.ஏ., பி.எல்.,

வழக்குரைஞர்,

உயர்நீதிமன்றம், சென்னை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க.வெ.) வரிசை எண்—539

இந்துச் சட்டம்

ஆசிரியர்
ச. செந்தில்நாதன், பி.ஏ., பி.எல்.,
வழக்குரைஞர்,
உயர்நீதி மன்றம், சென்னை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—December, 1973

T.N.T B.S. (C.P.) No. 539

© Tamil Nadu Text Book Society

HINDU LAW

S. SENTHILNATHAN

Price Rs. 5.00

Published by the Tamil Nadu Text Book Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.

Printed by
The Darwin Printing Works,
5/5, Whannels Road,
Egmore, Madras-8.

அணிந்துரை

திரு. இரா. நெடுஞ்செழியன்
(தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதின்மூன்றாண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்றுவந்தனர். 1969ஆம் ஆண்டின் தொடக்கத்தில் புகுமுக வகுப்பிலும் (P.U.C.), 1969ஆம் ஆண்டிலிருந்து பட்டப்படிப்பு வகுப்புகளிலும் அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மன நிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ் வகையில், கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்க்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக்கழகம் ஆண்டுதோறும் எடுத்து வரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், தத்துவம், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டுவருகிறது.

இவற்றுள் ஒன்றான 'இந்துச் சட்டம்' என்ற இந் நூல் தமிழ் நாட்டு பாடநூல் நிறுவனத்தின் 539ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 574 நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு கல்வி, சமூக நல அமைச்சகத்தின், மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்தின்கீழ் வெளியிடப் படுகிறது.

உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெற வேண்டும். அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனங் கலந்த நன்றி உரியதாகுக.

இரா. நெடுஞ்செழியன்

பொருளடக்கம்

			பக்கம்
1.	இந்துச் சட்டத்தின் தோற்றமும் ஆதாரங்களும்	...	1
2.	திருமணம்	...	18
3.	தத்தெடுப்பு	...	59
4.	பராமரிப்பு	...	81
5.	உரிமை வயது அடையாமையும் காப்பும்	...	94
6.	இந்துக் கூட்டுக் குடும்பம்	...	108
7.	கூட்டுக் குடும்பத்தில் கடனும் மாற்றுக்கமும்	...	124
8.	பாகப்பிரிவினை	...	137
9.	சீதனம்	...	155
10.	மகளிர் சொத்துரிமை	...	169
11.	மரபு முறை இறங்குரிமை	...	180
பின்னிணைப்புப் பட்டியல்		...	223
கலைச்சொற்கள்		...	224

வழக்குப் பட்டியல்

		PAGE
Abraham *Vs* Abraham	...	15
Amarendra *Vs* Sanatan	...	183
Amarsingh *Vs* Baldeo Singh	...	214
Ambi *Vs* Kelan	...	123
Arumugha *Vs* Ranganathan	...	142
Arunachala Mudaliar *Vs* Murugananda	...	115
Asman *Vs* Ganpat	...	133
Badriroy *Vs* Bhagwat	...	148
Baigulab *Vs* Jivanlal	...	23
Bainagu Bai *Vs* Bai Mangu Bai	...	82
Bakshiram Ladharam *Vs* MST Sheiladevi	...	102
Barhamdeo *Vs* Lalbhadur	...	172
Bengal Insurance and R.P. Co. *Vs* Nelayammal	...	117
Bhabathi *Vs* Muralidhar	...	150
Bhagawandass *Vs* Maha Deo	...	131
Bhagawan Singh *Vs* Bhagawan Singh	...	66
Biswanath Agarwal *Vs* Dhapu devi	...	63
Brij Naraim *Vs* Mangla Prasad	...	132
Buddha Singh *Vs* Laltu	...	192
Chidambara *Vs* Rangasamy	...	96
Chinnasamy *Vs* Ponna Goundan	...	191
Chinnaswami *Vs* Kunju	...	191
Chhoojuram *Vs* Bhuri	...	215
Collector of Madura *Vs* Mootoo Ramalinga	...	8, 190
Chunder *Vs* Kristo	...	181
Deputy Commercial of H. R. and C. E. Board *Vs* Siddhi Vinayagar	...	10
Devi Dayal *Vs* Srikrishna Dass	...	174
Dhondo Yeshwant *Vs* Mishvilal	...	172
Ethilavula ammal *Vs* Pethakkal	...	96
Eramma *Vs* Veerapanna	...	209
Fakirappa *Vs* Yellappa	...	112
Francis Ghosal *Vs* Gabri Ghosal	...	16

		PAGE
Ganesha *Vs* Ratan	...	97
Gangadhar *Vs* Yellu	...	188
Gawrinath Kakji *Vs* M. T. Gayakwar	...	176
Gokulchand *Vs* Hukkumchand	...	118
Gopal Rao *Vs* Seetaramamma	...	90
Gowardan *Vs* Ganga Bai	...	89
Henraj *Vs* Kaenchand	...	128
Hira *Vs* Radha	...	71
Hurpurshad *Vs* Sheodayal	...	116
Indernarain *Vs* Rupnarain	...	187
In Re *Vs* Ramkumari	...	16
Jakatnarain *Vs* Muthudass	...	131
Jal Bhai *Vs* Lousis	...	17
Jamna Prasad *Vs* Ram Pratab	...	114
Jamna Bal *Vs* Vasudeo	...	148
Janak Dulari *Vs* District Judge	...	215
Jogi *Vs* Chinna Bai	...	17
Kamawati *Vs* Digbi Jai Singh	...	15, 16
Kameshwari *Vs* Raj Bansi	...	141
Kencha *Vs* Giri Mallappa	...	221
Krishan Devi *Vs* Chandmal	...	172
Krishnakumar Sinha *Vs* Kayastha Pathasala	...	118
Krishnamurthi *Vs* Krishnamurthi	...	70
Kumaraswamy *Vs* Narayanaswamy	...	177
Kundha Devi *Vs* Kaluram	...	40
Kusha Parida *Vs* Baishnab Malik	...	107
Lakshmi ammal *Vs* Ramasami Naicker	...	43
Lingappa *Vs* Esudasan	...	14
Loganathan *Vs* Ponuusamy	...	128
Mandram *Vs* Mandram	...	158
Madhusudan *Vs* Bhagawan	...	129
Mahabir Prasad *Vs* Ramyad	...	134
Maharaja of Kolhapur *Vs* Sundaram Ayyar	...	24
Mallappa *Vs* Shivappa	...	216
Mani *Vs* Ramakrishna	...	210
Manki *Vs* Kundan	...	189
Masit Ullah *Vs* Damodan Prasad	...	127
Metharam *Vs* Rewachand	...	118

		PAGE
Muddugopal *Vs* Rambaksh	...	115
Muhammad *Vs* Gnana	...	16
Mulchand *Vs* Jairam	...	127
Muthuramakrishnan *Vs* Marimuthu	...	157
Muthusamy *Vs* Masilamony	...	23
Modinedubai *Vs* Manibai	...	201
Mokoondo *Vs* Ganesh	...	142
Myna Boyee *Vs* Ootaram	...	14
Nagayasami *Vs* Kochadi	...	119
Narasimham *Vs* Narasimham	...	187
Narayan *Vs* Laxman	...	168
Navaneethakrishna *Vs* Collector of Tinnevely	...	190
Palaniappa *Vs* Alayan Chetty	...	8
Palaniappa *Vs* Chockalingam	...	162
Paru *Vs* Raman	...	17
Parsotam *Vs* Janakibai	...	115
Pattabiraman *Vs* Parijatham	...	215
Periakaruppan *Vs* Arunachalam	...	115
Premadevi *Vs* Director of Consolidation	...	214
Radhanath *Vs* Tarucknath	...	142
Radhe *Vs* Bhavani	...	188
Radhika *Vs* Munni	...	125
Raghavamma *Vs* Chenchamma	...	139
Rajavendra *Vs* Jayaram	...	27
Rajender *Vs* Shamchand	...	141
Ramachandra *Vs* Gopal	...	24
Ramcoomar *Vs* Ichamoyi	...	172
Rama Rao *Vs* Raja of Pithabur	...	81
Ramalinga *Vs* Virupakshi	...	141
Ramasami *Vs* Sellathammal	...	172
Ramsumram Prasad *Vs* Shyamkumari	...	173
Ranganathan Chettiar *Vs* Annamalai Mudaliar.	...	203
Rangasami *Vs* Sivaprakasam	...	150
Rub Singh *Vs* Bhabuti	...	141
Saila Bala Dasi *Vs* Saila Bala Dasi	...	214
Salemma *Vs* Lutchamma	...	156
Sardar Singh *Vs* Kunji Bihari	...	174
Satnarain *Vs* Sri Krishna Das	...	129

		PAGE
Shakuntala Devi *Vs* Beni Madhan	...	214
Sheo Shankar *Vs* Debi Sabai	...	156
Shivaji Rao *Vs* Vasant Rao	...	146
Sivagami Achi *Vs* Somasundaram Chettiar	...	69
Srikrishnan *Vs* Sham	...	27
Srinivas *Vs* Narayan	...	119
Sudarsan Sing *Vs* Suresh Singh	...	161
Subbaraya *Vs* Ramasami	...	17
Subramanyam *Vs* Santha	...	107
Subramanya *Vs* Venkata Subbamma	...	23
Surain *Vs* Inder	...	23
Suraya *Vs* Lakshminarasamma	...	191
Tara *Vs* Krishnan	...	168
Tellis *Vs* Saldhana	...	16
Uma Devi *Vs* Gogul Anand	...	8
Umed *Vs* Nagindas	...	20
Vache Reddy Chinna Basavappa *Vs* Gowdappa Suth	...	188
Vairan Chetty *Vs* Srinivachari	...	112
Venkatacharayulu *Vs* Rangatharyulu	...	8
Venkatachallamma *Vs* Cheekati	...	71
Venkayamma *Vs* Venkataramanayamma	...	114
Venkayya *Vs* Venkata	...	96
Veerabadrappa *Vs* Lingappa	...	130
Vinayak *Vs* Datto	...	119
Vythinatha *Vs* Yeggaia	...	114

1. இந்துச் சட்டத்தின் தோற்றமும் ஆதாரங்களும்

பழங்காலத்தில் தோன்றிய சட்டங்கள் எல்லாமே மதத்தோடு பின்னிப் பிணைந்தவை. மனிதனின் அகவாழ்வும் புறவாழ்வும் மத நூல்களால் நெறிப் படுத்தப்பட்டன. ஆட்சி முறையிலும் சமுதாயக் கட்டுக்கோப்பிலும் மதத்தின் செல்வாக்கு ஆழமாக வேர்விட்டிருந்தது. சமய வழியில் நிற்கும் சான்றோர்களே சகல மக்களிடத்தும் மதிப்புப் பெற்றவர்களாக விளங்கினர். சமுதாய வாழ்வில் மதத்தின் பிடிப்பு மிக அழுத்தமாக இருந்த அந் நாட்களில் சட்டம் மதத்தின் சாயல் இல்லாமல் தனித்தியங்க முடியவில்லை. மிகப் பழமையான இந்துச் சட்டமும் இதற்கு விதி விலக்கல்ல.

இந்துச் சட்டம் என்றால் என்ன? இந்து என்பவன் யார்? என்னும் கேள்விகளுக்கு விடை அவ்வளவு எளிதில் கிடைத்து விடாது. பழங்கால தர்ம சாஸ்திரங்களிலோ இலக்கிய நூல்களிலோ இந்து என்பவன் யார் என்று தெள்ளத் தெளிவாக, தீர்மானமாக விளக்கப்படவில்லை. உண்மையில் இது சம்பந்தமான குறிப்பு எந்த நூல்களிலுமே காணக் கிடைக்கவில்லை. 'இந்து' என்ற சொல் 'சிந்து' வின் திரிபாக வந்திருக்கக் கூடும் என்று சில அறிஞர்கள் கருதுகிறார்கள். மத்திய ஆசியாவிலிருந்து வந்த ஆரியர்கள் முதலில் சிந்துநதிச் சமவெளியில் குடியேறினார்கள் என்பது வரலாறு. சிந்து நதி பாயும் பகுதிகளையும், அதற்கு அப்பால் உள்ள நாடுகளையும் 'சிந்துஸ்தான்' என்று பெயரிட்டு அழைத்தார்கள். பாரசீகத்தைச் சேர்ந்தவர்கள் 'சி' யை 'ஹி' என்று உச்சரிப்பது வழக்கம். எனவே அவர்கள் 'சிந்துஸ்தான்' என்பதை 'ஹிந்துஸ்தான்' என்று அழைத்தார்கள். ஹிந்துஸ்தானில் வாழ்பவர்கள் ஹிந்துக்கள் என்று பெயரிடப்பட்டார்கள். இதனால் பண்டைய இந்தியாவில் வாழ்ந்தவர்கள் எல்லாம்

இந்துக்கள் ஆளுனர்கள். ஆனல் இன்று இந்திய நிலப்பகுதியில் உள்ளவர்கள் எல்லாம் இந்துக்களாக மாட்டார்கள். இன்றுள்ள சட்டப்படி இந்து மதத்தில் பிறந்தவர்கள் மட்டுமல்ல, பிற மதத்தினரும் இந்து மதத்தை ஏற்றுக் கொண்டால் 'இந்து' ஆவார்கள்.

தர்ம சாஸ்திரங்களிலிருந்து பகுத்துணரப்படும் 'இந்துச் சட்டம்' இன்று முழுவதுமாகப் பின்பற்றப்படவில்லை. பழைய நூல்களில் உள்ள சட்டத்திற்கும் இன்று நடைமுறையில் இருக்கும் சட்டத்திற்கும் ஏராளமான வேறுபாடுகள் உண்டு. நாடாளு மன்றம் நிறைவேற்றிய பல சட்டங்கள், சாஸ்திர நூல்கள் வழியாக அறியப்படும் இந்துச் சட்டத்தில் பல மகத்தான மாறுதல்களை ஏற்படுத்தி உள்ளன. பழங்கால நூல்கள் கூறுவனவற்றுள் சில வற்றையே இன்றைய சட்டம் அப்படியே அங்கீகரித்து ஏற்றுக் கொண்டுள்ளது; சிலவற்றிற்குத் திருத்தங்கள் தந்துள்ளது. இன்னும் சிலவற்றைக் காலத்திற்கு ஒவ்வாதது என்று கருதியதால் ஏற்றுக்கொள்ளாமல் புறக்கணித்து விட்டது. ஆட்சி மன்றம் நிறைவேற்றிய சட்டங்களால் உருவான விளைவுகள் என்னென்ன என்பதைப் பின்னல் வரும் பகுதிகளில் ஆங்காங்கே காணலாம்.

இந் நாளில் சட்டங்கள் நிறைவேற்றப்படுவது போல அந் நாளில் முறையான ஆட்சி மன்றம் இந்துச் சட்டத்தை இயற்ற வில்லை. அல்லது அன்று ஆட்சி செலுத்திய அரசர்கள் 'இதுதான் இந்துச் சட்டம்' என்றும் பிரகடனப் படுத்தவில்லை. பல்வேறு நூல்களிலிருந்தே இந்துச் சட்டக் கோட்பாடுகள் திரட்டித் தொகுக்கப்பட்டன. அதனல் இந்துச் சட்டத்தில் சட்டத்திற்குப் புறம்பான பல விஷயங்களும், மதத்தின் சாயலும் காணக் கிடைப்பதில் வியப்படைவதற்கு ஏதுமில்லை. மதத்தின் பிடிப்பும் ஒழுக்க நெறிகளும் மிகுந்திருந்தாலும் நவீன சட்டத்தின் பல்வேறு கூறுகள் பழங்கால இந்துச் சட்டத்தில் இருந்தன. தர்மம் என்ற சொல் வெறும் ஒழுக்கம் சம்பந்தப்பட்ட விதிகளும், ஆன்மீகம் சம்பந்தப்பட்ட விஷயங்களும் மட்டுமல்ல. அது நீதியையும் சட்டத்தையும் தன்னுள் அடக்கிக்கொண்டிருக்கிறது. தர்மம் என்பது பரந்த பொருளுடைய சொல். அதில் ஒழுக்க விதி களோடும் ஆன்மிக நெறிகளோடும் அனுபவ அறிவுரைகளோடும் சட்டக் கோட்பாடுகள் சங்கமமாயிருக்கின்றன. எனவே, பழங் கால சாஸ்திரங்களில் முழுமையான சட்டம் இருக்கிறது என்று கூறுவதில் தவறில்லை. குற்றவியல் (Criminal Law), உரிமையியல் (Civil Law), நடைமுறைச் சட்டம் (Procedural Law), நிலை முறைச் சட்டம் (Substantive Law) ஆகிய அத்தனையும் அவற்றில் இருக்கின்றன. குற்றவியல், உரிமையியல், சான்றியல், ஒப்பந்தம் (Contract) முதலியவற்றிற்குத் தனிச்

சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுவிட்டதால் பழைய இந்துச் சட்டத்தில் காணப்படுபவைகள் இன்று பயனற்றவைகளாகி விட்டன. இந்துக்களின் திருமணம், தத்து எடுத்தல், சொத்துரிமை ஆகியவை மட்டுமே இந்துச் சட்டத்தின்கீழ் வருகின்றன.

இந்துச் சட்டத்தின் தோற்றம், வளர்ச்சி, தன்மை பற்றி மேலை நாட்டு அறிஞர்கள் பலர் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. அதனால் கடுமையான விமரிசனங்களில் ஈடுபட்டனர். 'இந்துச் சட்டம் என்பது சட்டம் தெரியாத வடமொழி வல்லுநர்கள், வடமொழி தெரியாத சட்ட வல்லுநர்கள் கற்பனை செய்த மூளையின் மாயபிம்பம்'[1] என்று J. H. நெல்சன் கூறினார். அவர் கூற்றில் பிற்பாதி சரிதான். வடமொழிப் புலமை இல்லாத பல ஆங்கிலேய நீதிபதிகள் இந்துச் சட்டத்தில் பல மாறுதல்களை உண்டாக்கி இருக்கிறார்கள். ஆனால் சட்டம் தெரியாத வடமொழி வல்லுநர்கள் என்று அவர் குறிப்பிட்டிருப்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்தன்று. இந்திய நாட்டவரின் சட்ட இயல் அறிவு சம்பந்தமாக யாருக்கேனும் ஐயம் இருந்தால் அவர்கள் சாணக்கியனின் அர்த்த சாஸ்திரத்தின் பக்கங்களைப் புரட்டிப் பார்த்தால் நிச்சயம் தெளிவு பெறுவார்கள். 'அரசு எந்தக் கொள்கைகளின் தொகுப்பை அங்கீகரித்துச் சட்ட நிர்வாகத்தில் செயல் படுத்துகிறதோ அது தான் சட்டம்''[2] என்று சட்டத்திற்கு ஒரு விளக்கம் உண்டு. இந்த விளக்கத்திற்கு, பழைய நூல்கள் தர்மத்திற்குக் கொடுக்கும் பொருள் பொருந்தி வருகிறது. பழைய அற உரைகளில் தர்மத்தைச் செயல்படுத்துவதற்கான நடைமுறைச் சட்ட விதிகளும், நிலைமுறைச் சட்ட விதிகளும் காணப்படுகின்றன. எனவே J. H. நெல்சன் போன்றவர்களின் விமர்சனம் ஆழ்ந்த ஆராய்ச்சியைக் காட்டவில்லை என்று திண்ணமாகக் கூறலாம். ஆஸ்டின் (Austin) விதிப்படி சுதந்திர அரசால் ஆணையிட்டு அமுலாக்கப்படவில்லை என்ற அளவில் இந்துச் சட்டத்தைச் சட்டமல்ல என்று சிலர் கருதலாம். எந்த அரசாட்சியும் இந்துச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தி ஆணையிட்டு அமுலாக்கவில்லை என்பது உண்மைதான். ஆனால், எத்தனையோ அரசர்கள் ஆண்டிருந்தும் எத்தனையோ ஆட்சிகள் நடைபெற்றிருந்தும் இந்துச் சட்டம் மாறாததாக, மாற்றப்பட முடியாததாக, புறக்கணிக்கப்பட முடியாததாக இருந்திருக்கிறது என்ற உண்மையைக் கவனத்தில் கொள்ளும்போது, அது நேரடியாக

[1] "A mere phanton of the brain imagined by Sanskritists without law, and lawers without Sanskrit" –J. H. Nelson in "A view of the Hindu Law as Administered by the High Court of Judicature at Madras,"

[2] Salmond's Theory of Law.

இல்லாவிட்டாலும் மறைமுகமாக அரசர்களால் அங்கீகரிக்கப்பட்டு அமல் செய்யப்பட்டு ஆஸ்டினின் விதிக்கு ஒப்பச் சட்டமாக இருக்கும் தகுதியைப் பெற்றிருக்கிறது என்பது தெளிவாகிறது.

இந்துச் சட்டத்தின் மூலங்கள்

இந்துச் சட்டத்தின் மூலங்கள் என்று ஸ்ருதி (Sruti), ஸ்மிருதிகள் (Smritis), வழக்கம் (Custom) ஆகியவற்றைக் கூறலாம்.

ஸ்ருதி (Sruti)

முனிவர்களும், மெய்யடியார்களும் கடவுள் கூறியவை 'இவை' என்று மனித சமூகத்திற்கு அளித்த தெய்வ மொழிகள் ஸ்ருதிகளாகும். தெய்வத்திடமிருந்து நேரடியாக வந்த தெய்வமொழி என்பதாலே தர்ம நூல்களில் இதற்கு உயரிய இடம் அளிக்கப்பட்டுள்ளது. 'இதில் சட்ட சம்பந்தமான செய்திகளைவிடச் சமய சம்பந்தமான செய்திகளே அதிகம். என்றாலும் இதில் காணப்படும் சட்டவிழுதுகளே பின்னர் இந்துச் சட்டம் என்ற பெரிய ஆல மரம் தழைப்பதற்குக் காரணமாகும். மனிதன் மெய்ஞ்ஞானம் பெற்று மேலுலகில் வீடுபேறு பெறுவதற்கு உதவும் நூல்கள் என்று கூறப்படும் நான்கு வேதங்களும், உபநிஷதங்களும் இதில் அடங்கும்.

ஸ்மிருதிகள் (Smritis)

ஸ்மிருதிகள் என்பவை முனிவர்கள் தங்கள் நினைவிலிருந்து மனித சமுதாயத்திற்கு வழங்கிய செய்திகளாகும். ஸ்ருதியில் கடவுள் கூறியதைக் கேட்டு அப்படியே கூறியதால் அதற்குள்ள தெய்வாம்சம் ஸ்மிருதிகளுக்குக் கிடையாது என்பர். ஏனெனில் ஸ்மிருதிகள் முனிவர்கள் நினைவிலிருந்து வந்தவைகளாகும். ஆனால் வேறு சிலர், ஸ்மிருதிகளும் ஸ்ருதிகள் போல் கடவுள் கூறியவை என்றும், பின்னதில் கடவுள் கூறிய அதே சொற்கள் இருக்கின்றன, ஆனால் முன்னதில் அதே சொற்கள் இல்லாவிட்டாலும் கூறிய பொருள் இருக்கிறது என்றும் கூறி, ஸ்மிருதிகளுக்கும் தெய்வச் சிறப்பு உண்டு என்பர். இந்துச் சட்டத்தின் மூலக் கூறுகள் ஸ்ருதிகளைவிட ஸ்மிருதிகளிலேயே அதிகம் காணப்படுகிறது; என்றாலும் ஸ்மிருதிகளும் முழுக்க முழுக்கச் சட்ட சம்பந்தமானதல்ல; சமய சம்பந்தமானதே. இந்துச் சட்டத்திற்கு அதிக லாபகரமான விஷயங்கள் ஸ்மிருதிகளை விட அவைகளுக்கு எழுதப்பட்ட உரைகளிலேயே கிடைக்கின்றன.

ஸ்மிருதிகளில் முதல்நிலை ஸ்மிருதி இரண்டாம் நிலை ஸ்மிருதி என இருவகை உண்டு. முதல்நிலை ஸ்மிருதி காலத்தால்

முற்பட்டது. இரண்டாம் நிலை ஸ்மிருதி காலத்தால் பிற்பட்டது. முதல் நிலை ஸ்மிருதிகளில் சூத்திரங்கள், தர்ம சாஸ்திரங்கள் என இருவகை உண்டு. கவுதமர், போதாயனார், ஆபஸ்தம்பர், வசிஷ்டர், விஷ்ணு ஆகியோர் முக்கிய சூத்திரங்களை எழுதியவர்கள். மனு, யாஞ்ஞவல்கியர், நாரதர் ஆகியோர் முக்கிய தர்ம சாஸ்திரங்களை எழுதியவர்கள். இதில் மனுஸ்மிருதி காலத்தால் மிக முற்பட்டது. கி.மு. 200-ல் தோன்றியிருக்க வேண்டும் என்று மாக்ஸ் முல்லர் (Max Muller) கருதுகிறார். மனு ஸ்மிருதி தோன்றிய 600 ஆண்டுகள் கழித்து யாஞ்ஞவல்கிய ஸ்மிருதி தோன்றியது. இதற்கும் பின்னால் நூறு ஆண்டுகள் கழித்து நாரதஸ்மிருதி எழுதப்பட்டது.

ஸ்மிருதிகளின் உரைகள் (Commentaries)

இந்த ஸ்மிருதிகளில் சில விஷயங்கள் முழுமையாகக் கூறப்படவில்லை. இன்னும் சில விஷயங்கள் தெளிவாக உரைக்கப்படவில்லை. அதுமட்டுமல்ல, சில விஷயங்களில் ஒரு ஸ்மிருதி மற்றொரு ஸ்மிருதியிலிருந்து முரண்பட்டிருக்கிறது. எனவே, ஆழ்ந்த அறிவும், தவவல்லமையும், மக்களின் நன்மதிப்பும் பெற்ற பல சமயப் பெரியார்கள் ஸ்மிருதிகளில் காணப்படும் குழப்பத்தை நீக்கவும், தெளிவாகாத பிரச்சினைகளைத் தெளிவாக்கவும், ஸ்மிருதிகளை முறையாகப் புரிந்து கொண்டு உணரவும் வகை செய்வதற்காக உரை (Commentaries) எழுத முற்பட்டனர். அவ்வாறு எழுதப்பட்ட உரைகளில் மிதாக்ஷரமும், தாயபாகமும் முக்கியமான உரைகளாகும். மிதாக்ஷரம் யாஞ்ஞவல்கியத்திற்கு எழுதப்பட்ட உரையாகும். இதை எழுதியவர் பதினொன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த விஞ்ஞானேஸ்வர். தாயபாகத்திற்கு உரை எழுதியவர் ஜீமுதவாகனர். இந்த உரை எந்த ஒரு தனிப்பட்ட ஸ்மிருதிக்கும் எழுதப்பட்ட உரை அன்று. பல்வேறு கோட்பாடுகளின் தொகுப்பாகவே இருக்கிறது.

வங்கத்தைத் தவிரப் பிற பகுதிகளில் மிதாக்ஷரமே வழக்கில் உள்ளது. என்றாலும் மிதாக்ஷரம் சொல்லாத விஷயங்களைத் தாயபாகம் சொல்லும்போது, மிதாக்ஷரத்தைப் பின்பற்றுகிறவர்கள் தாயபாகம் கூறுவதை ஏற்றுக்கொள்வதுண்டு. அதைப்போலவே தாயபாகம் சொல்லாத விஷயங்களை மிதாக்ஷரம் சொல்லும்போது, தாயபாகத்தைப் பின்பற்றுகிறவர்கள் மிதாக்ஷரம் சொல்லுவதை ஏற்றுக்கொள்வதுண்டு.

மிதாக்ஷர முறைக்கும் (The Mitakshara School) தாயபாக முறைக்கும் (The Dayabhaga School) உள்ள முக்கியமான அடிப்படை வேறுபாடுகளைப் பின்காணும் அட்டவணை தெளிவாக எடுத்துக்காட்டும்.

மிதாக்ஷர முறை (The Mitakshara School)	தாயபாக முறை (The Dayabhaga School)
1. ஒரு கூட்டுக் குடும்பத்தில் ஒரு மகனுக்குப் பிறப்பு ஒன்றினாலேயே சொத்தில் உரிமை ஏற்பட்டு விடுகிறது. தந்தை உயிருடன் இருக்கும்போதே, பாகப்பிரிவினை கோர அவனுக்கு உரிமை உண்டு.	பிறப்பினால் எந்த உரிமையும் மகனுக்குத் தரப்படவில்லை. தந்தை உயிரோடு இருக்கும் வரை மகன் பாகப்பிரிவினை கேட்க முடியாது.
2. மகன் பிறப்பு வழிவந்த உரிமையால் பரம்பரைச் சொத்தை அதிகார பூர்வமில்லாமல் தந்தை விற்பதையோ இன்னொருவருக்குக் கொடுப்பதையோ தடுக்க முடியும்.	தந்தைதான் சொத்துக்கு முழுச் சொந்தக்காரர். ஆகவே சொத்தை அவர் விருப்பம் போலப் பயன்படுத்திக் கொள்ளலாம்.
3. ஒரு கூட்டுக் குடும்பத்தில் துணை உறுப்பினரான சகோதரன் தன்னுடைய பாகத்தை மட்டும் விற்கவோ இன்னொருவருக்குக் கொடுக்கவோ முழு உரிமை கிடையாது. ஆண் மகவு இல்லாமல் அவன் இறந்து போனால் அவனுடைய உரிமைகள் பிற சகோதரர்களை அடையும்.	ஒவ்வொரு சகோதரனும் தனக்கு உரிமையுள்ள பாகத்தைத் தன் விருப்பம் போல் விற்கலாம்; இன்னொருவருக்குக் கொடுக்கலாம். அவனுடைய மரணத்திற்குப் பின், ஆண்மகவு இல்லாவிட்டால் அவனுடைய உரிமைகள் மனைவிக்கே போகும்.
4. கூட்டுக் குடும்பத்தில் பங்குரிமையரின் (Co-Parcener) மரணத்திற்குப்பின் அவனுடைய மனைவி பிரிவினை கோர முடியாது.	கணவனின் மரணத்திற்குப் பின் பிற சகோதரர்களுடன் மனைவி ஒரு பங்குரிமையர் ஆகிறாள். எனவே அவள் தன் பாகத்தைப் பிரித்துத் தருமாறு கேட்கலாம்.
5. உரிமை இறக்கத்தில் (Succession) உறவின் நெருக்கத்தையே பிரதானமாகக் கொள்ள வேண்டும் என்பது விதி.	மதச்சடங்கு செய்யும் தகுதியே வழக்கில் உள்ள விதி.

வங்கத்தைத் தவிர இந்தியாவின் பிற பகுதிகளில் மிதாக்ஷர முறை பரவி இருந்தாலும், அதை அதிகாரபூர்வமாக இந்துக்கள் ஏற்றுக்கொண்டிருந்தாலும், ஆங்காங்கே சில உட்பிரிவுகள் மிதாக்ஷர முறையில் தோன்றின. இந்தப் பிரிவுகள் மிதாக்ஷரத்தைப் பொதுவாக ஏற்றுக்கொண்டிருந்தாலும் சில சிறிய விஷயங்களில் மாறுபட்டு இருந்தன. மிதாக்ஷர முறையில் மிகவும் குறிப்பிடத் தக்க உட்பிரிவுகள் (1) காசி முறை, (2) மிதிலை முறை, (3) மராட்டிய முறை, (4) திராவிட முறை ஆகிய நான்குமாகும். காசி முறை மத்திய, வடக்கு, வடமேற்கு இந்தியாவிலும், மிதிலை முறை பீஹார்ப் பகுதியிலும், மராட்டிய முறை மகாராஷ்டிரம், குஜராத், வடக்குக்கொங்கணிப் பகுதிகளிலும், திராவிட முறை தென்னிந்தியாவிலும் வழக்கில் இருந்துவருகிறது. இந்தப் பூகோள வரையறை உத்தேசமானதுதான். குறிப்பிட்ட பகுதியில் எந்த முறை வழக்கில் இருந்து வருகிறது என்பது குறித்துத் தகராறு கிளம்புமானல் அந்தக் கேள்விக்கு விடை நிரூபிக்கப்படும் ஆதாரங்களைக் கொண்டே முடிவு செய்யப்படும்.

செய்துவிட்டதால் செல்லுவதாம் எனும் கொள்கை (Doctrine of Factum Valet)

இக் கொள்கை ஒரு காலத்தில் தாயபாக முறைக்குத்தான் உரியது என்று கருதப்பட்டு வந்தது. பின்னர் அது தவறு என்று அறியப்பட்டு எல்லா முறையினருக்கும் பொருந்தி வருவது என்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. 'நடந்த செயலை நூறு சாஸ்திர விதிகளாலும் மாற்ற முடியாது' (A fact cannot be altered by a hundred texts) என்னும் கருத்தில்தான் இக் கொள்கை அமைந்திருக்கிறது.

செய்யக்கூடாத ஒரு செயலைச் செய்துவிட்டால் சரி என்று ஏற்றுக்கொள்வதே 'செய்துவிட்டதால் செல்லுவதாம்' எனும் கொள்கை. வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் நீதி, நேர்மை நெறி (Equity), மனச்சாட்சி ஆகியவற்றின் அடிப்படையில் இக் கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு நீதிபரிபாலனத்தில் அமல் செய்யப்பட்டது. செய்துவிட்டால் சொல்லுவதாம் என்பதைத் தவருகப் புரிந்து கொள்ளக் கூடாது. செல்லாத காரியங்கள் எல்லாம் செய்துவிட்டால் செல்லுபடியாகும் என்று பாமரத்தனமாகப் பொருள் கொள்ளல் ஆகாது. தர்ம சாஸ்திரங்கள் உரிமைக் கட்டளையாக (Mandatory) உரைத்திருக்கும் விதிகளுக்கு இக் கொள்கை பொருந்தி வராது. மாருக அறிவுரைக் கட்டளைகளுக்கே (Directory) பொருந்தி வரும். இதற்குச் சான்ருகச் சில வழக்குகளைச் சொல்லலாம். வசிஷ்டருடைய உரை நெருங்கிய

உறவினனைத்தான் தத்து எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கூறுகிறது. ஓர் இந்து, நெருங்கிய உறவினன் இருக்கையில் அவனை விட்டுவிட்டு முற்றிலும் அந்நியமான ஒருவனைத் தத்து எடுத்துக்கொண்டால் அது குற்றமன்று. வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் உச்சநீதி மன்றமாக விளங்கிய பிரிவி கவுன்சில் (Privy Council) அத்தகைய தத்து எடுத்துக்கொள்ளலைச் சரி என்று அங்கீகரித்துத் தீர்ப்பளித்தது.[3] யாஞ்ஞவல்கிய உரை, மகளைத் திருமணம் செய்து கொடுப்பதில் தந்தைக்கே முதல் உரிமை இருப்பதாகக் கூறுகிறது. இதற்கு மாறாக ஒரு வழக்கில் தாய் அந்த உரிமையை எடுத்துக்கொண்டு மகளுக்கு மணம் செய்வித்தபோது நீதிமன்றம் அதை ஏற்றுக்கொண்டு தீர்ப்பளித்தது.[4]

வழக்கம் (Custom)

வழக்கம் என்பது என்ன? ஒரு குடும்பத்திலோ, ஊரிலோ, இனத்திலோ, ஜாதியிலோ, குறிப்பிட்ட நிலப்பரப்பிலோ தொன்று தொட்டுப் பின்பற்றப்பட்டு வரும் விதிகளே வழக்கமாகும். ஒவ்வொரு நாட்டிலும் நிலவி வருவது இனமுறைச் சட்டத்தின் (Personal Law) தந்தை வழக்கம்தான். பன்னெடுங்காலமாகச் சமூகத்தில் அங்கீகரிக்கப்பட்டுப் பின்பற்றப்படும் வழக்கம் எழுதப்படாச் சட்டமாகும். இந்துச் சட்டத்தில் ஒருமுக்கிய பாத்திரத்தை வழக்கம் வகிக்கிறது. தொட்டிலிலே மனிதனைச் சந்திக்கும் வழக்கம் அவன் சுடுகாட்டிலே தீ மூட்டப்படும் வரை தொடர்கிறது. மனு ஸ்மிருதியும் வழக்கத்தில் இருப்பதுதான் உயர்ந்த தர்மம் என்று சொல்கிறது. ஆதாரபூர்வமாக வழக்கம் நிரூபிக்கப்படும்போது பழைய சாஸ்திரங்கள் தள்ளிவைக்கப்பட்டு, வழக்கமே நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஸ்மிருதியிலிருந்து வழக்கம் முரண்படும்போது வழக்கத்தையே சரியானதாகக் கருத வேண்டும் என்று பிரிவி கவுன்சில் தீர்ப்பளித்தது.[5] ஆனால், வழக்கம் ஒழுங்கீனமானதாகவும், பொது நலனுக்கு விரோதமானதாகவும், இயற்றப்பட்ட சட்டங்களுக்கு எதிரானதாகவும் இருந்தால் அது செல்லுபடியாகாது.

[3] Cal 587 (P.C.) Umadevi *vs* Gokulanand.

[4] Venkatacharayulu *vs* Rangatharyulu 14 M. 316: 1 M. L. J. 85; Bai Diwali *vs* Mti 22B 509; Brindaban Chandra *vs* Chandra Kurmokar 12C 1·0; Rambiyar *vs* Deva IR 129: 1923 R 202 Ram Harakh *vs* Jagar Nath 53A 815: 1931 AL. J. 816: 1921 A. 5.

[5] Collector of Madura *vs* Moottoo Ramalinga 12 MIA 397. Palaniappa *vs* Alayan Chetty, 44M 740: 15 L. W. 521: 1921 M. W. N: 687: 1922 P. C. 228: 48 IA. 539: 26 C. W. N. 417.

வழக்கத்தில் மூன்று முக்கிய பிரிவுகள் உண்டு. அவை (1) வட்டார வழக்கம் (Local Custom), (2) ஜாதி அல்லது வகுப்பு வழக்கம் (Class Custom), (3) குடும்ப வழக்கம் (Family Custom). வட்டார வழக்கம் என்பது குறிப்பிட்ட மாவட்டத்திலோ அல்லது மாநிலத்திலோ நிலவிவருவதாகும். அங்குள்ள அத்தனை பேரும் அதற்குக் கட்டுப்பட்டவர்கள். குடும்ப வழக்கம் இதற்கு மாறுனது. இவ் வழக்கம் குடும்பத்தில் உள்ளவர்களை மட்டுமே கட்டுப் படுத்தும். ஜாதி அல்லது வகுப்பு வழக்கம் அந்த ஜாதியினரை மட்டும் அவர்கள் எங்கு இருந்தாலும் கட்டுப்படுத்தும்.

வழக்கத்தைத் தங்களுக்குச் சாதகமாகக் காட்டுகிறவர்கள் யாரோ அவர்கள்தான் வழக்கத்தை நிரூபிக்க வேண்டும்.

வழக்கம் என்று சொன்னதும் அதை அப்படியே நீதி மன்றம் அங்கீகரித்துவிடாது. நீதி மன்றம் வழக்கத்தை உண்மையானது என்று ஏற்றுக்கொள்ளக் கீழ்க்காணும் அடிப்படைகள் வழக்கத் திற்கு இருத்தல் வேண்டும்.

1. வழக்கம் தொன்மையானதாக இருக்க வேண்டும்.

2. தொடர்ந்து அமலில் இருக்க வேண்டும்.

3. நியாயமானதாக இருக்க வேண்டும். ஒழுக்கக் குறை வானதாகவோ, பொது நலத்திற்கு விரோதமானதாகவோ இருக்கக் கூடாது.

4. வழக்கம் குழப்பம் இல்லாத தெளிவானதாக இருக்க வேண்டும்.

5. வழக்கம் நிச்சயமானதாக இருக்க வேண்டும்.

6. அரசு இயற்றியுள்ள சட்டங்களால் தடை செய்யப்படாத தாக இருக்க வேண்டும்.

ஒரு வழக்கம் எவ்வளவு தொன்மையானது என்று தீர் மானிப்பது அவ்வளவு எளிதன்று. இத்தனை ஆண்டு என்று யாரும் திட்டவட்டமாகக் கால வரையறை செய்ய முடியாது. அது நீண்ட காலமாகப் பொதுமக்களின் ஒப்புதலுடன் நடை முறையில் இருக்கிறதா என்பதைத்தான் கவனிக்க வேண்டும். ஒரு ஜாதியின் முக்கிய பிரமுகர்கள் பலரிடமிருந்தும் பிரமாணப் பத்திரம் (Affidavit) வாங்கி இதைத்தான் வழக்கமாகக் கருத வேண்டும் என்றோ, இதுவே வழக்கமாக உள்ளது என்றோ கூறினுல் அது வழக்கத்தை நிரூபித்ததாகக் கருதப்படமாட்டாது. அந்த வகுப்பிலுள்ள அனைவரின் ஏகோபித்த ஒப்புதலும் அந்த வழக்கத்திற்கு உண்டு என்பதை அடுக்கடுக்கான ஒப்புதல்

களையும், நிகழ்ச்சிகளையும், அவை மாருமல் தொடர்ந்து வந்திருப் பதையும் நிரூபிக்க வேண்டும்.

வழக்கம், வழக்காறு (Custom and Usage)

வழக்கம் வேறு, வழக்காறு வேறு. இரண்டும் கிட்டத்தட்ட ஒரே பொருளில் பேசப்பட்டு வந்தாலும் இரண்டிற்கும் சற்று வேறுபாடு உண்டு என்பதைச் சட்டங்கள் தெளிவாக்கி இருக் கின்றன. வழக்காறு எங்கே முடிகிறதோ அங்கே வழக்கம் ஆரம்ப மாவதாகக் கொள்ளலாம். ஒரேமாதிரியாக இருத்தல், நெடுங் காலமாக இருத்தல் முதலிய அம்சங்கள் வழக்கத்திற்கு அவசியம். வழக்காற்றிற்கு இவை தேவை இல்லை. வழக்காறு வளர்ந்து கொண்டிருக்கலாம். வழக்காடுவோர் அவற்றை ஒத்துக்கொண்டிருக்கலாம்; புரிந்து கொண்டும் இருக்கலாம். அவைகளே போதுமானவையாகும்.[5a]

நீதிமுறை முடிவுகள் (Judicial Decisions)

மேலே கண்ட ஸ்ருதி, ஸ்மிருதிகள், வழக்கம் அல்லாமல் நீதிமுறை முடிவுகளும் ஆட்சி மன்றம் இயற்றிய சட்டங்களும் இன்று நாம் பின்பற்றும் இந்துச் சட்டம் உருவாக அடிப்படை களாக அமைந்தன.

வடமொழி தெரியாத ஆங்கிலேய நீதிபதிகள் வடமொழிப் புலவர்களின் உதவியுடன் நீதிபரிபாலனம் செய்தார்கள் என் ருலும், தர்ம சாஸ்திரங்களின் சாராம்சத்தைப் புரிந்து கொள்வதில் அவர்களுக்கு இருந்த சிரமத்தாலும், மேலைநாட்டுச் சட்ட இயல் கருத்துகள் அவர்களிடம் ஆழமாகப் பதிந்திருந்ததாலும், சில மாறுதல்கள் ஏற்படக் காரணமானுர்கள். தர்ம சாஸ்திரங்கள் கூறிய ஒருசிலவற்றை மாற்றியும், சொல்லாத சிலவற்றைச் சேர்த்தும் வழக்குகளில் தீர்ப்பளித்தார்கள். பின்னர் அவர்களது தீர்ப்பே முன்மாதிரியானதால் பின்ருல் வந்தவர்கள் அதை ஒட்டியே சென்ருர்கள். தர்ம சாஸ்திரங்களுக்கும் சட்டத் திற்கும் சில முரண்பாடுகள் தோன்ற இதுவே காரணம். தத்து எடுத்தல், தன்னிடம் இருக்கும் பரம்பரைச் சொத்து அளவுக்குத் தந்தைக்கு ஏற்பட்ட கடனை மகன் அடைத்தல் என்று வந்த வரையறைகள் கூட்டுக்குடும்பத்தில் பாகப்பிரிவினை ஆகுமுன்னரே தன் பங்கை மற்றவருக்கும் மாற்றிக் கொடுக்கும் உரிமை பங் குரிமையர் சில மாநிலங்களில் பெற்றிருத்தல், பரம்பரைச் சொத்து சம்பந்தமாகத் தாயபாக முறையில் தந்தையும் மகனும் முழு

[5a] Dy. Commr. A. H. R. & C. E. Board V. Siddhi Vinayagar 1971 (1) M. L. J. 422.

உரிமை பெற்றிருத்தல், ஸ்திரீதனம் சம்பந்தமான விஷயங்கள், பெண்கள் உரிமை சம்பந்தமான சில தடைகள் முதலியவைகளில் வடமொழி தெரியாத ஆங்கிலேய நீதிபதிகள் அறியாமையாலும், சிற்சில சமயங்களில் நீதிக்காகவும், நேர்மை நெறிக்காகவும் இந்துச் சட்டத்தை மாற்றியும், திருத்தியும், சேர்த்தும் நீதி பரிபாலனம் செய்தார்கள். அவர்களுடைய முடிவுகள் பின்னால் இந்துச்சட்டங்கள் ஆட்சி மன்றம் நிறைவேற்றுவதற்கு அடிப் படையாக அமைந்தன.

சட்டம் இயற்றுதல் (Legislation)

இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்பும் பின்பும் அரசியல், சமுதாய, பொருளாதாரத் துறைகளில் இந்தியா பெற்ற மாற்றங்கள் பலப்பல. இந்த மாற்றங்கள் இந்துச் சட்டத்தையும் பெரிதும் பாதித்தன. மாற்றங்கள் நேர்ந்துவிட்ட சமூக அமைப்பில் பழைய தர்ம சாஸ்திரங்களின் கோட்பாடுகளின்படியே வாழ்க்கை அமைவது நற்பயனை விளைவிக்காது என்று அறிஞர்கள் உணர்ந் தார்கள். அதன் பயனாகப் பல சட்டங்கள் இயற்றப்பட்டன.[6] இந்தச் சட்டங்கள் தர்ம சாஸ்திரங்களில் பல விஷயங்களையும், விதிகளையும் செல்லத்தகாததாக்கிவிட்டு வேறு பல முக்கிய மாறு தல்களை விளைவித்தன. இந்து ஒருவன், மதம் மாறிவிட்டாலோ அல்லது ஜாதியிலிருந்து தள்ளிவைக்கப்பட்டாலோ தன்னுடைய உரிமைகளையும் சொத்தையும் இழந்துவிட வேண்டும் என்றிருந்த நிலை மாறியது. இந்து விதவைகள் ஒருசில ஜாதிகளில் ஒருசில பகுதிகளில் மறுமணம் புரிந்துகொள்ள அனுமதிக்கப்பட்டாலும் தர்ம சாஸ்திரங்கள் விதவை மறுமணத்திற்குத் தடையாகவே

[6] a. The Caste Disabilities Removal Act, 1850.
b. The Hindu Widows' Re marriage Act, 1856.
c. The Native Converts Marriage Dissolution Act, 1866.
d. The Indian Majority Act, 1875.
e The Transfer of Property Act, 1882.
f. The Guardian and Wards Act, 1890.
g. The Special Marriages Act. 1872.
h. The Indian Succession Act, 1925.
i. The Hindu Inheritance (Removal of Disabilities Act, 1928)
j. The Hindu Law of Inheritance (Amendment Act, 1929)
k. The Hindu Gains of Learning Act, 1930.
l. The Hindu Women's Rights to property Act, 1937.
m. The Arya Marriage Validation Act, 1937.
n. The Hindu Marriage Women's Right to Separate Residence and Maintenance Act, 1946.
o. The Hindu Marriage Disabilities Removal Act, 1947.
p. Hindu Marriages Validity Act, 1949.

இருந்தன. 1856-ல் விதவை மறுமணம், சட்ட அங்கீகாரம் பெற்றது. இந்து ஒருவன், கிறித்துவ மதத்தைத் தழுவி விட்டால் முன்பு செய்துகொண்ட இந்துத் திருமணத்தை கலைத்துக் கொள்ள லாம் என்று சட்டம் நிறைவேற்றப்பட்டது. பழைய தர்ம சாஸ் திரங்களில் உரிமை வயது (Majority) என்ற ஒன்று கிடையாது. ஆங்கிலேய ஆட்சியாளர் காலத்தில் உரிமை வயது பதினெட்டு என்று நிர்ணயிக்கப்பட்டது. சொத்துரிமை மாற்றத்தில் மகத் தான மாறுதல்கள் வந்தன. இவ் விஷயங்களைத் தவிர மற்ற விஷயங்களில் பழைய தர்ம சாஸ்திரங்கள் கூறப்படுவதைச் சட்டம் ஏற்றுக்கொள்ளவில்லை. ஒரு கூட்டுக் குடும்பத்தில் ஒருவன் தன் படிப்பால் சம்பாதித்துச் சொத்துகள் வாங்கினால் அதைத் தனிச் சொத்தாகக் காப்பாற்றிக்கொள்ள வகை செய்யப் பட்டது. ஜாதிப் பாகுபாடுகளைச் சட்டம் ஏற்றுக்கொள்ளவில்லை. பிற ஜாதியில் மணந்து கொள்வதைச் சமூகம் அங்கீகரிக்காவிட் டாலும் சட்டம் அங்கீகரித்தது. இளமைத் திருமணம் குற்ற மாக்கப்பட்டது. பதினான்கு வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கோ, பதினெட்டு வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கோ திருமணம் செய்தால் அது குற்றம் என்று ஆக்கப்பட்டது.

இவ்வாறு சமுதாய முன்னேற்றத்திற்காகச் செய்யப்பட்ட பல் வேறு சீர்திருத்தங்களும் தொடக்க காலத்தில் பலத்த எதிர்ப்புக்கும் கண்டனத்திற்கும் இலக்காயின. அதுவும் ஆட்சி அந்நிய ஆட்சி யாக இருக்கவே அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளைச் சந்தேகக் கண்கொண்டே பார்த்தனர். மணமுறிவு உரிமைக்கு எல்லாவற்றையும்விட அதிக எதிர்ப்பு இருந்தது. திருமணத்தை ஓர் ஒப்பந்தமாகக் கருத இந்துக்கள் தயாராக இல்லை. ஒரு பெண் 'பதிவிரத்யம்' என்னும் கடமையை அனுசரித்து வருவதே அவ ளுடைய தர்மம் என்னும் நம்பிக்கை மிக ஆழமாக எல்லாருடைய மனத்திலும் பதிந்திருந்தது. ஆகவே இந்தச் சட்டங்களால் தங் களின் பண்பாடும், மதத்தின் உருவும் சிதைந்து போய்விடுமோ என்ற கவலையால் பலர் மிகக் கடுமையாக எதிர்த்தார்கள். ஆயினும் நாளடைவில் எதிர்ப்புகள் மங்கி, மேலும் பல சீர் திருத்தங்களை வரவேற்கும் அளவில் மக்கள் மனப்பக்குவம் பெற்றார்கள்.

இனமுறைச் சட்டம் (Personal Law)

இந்துச்சட்டம் ஓர் இனமுறைச் சட்டம். தலச்சட்டமன்று (Lex Loci). அதாவது இந்து ஒருவன் ஒரு நாட்டின் ஒரு பகுதியி லிருந்து இன்னொரு பகுதிக்குக் குடியேறினால், அவன் எங்கிருந்து வந்தானோ அந்தப் பகுதியின் சட்டமும் பழக்கவழக்கமும்தான்

அவனுக்கு உரியதே தவிரக் குடியேறும் பகுதியின் சட்டமோ பழக்கவழக்கமோ அல்ல. அவன் எங்கிருந்து வருகிறானோ எந்தப் பழக்கவழக்கத்தைப் பின்பற்றுகிறானோ அந்தப் பழக்கவழக்கமே எங்குச் சென்றாலும் தொடரும். சென்னையில் உள்ள இந்து பம்பாய்க்குக் குடியேறினால், இந்து மதத்தில் திராவிட முறைக் கோட்பாடுகளே அவனுக்கு உரியதாகும். இதனால் ஒரு பகுதியிலிருந்து வேறொரு பகுதிக்குக் குடியேறுபவர்களுக்குக் குடியேறிய பகுதியின் மரபையும், நெறிகளையும் தழுவிக்கொள்ள உரிமை கிடையாது என்பது பொருள் அன்று. விரும்புகிறவர்கள் தாராளமாக மேற்கொள்ளலாம். பழைய முறையை முற்றிலும் விட்டு விட்டுப் புதிய முறையைத் தழுவிக் கொள்வதை நடைமுறையில் செய்துகாட்ட வேண்டும். அப் பகுதி மக்களும் அவர்கள் செய்யும் சடங்குகளைக் கொண்டு அவர்கள் புதியதொரு முறையை ஏற்றுக்கொண்டு விட்டார்கள் என்பதை அங்கீகரிக்க வேண்டும். தக்க ஆதாரத்தோடு புதிய முறை மேற்கொள்ளப்பட்டது நிரூபிக்கப்பட்டால்தான் நீதி மன்றமும் ஏற்கும்.

இந்துச் சட்டம் செயற்படுதல்

இந்துச்சட்டம் யார் யாரைக் கட்டுப்படுத்தும் என்பதை நிர்ணயிக்க இந்து என்பவன் யார் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். இந்துக்கள் என்று அழைக்கப்படுபவர்கள் பல்வேறு கடவுள்களை, வழிபாட்டு முறைகளைப் பின்பற்றி வருகிறார்கள். ஒரு பகுதியில் கொண்டாடப்படும் பண்டிகைகள் இன்னொரு பகுதியில் கொண்டாடப் படுவதில்லை. ஒரே தெய்வமோ ஒரே சீரான சமய நெறிகளோ அவர்களிடம் இல்லை. ஆகவே, எல்லா இந்துக்களுக்கும் பொதுவான அம்சங்கள் என்று சொல்லப்படுபவைகள் மிகக் குறைவாக இருக்கின்றன. ஆனாலும் ஓர் இந்துவுக்கு இன்னொருவன் இந்துவா இல்லையா என்பது தெரியும். இந்துக்களிடம் பல தெய்வங்கள் மட்டுமல்ல; பல ஜாதிகளும் உள்ளன. இந்து மதத்தின்படி நான்கு வருணங்கள் உண்டு. பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் ஆகியவையே அந்த நான்கும். இந்த வருணங்கள் பல உட்பிரிவுகளை – ஜாதிகளைத் தோற்றுவித்துள்ளன. இவை அத்தனைக்கும் இந்துச் சட்டம் உரியது. விளக்கமாகச் சொல்வதானால் ஆரியர்களின் வழித்தோன்றல்கள், இந்து தர்மத்தைப் பின்பற்றும் ஆரியரல்லாதவர்கள், வைதிக வழியில் செல்லாதவர்கள், இந்து தர்மத்தை ஏற்க மறுப்பவர்கள், இந்துவாக மாறியவர்கள், அனைவருக்கும் இந்துச் சட்டம் பொருந்தும். ஓர் இந்து கிறித்துவனாக மாறினால்கூடச் சில சமயங்களில் இந்துச் சட்டம் அவனைக் கட்டுப்படுத்தும்.

ஸ்மிருதிகளிலும், அதன் உரைகளிலும் சொல்லப்பட்டுள்ளவைகள் ஆரியர்களைக் கட்டுப்படுத்தும் என்பது சரிதான்; ஆனால் அது தென்னிந்தியர்களையும், ஆரியவம்சா வழி அல்லாத பிறரையும் எப்படிக் கட்டுப்படுத்தும் என்பது சில காலம் பெரும் பிரச்சினையாக இருந்தது. ஆரியர்கள் வருவதற்கு முன்னரே இந்தியாவில் இருந்த பழங்குடியினருக்கு இந்து தர்மமே உரியது என்ற வாதம் சரியல்ல என்று பல ஆங்கிலேய நீதிபதிகள் அபிப்பிராயப் பட்டார்கள். ஆனால், பல நூற்றாண்டுகளாக இந்து தர்மமே பழக்கத்தில் வந்து அமலாகி விட்டதால் அதையே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வேறு சிலர் எண்ணினார்கள். காலப்போக்கில் இந்து தர்ம சாஸ்திரம் அனைவருக்கும் உரியதாகிவிட்டது என்ற உண்மை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, அனைவருக்கும் இந்துச்சட்டம் அமல் செய்யப்பட்டது. ஆனால் வழக்கம் சாஸ்திரங்களிலிருந்து மாறுபட்டால், வழக்கமே சம்பந்தப்பட்டவர்களுக்கு உரிய சட்டம் என்று அங்கீகரிக்கப்பட்டது.

இந்துவாகப் பிறந்த ஒருவன் வேறு மதத்தைத் தழுவாத வரையில் அவன் வைதிக முறைப்படி காரியங்கள் செய்யாமல் இருந்தாலும் இந்துவாகவே கருதப்படுவான். சமய நெறிப்படி ஒழுகாததால் அவன் அயல் சமயவாதியாக ஆகமாட்டான்.

இந்துச் சமய நெறிப்படி வாழாதது மட்டுமன்று, இந்து தர்மத்தையே ஏற்க மறுப்பவர்களும் உண்டு. இவர்களுக்கும் இந்துச் சட்டமே பொருந்தும். எடுத்துக்காட்டாக, சமணர்களையும், சீக்கியர்களையும் சொல்லலாம். இவர்களுக்கென்று தனியாக எந்த மதச்சட்டமும் கிடையாது. இவர்களுக்கும் இந்துச்சட்டமே உரியது. இந்து ஒருவன் நாத்திகனாக இருந்தால் அவனும் இந்துச் சட்டத்தின் கீழ்தான் வருவான்.

முறைப்படி மணம் புரிந்து கொள்ளாது தம்பதியர் ஈன்றெடுக்கும் குழந்தைகளுக்கும் இந்துச் சட்டமே உரியது. ஆனால் பெற்றோர்கள் இந்துக்களாக இருக்க வேண்டும்; அல்லது தந்தை வேறு மதக்காரனாக இருந்தாலும். தாய் இந்துவாக இருந்து குழந்தை இந்துமதச் சூழ்நிலையிலேயே வளர்க்கப் பட்டிருக்க வேண்டும்.[7] தாய் இந்துவாக இல்லாமல் கிறித்துவராகவோ, இஸ்லாமியராகவோ இருந்தால் இந்துச் சட்டம் அமலாகாது. ஏனெனில் முறைப்படி மணம் நடவாது ஈன்றெடுக்கும் குழந்தைகளுக்குத் தாயின் மதமே உரியதாகும்.[8]

[7] Myna Boyee *vs* Ootaram 8 M. I. A. 400.

[8] Lingappa *vs* Eaudasan 27 M 13.

மதமாற்றம்

இந்து என்பவன் பிறப்பால்தான் இந்துவாக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை; மதத்தாலேயே இருக்க வேண்டும். அதாவது, பிறப்பால் வேறு மதத்தைச் சேர்ந்தவனாக இருந்தாலும் இந்து மதத்தைத் தழுவிக் கொண்டால் அவன் இந்துவாகவே கருதப்படுவான். ஒருவன் பிற மதத்திலிருந்து இந்துவாக இன்னின்ன முறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று ஸ்மிருதிகள் விதிகள் எதுவும் கூறவில்லை. இந்தியாவில் நிலையாக இருத்தல், முந்தைய மதத்தை வெளிப்படையாகத் துறந்து இந்து மதத்தைத் தழுவுதல், இந்துப் பெயர் வைத்துக் கொள்ளல், இந்து முறைப்படி இந்துவை மணந்து கொள்ளல் ஆகியவை பிற மதத்தினன் இந்துவானதற்கான ஆதாரங்களாகக் கொள்ளலாம். இதில்கூட இந்தியாவில் ஒருவன் நிலையாக இருக்க வேண்டும் என்ற விதி அவ்வளவு முக்கியமல்ல. ஓரிரண்டு சடங்குகளைச் செய்யாமல் விட்டுவிட்டால்கூடப் பாதகமில்லை. அதற்காக ஒருவன், 'நான் இந்துவாக மாறிவிட்டேன்' என்று அறிவித்து விட்டால் போதாது. இந்துவாக மாறியவனை அவன் உண்மையாக, முறையாக மதம் மாறி இந்துவாகிவிட்டான் என்று இந்துச் சமூகத்தினர் ஏற்றுக்கொள்வதுதான் முக்கியம்.

ஒருவன் இந்துவாக இருந்தால் இந்துச்சட்டம்தான் உரியது என்பது பொது விதி. அவன் முஸ்லீமாக மாறிவிட்டால் இஸ்லாமியச் சட்டம் பொருந்தி வரும்; கிறித்துவனாக மாறி விட்டால் இந்திய உரிமை இறக்கச் சட்டம் (Indian Succession Act, 1925) அமலாகும். ஆரம்பத்தில் இந்துச் சட்டமே அமலாகும் என்று கருதப்பட்டது [9] (அப்போது இந்து கிறித்துவனாக மாறினாலும், உரிமை இறக்கம் சம்பந்தப்பட்ட வரை பழைய இந்துச்சட்டம் பின்பற்றப்படத் தடை இல்லை). ஆனால், இந்து மதத்தைத் துறந்து ஒருவன் கிறித்துவனாகிவிட்டால் உரிமை இறக்கம் (Succession) சம்பந்தப்பட்ட வரையில் அவனுக்கு இந்துச்சட்டமே உரியது என்பது இந்திய உரிமை இறக்கச் சட்டம் (Indian Succession Act 1865) நிறைவேற்றப் பட்ட பின் சரியல்ல என்று பின்னர் தீர்ப்பளிக்கப்பட்டது [9a] என்றாலும் சென்னை உயர்நீதி மன்றத்திற்கும் பம்பாய் உயர் நீதி மன்றத்திற்கும் எஞ்சுநர் உரிமை (Survivorship) பிரச்சினையில் வேறுபாடு உள்ளது. ஓர் இந்து கிறித்துவனாக மாறிய பின்னரும் தொடர்ந்து கூட்டுக் குடும்பத்தில்வாழ்ந்து வருவானானால் எஞ்சுநர்

[9] M. I. A. 195 Abraham *vs* Abraham.

[9a] Kamawati *vs* Digbijai Singh 48 IA.

உரிமை விஷயத்தில் இந்துச் சட்டமே அவனுக்கு உரியது என்று பம்பாய் நீதிமன்றம்[10] ஒரு தீர்ப்பு வழங்கியது. அதற்கு மாருன முடிவை சென்னை உயர்நீதி மன்றம்[11] கூறியது. பிரிவி கவுன்சில்[12] இன்னொரு வழக்கில் பம்பாய் உயர்நீதி மன்றத் தீர்ப்பிற்கு எதிராக முடிவை வழங்கியுள்ளது. ஆனால் இந்தியா வின் உச்சநீதி மன்றம் வேறொரு வழக்கில் (1970 S. C. 223) வன்னிய தமிழ்க் கிறித்துவர்கள் இந்துச் சட்டத்தின் மிதாக்ஷர முறைக்குக் கட்டுப்பட்டவர்கள், அதுவே அவர்களுக்கு உரியது; இந்நிலை கிறித்துவ மதத்திற்கு எவ்வகையிலும் பொருந்தி வராதது அல்ல என்று தீர்ப்பளித்துள்ளது.

இந்து ஒருவன் முஸ்லீமாக மாறினுல் அவனுக்குரியது இஸ்லாமியச் சட்டமேயெனினும் இந்தியாவின் சில பகுதிகளில் இஸ்லாமியராக மாறியதற்குப் பின்னரும் இந்துப் பழக்க வழக் கங்களை, குறிப்பாகத் திருமணம், உரிமை இறக்கம் முதலியவற்றில் அனுசரிக்கிறவர்கள் இருந்தார்கள். ஆனால் இஸ்லாம் இனமுறைச் சட்டம் (Shariat), அமலாக்க இயற்றப்பட்ட சட்டம் 1937 (Application Act 1937), மற்றும் Cutchi Memons Act 1938 ஆகியவை இஸ்லாமிய மதத்தைத் தழுவிய பின்னரும் இந்துச் சட்டத்தைப் பின்பற்றுவதை அறவே ஒழித்தன.

மதமாற்றத்தின் விளைவுகள்

இந்து ஒருவன் மதம் மாறிவிட்டால் அவனுக்குப் பிறந்த குடும்பத்தில் உள்ள சகல பந்தங்களும் அறுந்து விடுகின்றன. இந்து தர்மம் வற்புறுத்துகிற கடமைகள் அவனைக் கட்டுப்படுத் தாது. மதம் மாறிவிட்டால் இந்து தன்னுடைய உரிமைகளை எல்லாம் இழந்துவிடுவான் என்பது முன்பிருந்த இந்துச்சட்டம். ஆனால் வகுப்புத் தகவின்மை நீக்கச் சட்டம் 1850 (Caste Disabilities Removal Act 1850) இதைப் போக்கியது. ஆனால் மத மாற்றத்திற்கு முன்னுல் இந்துமதம் அவனுக்கு விதித்திருந்த கடமைகளிலிருந்து அவன் நழுவிட இச் சட்டம் அனுமதிக்க வில்லை.[13] ஏனெனில் இதைப் பயன்படுத்திக்கொண்டு ஒருவன்

[10] Francis Ghosal *vs* Gabri Ghosal 31 B 25: 8 Bom L. R. 770.

[11] Tellie *vs* Saldhana 10 M. 69 See also Dwarker Raj Rani 1932 oudn 85; Muhammad *vs* Gnana 66 M.L.J. 671 : 1934 M 327; 39 L.W. 531.

[12] Kamawati *vs* Digbijai Singh, 43IA. 381 ; 43 A 525 : 15 L.W. 1 : 1922 P.C. 14 : 24 Bom L.R. 626 : 26 C.W.N. 490 : 42 M.L.J. 87 : 1928 M.W.N. 336.

[13] In R. *vs* Ramkumari, 18C, 264.

மத மாற்றம் செய்துகொண்டே கடமையிலிருந்து தப்பிவிடுவான். அதற்குச் சட்டம் இடம் தரவில்லை. ஆகவே, மத மாற்றத்திற்குப் பின்னருங்கூட மனைவி, வயதான பெற்றோர்கள், இளங்குழந்தை ஆகியோரை அவன் பராமரிக்க வேண்டும். அல்லது மனைவியைப் பொறுத்தவரையில் அவளைப் பராமரிக்கவேண்டிய அவசியம் இல்லை என்று உள்நாட்டு மதம் மாறியோர் திருமணக் கலைப்புச் சட்டத்தின் (Native Converts Marriage Dissolution Act of 1866) கீழ் நீதி மன்ற உத்தரவைப் பெறவேண்டும். மேலும், இந்தச் சட்டம் மதம் மாறியவர்களுக்குத்தான் பொருந்துமே தவிர அவனது வழித்தோன்றல்களுக்கு அல்ல. ஆகவே, அவனுடைய குழந்தைகள் சொத்தில் வாரிசு உரிமை கொண்டாட முடியாது.

ஓர் இந்துப் பங்குரிமையர் மதம் மாறிவிட்டால், பிறகு எஞ்சுநர் உரிமை கொண்டாட முடியாது. ஏனெனில் அவனாக விரும்பி, மதம் மாறிப் பிரிந்து போன பின்னர், கூட்டுக் குடும்பத்தில் உரிமை கொண்டாட முடியாது. ஆனால் ஒரு கூட்டுக் குடும்பத்தில் உள்ள அத்தனை பேரும் கிறித்தவர்களாக மாறிவிட்டால் பங்குரிமையைப் பாதிக்காத வகையில் இந்துச் சட்டத்தை மேற்கொள்வதில் தவறில்லை.[14] எல்லோருமாக அல்லாமல் சிலர்மட்டுமே கிறித்துவர்களாக மாறிவிட்டாலும் எப்போதும் போல மதம் மாறாதவர்களோடு கூட்டாக வாழ்ந்தால் சொத்தைச் சமமாகப் பங்கிட்டுக்கொள்ள மறைமுக ஒப்பந்தம் இருப்பதாக நீதி மன்றம் கருதும்.[15]

[14] Jalbhai *vs* Louis 19B 680; Kulada *vs* Haripada. 17C W.N. 102; 40C 407 : 17 I.C. 257.

[15] Jogi *vs* Chinnabai 22 L.W. 116 : 1925 M. 1195 Subbaraya *vs* Ramasami 23M 171 19C 289 (F.B.).

Paru *vs* Raman 44M 891 : 14 L.W. 257 : 1921 M 224 : 41 M.L.J. 243 ; 1921 M.W.N. 594 Vaithilinga *vs* Ayyathorai 40 M. 1118 : 37IC 753.

2. திருமணம்

பகுதி அ—இந்துத் திருமணச் சட்டம் 1955-க்கு முந்திய சட்டம்

கிறித்துவ மதத்தைப் போலவோ இஸ்லாமிய மதம் போலவோ இந்து மதம் திருமணத்தை ஒரு வாழ்க்கை ஒப்பந்தமாகக் கருதவில்லை. மாறாக ஒரு புனிதமான சமயச் சடங்காகக் கருதுகிறது. கிறித்துவ மதமும் இஸ்லாமிய மதமும் சட்டப்படி பிறக்கும் குழந்தைகள் சட்டப்படி சொத்துரிமை பெற நடக்கும் சட்டச் சடங்காகவே திருமணத்தைக் கருதுகின்றன. ஆனால் இந்து மதம் சம்ஸ்காரம் (Samskara) என்று சொல்லப்படும் சமயச் சடங்குகளில் ஒன்றாகவே திருமணத்தை வைத்திருக்கிறது. உடல் உறவிற்குச் சமூக அங்கீகாரம் அளிக்கும் ஒரு சடங்கு என்பதை விடச் சமயச் சடங்கு என்பதற்கே தர்ம சாஸ்திரங்களில் அழுத்தம் தரப்பட்டிருக்கிறது. பிறவியிலே மனிதனிடம் அமைந்து விட்ட கறையைப் போக்கித் தூய்மையாக்கிக் கொள்ள மதம் காட்டும் ஒரு பாதையே திருமணம். இன்பம் துய்ப்பதும், குழந்தைகள் பெறுவதும் மட்டுமல்ல. அறநெறி ஒழுகுவதே திருமணத்தின் தலையாய நோக்கம். பிரம்மச்சரியத்தையோ அல்லது துறவறத்தையோ மேற்கொள்ளாத ஓர் ஆண், பெண்ணை மணந்து கொண்டு குழந்தைகளை ஈன்றெடுப்பது விமோசனம் பெறுவதற்குச் செய்யவேண்டிய மதக் கடமையாகும். மனைவி என்பவள் கணவனுக்கு உலகியல் வாழ்க்கையில் உதவுபவள் மட்டுமல்லள்; மேலாக விண்ணுலக வாழ்க்கையை அடைவதற்கும் உதவுபவள் என்று கருதப்பட்டாள். அதனால்தான் மனைவி என்பவள் 'தர்ம பத்தினி' என்று அழைக்கப்பட்டாள்.

திருமண வகைகள்

பண்டைய இந்துச் சமூகத்தில் எட்டுவகைத் திருமணங்கள் வழக்கில் இருந்தன. அவைகளுள் ஒன்றுக்கொன்று அதிக வேறு

பாடு உண்டு. ஒவ்வொன்றும் தத்தம் காலத்திய சமூக வளர்ச்சியைப் பிரதிபலித்தன என்று சொல்லலாம். பலவகைத் திருமணங்களும் அவைகளுள் பெரும் வேறுபாடுகளும் காணப் பட்டதில் வியப்படைவதற்கு எதுவுமில்லை. இந்தியாவின் விரிந்து பரந்த நிலப்பரப்பையும், பல்வேறு மொழிகளையும், ஒவ்வொரு பகுதியிலும் ஏற்பட்ட ஏற்றத்தாழ்வுகளையும் கவனிக்கும் போது, யாருக்கும் வியப்புத் தோன்றாது. முற்காலத்தில் பிரம்ம மணம் (Brahma) தெய்வமணம் (Daiva) ஆரிஷமணம் (Arsha) பிரஜா பத்ய மணம் (Prajapatya) அசுரமணம் (Asura) காந்தர்வமணம் (Gandharva) ராட்சசமணம் (Rakshasa) பைசாசமணம் (Pisacha) ஆகிய எட்டுவகைத் திருமணங்கள் அங்கீகாரம் பெற்றிருந்தன. இவற்றுள் முதல் நான்கும் ஒப்புக்கொள்ளப்பட்ட (Approved) திருமண வகைகளாகும். மற்ற நான்கும் ஒப்புக்கொள்ளப்படாத (Unapproved) திருமண வகைகளாகும்.

எட்டுத் திருமண வகைகளுள் பிரம்மவகைத் திருமணத்தையும் அசுர வகைத் திருமணத்தையும் தவிர மற்றவைகள் வழக் கொழிந்து விட்டன. பிரம்மவகையும், அசுரவகையும் கண்ணிய மானவை. அவைகளே இன்று அங்கீகாரம் பெற்றிருக்கின்றன. பிரம்ம திருமணத்தில் பெண் மணமகனுக்குப் பரிசாகத் தரப்படுகிறாள். பெண்ணின் தந்தையோ அல்லது காப்பாளரோ மாப்பிள்ளையிடமிருந்து எந்தவித பிரதிபலனும் (Consideration) பார்க்காமல் பெண்ணைக் கொடுக்கிறார். ஆனால், அசுரத் திருமணத்தில் மாப்பிள்ளையின் தந்தையிடமிருந்து அல்லது காப்பாளரிடமிருந்து பெண்ணைக் கொடுப்பதற்குப் பிரதிபலன் பெற்றுக் கொள்வார்கள். இவ்வாறு பெண் வீட்டார் பெற்றுக் கொள்வதை சுல்கம் (Sulka) என்று அழைப்பார்கள். ஒரு திருமணம் பிரம்ம வகையா அல்லது அசுர வகையா என்பதைப் பெண்வீட்டார் பிரதிபலன் பெறுவதைக் கொண்டே தீர்மானிக்க வேண்டும். ஸ்ரீதனச் சொத்தில் வாரிசுப் பிரச்சினை கிளம்பும் போது ஒரு திருமணம் பிரம்மத் திருமணமா அல்லது அசுரத் திருமணமா என்ற கேள்வி முக்கிய இடம் வகிக்கும். பிரம்ம வகைத் திருமணத்தில் பெண்ணின் ஸ்ரீதனம் அவளுக்குப் பின் குழந்தைகள் இல்லா விட்டால் கணவனையும் அவனுடைய சபிண்டர்களையும் சென்றடையும். அசுரவகைத் திருமணத்தில் ஸ்ரீதனம் அவளுக்குப் பின் அவளுடைய பிறந்த வீட்டாருக்கும் செல்லும்.

சடங்குகள்

திருமணம் செய்வதில் சில சடங்குகள் உண்டு. அந்தச் சடங்குகள் பூர்த்தியானால்தான் திருமணம் நடந்ததாகப் பொருள்

கொள்வார்கள். பழைய இந்து நூல்கள் திருமண விழாவில் பின்பற்ற வேண்டிய முறைகளையும், செய்ய வேண்டிய சடங்குகளையும் என்னென்ன என்று விரிவாக எடுத்துரைத்திருக்கின்றன. இந்துத் திருமணத்தில், அது பிரம்ம வகையானாலும் சரி, அசுர வகையானாலும் சரி, மூன்று சடங்குகள் மிக முக்கியமானவை. திருமணத்திற்கு முன்பு செய்யப்படும் நிச்சயதார்த்தம் முதலாவது. ஹோமம் முன்னால் மந்திரம் ஓதுதல் இரண்டாவது. மணமக்கள் ஹோமத்தை ஏழு அடி எடுத்துவைத்து வலம் வருதல் மூன்றாவது. இதில் நிச்சயதார்த்தம் என்பது திருமணம் செய்வதாக இருதரப்பினரும் வாக்களித்துக் கொள்வதாகும். இதைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்.[1] இரண்டாவது சடங்கான ஹோமம் முன்னால் மந்திரம் ஓதுதலும், கன்னிகாதானம் செய்வதும்கூட உண்மையில் திருமணத்தை முழுமையாக்கி விட்டதாகச் சொல்ல முடியாது. மணமக்கள் இருவரும் சேர்ந்து புனிதத் தீயை (ஹோமம்) ஏழு அடி எடுத்து வைத்து வலம் வருதல்தான் திருமணத்தை முழுமையாக்கும் சடங்காகும். இதைச் சப்தபதி (Saptapati) என்பர். ஆனால் சில வகுப்பினர் இந்தச் சடங்குகள் அல்லாது வேறு சடங்குகளைப் பின்பற்றுகின்றனர். அவர்கள் தங்கள் வழக்கப்படி தங்களுக்குரிய சடங்குகளைப் பூர்த்தி செய்துவிட்டால் திருமணம் முடிந்து விட்டதாகக் கருதப்படும். சில வகுப்பாரிடையே உண்மையான திருமணம் முடிந்த பின்னும் வேறு சில சடங்குகளைச் செய்யும் வழக்கம் உண்டு. அவர்கள் திருமணத்திற்குப் பின்னரும் செய்யப்படும் சடங்குகள் பூர்த்தியான பிறகுதான் திருமணம் நடைபெற்றதாக ஒப்புக்கொள்வார்கள். ஆனால், திருமணம் பூர்த்தியடைந்து விட்டது என்பதற்குச் சாந்தி முகூர்த்தம் அல்லது முதலிரவிற்கு ஏற்பாடு செய்வது முக்கிய அடையாளம் அல்ல.

திருமணத் தகுதிகள்

ஒவ்வொரு இந்து ஆணும் பெண்ணும் அவர்கள் எந்த வயதினரானாலும் மணந்து கொள்ளலாம். என்றாலும் பெண்ணைவிட ஆண் மூத்தவனாக இருப்பது சிறப்பு என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. இது இன்றுவரை நடைமுறையில் இருந்து வருகின்றது. ஆயிரத்தில் ஒரு திருமணத்திலேயே ஆணைவிடப் பெண் மூத்தவளாக இருக்கிறாள். பிராமணர், சத்திரியர், வைசியர் ஆகிய வருணத்தார்மட்டும் திருமணத்திற்கு முன்னர் உபநயனம் (பூணூல் திருமணம்) செய்து கொண்டிருக்கவேண்டும். சில விஷயங்களில் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறவர்களின் திருமணத் தகுதிபற்றிப் பிரச்சினைகள் எழும். அவை உரிமை

[1] Umed *vs* Nagindas, 7 Bom. H.C.R. 122 : In the matter of Gunput Narain lo, 74 ; Khimgi *vs* Ravsi, 39B 682 ; 17 Bom L.R. 225.

வயது அடையாமை (Minority), பித்துநிலை (Lunacy), நபும்சகம் (Impotency), முறையிலா மணப் பிறப்பு (Illegitimacy), மதவழித் தகுதியின்மை (Religious dis-qualifications).

உரிமை வயது அடையாமை

இந்து தருமப்படி திருமணம் ஓர் ஒப்பந்தம் அன்று; சமயக் கடமை. எனவே ஒருவன் உரிமை வயது அடைந்திருக்கிறானா இல்லையா என்பது முக்கியமல்ல. அவன் எந்தச் சின்ன வயதிலும் மணந்து கொள்ளலாம். மணமக்களுக்கு உரிமை வயது வரவில்லை; நல்லது கெட்டதைத் தீர்மானிக்கும் ஆற்றல் கிடையாது என்று சொல்லி ஒரு திருமணத்தைச் செல்லாததாக்க முடியாது. இதனால் ஒரு பெண்ணை நிர்ப்பந்தம் செய்து மணமுடித்துக் கொடுக்கலாம் என்று பொருள் கொள்ளலாகாது. ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொடுத்தால் பெற்றோர்கள் அவள் விருப்பம் அறிந்து செய்வதாகத்தான் கருதப்படும். ஒரு பெண்ணுக்குப் பெற்றோர்களோ காப்பாளர்களோ இல்லாமல் இருந்தால், அல்லது இருந்தும் அவள் நலத்தில் நாட்டம் கொள்ளாது புறக்கணித்தால், அப்பெண்ணே மணமகனைத் தேர்ந்தெடுத்து மணந்து கொள்ளலாம்.

தர்ம சாஸ்திரங்கள் திருமணம் செய்து கொள்வதற்குக் குறைந்த அளவு வயதை நிர்ணயம் செய்யவில்லை. எந்த வயதிலும் திருமணம் செய்யலாம் என்றே கூறுகின்றன. இதனால் குழந்தையாக இருக்கும் போதே திருமணம் செய்வது இந்தியாவில் வழக்கமாக இருந்தது. இந்த வழக்கத்தால் விளைந்த தீமைகள் பல. எனவே, இந்தக் குழந்தைத் திருமணத்தை அறவே ஒழிக்க வேண்டும் என்று பல சமூக சீர்திருத்த அறிஞர்கள் எண்ணினார்கள். அதன் பயனாக 'குழந்தைத் திருமணத் தடுப்புச் சட்டம் 1929' (Child Marriage Restraint Act, XIX of 1929) நிறைவேற்றப்பட்டது. பதினெட்டு வயதுக்குட்பட்ட ஆணும் பதினான்கு வயதுக்குட்பட்ட பெண்ணும் மணம் புரிந்துகொள்வதை இச் சட்டம் தடுக்கிறது. சட்டத்தை மீறிக் குழந்தைத் திருமணத்திற்கு ஏற்பாடு செய்யும் பெற்றோர்கள் காப்பாளர்கள் இச் சட்டத்தின்கீழ்த் தண்டிக்கப்படுவார்கள். ஆனால் அப்படி நடந்துவிட்ட திருமணம் எவ்வகையிலும் பாதிக்கப்படமாட்டாது. அத் திருமணம் முறையானதாகவே ஏற்றுக்கொள்ளப்படும்.

பித்து நிலை (Lunacy)

பித்து நிலை, திருமணம் புரிந்து கொள்வதற்கு ஒரு தடை. திருமணம் என்பதன் பொருளையே புரிந்து கொள்ள முடியாத

பித்தனுக்கு மணம் செய்வித்தால் அத் திருமணம் செல்லாது. திருமணத்தின் தாத்பரியத்தையே புரிந்து கொள்ளக்கூடிய அளவுக்கு அவனுக்கு மனவளர்ச்சி கிடையாது என்பதைப் போது மான அளவு நிறுவ வேண்டும். இல்லாவிட்டால் அவனுக்குத் திருமணத்தின் பொருள் புரிந்திருப்பதாகவே நீதிமன்றம் கருதி, திருமணத்தைச் செல்லும் என்றே தீர்ப்பளிக்கும்.

நபும்சகம் (Impotency)

இந்து தருமத்தின்படி ஒரு பெண் ஒரு நபும்சகனைத் (ஆண்மை அற்றுப் போனவனை) திருமணம் செய்து கொண்டால் அத் திரு மணம் செல்லாததாகி விடாது. ஏனெனில், திருமணம் உடலுறவுக் காக மட்டுமல்ல; என்றாலும் குழந்தைகளை ஈன்றெடுப்பது அதன் தலையாய நோக்கம். கணவன் நபும்சகனாக இருந்தால் இந்த நோக்கம் நிறைவேறாமல் போய்விடுகிறது என்பது உண்மையே. அதைப் போலவே கொடுமையான நோயோ பிற குறைகளோ கூடத் திருமணத்திற்குத் தடை அல்ல. ஆனால் திருமணம் செய்து கொள்வதாக ஒப்பந்தம் செய்துகொண்ட பின்னர், மண மகன் நபும்சகன் என்பதும், பெரிய நோயாளி என்பதும் தெரிய வந்தால் திருமணம் செய்ய வேண்டியதில்லை. செய்துகொண்ட ஒப்பந்தம் கட்டுப்படுத்தாது.

முறையிலா மணப் பிறப்பு (Illegitimacy)

ஒருவன் முறையிலா மணத்தால் பிறந்திருப்பது அதாவது வைப்பாட்டியின் பிள்ளையாய் இருப்பது திருமணம் செய்து கொள் வதற்கு ஒரு தகுதியின்மை அன்று.

மதவழித் தகுதியின்மை

திருமணம் செய்து கொள்வதற்கு மதம் சில நிபந்தனைகளை விதித்திருக்கிறது. மணமக்கள் ஒரே ஜாதியைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும்; ஆனால் ஒரே கோத்திரம் அல்லது பிரவரத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கக்கூடாது; அவர்கள் தடை செய்யப் பட்ட உறவு நிலையினராக (Prohibited Degree of Relationship) இருக்கக்கூடாது என்பவை நிபந்தனைகள்.

ஒருவன் அதே ஜாதியைச் சேர்ந்த பெண்ணைத்தான் மணந்து கொள்ள வேண்டும் என்று சாஸ்திரங்கள் வற்புறுத்தினாலும், கலப்புத் திருமணம் தொடர்ந்து நடைபெற்றே வந்திருக்கிறது. கலப்புத் திருமணத்தில் அனுலோமம் (Anuloma) பிரதிலோமம் (Pratiloma) என இருவகை உண்டு. அனுலோமம் என்பது

உயர்ந்த ஜாதியைச் சேர்ந்த ஒருவன் தாழ்ந்த ஜாதியைச் சேர்ந்த பெண்ணை மணந்து கொள்வது; பிரதிலோமம் என்பது உயர் குடிப் பெண்ணுக்கும் கீழ்ச்சாதி ஆணுக்கும் நடக்கும் திருமணமாகும். பிரதிலோமத் திருமணம் சற்றும் செல்லத்தக்கதன்று. ஆனால் எப் பகுதியிலாவது அப்படி ஒரு வழக்கம் இருந்தால் அத் திருமணம் செல்லும். அனுலோமத் திருமணம் அதிகம் நடைபெறுவிட்டாலும் செல்லத்தகுந்ததே என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.[2] ஆனால் சிறப்புத் திருமணச் (திருத்த) சட்டம் 1923 (Special Marriage Amendment Act, 1923) இந்த வேறுபாடுகளை அகற்றி விட்டது. இந்தச் சட்டப்படி ஜாதிப் பாகுபாடு இல்லாமல் மணந்து கொள்ளலாம்.

இந்து மதத்தில் காணப்படும் நான்கு வருணத்திற்குள் பல உட்பிரிவுகள் உண்டு. அந்த உட்பிரிவினர் தம்முள் மணந்து கொள்ளலாம். ஒரு வழக்கில் இந்துவாக மாறிய கிறித்துவப் பெண்ணும் ஓர் இந்துச் சூத்திரனும் செய்துகொண்ட திருமணம் செல்லும் என்று சென்னை உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்தது.[3] அப் பெண் சூத்திரப் பெண்ணாக மாறிய பிறகு மற்றொரு சூத்திரனை மணந்து கொள்வது செல்லத் தக்கதே என்றது நீதி மன்றம்.

கோத்திரம்

முதல் மூன்று வருணத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் குடும்பத்தை நிறுவியவர் என்று ஒரு முனிவரைக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட முனிவர்கள் அகத்தியர் (Agastya), அத்திரி (Atri), பாரத்வாஜர் (Bharadwaja), கவுதமர் (Gautama), ஜமதக்கினி (Jamadgni), காசிபர் (Kasyapa), வசிஷ்டர் (Vashista), விஸ்வாமித்திரர் (Vishwamitra) என எண்மராவர். இவர்கள் ஒவ்வொருவர் பெயராலும் ஒரு கோத்திரம் தோன்றியது. இந்த முனிவர்கள் தாங்களே ஒரு கோத்திரத்தை நிறுவினார்கள் அல்லது அக் கோத்திரத்திற்கு அதில் வந்த அம் முனிவரின் பெயர் இடப்பட்டது என்று கொள்ளலாம். கோத்திரங்களை நிறுவிய எண்மரின் மூன்று நேர்வழி ஆண் மூதாதையர்கள் பிரவரர் (pravara) என்று அழைக்கப்படுகின்றனர். அதாவது கோத்திரங்களை நிறுவிய எண்மரிலிருந்து இந்த முனிவர்கள் வேறுபட்டவர்கள் என்பதைக் காட்டவே இவர்கள் பிரவரர் என்று அழைக்கப்படுகின்றனர்.

[2] Surain vs Inder 1934 L. 550; Bai Gulab vs Jivanlal 46B 871 : 22 Bom L R. 77 Subbarammiya vs Venkatasubbamma 53 L.W. 693 : 1941 M.W.N. 646 : (1941) 1 M.L.J. 724.

[3] Muthusamy vs Masilamony 33 M. 342 ; 5IC 42 : 20 M.L.J. 49.

ஒரே கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் திருமணம் செய்து கொள்ளக்கூடாது. அப்படி நடக்கும் திருமணம் செல்லாது.[4] இந்த விதிகள் எல்லாம் முதல் மூன்று வருணத்தவருக்குத்தான்; சூத்திரர்களுக்குக் கிடையாது. ஆனால் பின்னல் நிறைவேற்றப் பட்ட சட்டங்கள் இந்த விதிகளை எல்லாம் பயனற்றதாக்கிவிட்டன. ஒரே கோத்திரத்திலும் ஒரே ஜாதியின் உட்பிரிவிலும் நடந்த திருமணங்கள் செல்லும் என்று இந்துத் திருமணத் தகவின்மை நீக்கச் சட்டம் (Hindu Marriage Disabilities Removal Act, 28 of 1946) பிரகடனப்படுத்தியது. இச் சட்டத்தை ஒருபடி அதிக மாகச் சென்று இந்துத் திருமணச் செல்லுபடிச் சட்டம் (The Hindu Marriage Validity Act, 21 of 1949) வெவ்வேறு பகுதியை, ஜாதியை, பிரிவைச் சேர்ந்தவர்கள் செய்து கொண்ட திரு மணங்கள் செல்லும் என்று அறிவித்தது.

தடை செய்யப்பட்ட உறவு நிலை

வேதங்களை எல்லாம் கற்று முடித்தவுடன் ஒருவன் வேறொரு ஆடவனால் களங்கப்படாத ஒருத்தியை அவள் சபிண்ட உறவில் வராதவளாகவும், வயதில் குறைந்தவளாகவும், உயரத்தில் குறைந் தவளாகவும், நோய் நொடி இல்லாதவளாகவும், வேறு கோத்திரத் தில் பிறந்தவளாகவும், தாய்வழியில் ஐந்து தலைமுறையும் தந்தை வழியில் ஏழுதலைமுறையும் வராதவளாகவும் இருந்தால் மணந்து கொள்ளலாம் என்று யாஞ்ஞவல்கியம் கூறுகிறது.

திருமணம் செய்து கொள்ளும் ஆணும் பெண்ணும் சபிண்ட உறவு நிலையில் இருக்கக்கூடாது என்பதை மிதாக்ஷரமும் தாயபாக மும் ஒப்புக்கொள்கின்றன. ஆனால், இந்த விதியைக் கடைப் பிடிப்பதில் இரண்டிற்குமிடையே வேறுபாடு உண்டு. சபிண்டம் என்றால் என்ன என்பதற்கு வேறுபாடுடைய விளக்கங்கள் தரப்பட் டுள்ளன. மிதாக்ஷரத்தில் சபிண்டம் என்றால் ஒரே பிண்டத்தைச் சேர்ந்தது என்று கூறப்படுகிறது. இந்தப் பொருளில் பார்த்தால் எவ்வளவு தூரத்து உறவினரும் ஒருவனின் சபிண்டம் ஆவார். ஆனால் உண்மையில் இதற்கு வரையறை உண்டு. தாய் வழியில் ஐந்து தலைமுறைவரையிலும் தந்தை வழியில் ஏழு தலைமுறை வரையிலும் உள்ள உறவே சபிண்ட உறவாகக் கருதப்படும். தாய பாகத்தில் சபிண்டம் என்பது இரத்த சம்பந்தமான உறவு என்ற பொருளில் மட்டும் கொள்ளப்படவில்லை. இறந்து போனவர்

[4] Ramachandra *vs* Gopal 22B. 619 ; 10 Bom. L.R. 948; Maharaja of Kolhapur *vs* Sundaram Ayyar 48 M1 : 1925 M. 497.

ஆத்மா சாந்தி யடைவதற்குச் சடங்கு செய்யும் உரிமை உடையவர் என்ற பொருளிலும் வழங்கப்படுகிறது.

மிதாக்ஷர முறையில் சபிண்ட உறவைக் கணக்கிடும்போது சிலவற்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும். தந்தை வழியில் ஏழு தலைமுறை வரை சபிண்ட உறவு உண்டு என்று சொல்லும் போது யாரிடமிருந்து கணக்கிடுகிறோமோ அவரை ஒரு தலைமுறை யாகவும் ஏழாவதாகக் கொள்ளும் மூதாதையரை ஒரு தலைமுறை யாகவும் சேர்த்தே கணக்கிட வேண்டும். தாய் வழியில் கணக்கிடும்போதும் இதே முறையைக் கையாள வேண்டும். ஆனால் தாய் வழியில் ஐந்து தலைமுறை வரைதான் சபிண்ட உறவு உண்டு. மூதாதையருக்கும் சம்பந்தப்பட்டவருக்கும் இடையே உள்ளவர்கள் ஆணா பெண்ணா என்ற பேதத்தைப்பற்றிக் கவலைப்பட வேண்டிய தில்லை. ஆனால் தந்தை வழியில் ஏழாவது தலைமுறையையும், தாய் வழியில் ஐந்தாவது தலைமுறையையும் தாண்டுகிறதா என்ற வரை யறையைக் கவனிக்கும்போது, உடனடியாக அடுத்து இருப்பவர் ஆணா அல்லது பெண்ணா என்பதைக் கவனிக்க வேண்டும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள வரைபடம் சபிண்ட உறவு நிலையைக் கணக்கிடுவதைத் தெளிவாக்கும்.



இப் படத்தில் 'மூ' என்பது மூதாதையரைக் குறிக்கும். 'த' என்பது தந்தையையும், 'தா' என்பது தாயையும் 'பெ' என்பது பெண்ணை யும் 'ஆ' என்பது ஆணையும் குறிக்கும்.

இதில் பெண் ஆணுக்கு அவனுடைய தாய் வழியில் உறவா கிறாள். ஆனால் சபிண்ட உறவுநிலை கிடையாது. ஏனென்றால், 'மூ' எனும் மூதாதையர் ஆணிலிருந்து கணக்கிடும்போது ஐந்து தலைமுறைக்குள் வரவில்லை. (தாய்வழி வரும்போது ஐந்து தலை முறைக்குள் வந்தால்தான் சபிண்ட உறவு) இதில் 'மூ' ஆறாவது

தலைமுறையாகப் போய்விடுகிறார். எனவே, பெண் ஆணுக்குச் சபிண்ட உறவு நிலையில் இல்லை என்று சொல்லலாம். ஆனால் பெண் அவளுடைய தந்தை வழி பார்க்கும்போது ஆண் சபிண்ட உறவு நிலையில் இருக்கின்றான். ஏனென்றால் தந்தை வழியில் ஏழு தலைமுறைவரை சபிண்ட உறவு உண்டு. பெண்ணையும் ஒரு தலைமுறையாக வைத்துக் கணக்கிடும்போது 'மூ' என்னும் மூதாதையர் ஏழு தலைமுறைக்குள் வந்து விடுகிறார்.

தலைமுறையைக் கணக்கிடுவதில் தாயபாகம் மிதாக்ஷரத்தி லிருந்து சிலவற்றில் மாறுபடுகிறது. மிதாக்ஷரத்தில் கணக்கிடும் போது சம்பந்தப்பட்டவர் ஒரு தலைமுறையாகக் கணக்கிடப்படு வார். தாயபாகத்தில் அவர் கணக்கிலிருந்து விடப்படுவார். மிதாக்ஷரத்தில் தாய் வழியில் உறவைக் கணக்கிடும்போது தாய் ஒரு தலைமுறையாகக் கொள்ளப்படுவாள். ஆனால் தாயபாகத்தில் அவள் கணக்கிலிருந்து விடப்படுவாள்.

தாயபாக முறைப்படி திருமணம் செய்து கொள்ளும் மணமகன் ஒருவன்,

(அ) மணமகனின் தகப்பன் (அல்லது) அவரின் ஏறுமுறை யில் ஆறு தலைமுறை ஆண் மூதாதையருக்கும் இறங்கு முறையில் ஏழு தலை முறைக்குள்ளும்,

(ஆ) மணமகனின் தாயின் தந்தை (அல்லது) அவரின் ஏறு முறையில் ஐந்து தலைமுறை ஆண் மூதாதையருக்கும் இறங்கு முறையில் ஐந்து தலைமுறைக்குள்ளும்,

(இ) மணமகன் தகப்பனாரின் சட்ட முறையான (Technical) மூன்று பந்துக்கள் (அல்லது) அவர்களின் ஏறு முறையில் ஆறு தலைமுறை ஆண் மூதாதையர்களுக்கும் இறங்கு முறையில் ஐந்து தலைமுறைக்குள்ளும்,

(ஈ) மணமகனின் தாயாரின் சட்டமுறையான (Technical) மூன்று பந்துக்கள் (அல்லது) அவர்களின் ஏறு முறையில் நான்கு தலைமுறையும் மூதாதையர்களுக்கு இறங்கு முறையில் ஐந்து தலை முறைக்குள்ளும் உறவாக இருக்கக் கூடாது. இவைகளுக்கு ஒரு விலக்கு என்னவென்றால் ஒரு மணமகனும் ஒரு மணமகளும் மேற் படி உறவுள்ளவர்களாயிருந்தாலும், அவர்களுக்கிடையே மூன்று கோத்திரமுள்ளவர்களாயிருந்தால் திருமணம் செய்துகொள்ளலாம்.

உறவினர்கள் தம்முள் மணந்து கொள்ளப் பல தடைகளை முன்னோர்கள் ஏற்படுத்தப் பல காரணங்கள் உண்டு. இந்துக்கள்

கூட்டுக் குடும்பமாக வாழ்ந்தார்கள். ஒரே வீட்டில் பல்வேறு வகை உறவினர்களும் இருந்தார்கள். வயது வந்த பெண்கள் வீட்டில் இருக்கும்போது பெண்களின் கற்பு நிலைக்குப் பாதுகாப்பு அளிக்கத் திருமணம் செய்து கொள்ள விரும்பும் உறவினர் களிடையே விதிகள் வடிவில் சில தடைகள் ஏற்படுத்தப்பட்டன. இதனால் கூட்டுக் குடும்பத்தில் உள்ளச் பெண்களைச் சில உறவு முறையினரே மணக்க முடியும்; சில உறவு முறையினர் மணக்க முடியாது. ஒரே வீட்டில் வயது வந்த பெண்களும் ஆண்களும் சேர்ந்து வாழும்போது பருவ கால உணர்ச்சியின் தூண்டுதலில் தவறுகள் செய்யக்கூடும். அதைத் தவிர்க்க மத அடிப்படையில் கடுமையான விதி அவசியமானது. இதனால் அனுவசியமான குழப்பமும் குரோதங்களும் குடும்பத்தில் நேராவண்ணம் பார்த்துக் கொள்ள முடியும்.

சபிண்ட உறவு முறையினர் மணந்து கொள்ளக்கூடாது எனும் விதி எல்லாவருணத்தவருக்கும் பொருந்தும். இந்தத் தடை செய்யப்பட்ட உறவு நிலைகள் மீறியும், ஒரே கோத்திரத்தில் மணந்து கொள்ளக் கூடாது என்ற விதியை மீறியும் மணந்து கொண்டால், அத் திருமணத்தால் பெண்ணுக்கு 'மனைவி' என்ற தகுதி கிடைக்காது; அவள் மீண்டும் மணந்து கொள்ளவும் முடியாது. ஆனால், அவளைப் பராமரிக்க வேண்டிய பொறுப்பு கைப்பிடித்தவனுக்கு உண்டு. இப்படிப்பட்ட திருமணங்களை அனுமதிக்கிற வழக்கம் இருந்து மணந்து கொண்டால் அது குற்றமல்ல.[5] எடுத்துக்காட்டாக சகோதரியின் மகளையும், தந்தையின் சகோதரி மகளையும், தாயின் சகோதரனின் மகளையும் மணம் புரியும் வழக்கம் தென்னிந்தியாவில் உண்டு.

திருமணம் நடந்ததும், இந்து தர்மப்படி, அது கலைக்க முடியாத தாகிறது. கணவனுக்கும் மனைவிக்கும் சில கடமைகளும், உரிமை களும் ஏற்படுகின்றன. கணவன் மனைவியின் காப்பாளன் ஆகின்றான். அவளோடு தாம்பத்திய உறவு கொள்ளும் உரிமையைப் பெறுகிறான். குழந்தை இல்லாமல் மனைவி முன்ன தாக இறந்து விட்டால் கணவன் சொத்துக்கு வாரிசாவான். கடுமையான பணத் தொல்லைக்கு ஆளாகும் போது ஸ்ரீதனச் சொத்தைத் பயன்படுத்திக் கொள்ளலாம். மனைவிக்கும் சில கடமை கள் உண்டு. மனைவி கணவன் வசிக்கும் இடம் சென்று வாழ வேண்டும் கணவன் மிகக் கொடிய முறையில் அவளிடம் நடந்து கொண்டால், அவள் கணவனைப் பிரிந்து இருக்கலாம்.

[5] Srikrishnan *vs* Sham 1923 Lah. 585 Ragavendra *vs* Jayaram 20 M 283 ; 7 M.L.J. 153.

தாம்பத்திய உறவு உரிமை கோருதல் (Restitution of Conjugal Rights), நீதிமுறைப் பிரிவு (Judicial Separation), மணமுறிவு (Divorce) ஆகியவை நமக்கு மேலைநாட்டு நீதி பரிபாலனத்திலிருந்து கிடைத்தவையாகும். தர்ம சாஸ்திரங்கள் மணமுறிவு போன்றவற்றை அங்கீகரித்ததில்லை. மிகச் சில வகுப்பாரிடையேமட்டும் அப்படி ஒரு வழக்கம் இருந்து வந்தது. இவை மூன்று பற்றியும் அடுத்து வரும் இந்துத் திருமணச் சட்டம் 1955 எனும் தலைப்பில் கூறப்பட்டுள்ளது.

திருமண ஒப்பந்த மீறுகை (Breach of Marriage Contract)

திருமணம் செய்து கொள்வதாக ஒப்பந்தம் செய்து கொண்ட பின்னர், ஒரு தரப்பினர் அவ்வாறு செய்ய மறுத்தால், மறுதரப்பினர் திருமணத்தை நிறைவேற்றுமாறு வழக்காட முடியாது. திருமணம் செய்ய மறுக்கும் தரப்பினரை வேறு இடத்தில் மணம் செய்யக் கூடாது என்று உறுத்துக்கட்டளை (Injunction) யால் தடுக்கவும் முடியாது. பாதிக்கப்பட்டவர்கள் நீதி மன்றத்தை அணுகி இழப்பீடு மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும். இழப்பீட்டுத் தொகை எவ்வளவு கொடுப்பது என்பதை நீதி மன்றம் தீர்மானிக்கும். நியாயமான காரணங்களால் எதிர்த்தரப்பினர் திருமணம் செய்ய மறுத்தால், எடுத்துக்காட்டாக மணமகனுக்குக் கொடிய தீராத நோய் இருக்கிறது என்று மணம் செய்ய மறுத்தால், திருமண ஒப்பந்தம் சம்பந்தமாக ஏற்பட்ட செலவுத் தொகை மாத்திரமே கொடுக்கப்படும். மணமக்களில் யாராவது ஒருவர் இறந்துவிட்டால் கொடுத்த அன்பளிப்பைத் திரும்பப் பெற்றுக்கொள்ள உரிமை உண்டு.

விதவை மணம்

கணவன் இறந்துவிட்டால், விதவையானவள் மீண்டும் மணந்துகொள்ளும் 'வழக்கம்' சில வகுப்பினரிடையே மட்டும் நிலவி வந்தது. ஆனால், 1856ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 'இந்து விதவைகள் மறுமணச் சட்டம்' (Hindu Widows Remarriage Act, 1856) மறுபடியும் விதவைகள் மணந்து கொள்வதற்குச் சட்ட அங்கீகாரம் தந்தது. விதவையான பின்னர் தந்தையின் கோத்திரத்திலே உள்ள ஒருவனை ஒருத்தி மணந்து கொள்ள முடியும். ஏனென்றால் முதல் மணம் நடந்ததுமே தந்தையின் கோத்திரம் அவளை விட்டுப் போய்விடுகிறது. ஒருத்தி மறு மணம் புரிந்து கொண்ட பின் கணவனின் சொத்தில் உரிமை கொண்டாட முடியாது. ஆனால், மகன் அல்லது

மகளுடைய சொத்தைப் பொறுத்த வரையில் அவளுடைய உரிமை பாதிக்கப்படாது.

பகுதி ஆ—இந்துத் திருமணச் சட்டம், 1955

1955ஆம் ஆண்டு மே மாதம் பதினெட்டாம் தேதி இந்துத் திருமணச் சட்டம் அமலுக்கு வந்தது. இந்தச் சட்டம் இந்துத் திருமணம் பற்றி வழக்கில் இருந்த பல சட்டங்களின் திருத்தத்துடன் கூடிய தொகுப்பாகும். இச் சட்டம் திருமணம் குறித்து இந்துக்கள் கொண்டிருந்த கண்ணோட்டத்தில் மகத்தான மாறுதல்களை ஏற்படுத்தின. திருமணத்தில் இருந்த மதத்தின் பிடிப்பு வெகுவாகத் தளர்த்தப்பட்டது. காலத்திற்கும் மனித முன்னேற்றத்திற்கும் ஏற்பப் புதிய கோலங்கள் புதுச் சட்டத்தில் பதிந்தன.

திருமணங்கள் கலைக்கப்பட முடியாதவை என்று சாஸ்திரங்கள் கூறிய மொழிகள் புறக்கணிக்கபபட்டு, மண முறிவிற்கும், மணக்கலைப்பிற்கும் சட்டத்தில் வகை செய்யப்பட்டது. நீதி முறைப் பிரிவிற்கும் (Judicial Separation) தாம்பத்திய உறவு கோரும் உரிமைககும் (Restitution of Conjugal Rights) சட்டம் அனுமதி தந்தது. இதனால் துரதிருஷ்டவசமாக நேர்ந்து விட்ட துன்பம் தரும் திருமணச் சங்கிலியிலிருந்து சம்பந்தப்பட்டவர்களுக்கு விடுதலை கிடைத்தது. ஆண்கள் பலதாரம் மணந்து கொள்ளும் அநீதிக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது. காதலர் இருவர் கருத்தொருமித்தபின், ஜாதியோ, கோத்திரமோ, அல்லது பிரவரமோ தடையாக இருக்காதவாறு வழி செய்யப்பட்டது. இந்துமதத் தத்துவத்திலிருந்து மாறுபட்டு நின்ற சமண, சீக்கிய, பௌத்த சமயத்தவர் இந்துக்களோடு கலந்து, தம்முள் மணந்து கொள்ள வழி பிறந்தது. மிதாக்ஷரம், தாயபாகம் ஆகிய இரு முறைகளிலும் தடைசெய்யப்பட்ட உறவு நிலைகளை நிர்ணயிப்பதில் ஒரே மாதிரியான விதிகள் வகுக்கப்பட்டன.

இந்தச் சட்டத்தால் காலத்திற்கு ஒவ்வாத கோட்பாடுகள் வாழ்க்கை முறையிலிருந்து நீக்கப்பட்டுப் புதிய விதிகளால் இந்துத் திருமணம் புதிய பொலிவைப் பெற்றது என்று சொல்லலாம். நாகரிகமடைந்த பல நாடுகளில் காணப்படும் நவீனத் தன்மையை இச் சட்டமும் பெற்றிருக்கிறது.

இந்து என்பவன் யார் ?

இந்து என்பவன் யார் என்பதை இச் சட்டம் திட்டவட்டமாக வரையறை செய்து கூறவில்லை எதிர்மறையான

(Negative) விளக்கமே தரப்பட்டுள்ளது. வீரசைவம், லிங்காயத்து, பிரம்மசமாஜம், பிரார்த்தனை சமாஜம், ஆரிய சமாஜம் உள்ளிட்ட இந்து மதத்தின் பல்வேறு வடிவங்கள் அல்லது அதன் மாறுதல்கள்வழி நிற்கும் எல்லா நபரும் இந்துக்கள்; பௌத்த மதம், சமண மதம், சீக்கிய மதம் ஆகியவற்றைப் பின்பற்றுவோரும் இந்துக்கள்தாம்; இஸ்லாமிய, கிறித்துவ, பார்சிய, யூத மதத்தவராக இல்லாமல் இச் சட்டம் ஆட்சி செலுத்தும் நிலப்பகுதியில் நிலையாக வசிப்பவரும் இந்து ஆவார். (அதாவது, ஒருவன் முஸ்லீமாக, கிறித்துவனாக, பார்சியாக, யூதனாக இல்லாதது போலவே இந்துவாக இல்லா விட்டாலும் அவன் இந்தியாவை நிலையான இருப்பிடமாகக் கொண்டிருந்தால் அவன் இந்துவாகக் கருதப்படுவான். எனவே, இச் சட்டம் அவனுக்குப் பொருந்தும்.) அதற்கு (அதாவது இச் சட்டம் ஒரு நபரைக் கட்டுப் படுத்தாது என்று சொன்னால்,) இச் சட்டம் நிறைவேற்றப்படா விட்டால் வேறு எந்த இந்துச் சட்டமோ, வழக்கமோ, வழக்காறோ, எந்த ஒரு நபரையும் கட்டுப்படுத்தாது என்பது நிரூபிக்கப் பட வேண்டும்.

இந்த விளக்கத்தால், இந்துவாகப் பிறந்த ஒருவன் அவன் இந்து மதத்தின் எந்த வடிவத்தைப் பின்பற்றினாலும், அந்த வடிவம் இந்து மதத்தின் குணும்சத்தை (Character) இழந்து விடாத வரையில் அவன் இந்துவாகவே கருதப்படுவான். புத்த, சமண, சீக்கிய சமயங்களைச் சேர்ந்தவர்களும் இச்சட்டத்தின் கண் முன் இந்துக்களே. ஆனால், இவர்கள் தங்களை இந்துக்கள் என்று அழைத்துக் கொள்வதில்லை. இந்து தர்மத்தின் கோட்பாடுகள் பலவற்றை ஏற்றுக்கொள்வதும் இல்லை. எனினும் இந்தச் சமயங்கள் இந்தியாவில் தோன்றியவை. இவை ஒவ்வொன்றும் தனித்தனிச் சமயங்களாக இந்து மதத்திற்கு எதிராகப் பலகாலம் இயங்கி வந்தன. இந்து சமயத்திற்குச் சற்றும் சம்பந்தமில்லாமல் தனிக் கோட்பாடுகள், சமய நெறிகள், நம்பிக்கைகள் கொண்டு திகழ்ந்தன. இந்துக்களுக்கும் பௌத்த சமணர்களுக்கும் பகைமை மூண்டு ஒருவரை ஒருவர் அழித்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால் காலப்போக்கில், பிறந்த மண்ணான இந்தியாவில் பௌத்தமதம் ஏறக்குறைய அழிந்துவிட்டது என்று சொல்லலாம். சமண மதமும் இந்தியாவில எங்கோ சில பகுதிகளில் மட்டுமே உள்ள மதமாகச் சுருங்கிவிட்டது. இந்து மதமே பல சோதனைகளுக்கு மத்தியிலும் மிகப் பெரும்பான்மை மதமாகத் தொடர்ந்து இருந்துவருகிறது. ஆரம்ப காலத்தில் இந்த மதங்களுக்கிடையே இருந்த காழ்ப்புணர்ச்சி படிப்படியாகக் குறையத் தொடங்கி விட்டது. மொகலாயர் ஆட்சி ஏற்பட்ட காலத்தில்

இந்த மதங்களுக்கிடையே பகைமைப் போக்கு மாறி நட்பு மலர்ந்தது. முகமதியர் ஆட்சிக் காலத்தில் அவர்களுக்கு எதிராகத் தோன்றியதே சீக்கிய மதம். பின்னர் ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்ட போது தொடர்ந்து வந்த நட்பை மேலும் நெருக்கமாக்கிக் கொண்டு, இச் சமயங்கள் அந்நிய ஆட்சியை அகற்றுவதில் கைகோத்து நின்றன. ஆகவே தத்துவ நோக்கில் இவை ஒன்றுக் கொன்று மாறுபட்டாலும், ஒரே நாட்டில் தோன்றிய சமய வடிவங்கள் என்ற அளவில் ஒரே சட்டத்தையே ஏற்றுக் கொண்டுள்ளன.

அடுத்து, முஸ்லீமாகவோ, கிறித்துவராகவோ, பார்சியாகவோ, யூதராகவோ இல்லாத ஒரு நபர் இந்தியாவில் நிலையாக வாழ்ந்தால் அவனுக்கு இந்துச் சட்டமே அமல் ஆகும் என்கிறது சட்டம். வேறு விதமாகச் சொல்வதானால், அவன் இந்துவாக இல்லா விட்டாலும் இச் சட்டம் பொருந்தும். அவன் இந்துவாகவே கருதப்படுவான். அதாவது ஒருவன் தனக்கு மதமே கிடையாது, தான் ஒரு நாத்திகன் என்று அழைத்துக் கொண்டாலும் இந்துச் சட்டம் அவனுக்கு அமலாகும். ஆனால் அப்படிப்பட்ட நபர் தனக்கு இந்துச் சட்டம் உரியதல்ல என்று நிரூபிக்க உரிமை உண்டு. இந்துச் சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் எந்த இந்துச் சட்டமும் தனக்கு அமல் செய்யப்படவில்லை. எனவே இந்தச் சட்டமும் அமலாகாது என்று சான்றுகளுடன் நிறுவலாம். இந்துச் சட்டம் மாத்திரம் தனக்கு அமலாக வில்லை என்று காட்டினால் போதாது, அதனுடைய எந்த வழக்கமும், வழக்காறும் தனக்கு உரியதல்ல என்பதையும் காட்ட வேண்டும்.

முறை மணக் குழந்தைகளும், முறையிலா மணக் குழந்தைகளும் (Legitimate Children and Illegitimate Children)

இந்துப் பெற்றோர்களின் முறையான திருமணத்தில் பிறந்தவர் களுக்கு இந்துச் சட்டமே உரியது. அது உரியது அல்ல என்போர் தாங்கள் அந்த மதத்தை விட்டுவிட்டோம் என்பதை நிறுவ வேண்டும். சில சடங்குகளைப் பின்பற்றாமல் இருப்பதோ இந்து தர்ம தத்துவத்தில் நம்பிக்கை இல்லாமல் இருப்பதோ இந்து மதத்தை விட்டு விட்டோம் என்பதற்குப் போதிய ஆதாரமாகாது. இந்து மதத்தின் இரு வேறு பிரிவினர்களுக்குப் பிறக்கும் குழந்தை களும் இந்துக்களே. இந்து ஒருவனுக்கும் ஒரு சமணப் பெண் ணுக்கும் பிறக்கும் குழந்தைக்கும் இந்துச் சட்டமே அமலாகும்.

முறையிலா மணப்பிறப்பிலும் பெற்ருேர்கள் இந்துக்களாக இருந்தால் இந்துச்சட்டமே பொருந்தும். பெற்ருேர்களில் ஒருவர் இந்துவாகவும், மற்ருெருவர் வேறு மதத்தினராகவும் இருந்தால், குழந்தை இந்துக்களுக்குள்ள வழக்கப்படி, இந்துச் சூழ்நிலையில் வளர்க்கப்பட்டால் இந்துச் சட்டமே குழந்தைக்கு அமலாகும். பின்னுளில் தாய் தந்தையர் மதம் மாறினாலும் அந்த மத மாற்றம் குழந்தையைப் பாதிக்காது.

மதம் மாறியவர்களும், மதம் மாறி மீண்டவர்களும் (Converts and Re-Converts)

'இந்து என்பவன் பிறக்கிருன்' என்ற கொள்கை இப்போதுள்ள சட்டத்தால் மாற்றப்பட்டு விட்டது. வேறு மதத்தினரும் அந்த மதத்தை விட்டுவிட்டு இந்து மதத்தை முறைப்படி தழுவிக் கொண்டால் அவர்களுக்கு இந்துச் சட்டமே அமலாகும். அதைப் போலவே இந்து ஒருவன் வேறு மதத்திற்குச் சென்று மறுபடியும் இந்துமதத்திற்கே மீண்டும் வரலாம். அப்போது அவனுக்கு இந்துச் சட்டமே அமலாகும். மதமாற்றத்திற்கோ அல்லது மீண்டும் பிரிந்து சென்ற மதத்திற்கு மீள்வதற்கோ தனியாகச் சடங்குகள் என்று எதுவும் கூறப்படவில்லை. இந்துச் சமூகம் அவனை இந்து என்று அங்கீகரிக்க வேண்டும். அதுதான் முக்கியம்.

பழங்குடியினர் (Scheduled Tribe)

இந்தியாவில் வாழும் பழங்குடியினருக்கு இந்தச் சட்டம் அமல் ஆகாது. ஆனால் இதை அமல் செய்யும் அதிகாரம் மத்திய அரசுக்கு உண்டு. பழங்குடியினருக்கு, அவர்கள் மேற்கொண்டு வரும் வழக்கமே உரியதாகும். அப்படி வழக்கம் எதுவும் கிடையாதென்ருல் இச் சட்டம் அமுலாகும்.

விளக்கம் (Definition)

இச் சட்டத்தின் மூன்ருவது பிரிவு சில சொற்களுக்கு விளக்கம் தருகின்றது.

அ. வழக்கம், வழக்காறு என்பவை தத்தம் பகுதி, குடியினர், வகுப்பினர், குழுவினர், குடும்பத்தார் ஆகியோரிடையே தொடர்ந்து, ஒரே மாதிரியாய், நெடுங்காலமாகப் பின்பற்றப்பட்டு வரும் விதி என்று அங்கீகாரம் பெற்றிருக்க வேண்டும். அந்த விதி நிச்சயமானதாகவும், அறிவுக்குப் பொருத்தமானதாகவும், பொது நலனுக்கு எதிரானதாக இல்லாமலும் இருக்க வேண்டும்.

ஒரு வழக்கம் ஒரு குடும்பத்துக்கே உரியதென்றால், அக் குடும்பம் அவ் வழக்கத்தைப் பின்பற்றாமல் விட்டிருக்கக் கூடாது.

ஆ. மாவட்ட நீதிமன்றம் என்பது நகர உரிமையில் நீதி மன்றம் என்றும், பிற பகுதிகளில் பிரதான நீதிமன்றம் (Principal Court) என்றும் அல்லது அதிகார வரையறை உள்ளவை என்று மாநில அரசால் குறிப்பிடப்பட்டுள்ளவை என்றும் கொள்ளலாம்.

இ. ஒரே தாரத்திற்குப் பிறந்தவர்கள் முழு இரத்தச் (Full Blood) சகோதரர்கள் ஆவார்கள். அதே நபரின் இரண்டாவது தாரத்திற்குப் பிறந்தவர்கள் முதல் தாரத்துச் சகோதரர்களுக்கு அரை இரத்தச் (Half Blood) சகோதரர்கள் ஆவார்கள். இந்த முழு இரத்த உறவு, அரை இரத்த உறவு என்பவை முறைப்படி நடைபெற்ற திருமணங்களால் பிறந்த குழந்தைகளுக்கே உரியதாகும். ஒருவனின் வைப்பாட்டி பிள்ளை முறையான திருமணத்தில் பிறந்த பிள்ளைகளோடு இந்த உறவுகளைக் கொண்டாட முடியாது.

ஈ. ஒருத்தி முதலில் ஒருவனை மணந்து கொண்டு பெற்ற குழந்தைகளுக்கும், பிறகு இன்னொருவனை மணந்து கொண்டு பெற்ற குழந்தைகளுக்கும் இடையே உள்ள உறவு தாய்வழி இரத்த உறவாகும் (Uterine Blood).

உ. தர்ம சாஸ்திரங்கள் கூறும் சபிண்ட உறவு முறையிலிருந்து சட்டம் கூறும் சபிண்ட உறவு முறை மாறுபட்டது. தர்ம சாஸ்திரம் தந்தை வழியில் ஏழு தலைமுறை வரையிலும், தாய் வழியில் ஐந்து தலைமுறை வரையிலும், சபிண்ட உறவு உள்ளதாகக் கூறுகிறது. ஆனால், இச் சட்டம் தந்தை வழியில் ஐந்து தலைமுறை வரையிலும், தாய் வழியில் மூன்று தலைமுறை வரையிலும் உள்ளதாக மாற்றிவிட்டது. பிள்ளைக்குப் பெண்ணும், பெண்ணுக்குப் பிள்ளையும் சபிண்டாவாகவும் இருக்க வேண்டும்; பிள்ளைக்குப் பெண் சபிண்டாவாகவும் அதே சமயம் பெண்ணுக்குப் பிள்ளை சபிண்டாவாகவும் இல்லாமல் இருந்தால், சபிண்ட உறவில் மணம் புரிந்துகொள்வதற்கு உரிய தடை உறுதியானதாக இருக்காது. சாஸ்திரங்களில் காணப்படும் குறைபாட்டைச் சட்டம் போக்கி விட்டது. ஒருவன் ஒருத்திக்குச் சபிண்டாவாக இருக்கும்போது அவள் அவனுக்கு சபிண்டாவாக இல்லாமல் இருக்கமுடியாது என்று திட்டவட்டமாகச் சட்டம் கூறுகிறது. சாஸ்திர முறையில் தலைமுறையைக் கணக்கிடும்போது பொது முன்னோர்வரை மேல் நோக்கியும், பின்னர் அவரிடமிருந்து மணமக்கள்வரை கீழ்நோக்கியும் கணக்கிடப்படுகிறது. ஆனால், இச் சட்டப்படிமேல்நோக்கி மட்டுமே தலைமுறை கணக்கிடப்படும்.

ஊ. இந்தப் பிரிவு, திருமணத்திற்குத் தடை செய்யப்பட்ட உறவு நிலையில் இருப்பவர்கள் யார் யார் என்று கூறுகிறது. கீழ்க் காணும் நபர்களை ஆண்மகன் மணக்க முடியாது.

1. ஏறுவழி உறவிலுள்ள பெண்
2. ஏறுவழி உறவிலுள்ளவரின் மனைவி அல்லது இறங்குவழி உறவினரின் மனைவி
3. சகோதரனின் மனைவி
4. தந்தையினுடைய சகோதரர் மனைவி
5. தாயினுடைய சகோதரர் மனைவி
6. பாட்டனுடைய சகோதரர் மனைவி
7. பாட்டியினுடைய சகோதரர் மனைவி
8. சகோதரி
9. சகோதரன் மகள்
10. சகோதரி மகள்
11. தந்தையின் சகோதரி
12. தாயின் சகோதரி
13. தந்தையின் சகோதரி மகள்
14. தந்தையின் சகோதரர் மகள்
15. தாயின் சகோதரி மகள்
16. தாயின் சகோதரர் மகள்

கீழ்க் காணும் நபர்களை ஒரு பெண் மணந்துகொள்ள முடியாது.

1. அவளுடைய நேரடியான ஏறுவழி உறவினரான தந்தை, தந்தையின் தந்தை முதலியோர்.
2. நேரடியான ஏறுவழி உறவினரின் கணவன் அல்லது இறங்குவழி உறவினரின் கணவன்
3. மருமகள், பேத்தியின் கணவன் போன்ற நேரடியான இறங்குவழி உறவினரின் கணவன்
4. சகோதரன்
5. தந்தையின் சகோதரர்
6. தாயின் சகோதரர்
7. சகோதரனின் மகன்

8. சகோதரியின் மகன்
9. தந்தையின் சகோதரர் மகன்
10. தந்தையின் சகோதரி மகன்
11. தாயின் சகோதரர் மகன்
12. தாயின் சகோதரி மகன்

இன்னார் இன்னின்னாரை மணந்துகொள்ள முடியாது என்று கூறப்பட்டிருக்கும் பட்டியலுக்குப் புறம்பாக, தடை செய்யப்பட்ட உறவு நிலையில் இருப்போர் தம்முள் மணந்து கொள்ளும் வழக்கம் சில வகுப்பாரிடையே உள்ளது. எடுத்துக் காட்டாக, சகோதரியின் பெண்ணையோ அல்லது தந்தையின் சகோதரி பெண்ணையோ திருமணம் செய்து கொள்ளும் வழக்கம் தென்னிந்தியாவில் சர்வ சாதாரணம். இப்படி மணந்து கொள்ளும் வழக்கம் இருந்தால் அதைச் சட்டம் அங்கீகரிக்கிறது. அப்படித் திருமணம் புரிந்து கொள்ளும் வழக்கம் இல்லாமல் இருந்து சபிண்ட உறவிலோ அல்லது தடை செய்யப்பட்ட உறவு நிலையிலோ திருமணம் செய்து கொண்டால், அத் திருமணம் இச் சட்டத்தின் பதினோராவது பிரிவின்படி செல்லாததாகும். ஆனால், திருமணம் செல்லாது என்றாலும் கூடப் பிறக்கும் குழந்தைகள் முறையான திருமணத்தில் பிறந்த குழந்தைகளாகவே கருதப் படுவர். அவர்களுக்கு முறையான திருமணத்தில் பிறந்த குழந்தை களுக்கு உரிய உரிமைகள் உண்டு. ஆனால், பெற்றோர்களின் மற்ற உறவினர்களின் சொத்தில் அவர்கள் எந்த உரிமையும் கொண்டாட முடியாது.

விளைவுகள்

இச் சட்டத்தால் ஏற்பட்ட விளைவுகளை நான்காம் பிரிவு கூறு கின்றது. இந்து நூல்கள், விதிகள், இந்துச் சட்டத்திற்குத் தரப் படும் விளக்கங்கள், வழக்கம், வழக்காறு ஆகியவை இச் சட்டம் அமலான பிறகு, இச் சட்டத்தில் வழி வகை செய்யப்பட்டுள்ள விஷயங்களைப் பொறுத்தவரை யாதொரு பயனும் இல்லாதவை களாகி விடுகின்றன. அதாவது தலைமுறை தலைமுறையாக இருந்து வந்த வழக்கங்களைக்கூட இச் சட்டம் செல்லாதவை யாக்கிவிட்டது. சட்டமே சில வழக்கங்களை அங்கீகரித்து அனுமதித்துள்ளது. இச் சட்டத்தின் 5 ஆவது பிரிவிலும் 29 ஆவது பிரிவிலும் இதுப்பற்றிக் கூறப்பட்டுள்ளது. அந்த வழக்கங்களுக்கு மாத்திரமே சட்ட ரீதியாக அமலில் இருக்கும் தகுதி உண்டு. இச் சட்டம் வருவதற்கு முன்பு வழக்கில் இருக்கும் சட்டங்களின்

விதிகள், இச் சட்டத்தின் விதிகளுக்கு முரணாக இருந்தால் முரணாக இருக்கும் விஷயங்களில் செல்லாததாகிவிடும்.

திருமண நிபந்தனைகள்

திருமணம் புரிந்து கொள்ளுவதற்குரிய நிபந்தனைகள் என்னென்ன என்று 5ஆவது பிரிவு கூறுகின்றது.

(அ) திருமணம் செய்து கொள்ளும் நபருக்கு வேறு மனைவியோ அல்லது கணவனோ திருமணம் நடைபெறும் காலத்தில் உயிருடன் இருக்கக்கூடாது. ஒருவன் முறையாக மணந்து கொண்ட மனைவி உயிருடன் இருக்கும்போது இரண்டாவது மணம் புரிந்து கொண்டால் அத் திருமணம் செல்லாது. அது மட்டுமல்ல. இந்திய தண்டனைச் சட்டம் (Indian Penal Code) பிரிவுகள் 494, 495 முதலியவற்றின்கீழ் அவன் தண்டிக்கப்படலாம்.

(ஆ) திருமணம் செய்துகொள்ளும் காலத்தில் பிள்ளையோ பெண்ணோ பித்து நிலையிலோ அல்லது பிறவி மண்டுவாகவோ (Idiot) இருக்கக்கூடாது. மண்டு நிலை என்பது பிறவியிலிருந்தே ஒருவனுடைய மனம் வளர்ச்சி பெறாது குறைபாடுள்ளதாக இருப்பது. சராசரி மனிதனுக்குள்ள மனநிலைகள் அவனுக்கு இருக்காது. மனத்தின் இயக்கம் என்பது முடங்கிவிடும். பித்து நிலை என்பது முற்றிலும் வேறு. பித்து நிலை ஒருவனுக்குப் பிறவியிலேயே அமைவதில்லை. பல காரணங்களால் ஒருவனுடைய புத்தியானது கடுமையாகப் பேதலித்துப் போகலாம். அதனால் எது சரி, எது தவறு, என்ன செய்கிறோம் என்பதையே உய்த்துணர முடியாத நிலை ஏற்படும். அதுதான் பித்து நிலை.

(இ) திருமண காலத்தில் மணமகனுக்கு 18 வயதும் மணமகளுக்கு 15 வயதும் பூர்த்தியாகியிருக்க வேண்டும்.

(ஈ) மணமக்கள் தடைசெய்யப்பட்ட உறவு நிலையில் இருக்கக்கூடாது. ஆனால், அத்தகைய உறவு நிலையில் மணந்து கொள்ள அனுமதிக்கும் வழக்கமோ, வழக்காறோ இருந்தால், திருமணம் செய்து கொள்ளலாம்.

(உ) மணமக்கள் ஒருவருக்கொருவர் சபிண்ட உறவினராக இருக்கக்கூடாது. ஆனால் அத்தகைய உறவில் மணந்து கொள்ள அனுமதிக்கும் வழக்கமோ, வழக்காறோ இருந்தால், திருமணம் செய்து கொள்ளலாம். (சபிண்ட உறவு, தடை செய்யப்பட்ட உறவு நிலை ஆகியவற்றைப்பற்றி முற்பகுதியில் சொல்லப்பட்டிருப்பதைப் பார்க்கவும்.)

(எ) மணப்பெண்ணுக்கு 18 வயது நிறையவில்லை என்றால் காப்பாளர் இருந்தால் அவருடைய ஒப்புதலைப் பெற வேண்டும்.

திருமணத்தில் காப்பாளர்

மணப்பெண்ணுக்கு 18 வயது முடிவடையவில்லை என்றால் காப்பாளர் ஒப்புதல் வேண்டும் என்று 5 ஆவது பிரிவு கூறுகின்றது. 6 ஆவது பிரிவில் யார் யார் பெண்ணுக்குக் காப்பாளராக இருந்து திருமணம் நடக்க ஒப்புதல் அளிக்க முடியும் என்ற விவரம் கூறப்பட்டுள்ளது. கீழ்க்காணும் நபர்கள் கொடுக்கப்பட்டுள்ள வரிசைப் படி ஒப்புதல் கொடுக்க உரிமை உடையவர்கள்.

1. தந்தை
2. தாய்
3. தந்தைவழிப் பாட்டன்
4. தந்தைவழிப் பாட்டி
5. முழு இரத்தச் சகோதரர் (Brother by Full Blood); சகோதரர்களில் மூத்தவருக்கே முதல் இடம்.
6. அரை இரத்தச் சகோதரர் (Brother by Half Blood); சகோதர்களில் மூத்தவருக்கே முதல் இடம். ஆனால் பெண் அச் சகோதரரோடு வாழ்ந்து கொண்டிருக்க வேண்டும்; சகோதரரால் வளர்க்கப்பட்டிருக்க வேண்டும்.
7. தந்தையின் முழு இரத்தச் சகோதரர் (பெரியப்பன் சிற்றப்பன் போன்றோர்); இவர்களில் மூத்த பெரியப்பாவிற்கே முதல் இடம்.
8. தந்தையின் அரை இரத்தச் சகோதரர். இவர்களில் மூத்தவருக்கே முதல் இடம். ஆனால், பெண் அவரோடு வாழ்ந்து கொண்டிருக்க வேண்டும்; அவரால் வளர்க்கப்பட்டிருக்க வேண்டும்.
9. தாய்வழிப் பாட்டன்.
10. தாய்வழிப் பாட்டி.
11. தாயின் முழு இரத்தச் சகோதரர் (மாமன்மார்); மாமன்களுள் மூத்தவருக்கே முதல் இடம். ஆனால், பெண் அவருடன் வாழ்ந்துகொண்டிருக்கவேண்டும்; அவரால் வளர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பட்டியலில் உள்ளவர்கள் 21 வயதுக்குக் குறைந்தவர்களாக இருந்தால், காப்பாளராக இருக்க

முடியாது. காப்பாளராக இருப்பதற்கு உரிமையுள்ள நபர் காப்பாளராகப் பணியாற்ற மறுக்கலாம். அப்படி அவர் மறுத்து விட்டாலோ, அல்லது பணி செய்ய முடியாத நிலையில் இருந்தாலோ, அல்லது பணி செய்யத் தகுதி இல்லாமல் இருந்தாலோ காப்பாளர் பட்டியலில் உள்ள அடுத்த நபர் அந்த உரிமையைப் பெறுவார். காப்பாளர் பட்டியலில் உள்ள எந்த நபருமே ஒரு பெண்ணுக்கு இல்லை என்றால், அப்போது ஒப்புதல் பெற வேண்டிய அவசியம் கிடையாது. ஆனால் நீதி மன்றம் உரிமை வயது பெறாத பெண்ணின் நலன்களைப் பாதுகாப்பதற்காக, அவசியம் என்று கருதினால், நடைபெறவிருக்கும் திருமணத்தைத் தடுக்கும் வகையில் உறுத்துக் கட்டளை (Injunction) இடலாம். ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் திருமணம் உரிமை வயது பெறாத பெண்ணின் நலன்களுக்கு உகந்தது இல்லை என்றால், திருமணத்திற்குக் காப்பாளர் ஒப்புதல் தந்திருந்தால்கூடப் பெண்ணின் நலத்தில் நாட்டம் கொண்டுள்ளயார் வேண்டுமானாலும் நீதி மன்றத்தை அணுகலாம்.

திருமணச் சடங்குகள்

7ஆவது பிரிவு திருமணச் சடங்குகள் பற்றியது. சடங்குகள் இல்லாத திருமணத்தை இச் சட்டமும் அங்கீகரிக்கவில்லை மணம் புரிந்து கொள்கிறவர்கள் வழக்கப்படி மேற்கொள்ளும் சடங்குகளைப் பின்பற்றாமல் திருமணம் முடிந்து விட்டதாகச் சட்டம் கருதாது. பெண்வீட்டாரும், மாப்பிள்ளை வீட்டாரும் ஒரே வழக்கத்தைப் பின்பற்றுகின்றவர்கள் என்றால் அவ் வழக்கப்படி திருமணம் நடக்க வேண்டும். இருவரும் வேறு வேறு வழக்கங்களை உடையவர்கள் என்றால், பெண் வீட்டார் வழக்கப்படியோ அல்லது மாப்பிள்ளை வீட்டார் வழக்கப்படியோ திருமணம் நடக்கலாம். எப்போது திருமணம் முடிவடைகிறது, எந்தச் சடங்கு கடைசிச் சடங்கு என்பவை அந்தந்தச் சமூகத்தாரிடையே நடைமுறையில் இருக்கும் வழக்கத்தைப் பொறுத்ததாகும். திருமணச் சடங்கிலும், வழக்கத்திலும் மணமக்கள் ஹோமாக்கினியை ஏழு அடி எடுத்துவைத்து வலம் வரும் இச் சடங்கு அடங்கும் என்றால், அப்படி மணமக்கள் தீயை வலம் வந்ததும்—சப்தபதி (Saptapati) என்று அழைக்கப்படும் அந் நிகழ்ச்சி முடிந்ததும்—திருமணம் நிறைவு பெற்றுவிட்டதாகக் கொள்ளப்படும். ஹோமத்தை மணமக்கள் ஏழு அடி எடுத்துவைத்து வலம்வரும் இச் சடங்குதான் திருமணத்தில் முக்கியமான சடங்கு. இது முடிந்தால்தான் திருமணம் முடிந்ததாகச் சட்டம் கருதும். இந்த வழக்கம் இல்லாதவர்கள் தங்கள் வகுப்புக்குரிய வழக்கப்படி மணம் முடித்துக் கொள்ளலாம். அவர்கள் வகுப்பில் திருமணம் பூர்த்தியாவதற்கு அடையாளமாக எந்தச்

சடங்கு கருதப்படுகிறதோ அந்தச் சடங்கு நடந்ததும் திருமணம் நிறைவேறி விட்டதாக எடுத்துக்கொள்ளப்படும்.

இந்துத் திருமணங்களைப் பதிவுசெய்தல்

இந்தியாவில் பல்வேறு வகுப்பினரிடையே பல்வேறு வழக்கங்கள் இருப்பதால், திருமணம் நடைபெற்றதைச் சில சமயங்களில் நிரூபிக்க முடியாமல் போய்விடுகிறது. இச் சட்டத்தின் எட்டாவது பிரிவு இக் குறையைக் களைகிறது. இந்தப் பிரிவு, மணமக்கள் திருமணம் சம்பந்தமான தகவல்களை இந்துத் திருமணப்பதிவேட்டில் (Hindu Marriage Register) பதிவுசெய்து கொள்வதற்கு உதவும் வகையில் விதிமுறைகள், நிபந்தனைகள் என்னென்ன என்று சட்ட மன்றத்தில் சட்டம் இயற்ற மாநில அரசுக்கு உரிமை வழங்கியுள்ளது. இந்துத் திருமணப் பதிவேட்டில் திருமணங்களைப் பதிவுசெய்து கொள்வது அவசியமென்றோ அல்லது பயன்தரும் என்றோ மாநில அரசு எண்ணினால் திருமணத் தகவல்களைத் திருமணப் பதிவேட்டில் பதிவுசெய்து கொள்வதைக் கட்டாயமாக்கலாம். மாநிலம் முழுமைக்கோ, ஏதாவது ஒரு பகுதிக்கோ, எல்லாவகைத் திருமணங்களுக்கோ, அல்லது குறிப்பிட்டவகைத் திருமணங்களுக்கோ பதிவுசெய்தல் கட்டாயம் என்று விதிகள் இயற்றலாம். விதிகள் இயற்றப்பட்ட பிறகு அவைகளை மீறி நடப்பவர்களுக்கு 25 ரூபாய் வரை அபராதம் விதிக்கலாம். இந்த விதிகள் எல்லாம் சட்ட மன்றத்தில் வைக்கப்பட்டு நிறைவேற்றப் படவேண்டும். இந்தத் திருமணப் பதிவேட்டை ஆய்ந்து பார்க்க உரிமை உண்டு. நீதி மன்றத்திலும் அதில் காணப்படும் தகவல்கள் அனுமதிக்கத் தக்க சான்றாகும். உரிய தொகை செலுத்தி மனுச் செய்துகொள்வோருக்கு அதிகார பூர்வமான நகல் தரப்பட வேண்டும். திருமணத்தைப் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று சட்டம் இருந்தும் பதிவு செய்துகொள்ளவில்லை என்பதற்காகத் திருமணம் செல்லாததாகிவிடாது.

தாம்பத்திய உறவு உரிமைகள் கோருதல் (Restitution of Conjugal Rights)

கணவனோ அல்லது மனைவியோ எந்த விதமான நியாயமான காரணமும் இல்லாமல் சேர்ந்து தாம்பத்திய உறவு வாழ்வு வாழ மறுக்கும்போது, பாதிக்கப்பட்டவர் தாம்பத்திய உறவு வாழ்வு வாழத் தீர்ப்பாணை (Decree) வழங்கும்படி மாவட்ட நீதி மன்றத்தில் மனுச் செய்துகொள்ளலாம். இதற்கு இச் சட்டத்தில் ஒன்பதாவது பிரிவில் வழியுள்ளது. மனுதாரர் மனுவில் சொல்லியிருப்பது உண்மைதானென்று நீதிமன்றம் கருதினால், மனுதாரருக்குச் சாதகமாகத் தீர்ப்பாணை வழங்கும். தாம்பத்திய உறவு உரிமைகோரும்

வழக்குகளில் சிற்சில சமயம் மனுதாரரே எதிர் மனுதாரரைவிட மோசமாக நடந்து கொண்டிருப்பார். அதனாலேயே எதிர்மனுதாரர் விலகிச் சென்றிருக்கலாம். இது போன்ற வழக்குகளில் மனுதாரரின் மனுவை நீதிமன்றம் ஏற்றுக்கொள்ள மறுக்கும். இது போன்ற வழக்குகளில் சில அடிப்படையான பிரச்சினைகள் எழுவதுண்டு. நடந்த திருமணமே செல்லத்தக்கதுதானா என்ற வினா எழலாம். அப்போது நீதிமன்றம் முறைப்படி திருமணம் நடந்ததா என்பதைக் கண்டறியும்.[6] மனுதாரர், எதிர் மனுதாரர் எந்த விதமான நியாயமான காரணமும் இல்லாமல் விலகி இருக்கிறார் என்பதை நிரூபிக்கவேண்டும். அப்போதுதான் நீதி மன்றம் அவருக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கும் எதிர் மனுதாரர் விலகி இருப்பது நியாயமான காரணங்களால்தான் என்றும், அப்படி விலகி இருப்பதற்கு மனுதாரரே பொறுப்பு என்றும் நீதிமன்றம் கருதினால் மனுவைத் தள்ளுபடி செய்யும். எதிர் மனுதாரர் தாம்பத்திய உறவு கொள்ளாமல் விலகி இருக்கிறார் என்பதற்காக மட்டுமே நீதிமன்றம் மனுதாரரின் வேண்டுகோளுக்குச் செவி சாய்த்து விடாது. மனுதாரர் கூறியிருக்கும் விஷயங்கள் உண்மை தானா என்று ஆய்ந்து பார்க்கும். எதிர் மனுதாரர் நீதி மன்றத்திற்கு வராமல் இருந்தால்கூட மனுவில் கூறப்பட்டிருப்பவை எந்த அளவுக்கு உண்மை என்பதைக் கணித்தே நீதிமன்றம் முடிவு செய்யும்.

நீதி முறைப் பிரிவு (Judicial Separation) அல்லது திருமணம் செல்லாமை (Nullity of Marriage) அல்லது மணமுறிவு (Divorce)-க்கு என்ன காரணங்கள் போதுமானவை என்று சொல்லப்படுகின்றனவோ அந்தக் காரணங்கள் தவிரப் பிற காரணங்களைத் தாம்பத்திய உறவு உரிமை கோரும் மனுவில் அதை எதிர்க்கும் எதிர்மனுதாரர் கூறமுடியாது.

நீதிமுறைப் பிரிவு (Judicial Separation)

இச் சட்டத்தின் பத்தாவது பிரிவு நீதி முறைப்பிரிவு பற்றிக் கூறுகிறது. நீதிமுறைப் பிரிவு என்பது தாற்காலிகமாகத் தாம்பத்திய உறவும், வாழ்வும் நிறுத்தி வைக்கப்படுவதாகும். சம்பந்தப்பட்டவர்கள் விரும்பினால் அவர்கள் முன்போல் சேர்ந்து வாழ எந்தத் தடையும் கிடையாது. நீதிமுறைப் பிரிவு ஏற்பட்டு விட்டதால் திருமணம் செல்லாததாகிவிடாது. எனவே, சம்பந்தப்பட்டவர்கள் வேறு மணம் புரிந்து கொள்ள முடியாது.

[6] 1963 Punjab 235. Kundadevi *Vs* Kaluram.

இச் சட்டம் வருவதற்கு முன்போ பின்போ திருமணம் செய்து கொண்ட கணவனோ அல்லது மனைவியோ நீதி முறைப்பிரிவு கோரி மாவட்ட நீதிமன்றத்தில் மனுச் செய்து கொள்ளலாம். மனுவில் அடுத்துச் சொல்லப்படும் காரணங்களில் ஏதாவது கொடுக்கப்பட்டிருந்தால்தான் நீதிமன்றம் ஏற்கும்.

1. மனு கொடுக்கப்படுவதற்கு முன்னதாகத் தொடர்ந்து இரண்டாண்டுக் காலத்திற்குக் குறையாமல் எதிர்மனுதாரர் மனுதாரரைக் கைவிட்டுவிட்டார் என்றோ,

2. அல்லது எதிர் மனுதாரரைக் கொடுமையாக நடத்தியதன் விளைவாக எதிர் மனுதாரருடன் சேர்ந்து வாழ்வது தனக்கு ஆபத்தானது, ஊறு விளைவிப்பது என்ற நியாயமான அச்ச உணர்வு மனுதாரர் மனத்தில் எழுந்துவிட்டது என்றோ,

3. அல்லது மனு கொடுக்கப்படுவதற்கு முன்னதாக ஓர் ஆண்டுக் காலத்திற்கும் குறையாமல் எதிர்மனுதாரர் மிகவும் உக்கிரமான தொழுநோயால் பீடிக்கப்பட்டிருக்கின்றார் என்றோ,

4. அல்லது மனு கொடுக்கப்படுவதற்கு முன்னதாகக் குறைந்தது மூன்று வருட காலமாக எதிர்மனுதாரர் தொத்திக் கொள்ளக்கூடிய மேக நோய் (Venereal Disease) அதுவும் மனுதாரரிடமிருந்துவராத நிலையில் பீடிக்கப்பட்டிருக்கிறார் என்றோ,

5. அல்லது மனு கொடுக்கப்படுவதற்கு முன்னதாகக் குறைந்தது இரண்டாண்டுக் காலமாகத் தொடர்ந்து எதிர்மனுதாரர் பித்து நிலையில் இருக்கிறார் என்றோ,

6. அல்லது திருமணத்திற்குப் பிறகு பிறருடன் உடலுறவு கொண்டார் என்றோ மனுவில் சொல்லப்பட்டிருக்க வேண்டும்.

ஒருவரை இன்னொருவர் கைவிட்டுவிடுதல் என்றால் நியாயமான காரணங்கள் இல்லாமல், மனுதாரரின் ஒப்புதல் இல்லாமல், விருப்பத்திற்கு எதிராகக் கைவிடுதல் என்று கொள்ள வேண்டும். ஒருவரை இன்னொருவர் வேண்டுமென்றே அலட்சியப்படுத்துதலும் இதன் பொருளில் அடங்கும். ஆகவே, கைவிட்டுவிடுதல் என்னும் செயல் கணவன் மனைவியை அல்லது மனைவி கணவனை முற்றிலும் புறக்கணித்துவிட்டுச் செல்வதாகும்; திருமணப் பந்தங்களையும், கடமைகளையும் உதறிவிடுவதாகும். தக்க காரணம் இல்லாமல் கைவிட்டுவிட்டுச் சென்றால் பாதிக்கப்பட்டவர்கள் தாம்பத்திய உறவு உரிமை கோரி வழக்குப் போடலாம். ஆனால் கணவன் வேறொருத்தியுடன் வாழ்வதால் மனைவி பிரிந்து போனால், மனைவி கைவிட்டு விட்டாள் என்ற அடிப்படையில் கணவன் நீதி முறைப் பிரிவு கேட்க முடியாது.

நீதிமுறைப் பிரிவிற்குத் தீர்ப்பாணை வழங்கப்பட்டு விட்டால் மனுதாரரும் எதிர்மனுதாரரும் கணவனும் மனைவியும் போல வாழ வேண்டிய அவசியமில்லை. ஆனால், கணவனோ அல்லது மனைவியோ மனுச் செய்து கொண்டால், மனுவில் கூறப்பட்டிருப்பவை உண்மை என்று நீதிமன்றம் நிறைவுகொண்டால், தீர்ப்பாணையை ரத்து செய்வது நியாயம் என்று நீதிமன்றம் கருதினால், அப்படிச் செய்யலாம்.

இல்லா நிலைத் திருமணமும் தவிர்தகு திருமணமும் (Void Marriage and Voidable Marriage)

ச் சட்டத்தின் ஐந்தாவது பிரிவில் திருமணம் புரிந்து கொள்வதற்குரிய நிபந்தனைகள் என்னென்ன என்று கூறப்பட்டுள்ளது. அதில் மூன்று நிபந்தனைகள் முக்கியமானவை. முதலாவது நிபந்தனை (5அ) திருமணம் செய்துகொள்ளும் நபருக்கு வேறு மனைவி அல்லது கணவன் திருமணம் நடைபெறும் காலத்தில் உயிருடன் இருக்கக்கூடாது; இரண்டாவது நிபந்தனை (5ஈ) மணமக்கள் தடைசெய்யப்பட்ட உறவு நிலையில் இருக்கக்கூடாது. ஆனால், அத்தகைய உறவு நிலையில் மணந்து கொள்ள அனுமதிக்கும் வழக்கமோ வழக்காறோ இருந்தால், திருமணம் செய்து கொள்ளலாம். மூன்றாவது நிபந்தனை (5உ) மணமக்கள் ஒருவருக்கொருவர் சபிண்ட உறவினராய் இருக்கக்கூடாது. ஆனால், அத்தகைய உறவில் மணந்து கொள்ள அனுமதிக்கும் வழக்கமோ வழக்காறோ இருந்தால் மணந்து கொள்ளலாம். இந்த மூன்று நிபந்தனைகளில் எந்த ஒன்றையாவது மீறி ஒரு திருமணம் நடந்திருந்தால் (அதாவது இச் சட்டம் அமலுக்கு வந்த பின்னால்) கணவனோ அல்லது மனைவியோ நீதி மன்றத்தில் மனுக் கொடுத்து நடந்த திருமணத்தை இல்லாநிலைத் திருமணமாக அறிவித்துத் தீர்ப்பாணை வழங்கும்படி கேட்டுக் கொள்ளலாம். இல்லாநிலைத் திருமணத்தை விளக்கும் 11 ஆவது பிரிவில் கணவன் அல்லது மனைவிக்குத்தான் இல்லாநிலைத் திருமணமாக அறிவிக்கக்கோரி நீதி மன்றத்தைக் கேட்கும் உரிமை அளிக்கப்பட்டிருக்கின்றது. அந்நியர்கள், பிற உறவினர்கள் இதுகுறித்து நீதி மன்றத்தை அணுக முடியாது. இச் சட்டம் அமலாவதற்கு முன்னால் இத்தகைய நிபந்தனைகளை மீறிச் செய்யப்பட்ட திருமணங்களுக்கு இப் பிரிவு பொருந்தாது.

இந்தச் சட்டம் அமலான பிறகு ஒருவன் இரண்டாம் முறை மணந்து கொண்டால், முன்புள்ள சட்டப்படி மணந்து கொண்ட முதல்தாரம் இரண்டாவது திருமணம் இல்லாநிலையது (Void)

என்று இந்தப் பிரிவின்கீழ் நீதி மன்றத்தில் கேட்க முடியாது. ஆனால், இரண்டாவது தாரம், முதல் தாரம் இருக்கிறாள் என்ற அடிப்படையில் தன் திருமணத்தை இல்லா நிலையதாக அறிவிக்கும்படி நீதி மன்றத்தைக் கேட்கலாம். இப் பிரிவில் முதல் தாரத்திற்குள்ள நிவாரணம் நீதிமுறைப் பிரிவு கேட்பதே. ஆனால் வேறு சட்டப் பிரிவுகள்படி இரண்டாம் திருமணத்தை இல்லா நிலைத் திருமணமாகத் தீர்ப்பாணை வழங்கும்படி கேட்கலாம்.[7] அதற்குத் தடை இல்லை.

தவிர்தகு திருமணங்கள் (Voidable Marriage) யாவை என்பதைப் பன்னிரண்டாவது பிரிவு கூறுகிறது இல்லா நிலைத் திருமணத்திற்கும் தவிர்தகு திருமணத்திற்கும் சில முக்கியமான வேறுபாடுகள் உண்டு. இல்லா நிலைத் திருமணத்தில் சம்பந்தப் பட்ட கணவன் அல்லது மனைவி நடைபெற்ற திருமணத்தை இல்லா நிலைத் திருமணமாக அறிவித்துத் தீர்ப்பாணை வழங்கும்படி நீதிமன்றம [illegible] கேட்காவிட்டாலும் கூடச் சட்டத்தின்முன் அது இல்லா நிலைத் திருமணமேயாகும். ஆனால், தவிர்தகு திருமணத்தில் அது ஆரம்பத்திலேயே (Abinitio) இல்லா நிலைத் திருமணம் அல்ல. பாதிக்கப்பட்டவர் நீதி மன்றத்தை அணுகி, திருமணத்தை இல்லா நிலைத் திருமணமாக அறிவித்துத் தீர்ப்பாணை வழங்கும்படி கோரி, நீதிமன்றம் தீர்ப்பாணை வழங்கும் வரை அது செல்லத்தக்க திருமணமே. தவிர்தகு திருமணத்தில் நீதி மன்றம் திருமணத்தை இல்லா நிலைத் திருமணம் என்று தீர்ப்பாணை கொடுப்பதற்கு முன்னால் மறுமுறை மணந்து கொண்டால் அது குற்றம். ஆனால், இல்லா நிலைத் திருமணத்தில் அத் திருமணத்தை ஒருபொருட்டாக நினையாது வேறொரு மணம் முடித்துக் கொண்டால் அது குற்ற மாகாது. திருமணத்தைத் தவிர்த்துக் கொள்ள விரும்பும் நபர் கீழ்க்காணும் காரணங்களில் எந்த ஒன்றைக் காட்டியும் திருமணத்தை இல்லா நிலைத் திருமணமாக அறிவித்துத் தீர்ப்பாணை தரும்படி கேட்டுக்கொள்ளலாம்.

1. எதிர் மனுதாரர் திருமணக் காலத்தில் நபும்சகராக (Impotent) இருந்தார். வழக்குத் தொடரும் வரையிலும் தொடர்ந்து அப்படியே இருந்தார்.

2. திருமணம், 5ஆவது பிரிவில உட்பிரிவு 'ஆ'வில் கூறப் பட்டிருக்கும் நிபந்தனையை மீறி நடந்திருக்கிறது. அதாவது எதிர்மனுதாரர் திருமணக் காலத்திலே பித்துநிலையில் அல்லது பிறவி மண்டுவாக இருந்தார்.

[7] 1960 Mad. 6 : I.L.R. (1959) Mad. 634 : 1959 M L.J. 333 : 72 L.W. 34 1963 Patna 311. Lakshmi Ammal Vs Ramasami Naicker

3. மனுதாரரின் ஒப்புதல் அல்லது அவரது காப்பாளரின் ஒப்புதல் மோசடியாலும் அல்லது வலுக்கட்டாயமாகவும் பெறப்பட்டது.

4. எதிர்மனுதாரர் (இங்கு நிச்சயமாக மனைவி) திருமண காலத்தில் கர்ப்பமாக இருந்தார். அந்தக் கர்ப்பத்திற்கு மனுதாரர் காரணமல்ல.

மனுதாரரின் ஒப்புதலோ அல்லது காப்பாளரின் ஒப்புதலோ வலுக்கட்டாயமாக அல்லது மோசடியாகப் பெறப்பட்டிருந்தால், வலுக்கட்டாயம் முடிவடைந்து ஓராண்டுக் காலத்திற்கும் அதிகமாக ஆவதற்கு முன்னர், மோசடி கண்டுபிடிக்கப்பட்டு ஓராண்டுக் காலத்திற்கும் அதிகமாவதற்கு முன்னர் நீதிமன்றத்தில் மனு தரப்பட வேண்டும். வலுக்கட்டாயம் தீர்ந்த பிறகு அல்லது மோசடி கண்டுபிடிக்கப்பட்ட பிறகு மனுதாரரும் எதிர்மனுதாரரும் முழு ஒப்புதலுடன் கணவன் மனைவியாக வாழ்ந்திருந்தால் நீதிமன்றம் இல்லாநிலைத் திருமணமாக அறிவித்துத் தீர்ப்பாணை வழங்காது.

மனைவி திருமண காலத்தில் வேறு யாராலோ கர்ப்பமாக இருந்தாள் என்ற அடிப்படையில் மனுதாரர் நீதிமன்றத்தை அணுகினல், திருமண காலத்தில் மனுதாரர் இந்த உண்மைகளை அறியாது இருந்தார் என்று நீதிமன்றம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்தச் சட்டம் அமலாவதற்கு முன்னுல் நடந்த திருமணம் என்ருல், இச் சட்டம் அமலாவதற்கு ஓராண்டுக்குள் வழக்குத் தொடரப்பட்டிருக்க வேண்டும். இச் சட்டம் அமலாவதற்குப் பிறகு நடந்த திருமணம் என்ருல் திருமணம் முடிந்த தேதியிலிருந்து ஓராண்டுக்குள் வழக்குத் தொடரப்பட வேண்டும். இந்த உண்மையைக் கண்டுபிடித்ததற்குப் பிறகு மனுதாரர் எதிர்மனுதாரருடன் உடலுறவு கொண்டிருக்கக் கூடாது.

மணமுறிவு (Divorce)

மணமுறிவுபற்றிப் பதிமூன்ருவது பிரிவில் கூறப்பட்டுள்ளது. இல்லாநிலைத் திருமணம், தவிர்தகு திருமணம் இவற்றினின்றும் இப் பிரிவு பல வகையிலும் மாறுபட்டது. மணமுறிவு என்று சொல்லும்போது ஏற்கெனவே நடந்த திருமணம் முறையானது, செல்லத்தக்கது என்று பொருள் ஆகின்றது. ஆனுல், மணம் முடிந்த பிறகு ஏற்படும் சில நிலைகளால் தாம்பத்திய வாழ்க்கை துண்டிக்கப்பட வேண்டிய துர்பாக்கிய நிலைமை உருவாகி விடுகிறது.

13ஆவது பிரிவுப்படி இந்தச் சட்டம் வருவதற்கு முன்னும் பின்னும் நடந்த திருமணங்கள் கணவன் அல்லது மனைவி தரும் மனுவின் பேரில் மணமுறிவு செய்யப்படலாம். மணமுறிவுத் தீர்ப்பாணை வழங்கப்படுவதற்குக் கீழ்க்காணும் காரணங்களில் ஏதாவது ஒன்றை மனுதாரர் மனுவில் காட்ட வேண்டும்.

அ. எதிர்மனுதாரர் தொடர்ந்து பிறநபர் புணர்ந்து (Living in Adultery) வாழ்கிறார். (தொடர்ந்து பிறநபர் புணர்தல் என்றால், எப்போதோ ஒரு முறை நடக்கும் ஒழுக்கக் குறைவான சம்பவம் அல்ல. தொடர்ந்து ஒரு நபருடனோ அல்லது பல நபருடனோ உடலுறவு கொண்டு வாழ்வதே தொடர்ந்து பிறநபர் புணர்தலாகும். இந்தச் செயல் ஏதோ கடந்த காலத்திய செயல் அல்ல. மணமுறிவு மனு கொடுக்கப்படும் வரை தொடர்ந்து நிகழ வேண்டும்.)

ஆ. எதிர்மனுதாரர் இந்து மதத்தை விட்டுவிட்டுப் பிற மதத்திற்கு மாறிவிட்டார். (ஒருவர் மதம் மாறிவிட்டதாலேயே திருமண உறவு அறுந்து விடாது. கணவனும் மனைவியும் விரும்பினால் இருவரும் வேறுவேறு மதத்தில் இருந்துகொண்டே ஒன்றாக வாழலாம். ஆனால், மனுதாரர் மதம் மாறிவிட்டவரோடு சேர்ந்து வாழக்கூடாது என்று எண்ணினால், அவருக்கு உதவும் வகையில் இப் பிரிவு உள்ளது).

இ. மனு கொடுக்கப்படுவதற்கு முன்னர்க் குறைந்தது மூன்றாண்டுகளுக்கு மேலாக எதிர்மனுதாரர் தொடர்ந்து குணமாகாதவாறு பித்துநிலையில் இருந்தார். (இந்தப் பிரிவிற்கும் நீதி முறைப் பிரிவு பற்றிக் கூறப்படும் 10ஆவது பிரிவிற்கும் வேறுபாடு உண்டு. நீதிமுறைப் பிரிவு கேட்பவர் எதிர்மனுதாரர் இரண்டாண்டுகளுக்கு மேலாகப் பித்துநிலையில் இருந்தார் என்பதைக் காட்டவேண்டும். ஆனால் மணமுறிவு கேட்பவர் மூன்றாண்டுகளுக்கு மேலாகப் பித்து நிலையில் இருந்தார் என்பதைக் காட்ட வேண்டும். பித்துநிலை குணமாகாதவாறு இருந்தது என்பது மணமுறிவிற்கு முக்கியம். ஆனால் நீதிமுறைப் பிரிவிற்கு அது முக்கியமல்ல.

ஈ. எதிர்மனுதாரர் மனு கொடுக்கப்படுவதற்கு முன்னர் குறைந்தது மூன்றாண்டுகளுக்கு மேலாகக் கடுமையான, குணப்படுத்த முடியாத தொழுநோயால் பீடிக்கப்பட்டிருந்தார். (நீதி முறைப் பிரிவில் கூறப்படும் காரணம் இந்தப் பிரிவிலிருந்து சிறிது மாறுபட்டிருப்பது கவனிக்கப்பட வேண்டியது. குணப்படுத்த முடியாத தொழுநோய் என்பது மணமுறிவில் அவசியம். நீதி முறைப் பிரிவில் இந்த அம்சம் காணப்படவில்லை.)

உ. எதிர் மனுதாரர் மனு கொடுக்கப்படுவதற்கு முன்னர் குறைந்தது மூன்ருண்டுகளுக்கு மேலாகப் பற்றிக்கொள்ளக்கூடிய வகையில் மேக நோயால் பீடிக்கப்பட்டிருந்தார். (வெறும் மேக நோய் இருந்தால் அது ஒரு காரணமாகாது. அது ஒருவரிடமிருந்து இன்னொருவருக்குப் பற்றிச் செல்லக்கூடியதாக இருக்கவேண்டும். மேகநோய் ஆரம்ப நிலையில் பற்றிக் கொள்ளக்கூடியதாக இருக்காது. மூன்ருண்டைக் கணக்கிடும்போது பற்றிச் செல்லாத நாள்களைத் தள்ளிவிட வேண்டும். ஆனால், அப்படிக் கணக்கிடு வது அவ்வளவு சுலபமில்லை என்பது என்னவோ உண்மைதான்.)

ஊ. எதிர் மனுதாரர் உலக வாழ்வைத் துறந்து, துறவியாகி விட்டார். (இந்த உட்பிரிவில் இரண்டு அம்சங்கள் முக்கிய மானவை ஒன்று உலக வாழ்வைத் துறப்பது; மற்ருென்று துறவி யாவது. உலக வாழ்வைத் துறந்து விட்டேன் என்று எதிர்மனுதாரர் சொல்லி விட்டார் ஆகவே, மண முறிவு கேட்கிறேன் என்று மனு தாரர் கூறினுல் அதை நீதி மன்றம் ஏற்காது. அவர் துறவியாகித் துறவற வாழ்வை மேற்கொள்ள வேண்டும். குடும்ப உறவுகளை யும் பந்தங்களையும் உதறிவிட்டுச் சமயநெறிப்படி வாழ வேண்டும்.)

எ. ஏழு அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகள், மணம் புரிந்து கொண்ட கணவனே அல்லது மனைவியோ உயிருடன் இருக்கிருரா இல்லையா என்ற செய்தி அவர் உயிருடன் இருந் தால் நியாயமாக எட்டக்கூடியவருக்கு எட்டாமல் இருப்பது. (கணவனைப் பற்றி அவனுடைய மனைவியோ, நண்பர்களோ, உறவினர்களோ அல்லது மனைவியைப் பற்றி அவளுடைய கணவனே, நண்பர்களோ, உறவினர்களோ ஏழாண்டுகளுக்கும் மேலாக எந்தச் செய்தியும் கேள்விப்படாமல் இருந்தால், அந்த நபர் இறந்து விட்டதாக அனுமானித்துக் கொள்ளலாம் என்ற சான்றியல் சட்டத்தின் 108ஆவது பிரிவின் கோட்பாட்டில் இந்த உட்பிரிவு அமைந்துள்ளது. எங்கோ சென்று விட்ட மனைவிக்காகக் கணவனே, கணவனுக்காக மனைவியோ காலம் முழுவதும் காத்திருக்க வேண்டும் என்பது எந்தவிதத்திலும் நியாயமாகாது. இதற்கு நிவாரணம் தரவே அந்த உட்பிரிவு சேர்க்கப்பட்டுள்ளது. ஒருவரைப்பற்றி ஒருவர் கேள்விப்படாமல் இருப்பதற்கும், கைவிட்டுவிட்டுப் போவதற்கும் வேறுபாடு உண்டு. ஒருவன் ஒருத்தியைக் கைவிட்டுவிட்டு அதே ஊரிலோ அல்லது பிற ஊரிலோ கூட இருக்கலாம். அவளுக்கு அவன் எங்கிருக்கிருன் என்ற உண்மை தெரியும். ஆனால், ஏழாண்டுகளுக்கும் மேலாக ஒருவனைப் பற்றிக் கேள்விப்படாமல் இருக்கும் பிரச்சினையில் தன்னை விட்டு நீங்கியவன் எங்கிருக்கிருன், உயிருடன் இருக்கிருனு இல்லையா என்பது இன்னொரு நபருக்குத் தெரிய வாய்ப்பில்லை.

அவன் உயிருடன் இருந்தால்கூடச் சட்டம் ஏழாண்டுக்கும் மேலாக நியாயமாகச் செய்திகள் தெரிய வேண்டியவர்களுக்கு அவனைப் பற்றி ஒன்றும் தெரியாததால் அவனை இறந்தவனாகவே கருதும்.)

மேலே சொல்லப்பட்ட காரணங்கள் அல்லாமல் இன்னும் சில காரணங்களுக்காகவும் நடைபெற்ற திருமணத்தைக் கலைத்து மண முறிவுத் தீர்ப்பாணை வழங்கும்படி மனைவி அல்லது கணவன் மனுச் செய்து கொள்ளலாம். நீதிமுறைப் பிரிவுக்குத் தீர்ப்பாணை வழங்கப்பட்ட பிறகு, கணவன் அல்லது மனைவி இரண்டு ஆண்டுகள் அல்லது அதற்கும் மேலாக மறுபடியும் சேர்ந்து வாழாது இருந்தால் மணமுறிவு கேட்கலாம். அதைப் போலவே தாம்பத்திய உறவுகோரும் உரிமைக்குத் தீர்ப்பாணை வழங்கிய பிறகு சம்பந்தப்பட்ட கணவன் அல்லது மனைவி இரண்டு ஆண்டுகள் அல்லது அதற்கும் மேலாகத் தாம்பத்திய உறவு கொள்ளாமல் இருந்தால் மணமுறிவு கேட்கலாம்.

இன்னும் இரு காரணங்களைக் காட்டி மணமுறிவு கேட்கும் உரிமை மனைவிக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு உரிமைகளும் கணவனுக்குக் கிடையாது. இந்தச் சட்டம் வருவதற்கு முன்னால் திருமணம் புரிந்து கொண்டவன், மீண்டும் இரண்டாம் திருமணத்தை, அதுவும் இச் சட்டம் வருவதற்கு முன்னால் செய்து கொண்டால் முதல் மனைவி மணமுறிவு கேட்கலாம். அதைப் போலவே இச் சட்டம் வருவதற்கு முன்னால் திருமணமாகி அவள் உயிருடன் இருக்கும்போதே கணவன் அடுத்த மணம் புரியும் போது இரண்டாம் மனைவியும் மணமுறிவு கேட்கலாம். ஒரு மனைவி மணமுறிவு கேட்கும்போது இன்னொரு மனைவி உயிருடன் இருக்க வேண்டும்; அதுதான் முக்கியம். இதில் சுவையான விஷயம் இரண்டு மனைவிகளுமே ஏக காலத்தில் மணமுறிவு கேட்கமுடியும். முதல் மனைவி இரண்டாந் திருமணத்தைக் காரணமாகக் காட்டு வாள்; இரண்டாம் மனைவி ஏற்கெனவே கணவனுக்கு மணமாகி மனைவி உயிருடன் இருப்பதைக் காரணமாகக் காட்டுவாள். இரண்டு முறை மணந்து கொண்டவன் இருவரையும் இழக்க நேரிடும்.

திருமணத்திற்குப் பிறகு கணவன் கற்பழித்தல், இயற்கைக்கு முரணாக அல்லது மிருகத்தனமாகப் புணர்தல் ஆகிய குற்றங்களைச் செய்தான் என்ற அடிப்படையில் மனைவி மணமுறிவு கேட்கலாம். கணவனின் அந்தக் குற்றம் திருமணத்திற்குப் பின் செய்யப்பட் டிருக்க வேண்டும். அந்தக் குற்றத்திற்காக அவன் தண்டிக்கப் பட்டிருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. நீதி மன்றத்தின் முன்

அவன் நிறுத்தப்படாமலே போயிருந்தால், அவன் செய்த குற்றம் வேறு யாருக்குமே தெரியாமல் இருந்தாலும், கணவன் இத்தகைய குற்றங்களைச் செய்திருக்கிறான் என்று மனைவி நிரூபித்தால் அது போதுமானது.

மணமுறிவு மனு கொடுக்கப்படுவதற்கு ஒரு காலவரையறையைப் பதினான்காவது பிரிவு ஏற்படுத்தியுள்ளது. மணமுறிவு என்பது குடும்பத்தையும், சமூகத்தையும் பெரிதும் பாதிக்கிற விஷயம். ஆகவே மணமுறிவுக்குச் சுலபமான பாதையைக் காட்டக்கூடாது என்பது சட்டமியற்றியவர்களின் எண்ணம். போதிய அளவு அவகாசம் கொடுத்தால் வெறுப்படைந்த தம்பதியர் மனம் மாறி ஒத்துப்போகலாம் அல்லவா? அதனால் திருமணமான தேதியிலிருந்து மனு கொடுக்கப்படும் தேதிவரை மூன்றாண்டுக் காலம் கடந்திருந்தால்தான் மணமுறிவு கேட்கும் மனுவை நீதிமன்றம் பரிசீலிக்க முடியும் என்று சட்டம் செய்திருக்கிறார்கள்.

ஆனால், இந்த வழி மிகவும் இறுக்கமானதல்ல. ஒன்றுசேரவே சற்றும் வாய்ப்பில்லாத சிலபேருடைய வாழ்க்கையில், 'மூன்றாண்டுக்காலம் பொறுத்திரு' என்று சொல்வது பெரிய தவறாகும். ஆகவே அத்தகைய வழக்கினருக்கு மட்டும் சில சலுகைகள் சட்டத்தில் தரப்பட்டுள்ளன. மனுதாரர் விதிவிலக்கான கடுந்தொல்லையில் (Exceptional Hardship) இருக்கின்றார் என்ற அடிப்படையில் அல்லது எதிர்மனுதாரர் ஒழுக்கக் குறைவான கொடுஞ்செயல் செய்கிறார் என்ற அடிப்படையில், ஒருவர் மூன்றாண்டுக் காலம் கடக்கும் முன்னரே உயர்நீதிமன்றம் ஏற்படுத்தும் விதிகளுக்கு ஏற்ப மனு கொடுக்கலாம். விதிவிலக்கான கடுந்தொல்லை என்பது என்ன, ஒழுக்கக்குறைவான கொடுஞ்செயல் என்பது என்ன என்ற விளக்கம் சட்டத்தில் தரப்படவில்லை நீதி மன்றமே அதை ஆய்ந்து முடிவெடுக்கும். என்றாலும் அவை என்னவாக இருக்கும் என்பதைச் சில எடுத்துக்காட்டுகளால் உணரலாம். கணவன் மனைவியை வேறொருவனுடன் உடலுறவு கொள்ளுமாறு அவளுடைய விருப்பமின்றி வலுக்கட்டாயம் செய்தால் அதை விதிவிலக்கான கடுந்தொல்லை என்று சொல்லலாம். அப்போது மனைவி மூன்றாண்டுகள் கடப்பதற்கு முன்னரேகூட மணமுறிவு கேட்கலாம். மனைவியின் கண்ணெதிரே அவளைச் சற்றும் மதியாது வேலைக்காரியுடன் உடலுறவு கொண்டு வாழ்ந்தால் அதை ஒழுக்கக்குறைவான கொடுஞ்செயல் என்று சொல்லலாம். அப்போது மூன்றாண்டுக் காலம் காத்திராமல் மணமுறிவு கேட்டு வழக்குப் போடலாம்.

ஆனால் மனுதாரர் உண்மையைத் திரித்துக் கூறியும் வழக்கின் தன்மையை மறைத்தும் மூன்றாண்டுக் காலம் ஆவதற்கு முன்னரே வழக்குத் தொடர நீதி மன்றத்தின் அனுமதி வாங்கி விட்டார் என்ற உண்மை, விசாரணையின்போது நீதி மன்றத்திற்குத் தெரியுமானால், தீர்ப்பாணை வழங்கும்போது திருமணம் நடந்த தேதியிலிருந்து மூன்றாண்டுக் காலத்திற்குப் பின்னரே தீர்ப்பாணை செயல்படும் என்ற நிபந்தனையை விதிக்கலாம்; அல்லது நீதி மன்றம் விரும்பினால் மனுவைத்தள்ளுபடி செய்யலாம். அப்போது பிறகு மூன்றாண்டு கழித்துத் தள்ளுபடி செய்யப்பட்ட மனுவில் சொல்லப் பட்டிருக்கும் அதே விஷயம் அல்லது அதனுடைய சாராம்சத்தைக் கொண்ட மனுவை மீண்டும் கொடுப்பதைப் பாதிக்காத வகையில் தள்ளுபடி செய்யலாம்.

மூன்றாண்டுகள் கழியுமுன்னரே மணமுறிவு மனுவை ஏற்றுக் கொள்ளவேண்டிக் கொடுக்கப்பட்ட விண்ணப்பத்தில் நீதிமன்றம் உத்தரவிடும்போது, திருமண வாழ்வில் பிறந்த குழந்தைகளின் நலன்களையும், மூன்றாண்டு முடிவடைவதற்கு முன்னராகத் தம்பதியருக்குள் சமரசம் ஏற்படக்கூடுமா என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

மணமுறிவிற்குப் பின் மறுமணம்

15 ஆவது பிரிவின்படி, மணமுறிவுத் தீர்ப்பாணையால் திருமணம் கலைக்கப்பட்ட பின்னர், மேன்முறையீட்டிற்கு (For Appeal) உரிமை இருந்து உரிய காலத்தில் மேன்முறையீடு செய்யா விட்டால் அல்லது மேன்முறையீடு செய்து அது தள்ளப்பட்டு விட்டால் கலைக்கப்பட்ட திருமணத்தின் இரு தரப்பினரும் சட்டப்படி வேறு மணம் புரிந்து கொள்ளலாம். ஆனால், வழக்கை விசாரித்த முதல் நீதிமன்றம் தீர்ப்பாணை வழங்கியதிலிருந்து ஓராண்டு கழித்துத்தான் மணமுறிவு செய்துகொண்டவர்கள் சட்டப்படி வேறு மணம் செய்து கொள்ள முடியும்.

இல்லாநிலை, தவிர்தகு திருமணக் குழந்தைகளின் நிலை

11 ஆவது பிரிவு, 12 ஆவது பிரிவின்கீழ், நடைபெற்ற திருமணம் இல்லாநிலையது அல்லது செல்லத்தக்கது அல்ல என்று நீதிமன்றம் தீர்ப்பாணை வழங்கினாலும், தீர்ப்பாணை வழங்கப்படுவதற்கு முன்பு பிறந்த குழந்தைகளும் கருவில் இருந்த குழந்தைகளும் முறை மணப் பிறப்புக் (Legitimate) குழந்தைகளாகவே கருதப் படுவர். ஆனால் அவர்களுக்குப் பெற்றோர்களின் சொத்தில் மட்டும் தான் உரிமை உண்டு; பெற்றோர்களின் உறவினர் சொத்தில்

உரிமை கொண்டாட முடியாது. அதாவது தந்தையினுடைய தந்தையின் சொத்துக்கு இவர்கள் பாத்தியதை உடையவர்கள் அல்லர் இந்த 16 ஆவது பிரிவுப்படி இல்லாநிலைத் தீர்ப்பாணை (Degree of Nullity) பெறப்பட்டால்மட்டுமே குழந்தைகள் முறை மணப் பிறப்பினராகக் கருதப்படுவார்கள்; இல்லை என்றால் முறை யிலா மணப்பிறப்பினராகவே கருதப்படுவார்கள்.

இருதுணை மணம் (Bigamy)

மனைவி இருக்கும் போது கணவன் இன்னொருத்தியையோ, கணவன் இருக்கும்போது மனைவி இன்னொருவனையோ மணந்து கொள்வதற்கு இருதுணை மணம் என்று பெயர். 17 ஆவது பிரிவுப் படி இத் திருமணம் இல்லாநிலையது மட்டுமன்று, தண்டனைக்குரிய குற்றமாகும். இந்திய தண்டனைச் சட்டப்படி (Indian Penel Code) 494, 495 ஆகிய பிரிவுகளின் கீழ்) குற்றவாளி தண்டிக்கப் படுவார்.

பிற தண்டனைகள்

5 ஆவது பிரிவில் கூறப்பட்டுள்ள சில திருமண நிபந்தனைகளை மீறி மணம் செய்தால் அப்படித் திருமணம் செய்வோருக்கு என்ன தண்டனை கிடைக்கும் என்பது 18 ஆவது பிரிவில் கூறப்பட் டுள்ளது. மணமகன் 18 வயதும், மணமகள் 15 வயதும் பூர்த்தி செய்தால் தான் மணந்து கொள்ள முடியும் என்ற நிபந்தனையை மீறினால் 15 நாள் வரை வெறுங்காவல் தண்டனை அல்லது 1000 ரூபாய் வரை அபராதம் அல்லது இரண்டுமே தண்டனையாகத் தரப்படும். தடை செய்யப்பட்ட உறவுநிலையில் மணக்கக்கூடாது என்ற நிபந்தனையை மீறினால் ஒரு மாதம்வரை வெறுங்கடுங் காவல் தண்டனை அல்லது 1000 ரூபாய் வரை அபராதம் அல்லது இரண்டுமே தண்டனையாகத் தரப்படும். மணப் பெண்ணுக்கு 18 வயது முடியவில்லை என்றால், காப்பாளரின் ஒப்புதல் வாங்க வேண்டும் என்ற நிபந்தனையை மீறினால், ஆயிரம் ரூபாய் வரை அபராதம் தண்டனையாகத் தரப்படும். இத் தண்டனை, நிபந்தனைகளை மீறி மணந்த கணவன் - மனைவிக்கு மட்டுமல்ல உடந்தையாக இருந்தவர்களுக்கும் கிடைக்கும்.

அதிகார வரம்பும், நடைமுறையும் (Jurisdiction and Procedure)

19 ஆவது பிரிவு இந்தச் சட்டத்தின்கீழ்த் தரப்படும் மனுக்கள் எந்த நீதி மன்றத்தில் தரப்பட வேண்டும் என்பதைக் கூறுகிறது. திருமணம் நடைபெற்ற இடம், அல்லது இருவரும் வாழும் இடம் அல்லது இருவரும் கடைசியாக இருந்த இடம், இவற்றின் அசல்

மூல உரிமையியல் அதிகார வரம்பு (Ordinary Original Civil Jurisdiction) உள்ள எந்த மாவட்ட நீதிமன்றத்திலும் மனுவைக் கொடுக்கலாம். 20ஆவது பிரிவு, என்ன நிவாரணம் என்ன விஷயங்களின் அடிப்படையில் கேட்கப்படுகிறது என்பதைத் தெளிவாக மனு கூற வேண்டும் என்று சொல்கிறது. மேலும், மனுதாரருக்கும் எதிர் மனுதாரருக்குமிடையே வஞ்சகக் கூட்டு (Collusion) கிடையாது என்பதும் சொல்லப்படவேண்டும். மனுவில் சொல்லப்பட்டிருக்கும் வாக்குமூலங்கள் மனுதாரரால் சரிபார்க்கப்படவேண்டும். மனுதாரர் உரிமை வயது வராதவராக இருந்தால், காப்பாளரால் சரிபார்க்கப்படவேண்டும். வழக்குரை (Plaint) எப்படிச் சரிபார்க்கப்படுகிறதோ அப்படியே இந்த மனுவும் சரிப்பார்க்கப்பட வேண்டும். சரிபார்க்கப்பட்ட வாக்கு மூலங்கள் சாட்சியமாக ஏற்றுக்கொள்ளப்படும்.

21 ஆவது பிரிவுப்படி இச் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கும் விதி முறைகள், உயர்நீதி மன்றம் இதற்காக ஏற்படுத்திய விதிகள் நீங்கலாக மற்றவை உரிமை இயல் நடைமுறைச் சட்டத்தாலேயே நெறிப்படுத்தப்படும்.

இந்தச் சட்டத்தின்கீழ் ஏற்பட்ட வழக்கு நடைமுறைகள் மறைவாக (Incamera) நடத்தப்படலாம் என்று 22ஆம் பிரிவு கூறுகின்றது. வழக்கில் சம்பந்தப்பட்டவர்களில் யாராவது விரும்பினால், அல்லது அப்படி நடத்தப்பட வேண்டியது அவசியம் என்று நீதிமன்றம் கருதினால், வழக்கு மறைவாக நடத்தப்படும். மறைவாக நடத்தப்படும் வழக்கு விவரங்களை நீதிமன்றத்தின் அனுமதி இல்லாமல் அச்சிடுதல் அல்லது வெளியிடுதல் சட்டத்திற்கு விரோதமாகும். அப்படிச் சட்டத்திற்கு எதிராக யாராவது அச்சிட்டாலோ வெளியிட்டாலோ அந்த நபருக்கு 1000 ரூபாய் வரை அபராதம் விதித்து நீதிமன்றம் தண்டிக்கும்.

23 ஆவது பிரிவு, தீர்ப்பாணை வழங்கப்படுவதற்குமுன் நீதிமன்றம் பரிசீலிக்க வேண்டிய விஷயங்கள் யாவை என்பதைக் கூறுகின்றது. எதிர் மனுதாரர் வழக்காடாவிட்டாலும்கூட நீதிமன்றம் சில விஷயங்களைப் பரிசீலித்தே முடிவெடுக்கும். மனுதாரர் கேட்கும் நிவாரணம் கொடுப்பதற்குரிய காரணங்கள் நிலவுகின்றனவா, மனுதாரர் தன்னுடைய அல்லது எதிர்த்தரப்பினுடைய தவறு அல்லது இயலாமையைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறாரா என்பதையும் நீதிமன்றம் கவனிக்கும். திருமணமான தற்குப் பிறகு பிற நபருடன் உடலுறவு கொண்டதை அல்லது

தொடர்ந்து பிற நபர் புணர்ந்து வாழ்தலைக் காரணமாக மனுவில் காட்டினால், மனுதாரர் புகார் செய்யப்படும் செயலுக்கு அல்லது செயல்களுக்கு எந்த வகையிலும் உதவியோ அல்லது மறைமுக ஆதரவோ அல்லது மன்னிப்போ கொடுக்கவில்லை என்று நீதி மன்றம் நிறைவுபெறவேண்டும். அதைப் போலவே கொடுமை யாக நடத்தியதைக் காரணமாகக் காட்டினால் மனுதாரர் எவ்வகை யிலும் அதை மன்னிக்கவில்லை என்பதும் அறியப்படவேண்டும். வஞ்சக் கூட்டுடன் மனு தரப்படவில்லை, வழக்கு நடத்தப்பட வில்லை என்பதும் தெளிவாக வேண்டும். வழக்கைத் தொடர்வதில் தேவையில்லாத அல்லது முறையற்ற தாமதம் இல்லை என்பதிலும் நீதிமன்றத்திற்கு நிறைவுவேண்டும். கேட்கும் நிவாரணம் கொடுக்கப்படாமலிருக்க வேறு வழிவகைகள் கிடையாது என்ப திலும் நீதிமன்றத்திற்கு நிறைவுவேண்டும். அப்போதுதான் நீதி மன்றம் நிவாரணதிற்காகத் தீர்ப்பாணை தரும்.

மனுதாரரின் வேண்டுகோள்படி தீர்ப்பாணை வழங்குவதற்கு முன்னர், ஒவ்வொரு வழக்கிலும் வழக்கின் சூழ்நிலைகள், தன்மை கள் முதலியவற்றைக் கணக்கில் கொண்டு சமரசத்திற்கு வழி உண்டா என்று பார்த்துத் தொடர்ந்து முயல்வது நீதிபதியின் கடமையாகும். திருமணப் பிரச்சினைகள், ஒரு சமுதாயத்தின் அடித் தளத்தையே உலுக்கும் பிரச்சினைகளாகும். மணமுறிவு போன் றவைகள் அதிகரிப்பது சமுதாயத்தின் ஆரோக்கியத்திற்கு உகந்த தல்ல. அதே சமயம் மனுதாரர் தக்க காரணங்கள் காட்டி, தன் கூற்றை மெய்ப்பிப்பாரானால், நீதிமன்றம் அவருக்குச் சாதகமாகத் தீர்ப்பாணை வழங்குவதைத் தவிர வேறு வழியில்லை. அதனால்தான் சமரசத்திற்கு முயலவேண்டும் நீதிமன்றம் என்று இப் பிரிவு வற் புறுத்துகின்றது.

இடைக்காலப் பராமரிப்பு (Interim Maintenance)

இந்தச் சட்டத்தின்கீழ் வழக்குத் தொடரும் கணவனுக்காவது அல்லது மனைவிக்காவது தனி வருமானம் தன்னைப் பார்த்துக் கொள்வதற்குப் போதுமான அளவே இல்லை என்றால், வசதியுள்ள எதிர்த் தரப்பை வழக்குக்கான செலவுகளையும் பராமரிப்புத் தொகையையும் தருமாறு நீதிமன்றம் உத்தரவிடும். உத்தரவிடும் போது மனுதாரருக்குத் தன் வருமானம் இருக்கிறதா, இருந்தால் தன்னைக் காத்துக்கொள்ளவும் வழக்கு நடத்தவும் வருமானம் போதுமா என்பதைக் கவனிக்கும். தனி வருமானம் என்பது தன்னுடைய சொத்திலிருந்து அல்லது வேலையிலிருந்து கிடைப்ப தாகும். நண்பர்கள் அல்லது உறவினர்கள் கொடுத்து உதவும் தொகை தனி வருமானம் ஆகாது. தனி வருமானம் இருந்

தாலும், அது சொற்பமானுல் எதிர்த்தரப்பு பராமரிப்புத் தொகையும் செலவுத் தொகையும் தரவேண்டும். மனுதாரரின் சொந்த வருமானம் எதிர்மனுதாரரின் வருமானம் இவற்றைக் கணக்கில் கொண்டே நியாயமான தொகை வழங்க நீதிமன்றம் உத்தரவிடும். இந்த 24 ஆவது பிரிவில் கணவன் மனைவியிடமிருந்து பராமரிப்புத் தொகை கேட்க வகை செய்யப்பட்டிருக்கிறது. ஒரு பணக்காரப் பெண் ஓர் ஏழையை மணந்து கொண்டு, பின்னர் வழக்குத் தொடர்ந்தால் கணவன் செலவுத் தொகையும், பராமரிப்புத் தொகையும் கேட்டு மனுக் கொடுக்கலாம்.

நிரந்தர பராமரிப்பு (Permanent Maintenace)

25 ஆவது பிரிவு நிரந்தர பராமரிப்புப் பற்றிக் கூறுகிறது இதைப் பிரிமனைப்பணம் (Alimony) பற்றிக் கூறுவது என்றும் சொல்லலாம். தீர்ப்பாணை வழங்கும் போதோ அல்லது அதற்குப் பிறகோ கணவன் அல்லது மனைவி இதற்காக மனுக் கொடுத்தால் நீதிமன்றம் நிரந்தரப் பராமரிப்புத் தொகை தர உத்தரவிடும். அத் தொகை மொத்தமாகவோ, மாதாமாதமோ அவ்வப்போதோ தர, வகைசெய்யப்படும். மனுதாரர் எதிர்மனுதாரர் இருவருடைய வருமானம், வாழ்க்கை வசதிகள், நடத்தை முதலியவற்றைக் கணக்கில்கொண்டே தொகை நிர்ணயிக்கப்படும். எதிர்மனுதாரரின் அசையாச் சொத்தின் (Immoveable Property) மீதும் பிணை (Charge) ஏற்படுத்தலாம். இத் தொகை மனுதாரரின் ஆயுட்காலம் வரை தரப்படும். ஆனுல், அவர் மறுமணம் புரிந்து கொள்வாரேயானுல் பராமரிப்புத் தொகை தருபவர் நீதிமன்றத்தை அணுகி உத்தரவை ரத்துசெய்துகொள்ளலாம்.

இரு தரப்பினரில் யாருடைய வாழ்க்கையிலாவது மாற்றங்கள், நீதி மன்ற உத்தரவுக்குப் பின்னுல் நேர்ந்திருந்தால், இருவரில் யார் வேண்டுமானுலும் நீதிமன்றத்தை அணுகி உத்தரவை வேறுபடுத்தியோ, மாற்றியோ, ரத்து செய்தோ பெற்றுக்கொள்ளலாம். நீதி மன்றம் நியாயம் என்று கருதி நிறைவுகொண்டால், மனுதாரர் கேட்டபடி அல்லது தான் நியாயம் என்று உணர்ந்தவாறு உத்தரவிடும்.

நீதிமன்றம் யாருக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கியதோ அந்த நபர் மீண்டும் மறுமணம் செய்துகொண்டாலோ, அல்லது அந்த நபர் மனைவியாக இருந்து ஒழுக்கக் குறைவான வாழ்க்கை நடத்தினுலோ அல்லது அந்த நபர் கணவனுக இருந்து வேறு பெண்ணிடம் உடலுறவு கொண்டாலோ, நீதிமன்றம் சரி என்று நிறைவு கொண்டால், பிறப்பித்த உத்தரவை ரத்துசெய்துவிடும்.

குழந்தைகளைக் காக்கும் பொறுப்பு (Custodian of Children)

கணவனும் மனைவியும் நீதிமன்றத்தில் வழக்காடும் போது, அவர்களுடைய உரிமை வயது வராத குழந்தைகளின் வாழ்க்கை முக்கிய பிரச்சினையாகும். பெற்றோர்களின் வழக்குச் சச்சரவால் குழந்தைகளின் எதிர்காலம் நிர்மூலமாகிவிடக்கூடாது. ஆகவே, அவர்களுடைய நலன்களைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு நீதி மன்றத்திற்கு இருக்கிறது. 26 ஆவது பிரிவு குழந்தைகளின் நலன் களைப் பாதுகாக்க வேண்டி உரிய நடவடிக்கைகள் எடுக்க நீதி மன்றத்திற்கு அதிகாரம் வழங்குகின்றது. குழந்தைகளைக் காக்கும் பொறுப்பு, பராமரிப்பு, கல்வி ஆகியவை குறித்துக் குழந்தைகளின் விருப்பத்தையும் அறிந்து, எங்கெங்கு முடியுமோ அங்கங்கு நீதி மன்றம் உத்தரவிடும். இந்த உத்தரவு அவ்வப்போது இடப்படும். வழக்கினுடைய விஷயங்கள், சூழ்நிலைகள் ஆகியவற்றை ஒட்டி உத்தரவைத் திரும்பப்பெறவோ, நிறுத்திவைக்கவோ, மாற்றவோ அதிகாரம் உண்டு. இந்த உத்தரவை வழக்கு நடக்கும் காலத்தி லும், தீர்ப்பாணை வழங்கும் போதும், அதற்குப் பின்னரும் இடலாம்.

கணவனும் மனைவியும் வழக்கு நடத்திப் பிரிய வேண்டிய சூழ்நிலை ஏற்படும்போது, அவர்களுக்குத் திருமணத்திலோ அல்லது திருமணத்தின் போதோ தரப்பட்ட சொத்துகள் என்ன ஆவது என்பது முக்கிய பிரச்சினையாகும். இப் பிரச்சினையைத் தீர்க்கும் அதிகாரத்தை நீதிமன்றத்திற்கு 27 ஆவது பிரிவு தரு கின்றது. தீர்ப்பாணை வழங்கும்போது நீதிமன்றம் சொத்து யாரிடம் இருக்கவேண்டும், எவ்வளவு இருக்க வேண்டும் என்பதைக் கூறும். இதற்காகத் தனிக்கட்டளை இடமுடியாது. சொத்துப் பிரச்சினைக்கு முடிவெடுக்கும்போது குழந்தைகளின் நலன்கள் முதலிய பல அம்சங்களையும் சீர்தூக்கிப் பார்த்தே தீர்ப்பு வழங்கும். திருமணத்தில் அல்லது திருமணத்தின்போது தரப்பட்ட சொத்து கள்—அவை கணவன் மனைவிக்குக் கூட்டாகவும் கொடுக்கப்பட் டிருக்கலாம்—மட்டுமே நீதிமன்றத்தின் கட்டளைக்கு உட்படும். பிற சொத்துகள் நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்கு அப்பாற் பட்டவை.

28 ஆவது பிரிவு நீதிமன்றம் தரும் தீர்ப்பாணை, கட்டளை ஆகியவைகளை நிறைவேற்றுவது பற்றிக் கூறுகிறது அவற்றை நிறைவேற்றுவதற்கென்று தனி நடைமுறைச் சட்டங்கள் எதுவும் இச் சட்டத்தில் கூறப்படவில்லை. அசல் உரிமையியல் அதிகார வரம்புடைய நீதிமன்றத்தின் தீர்ப்பாணைகளும், கட்டளைகளும் எப்படி நிறைவேற்றப்படுகின்றனவோ அப்படியே இவையும் நிறை வேற்றப்படும் என்று இப் பிரிவு கூறுகின்றது வழங்கப்படும் தீர்ப்

பாணையையும், கட்டளையையும் எதிர்த்து உரிமையியல் நடைமுறைச் சட்ட விதிகளின்படி மேன்முறையீடு செய்துகொள்ளலாம். வழக்குச் செலவு (Costs) குறித்து மட்டும் மேன்முறையீடு செய்து கொள்ள முடியாது.

இச் சட்டத்தில் பொதுவாகச் சொல்லப்பட்டவற்றிலிருந்து அளிக்கப்படும் விலக்குகள் (Saving) யாவை என்று 29 ஆவது பிரிவு கூறுகின்றது ஒரே கோத்திரத்திலோ அல்லது பிரவரத்திலோ வேறுவேறு மதத்திலோ ஜாதியிலோ, ஒரே ஜாதியின் உட்பிரிவிலோ இச் சட்டம் வருவதற்குமுன் செய்யப்பட்ட திருமணங்கள் வேறு வகையில் செல்லத்தக்கதென்றால், இச் சட்டம் வருவதற்கு முன்னால் அல்லது பின்னால் திருமணத்தைக் கலைத்துக் கொள்ள வழி வகுக்கும் சிறப்புச் சட்டம் அல்லது வழக்கம் அங்கீகரித்துள்ள உரிமைகளை இச் சட்டத்தின் விதிகள் பாதிக்கா. இச் சட்டம் வருவதற்கு முன்னால் உள்ள சட்டங்களின்படி, திருமணத்தைக் கலைக்கக் கோரியோ இல்லா நிலையது என்று அறிவிக்கக் கோரியோ, நீதி முறைச் சட்டப்பிரிவு கேட்டோ நடந்து கொண்டிருக்கும் வழக்குகள் இச் சட்டத்தால் பாதிக்கப்படமாட்டா. இச் சட்டம் கொண்டு வரவில்லை என்று எண்ணி, அவ் வழக்குகள் நடத்தப்படலாம். இச் சட்டம் வருவதற்கு முன்னால் அல்லது பின்னால் சிறப்புத் திருமணச் சட்டம் 1954-ன்கீழ்ச் செய்யப்பட்ட திருமணங்களை இச் சட்டத்தின் பிரிவுகள் எந்த வகையிலும் பாதிக்கா. அதாவது அச் சட்டத்தின்கீழ்ச் செய்யப்பட்ட திருமணங்களுக்கு அச் சட்டமே அமலாகும்.

30 ஆவது பிரிவு இச் சட்டத்தின் இறுதிப் பிரிவு. இது இச் சட்டம் அமலானதால் எந்தெந்தச் சட்டங்கள் ரத்துசெய்யப்பட்டன என்பதைக் கூறுகிறது.

சிறப்புத் திருமணச் சட்டம், 1954

எந்தவித மதச் சடங்குகளும் இல்லாமல், எந்த ஜாதியையும் எந்த மதத்தையும் சேர்ந்த இருவர், திருமணப் பதிவாளர் முன்னிலையில் மணந்துகொள்ள இச் சட்டம் வகைசெய்கின்றது. 1872 ஆம் ஆண்டில் ஒரு சிறப்புத் திருமணச் சட்டம் வந்தது. பின்னர், 1923 ஆம் ஆண்டு அதற்கு ஒரு திருத்தம் வந்தது. இச் சட்டம் அச் சட்டத்தை ரத்துசெய்துவிட்டுப் புதிய வடிவில் வந்திருக்கின்றது. 1955 ஆம் ஆண்டு அமலுக்கு வந்த இந்துத் திருமணச் சட்டம், சிறப்புத் திருமணச் சட்டம் 1954-ன்கீழ்ச் செய்யப்பட்ட திருமணங்களை இச் சட்டம் பாதிக்காது என்றும், அச் சட்டத்தின் கீழ்ச் செய்யப்பட்ட திருமணங்களுக்கு அச்

சட்டமே அமலாகும் என்றும் கூறுகின்றது. ஆகவே இச் சட்டத்திற்கு ஒரு முக்கியத்துவம் உண்டு.

இச் சட்டத்தின்கீழ்த் திருமணம் செய்துகொள்ள விரும்புகின்றவர்கள் மாவட்டத் திருமணப் பதிவாளருக்கு அறிவிக்கை (Notice) கொடுக்கவேண்டும். இருவரில் ஒருவர், எந்த மாவட்டத்தில் அறிவிக்கைக் கொடுப்பதற்கு முன்னால் குறைந்தது ஒருமாத காலத்திற்கு மேலாகத் தங்கியிருக்கிறாரோ அந்த மாவட்டத் திருமணப் பதிவாளருக்கு அறிவிக்கை கொடுக்கவேண்டும். திருமணப் பதிவாளர் அந்த அறிவிக்கையைப் பொதுமக்கள் பார்வைக்காக அலுவலகத்தில் ஒட்டிவைப்பார். 30 நாள்களுக்குள் இந்தத் திருமணத்தை எதிர்ப்பவர்கள் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்துக் கொள்ளலாம். திருமணத்திற்கு எதிர்ப்பு இருந்தால் திருமண அதிகாரி விசாரணை நடத்துவார். அவர் தீர்ப்பை எதிர்த்து மாவட்ட நீதிபதிக்கு மேன்முறையீடும் செய்து கொள்ளலாம். திருமணத்திற்கு எதிர்ப்பு இல்லையென்றால், அறிவிக்கை கொடுத்த மூன்று மாதத்திற்குள் திருமணம் செய்துகொள்ளவேண்டும்.

திருமணம் செய்துகொள்வதற்கு 'இதுதான்' சடங்குகள் என்று எதுவும் கிடையாது. திருமண அதிகாரி முன்னால், மணமக்களும் மூன்று சாட்சிகளும் தங்கள் விருப்பத்தைத் தெரிவித்து, அதற்காக உள்ள மனுவைப் பூர்த்திசெய்து தரவேண்டும். பின்னர், மணமக்கள் ஒருவரையொருவர் பார்த்து, திருமண அதிகாரி மற்றும் மூன்றும் சாட்சிகள் முன்னர், கணவனாக அல்லது மனைவியாக ஏற்றுக்கொள்ள விரும்புவதைக் கூறவேண்டும். திருமண அதிகாரி திருமணம் நடந்ததற்கு ஆதாரமாகச் சான்றிதழ் தருவார்.

இச் சட்டத்திலும் தாம்பத்திய உறவு உரிமைக்கு, நீதி முறைப் பிரிவுக்கு, மணமுறிவுக்கு, மணக்கலைப்புக்கு வகை செய்யப்பட்டுள்ளது. ஆனால், இச் சட்டம் இரண்டு அம்சங்களில் இந்துத் திருமணச் சட்டம் 1955-லிருந்து மாறுபடுகிறது. இந்துத் திருமணச் சட்டம் 1955-ல் கணவன் மனைவி இருவருக்குமே பராமரிப்பு, பிரிமனைப் பணம் கேட்க உரிமை உண்டு. அதாவது கணவன்கூட மனைவியிடம் பராமரிப்புத் தொகையும், பிரிமனைப் பணமும் கேட்க முடியும். ஆனால், சிறப்புத் திருமணச் சட்டம் 1954-ல் மனைவி மட்டுமே அவ்வாறு கேட்க உரிமை பெற்றிருக்கிறாள்.

இச் சட்டத்தின்படி தம்பதியர் பரஸ்பர ஒப்புதலுடன் மணமுறிவு பெற்றுக்கொள்ளமுடியும். இதுபோன்ற விதி இந்துத் திருமணச் சட்டம் 1955-ல் கிடையாது.

சுயமரியாதைத் திருமணம் அல்லது சீர்திருத்தத் திருமணம்

தமிழ் நாட்டில் சுயமரியாதை இயக்கத்தினர் ஒரு புதுவகைத் திருமணத்தை அறிமுகப்படுத்தினர். நண்பர்கள், உறவினர்கள் குழுமியிருக்க நடக்கும் அத் திருமணத்தில் புரோகிதர் இருக்க மாட்டார்; 'சப்தபதி' என்னும் சடங்கு நடைபெறுது. இத்தகைய திருமணங்கள் நாட்டில் பல்கிப் பெருகவே சட்டம் அவற்றை அங்கீகரிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இந்துத் திருமணச் சட்டம் 1955-க்கு ஒரு திருத்தம் கொண்டு வரப்பட்டது. இதற்கு இந்துத் திருமணங்கள் (சென்னைத் திருத்தம்) சட்டம் 1967 (The Hindu Marriages (Madras Amendment) Act, 1967) என்பது பெயர்.

இந்துத் திருமணச் சட்டம் (1955) 7 ஆவது பிரிவிற்கும் பின்னர் 7–ஏ என்ற புதிய பிரிவை இந்தத் திருத்தச் சட்டம் கொண்டுவருகிறது. இது தமிழ்நாட்டிற்கு மட்டுமே உரியது. சுய மரியாதை அல்லது சீர்திருத்தத் திருமணத்தில் புரோகிதர் மந்திரம் ஓதுதல், மணமக்கள் ஹோமத்தை ஏழுஅடிஎடுத்துவைத்து வலம் வருதல்ஆகியவை நடைபெற வேண்டிய அவசியமில்லை. உறவி னர்கள், நண்பர்கள், மற்றவர்கள் முன்னிலையில் இத் திருமணம் நடைபெறும். மணமக்கள் ஒருவரையொருவர் பார்த்து, மற்றவர்க் குப் புரியும் மொழியில், கணவனுக அல்லது மனைவியாக மற்றவரை ஏற்றுக்கொள்வதாகச் சொல்லவேண்டும்; அல்லது மணமக்கள் மாலை அல்லது மோதிரம் மாற்றிக்கொள்ளவேண்டும் அல்லது தாலி கட்ட வேண்டும்.

இச் சட்டத்தில் ஒரு முக்கிய அம்சம், இச் சட்டம் அமலா வதற்கு முன்னுல் செய்யப்பட்ட சுயமரியாதைத் திருமணங்களையும் இது அங்கீகரிக்கிறது. ஆனுல், எந்தச் சட்டத்தின்படியோ அல்லது வழக்கத்தின்படியோ இதற்குமுன் நடந்த திருமணம் கலைக்கப்பட்டிருந்தால், அதை இச் சட்டம் செல்லுபடியாக்காது. சீர்திருத்தத் திருமணம் செய்துகொண்ட பெண், கணவன் உயிரோடு இருக்கும்போதோ அல்லது இறந்த பின்னரோ வேருெரு வனைச் சட்டப்படி மணந்துகொண்டிருந்தால், பழைய திரு மணத்தை இச் சட்டம் செல்லுபடியாக்காது. இச் சட்டம் வரு வதற்கு முன்னுல் நடந்த செல்லத்தக்க திருமணங்களைச் செல்லத் தகாதது என்றோ செல்லத்தகாத திருமணங்களைச் செல்லத்தக்க தென்றோ இச் சட்டம் செய்யாது. இச் சட்டம் வருவதற்கு முன்னுல் சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்டவர்களின் குழந்தை கள், முறையான மணத்தில் பிறந்த குழந்தைகளாகவே கருதப்

படுவர். இச் சட்டம் வருவதற்கு முன்ஞல் சுயமரியாதைத் திருமணம் செய்து அது கலைக்கப்படுவதற்கு முன்ஞல் பிறந்த குழந்தைகளும், சுயமரியாதைத் திருமணம் செய்து பின்னர் பெண் ணுனவள் வேருெருவனைச் சட்டப்படி மணந்துகொள்வதற்கு முன்னர்ப் பிறந்த குழந்தைகளும், முறையான மணத்தில் பிறந்த குழந்தைகளாகவே கருதப்படுவர்.

3. தத்து எடுப்பு
(ADOPTION)

பகுதி அ—பழைய சட்டம்

தத்து எடுக்கும் வழக்கம் தொன்றுதொட்டு இருந்து வருகிறது. மகன் ஒருவன் வேண்டும் என்ற பாச உணர்ச்சி, வயதான காலத்தில் தன்னைப் பாதுகாக்க ஒருவன் வேண்டும் என்ற எச்சரிக்கை உணர்வு, சொத்துகளைப் பாதுகாக்க ஒருவன் வேண்டுமே என்ற கவலை இவையாவும் தத்து எடுப்பை இன்றியமையாததாக்கி விட்டன. முன்னோர்களுடைய ஆத்மாவின் ஆன்மிக நலனுக்கு மகன் மிகமிக அவசியம். மனுஸ்மிருதியில் இது வற்புறுத்திச் சொல்லப்பட்டுள்ளது. குலத்தை விருத்தி செய்வதற்கு மட்டுமல்ல, தேவையான சடங்குகளைச் செய்வதற்கும் மகன் முக்கியமானவனாகிறான். அதனால் சொந்த மகன் இல்லாதவர்கள் தத்து எடுக்க ஆரம்பித்தார்கள். மகப்பேறு இன்றி ஒருவன் தத்து எடுக்கும் போது உண்மையான மகனுக்குரிய சகல உரிமைகளும் தத்து எடுக்கப்பட்ட மகனுக்குக் கிடைத்துவிடும். தத்து எடுக்கப்பட்ட நாளிலிருந்து அந்தக் குடும்பத்தில் பிறந்த ஒருவனாகவே கருதப் படுவான்.

பழங்காலத்தில் தங்களையும், தங்கள் உடைமைகளையும் பாது காத்துக்கொள்ள அதிக எண்ணிக்கையில் ஆண்மக்கள் இருக்க வேண்டும் என்று முன்னோர்கள் விரும்பினார்கள். ஆண்பலம் இல்லாது போனால் ஆபத்து என்று உணர்ந்து, மகன் இல்லாத வர்கள் தத்து எடுத்துக்கொண்டார்கள். இவ்வுலகிலும், மறு உலகிலும் மனிதனின் ஆன்மீக விமோசனத்திற்கு மகன் அவசியம் என்று அந்தணப் புரோகிதர்கள் வலுயுறுத்தவே தத்து எடுப்பது அதிகரித்தது. தனக்குப் பின்னால் தன் பெயரைச் சொல்ல வேண்டும், வாழையடி வாழையாகத் தன் வம்சம் வளர வேண்டும்

என்ற மனிதனின் ஆசையும் தத்து எடுப்பது அதிகரிக்க ஒரு காரணம்.

யார் தத்து எடுக்கலாம்

மகனோ, பேரனோ, கொள்ளுப்பேரனோ வேறு தத்து எடுக்கப் பட்ட மகனோ இல்லாத எந்த இந்துவும் தத்து எடுத்துக் கொள்ள லாம். ஆனால், சொந்த மகனிருந்தும் தந்தையின் ஆன்மிக விமோ சனத்திற்கு உரிய ஆன்மிகத் தொண்டுகளைச் செய்ய முடியாத வனாக அவன் இருந்தால், வேறொருவனைத் தத்து எடுத்துக் கொள்ளத் தடையில்லை. மகனைப் போலவே பேரனோ கொள்ளுப் பேரனோ மதம் பணித்திருக்கும் ஆன்மிகக் கடமைகளைச் செய்ய முடியாத சூழ்நிலையில் இருந்தால், ஒருவன் தாராளமாகத் தத்து எடுக்கலாம். தனக்கு இருக்கும் ஒரே மகனைத் தத்துக்குக் கொடுத்து விட்டால், வேறொருவரின் மகனைத் தத்து எடுக்கலாம். ஆனால், மகனைத் துயமுஷ்யாயன முறையில் தத்துக் கொடுத்திருந்தால் வேறொருவனைத் தத்து எடுக்க முடியாது. மனைவி கர்ப்பமாக இருப்பது ஒருவன் தத்து எடுத்துக்கொள்ளத் தடை அன்று.

மகன் சகலத்தையும் துறந்து, சாமியாராகி, தந்தைக்குச் செய்ய வேண்டிய ஆன்மிகத் தொண்டை ஆற்ற முடியாத அளவுக்கு ஒரு நிலையை எய்திவிட்டால், தந்தை மகன் உயிருடன் இருந்தாலும் தத்து எடுத்துக் கொள்ளலாம்.

மகன் மதம் மாறிவிட்டால், தந்தைக்குரிய மதத்தின் சடங்கு களைச் செய்யத் தகுதியற்றவனாகி விடுகிறான். அப்போது தந்தை தத்து எடுத்துக் கொள்ளலாம். மதம் மாறிய நபருடைய உரிமை களைப் பாதுகாக்க வந்த 'வகுப்புத்தகவின்மை நீக்கச்சட்டம்' (The Caste Disabilities Removal Act) கூடத் தந்தை மீண்டும் தத்து எடுத்துக் கொள்வதைத் தடுக்கவில்லை.

சொந்த மகன் இல்லாவிட்டாலும் ஒருவனுக்கு முறையிலா மணத்தில் பிறந்த மகன் இருக்கலாம். ஆனால், அந்த மகன் தந்தைக்கு மதவழி ஆற்ற வேண்டிய ஆன்மிகக் கடமைகளைச் செய்ய முடியாது. எனவே, தந்தை தத்து எடுத்துக் கொள்ளலாம்.

இந்து தர்மசாஸ்திரங்கள் மதச்சடங்குகளைச் செய்வதற்கு மகன் அத்தியாவசியம் என்று வலியுறுத்துவதால், பிறந்த மகன் அவை களைச் செய்வதற்குத் தகுதியில்லாதவனாகும்போது, தத்து எடுத்துக் கொள்வதற்குத் தடை கிடையாது. மகன் பித்துநிலையில் இருந் தாலோ அல்லது உக்கிரமான தொழுநோயால் பீடிக்கப்பட்டிருந்

தாலோ அவன் சமயச் சடங்குகளைச் செய்யத் தகுதி இழந்து விடுகிறன். அந்தச் சூழ்நிலையில் தந்தை தத்து எடுத்துக் கொள்ளலாம்.

ஒருவனுடைய மனைவியோ அல்லது இறந்துவிட்ட மகனுடைய மனைவியோ கர்ப்பமாக இருப்பது ஒருவன் தத்து எடுப்பதற்குத் தடையாகாது. ஏனென்றால் குழந்தை பிறக்கும் வரை அது ஆணு, பெண்ணு என்பதைக் கூடத் தெரிந்துகொள்ள முடியாது. நிச்சயமாகத் தெரியாத சூழ்நிலையில், ஒருவனின் தத்து எடுக்கும் உரிமையைத் தாற்காலிகமாக நிறுத்தி வைப்பது முறையாகாது.

ஒருவன் உரிமை வயது வராது இருக்கும் காலத்தில் தத்து எடுத்துக் கொள்ளலாம். அதற்குத் தடை கிடையாது. ஆனால் அவன் நல்லது கெட்டதைப் பிரித்துப் பகுத்துணரும் பக்குவம் பெற்றிருக்கவேண்டும். உரிமை வயது வராத காலத்தில், தான் தத்து எடுத்துக் கொள்ளும் செயலின் விளைவுகளைப் பற்றி ஆய்ந்துணரக்கூடிய சக்தி அவனுக்கு இருக்கிறதா என்பதை நீதிமன்றம் தான் முடிவு செய்யும். 'இந்திய உரிமை வயதுச் சட்டத்தின் (Indian majority Act) விதிகள் இதற்குப் பொருந்தாது.

திருமணம் செய்து கொண்டு குழந்தை இல்லாமல் போனால் தான் தத்து எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற அவசியம் இல்லை. திருமணம் செய்துகொள்ளாத பிரம்மச்சாரியும் தத்து எடுத்துக் கொள்ளலாம். அதைப் போலவே மனைவியை இழந்தவனும் தத்து எடுத்துக் கொள்ளலாம். ஆனால், உலக ஆசைகளை எல்லாம் துறந்து சன்னியாசியாகிவிட்ட ஒருவன் தத்து எடுத்துக் கொள்ள முடியாது.

தத்து எடுப்பு முக்கியமானதாகவும், பல்வேறு விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதாகவும் இருப்பதால், தன்னுடைய செயலின் தன்மைகளையும் விளைவுகளையும் உணரமுடியாத ஒரு பித்தனோ அல்லது பிறவிமந்தனோ எடுக்கும் தத்து செல்லத்தக்கதல்ல. அப்படித் தத்து எடுப்பு நடந்திருந்தால், தத்து எடுப்பு நடைபெற்ற காலத்தில் அவன் புத்தித் தெளிவோடு இருந்தான் என்பதை நிரூபிக்க வேண்டும். புத்தித்தெளிவோடு இருந்த காலத்தில் நடந்த தத்து எடுப்பு பின்னர் அவன் பித்துநிலையை அடைந்து விட்டாலும் செல்லுபடியாகும். கணவன் பித்தனாக இருந்தாலும் அவன் உயிரோடு இருக்கையில் மனைவி தத்து எடுக்க முடியாது. ஏனெனில் கணவன் ஒருகால் புத்தி தெளிவடைந்து அவனே தத்து எடுக்கக்கூடும். அந்த வாய்ப்பு பறிபோகக்கூடாது என்பதற்காக மனைவிக்கு உரிமை தரப்படவில்லை.

ஒருவன் தொழுநோயாளியாக இருந்தாலும் தத்து எடுத்துக் கொள்ளலாம். ஆனால், உக்கிரமான தொழுநோய் இருந்தால் தத்து எடுத்துக்கொள்ள முடியாது. சூத்திரர்கள் விஷயத்தில் இந்தத் தடையும் கிடையாது.

கணவன் தன் மனைவியைக் கலந்து ஆலோசிக்காமல் தத்து எடுத்துக் கொள்ளலாம். அதுமட்டுமல்ல மனைவி எதிர்த்தாலும் தத்து எடுத்துக் கொள்ளலாம். ஏனெனில் தத்து தன் நலனுக்காகக் கணவன் எடுத்துக கொள்வதாகும். ஆனால் தத்து எடுக்கப்பட்டதும் மனைவி தத்து எடுக்கப்பட்டவனின் தாய் என்ற நிலையைப் பெற்றுவிடுவாள்.

ஒருவன் ஒரே சமயத்தில் இரண்டு பேர்களை மகன்களாகத் தத்து எடுத்துக் கொள்ள முடியாது. ஆனால் ஒருவன் பலமுறை தத்து எடுத்துக் கொள்ளலாம். ஒருவனைத் தத்து எடுத்து அவன் இறந்துவிட்டால் மீண்டும் மற்றொருவனைத் தத்து எடுத்துக் கொள்ளலாம்.

ஒருவன் தத்து எடுக்கும்போது ஒரு மனைவி மாத்திரமே இருந்தால் அவளே தத்து எடுக்கும் தாயாகக் கருதப்படுவாள் ஆனால், தத்து எடுக்கிறவனுக்குப் பல மனைவிகள் இருந்தால் யார் தத்து எடுக்கும் தாய் என்ற பிரச்சினை எழும். தத்து எடுக்கும் சடங்கில் ஒரு மனைவி மாத்திரமே கலந்து கொண்டால், பிரச்சினை கிடையாது. அவளே தத்து எடுக்கப்பட்டவனின் தாயாவாள். தத்து எடுக்கப்பட்ட மகனின் மறைவிற்குப் பின்னர் அவனுடைய சொத்துகளுக்கும் உரிமையுள்ளவளாவாள். ஆனால் தத்து எடுக்கும் சடங்கில் கணவனுடன் யாருமே ஈடுபடவில்லை என்றால், அல்லது அத்தனை மனைவிகளின் விருப்பத்திற்கு விரோதமாகக் கணவன் தத்து எடுத்தால், மனைவிகளுள் மூத்தவள் தத்து எடுத்த தாயாகக் கருதப்படுவாள்; அல்லது யாருமே தத்து எடுத்த தாயல்ல என்று முடிவாகும்.

பெண் தத்து எடுத்தல்

ஒரு பெண் தானாகத் தத்து எடுத்துக் கொள்ள முடியாது. ஆனால், அவளுடைய கணவன் தனக்காகத் தத்து எடுக்கும்படி மனைவிக்கு அந்த உரிமையை வழங்கலாம். கணவனுடைய சம்மதம் இல்லாமல் ஒருத்தி தத்து எடுக்க முடியாது என்று வசிஷ்டருடைய நூல் கூறுகிறது. இந்தக் கூற்றுக்குப் பல்வேறு விளக்கங்கள் ஏற்பட்டுத் தத்து எடுப்புச் சம்பந்தமாகப் பல்வேறு பகுதிகளில் பல்வேறு முறைகள் அனுசரிக்கப்படுகின்றன. தத்து

எடுப்பதற்குக் கணவனுடைய சம்மதம் தேவை; எனவே கணவன் இறந்துவிட்டால் ஒரு விதவை தத்தே எடுக்க முடியாது என்பது மிதிலை முறை. கணவன் உயிரோடு இருக்கும்போது சம்மதம் கொடுத்திருந்தால் மனைவி தத்து எடுத்துக் கொள்ளலாம் என்பது வங்க, காசி முறை. கணவன் தடை சொல்லாதிருந்திருந்தால் ஒருத்தி விதவையான பிறகு தத்து எடுத்துக் கொள்ளலாம் என்பது மராத்திய முறை கணவன் சம்மதத்துடனோ அல்லது கணவன் இறந்து விட்டால் அவனுடைய சபிண்ட உறவினரின் சம்மதத்துடனோ ஒரு விதவை தத்து எடுக்கலாம் என்பது தென்னிந்திய முறை. இவையல்லாமல், கணவனுடைய சம்மதம் இல்லாமல், தத்து எடுக்கும் வழக்கம் (custom) இருந்தால் ஒரு விதவை தத்து எடுத்துக் கொள்ளலாம். கணவன் மனைவிக்குத் தத்து எடுக்கும் உரிமையை வாய்மொழியாக (oral) வழங்கினனு என்பதை நீதி மன்றம் கணவன் உரிமை தந்த காலத்தில் இருந்த சூழ்நிலைகளை எல்லாம் ஆய்ந்து பார்த்து முடிவெடுக்கும்.[1]

கணவன் உயிரோடு இருக்கும்போது வெளிப்படையாகவோ (Expressly) அல்லது ஊகக் குறிப்புடனோ (By implication) தத்து எடுத்துக் கொள்ளக் கூடாது என்று மனைவிக்குக் கூறியிருந்தால், மனைவி விதவையான பிறகு தத்து எடுக்க முடியாது. கணவனும் மனைவியும் பிரிந்து வாழ்க்கை நடத்தினர்கள் என்பதற்காக மனைவிக்குத் தத்து எடுக்கும் உரிமையைக் கணவன் தரவில்லை என்று ஊகம் செய்வது சரியல்ல. மரணத்திற்கு முன்னர் கணவன் தத்து எடுத்துக்கொள்ள மறுத்ததை, தனக்குப் பின் மனைவி தத்து எடுத்துக் கொள்ளக் கூடாது என்று கணவன் கருதியதாகக் கொள்வதும் சரியல்ல. சூழ்நிலைகளின் ஆதாரங்களைக் கொண்டு இப் பிரச்சினைகளில் நீதிமன்றம் முடிவெடுக்கும்.

கணவன் மனைவிக்குத் தத்து எடுக்கும் உரிமையை வாய்மொழி வாயிலாகவோ அல்லது எழுத்து மூலமோ அல்லது உயில் மூலமோ அளிக்கலாம். உரிமையை வழங்கும்போது அவன் விரும்பினல் சில நிபந்தனைகளை விதிக்கலாம். அந்த நிபந்தனைகள் சட்டத்திற்கு முரணனவைகளாக இருக்கக் கூடாது. தத்து எடுத்தவன் இறந்து விட்டால் அடுத்தடுத்துத் தத்து எடுக்கவும் கணவன் உரிமை கொடுக்கலாம்.

தனக்காகத் தத்து எடுக்கும் அதிகாரத்தைக் கணவன் மனைவிக்குத் தரும்போது, மனைவி கணவன் கூறிய நிபந்தனைகள் அல்லது விருப்பத்தை முழுமையாக நிறைவேற்றக் கடமைப் பட்டுள்ளாள். கணவன் கூறியவாறு அல்லாமல் வேறுவகையில்

[1] Biswanath Agarwal *Vs* Dhapu Devi 1966 cal. 13.

கூட்டவோ, குறைக்கவோ, மாற்றவோ அவள் முயலக் கூடாது. உரிமை வயது அடையாத விதவை ஒருத்தி, தத்து எடுக்கும் உரிமையைக் கணவனிடமிருந்து பெற்றிருந்தால், தத்து எடுத்துக் கொள்ளலாம். ஆனால் தத்து எடுக்கும் செயலின் தன்மைகளையும், விளைவுகளையும் புரிந்துகொள்கிற மன வளர்ச்சியை அவள் பெற்றிருக்க வேண்டும். மன முதிர்ச்சி பெருது, தான் செய்யும் செயலின் விளைவுகள் புரியாது ஒருத்தி தத்து எடுத்துவிட்டால், அது செல்லத் தகாததாகும். ஆனால், கணவன் ஒரு குறிப்பிட்ட பையனைத் தத்து எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கூறியிருந்தால், மன வளர்ச்சியடையாத நிலையிலும் உரிமை வயது வராத ஒரு விதவை தத்து எடுத்து கொள்ளலாம்.

ஒரு விதவை தத்து எடுக்கும் அதிகாரத்தைக் கணவனிடமிருந்து பெற்றிருந்தாலும், தத்து எடுப்பதும் எடுக்காததும் அவளுடைய விருப்பமாகும். அவளைச் 'செய்' என்றோ, 'செய்யாதே' என்றோ கூற யாருக்கும் உரிமை கிடையாது. கணவன் தத்து எடுக்கச் சொல்லியிருந்தும், அவள் மறுத்துவிட்டால், அவனுடைய உயிலை நிறைவேற்றுபவர்கள் அதற்காகச் சொத்தை அவளுக்குத் தராமல் இருக்கமுடியாது. தத்து எடுப்பு அவளுக்குத் தரப்பட்டுள்ள தனி உரிமை. அதில் மற்றவர்களும் தலையிட முடியாது; அவளும் மற்றொருவருக்குக் கொடுக்க முடியாது. கணவன் காலவரையறை ஏற்படுத்தியிருந்தாலன்றி, மனைவி தத்து எடுக்க வேறு காலவரையறை கிடையாது.

ஒருவனுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியர் இருந்தால் ஒருவரை அல்லது அனைவரையுமே தத்து எடுத்துக்கொள்ள அனுமதிக்கலாம். ஆனால், ஒரு மனைவிதான் தத்து எடுப்புச் சடங்கு செய்து தாய் என்ற நிலையை அடைய முடியும். எல்லா விதவைகளுக்கும் தத்து எடுக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தால் முதலில் மணம் புரிந்துகொண்ட முதல் விதவையே அப்பணியைச் செய்ய முதல் தகுதி பெற்றவளாவாள்; முதல் விதவை இறந்து விட்டாலோ, அல்லது தத்து எடுக்க மறுத்துவிட்டாலோ அல்லது பிற விதவைகளுக்குத் தன் உரிமையை விட்டுக் கொடுத்து விட்டாலோ பிற விதவைகள் தத்து எடுக்கலாம். முதல் விதவை முறையாகத் தத்து எடுத்துவிட்டால் பிற விதவைகளின் உரிமை பயனற்றுப் போய்விடும்.

ஒரு விதவை மறுமணம் புரிந்து கொண்டாலோ அல்லது கற்பு நெறி தவறிவிட்டாலோ, கணவன் தத்து எடுக்கும் உரிமையைத் தந்திருந்தாலும், தத்து எடுக்கும் தகுதியை இழந்து விடுவாள்.

கற்புநெறி தவறியவள் மீண்டும் திருந்தித் தன்னுடைய பாவங்களுக்குப் பிராயச்சித்தம் செய்து கொள்வாளேயானல், மீண்டும் தத்து எடுக்கும் உரிமையைப் பெறுவாள். மறுமணம் புரிந்து கொண்டால் தத்து எடுக்கும் தகுதி அறவே போய்விடும்.

ஒரு விதவையினுடைய தத்து எடுக்கும் அதிகாரம் கணவன் ஒரு மகனைவிட்டுச் சென்ருலோ அல்லது மகன் ஒரு மகனை (பேரனை) அல்லது தத்து எடுத்த மகனை விட்டுவிட்டு இறந்து விட்டாலோ அல்லது தன்னுடைய மனைவியை (விதவையின் மருமகள்) தத்து எடுக்கச் சொல்லிவிட்டாலோ, முடிவடைந்துவிடும். இந்த நிர்ணயம் இல்லை என்ருல் மாமியாரும் மருமகளும் ஏக காலத்தில் தத்து எடுக்கக் குழப்பங்கள் வந்து சேரும்.

தத்து கொடுக்கும் உரிமை

தத்துக் கொடுக்கும் உரிமை தந்தைக்கே உண்டு. தந்தை இறந்துவிட்டால் தாயார் கொடுக்கலாம். இருவரைத் தவிர வேறு யாருக்கும் அவ்வுரிமை கிடையாது. பெற்ருேர்களில் தந்தைக்கே முக்கிய உரிமை உண்டு. தந்தை தன்னுடைய விருப்பம்போல் தத்துக் கொடுக்கலாம். மனைவி எதிர்த்தாலும் அதைப் புறக்கணித்து விட்டுக் கொடுக்கலாம். மகன் உரிமை வயதை அடைந்திருந்தாலும் தானகத் தன்னை தத்துக் கொடுத்துக் கொள்ள முடியாது. வசிஷ்டருடைய தர்ம சாஸ்திரம் கணவனுடைய சம்மதம் இல்லாமல் மனைவி தத்து எடுக்கவோ அல்லது கொடுக்கவோ கூடாது என்று சொல்கிறது. ஒருத்தி மறுமணம் புரிந்து கொண்டால் முதல் கணவன் மூலம் பெற்ற மகனைத் தத்துக் கொடுக்கும் உரிமையை இழந்துவிடுவாள். ஆனல், முதல் கணவன் ஒப்புதல் கொடுத்திருந்தால் அவள் தத்துக் கொடுக்கத் தடையில்லை.

தத்துக் கொடுக்கும் உரிமை பெற்ருேர்களுக்கே உண்டு என்ருலும், அவர்கள் பகுத்துணரும் பக்குவ வயதிலும், பித்து நிலை இல்லாத புத்தித் தெளிவோடும் இருந்தால்தான் தத்துக் கொடுக்க முடியும். கணவன் உயிரோடு இருக்கும்வரை மனைவிக்கு அவ்வுரிமை கிட்டாது. கணவன் மனைவியைத் தனக்குப் பதிலாகத் தத்துக் கொடுக்கச் சொன்னல், மனைவி கணவன் விதித்த நிபந்தனைகளை மீருது செயல்பட வேண்டும். கணவனே மனைவியோ மதம் மாறிவிடுவதால்கூடத் தங்களின் தத்துக் கொடுக்கும் உரிமையை இழந்துவிட மாட்டார்கள். ஆனல், கணவனை இழந்தபின் மனைவி மறுமணம் புரிந்து கொண்டால் அவ்வுரிமையை இழந்துவிடுவாள். ஒருவன் தொழுநோய்வாய்ப்படுவதாலோ, நபும்சகனுகி விடுவ

தாலோ இந்த உரிமையை இழந்துவிட மாட்டான். தனக்கிருப்பது ஒரே மகன்தான் என்ருலும் ஒரு விதவை அவனைத் தத்துக் கொடுப்பதற்குத் தடை கிடையாது.

தத்து எடுக்கப்படத் தகுதிகள்

ஒருவன் ஒரு பையனைத்தான் தத்து எடுக்கமுடியுமே தவிர பெண்ணைத் தத்து எடுக்க முடியாது. ஆனால், பையன் அதே ஜாதியைச் சேர்ந்தவனாக இருக்கவேண்டும். ஒரு ஜாதியின் உட்பிரிவினைச் சேர்ந்த ஒருவனை அதே ஜாதியின் இன்னொரு உட்பிரிவினைச் சேர்ந்தவன் தத்து எடுத்துக் கொள்ளலாம். தத்து எடுப்பவரின் கோத்திரத்தில்தான் தத்து எடுக்கப்படுபவன் இருக்க வேண்டும் என்பது அவசியமன்று. தத்து எடுப்பவர் தத்து எடுக்கப்படுபவனின் தாயை அவளுடைய கன்னிப் பருவத்தில் மணந்து கொள்ளக் கூடாத உறவு முறையில் இருந்தால், அவளுடைய மகனைத் தத்து எடுக்கக்கூடாது என்பது ஒரு விதி. இதை நந்தபண்டிதர் (Nanda Panditha's Rule) விதி என்பார்கள். இந்த விதியின்படி மகளுடைய மகன், சகோதரியின் மகன், சின்னம்மா மகன் முதலியோரை ஒருவன் தத்து எடுத்துக்கொள்ள முடியாது. இது தர்ம சாஸ்திரத்தைத் தவருகப் புரிந்து கொண்டதன் விளைவாகும். ஆங்கிலேயர் ஆட்சியின் உச்ச நீதிமன்றமான பிரிவிகவின்சிலும் இந்த விதியைக் கட்டளையாகக் (Mandatory) கருத வேண்டும் என்று ஒரு வழக்கில்[2] தீர்ப்பளித்துள்ளது. ஆனால், இந்திய நீதிமன்றங்கள் இந்த விதிக்கு முரணாக வழக்கம் அமலில் இருந்ததால், அதை அங்கீகரித்திருக்கின்றன.

ஓர் அனாதையை ஒருவன் தத்து எடுக்க முடியாது. ஆனால், அப்படி ஒரு வழக்கம் இருந்தால், தத்து எடுத்துக்கொள்ளலாம். வீட்டிற்கு ஒரே மகனாக இருப்பவனைத் தத்து எடுத்துக்கொள்ளலாகாது என்று வசிஷ்டர் கூறியிருக்கிறார். ஆனால், அது ஒரு கட்டளை அல்ல. எனவே, பெற்றோருக்கு ஒரே மகனாக இருப்பவனைத் தத்து எடுத்துக் கொள்ளலாம். ஒரே மகனைத் தத்து எடுத்துக் கொள்வது எப்படி சட்டப்படி சரியோ அப்படியே ஒரு குடும்பத்தில் உள்ள மூத்த மகனைத் தத்து எடுத்துக்கொள்வதும் சரியாகும். ஏனென்றல் மூத்த மகன் தத்து எடுக்கப்பட்டு விட்டாலும் பிற ஆண்மக்கள் தந்தைக்கு ஆன்மிகத் தொண்டை ஆற்ற முடியும்.

ஒரு முறை தத்து எடுக்கப்பட்டவனை இன்னொரு முறை தத்து எடுக்கவும் முடியாது. ஒருவனையே இரண்டு பேர் தத்து எடுக்க

[2] Bhagwan Singh *Vs* Bhagwan Singh 21 All, 412 (p.c.)

வும் முடியாது. ஆனால், ஒருவன் இரண்டு தந்தையருக்கு மகனாக இருக்க முடியும். எடுத்துக்காட்டாக, ஒருவன் துய முஷ்யாயன முறையில் தத்துக் கொடுக்கப்படும்போது, அவனுடைய பிறந்த வீட்டிலுள்ள எந்த உரிமையும் பாதிக்கப்படுவதில்லை. அப்போது அவன் தத்துக் கொடுத்தவருக்கும் தத்து எடுத்தவருக்கும் மகனாக விளங்குவான்.

உக்கிரமான தொழுநோயால் வாடுபவனையோ அல்லது பித்து நிலையில் உள்ளவனையோ, பிறவிக் குருடனையோ ஊமையையோ யாரும் தத்து எடுக்க மாட்டார்கள். அப்படித் தத்து எடுத்தால் அது செல்லாது. ஒருவனை அவனுடைய வகுப்பை விட்டு விலக்கி வைத்தாலும், அவன் மகனை அவன் விலக்கப்படாதவரைத் தத்து எடுத்துக் கொள்ளலாம். ஆனால், முறையிலா மணப் பிறப்பில் பிறந்தவனைத் தத்து எடுக்கக்கூடாது.

காளிகபுராணத்தில் (Kalikapurana) உள்ள ஒரு பகுதி ஐந்து வயதுக்கு மேற்பட்டவனையோ அல்லது துறவறத்தை மேற்கொள்வதற்காகத் தலையை மொட்டையடித்துக் கொள்ளும் சடங்கைச் செய்து கொண்டவனையோ தத்து எடுத்துக்கொள்ளக் கூடாது என்று கூறுகின்றது. ஆனால், வயதை வரையறை செய்யும் இக் கூற்றைச் சரியானதல்ல என்று தத்தக சந்திரிகா (Dattaka Chadnrika) கூறுகின்றது. முதல் மூன்று வருணத்தைச் சேர்ந்தவனை அவனுக்கு உபநயனம் ஆகும்வரை தத்து எடுத்துக் கொள்ளலாம். நான்காவது வருணத்தைச் சேர்ந்தவனை அவனுக்குத் திருமணம் ஆகும் வரை தத்து எடுத்துக் கொள்ளலாம் என்று அந் நூல் கூறுகின்றது. பம்பாய் மாநிலம் தவிரப் பிற மாநில நீதி மன்றங்கள் இதையே சரியான விளக்கமாக ஏற்றுக் கொண்டுள்ளன.

தத்து எடுப்புச் சடங்குகள்

தத்துக் கொடுப்பவர் தத்து எடுக்கப்படுபவனைத் தத்து எடுப்பவருக்கு அவனுடைய ஸ்தூல உடலோடு கொடுக்கும் செயல்தான் தத்து எடுப்பில் முக்கிய சடங்காகும். தத்து எடுப்பவர் தான் இன்னாரைத் தத்து எடுத்துக் கொண்டேன் என்று அறிவித்தால் மட்டும் போதாது. ஒருவர் கொடுக்க இன்னொருவர் வாங்கும் சடங்கு நடைபெறாமல் வெறும் 'தத்து எடுப்பு ஒப்பாவணம்' (Deed of Adoption) மட்டும் இருந்தால் அது போதுமானதாகாது. ஆனால், பதிவாளரின் முன்னால் தத்து எடுக்கப்படுபவனைத் தத்து எடுப்பவரிடம் ஒப்படைத்தால், அது ஏற்றுக்கொள்ளப்படும்.

தத்து எடுப்பில் பின்வரும் நான்கு வகைகள் உண்டு.

தத்தவோமம் (Datta Homam)

தத்து எடுப்பின்போது தத்தவோமம் என்ற சடங்கு செய்யப் படுவதுண்டு. தூய்மையான வெண்ணெயைத் தீயில் ஊற்றித் தத்து எடுப்பவனின் கோத்திர மாற்றத்தை முன்னிட்டு அச் சடங்கைச் செய்வார்கள். இச் சடங்கு அவசியமா அவசிய மில்லையா என்பது பற்றி நீதி மன்றங்களிடையே கருத்து வேறுபாடு உண்டு. பொதுவாகச் சூத்திரர்களிடையே தத்தவோமம் வற் புறுத்தப்படுவதில்லை. பிற வருணத்தில் தத்து எடுக்கப்படுபவனும் தத்து எடுப்பவரும் ஒரே கோத்திரத்தில் இருந்தால் வற்புறுத்துவ தில்லை. தத்தவோமம் ஏறக்குறைய இந்தியா முழுவதிலும் அனு சரிக்கப்பட்டு வருகிறது.

கிரித்திம தத்து எடுப்பு (Kritrima Adoption)

கிரித்திம தத்து எடுப்பு மிதிலை முறைக்கு உரியதாகும். மலபார் நம்பூதிரிகள் மத்தியிலும் அத்தகைய தத்து எடுப்பு உண்டு. இந்தத் தத்து எடுப்பு, காலத்தால் சற்றுப் பிற்பட்டது. தத்தவோம முறை யில் ஒரு விதவை தத்து எடுக்க இருந்த தடையைத் தடுப்பதற்காகக் கண்டுபிடிக்கப்பட்ட உபாயமே இம் முறை. இதில் மதத்தின் சாயல் கிடையாது. இதில் தத்து எடுக்கப்பட்டவனுடைய பிறந்த வீட்டில் இருக்கும் உரிமைகள் தத்து எடுப்பால் பாதிக்கப்பட மாட்டாது. ஆனால், தத்து எடுக்கப்பட்ட குடும்பத்தில் தத்து எடுத்தவரின் சொத்துக்கு மட்டுமே உரிமை கொண்டாட முடியும். மேலும், தத்து எடுக்கப்பட்டவனுடைய குழந்தைகளுக்கு அச் சொத்தில் எந்தப் பாத்தியதையும் கிடையாது ஏனென்றால், இந்த ஒப்பந்தம், தத்து எடுப்பவருக்கும், தத்து எடுக்கப்படுபவனுக்கும் மட்டுமே சம்பந்தமுடையது.

துய முஷ்யாயனம் (Duyamushyayana)

துய முஷ்யாயனம் என்று சொன்னால் இரண்டு தந்தைகளின் மகன் என்று பொருள். இந்தத் தத்து எடுப்பால் தத்து எடுப்பவ ரும், கொடுப்பவரும் ஓர் உடன்பாடு செய்துகொள்வார்கள். அதன்படி தத்து எடுக்கப்பட்டவன் இரண்டு பேருக்கும் மகனு வான். எனவே அவன் இரு தந்தைக்கும் ஈமச் சடங்குகள் செய்ய லாம்; இருவரது சொத்தையும் அடையலாம்.

இலாட்டம் தத்து எடுப்பு (Illatom Adoption)

மாமனார் மருமகனைத் தத்து எடுத்துக் கொள்ளும் வழக்கம் சென்னையிலும், அதிகமாக ஆந்திராவிலும், குறிப்பாக ரெட்டியார் கள் மத்தியில் உண்டு. அதற்கு இலாட்டம் தத்து எடுப்பு என்று

பெயர். சிற்சில சமயங்களில் திருமணம் ஆவதற்கு முன்னரே திருமணம் செய்து வைக்கும் நோக்கத்தோடு ஒருவனைத் தத்து எடுத்துக் கொள்வதுண்டு. இந்த முறையிலும் மதத்தின் சாயல் கிடையாது. சொத்தையும், குடும்பத்தையும் நிர்வகிப்பதற்காகவே இம் முறையில் ஒருவனைத் தத்து எடுத்துக் கொள்வர். இம் முறையில் தத்து எடுக்கப்பட்டவனின் உரிமைகள் எல்லாம் அங்கங்கு நிலவும் வழக்கத்தைப் பொறுத்ததாகும்.

தத்து எடுப்பின் விளைவுகள்

ஒருவன் தத்து எடுக்கப்பட்டபின் பிறந்த குடும்பத்தில் உள்ள சகல உறவுகளும் அறுந்து விடும். தத்து எடுக்கப்பட்ட குடும்பத்தில் அவன் பிறந்த மகன்போல் பாவிக்கப்படுவான். தத்து எடுத்த தந்தையின் வம்சத்தை அவன் தொடர்வதாகவும் கருதப்படும். தத்து எடுத்த மகனைப் பிறகு தத்து எடுத்தவர் தன் மகன் அல்லன் என்று விலக்க முடியாது. தத்து எடுக்கப்பட்டவன் பிறந்த குடும்பத்திற்குச் சம்பந்தமில்லாதவனாகப் போனால்கூடத் திருமணப் பிரச்சினையில் அவன் அந்நியனாகக் கருதப்படமாட்டான். தத்து எடுத்தவருக்குத் தத்து எடுப்புக்குப்பின் மகன் பிறந்தால், தத்து எடுக்கப்பட்டவனுக்குச் சொத்தில் நான்கில் ஒரு பாகமே கிடைக்கும். தத்து எடுப்பிற்குப் பின் ஒருவனுக்கு வந்து சேர்ந்த சொத்துகள் தத்து எடுப்பால் பாதிக்கப்படாது.

தத்து எடுக்கப்பட்டவன், தத்து எடுத்தவர் அவருடைய நேர் வழி முன்னோர்கள் சொத்துக்கு வாரிசாக இருக்கமுடியும். அது மட்டுமன்று; ஒன்றுவிட்டு ஒன்று வந்த வழியிலும் அவன் வாரிசு உரிமை கொண்டாட முடியும். ஆனால், சென்னை உயர்நீதி மன்றம் ஒரு வழக்கில்,[3] மனைவியை இழந்தவர் ஒருவனைத் தத்து எடுத்துக் கொண்டால், அவன் தத்து எடுத்த தந்தையின் இறந்துபோன மனைவியின் உறவினர் சொத்துக்கு உரிமை கொண்டாட முடியாது என்று தீர்ப்பளித்துள்ளது.

தத்து எடுக்கப்பட்ட குடும்பத்தில் தத்து எடுக்கப்பட்டவன் ஒரு பங்குரிமையாளனாகிறான். ஆனால், தத்து எடுத்தவருக்குத் தத்து எடுப்பிற்குப்பின் மகன் பிறந்து விட்டால் இவனது பங்கு நான்கில் ஒரு பாகமாகக் குறைந்துவிடும். இந்தக் குறைந்த பங்கு தந்தையின் சொத்து சம்பந்தப்பட்டவரைதான். தாயின் சொத்திலோ பிற உறவினரின் சொத்திலோ அவனுக்குச் சமவுரிமை உண்டு.

[3] Sivakami Achi *Vs* Somasundram Chettiar I.L.R. 1956 Madras 459.

ஒரு விதவை தன்னுடைய கணவனுக்காகத் தத்து எடுத்துக் கொண்டால், கணவனுடைய சொத்துக்கு அவள் தொடர்ந்து வாரிசுரிமை கொண்டாட முடியாது. தத்து எடுக்கப்பட்ட மகனே உரிமை உடையவன் ஆவான். அதைப் போலவே ஒரு பங்குரிமையருக்கு அவளுடைய கணவன் சொத்து போய்ச் சேர்ந்தால், தத்து எடுக்கப்பட்டபின் தத்து எடுக்கப்பட்ட மகனை மீண்டும் அச் சொத்து வந்தடையும்.

தத்து எடுப்பிற்கு முன்னர்ச் சொத்துகள் வேறு யாருக்கேனும் மாற்றிக் கொடுக்கப்பட்டிருந்தால், அந்த மாற்றங்கள தத்து எடுக்கப்பட்டவனைக் கட்டுப்படுத்தும். ஒருவன் தனக்குரிய சொத்தைத் தத்து எடுப்பதற்கு முன் இன்னொருவருக்கு பிரதிபலன் கருதியோ அல்லது கொடை (Gift)யாகவோ கொடுத்திருந்தால் அது பின்னால் தத்து எடுக்கப்பட்டவனைக் கட்டுப்படுத்தும்.

தத்து எடுப்பிற்கு முந்திய உடன்பாடுகள் (Ante-Adoption Agreements)

தத்து எடுப்பிற்கு முன் தத்து எடுப்பவரும் தத்துக் கொடுப்பவரும் செய்து கொள்ளும் ஒப்பந்தம் செல்லுமா என்பது ஒரு முக்கிய பிரச்சினை. ஆரம்ப காலத்தில் நீதிமன்றங்கள் அத்தகைய ஒப்பந்தங்கள் செல்லத்தக்கது என்றே தீர்ப்பு வழங்கின. தத்து எடுப்பவரும் தத்துக் கொடுப்பவரும் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தால் தத்து எடுக்கப்படுபவனின் சில உரிமைகள் குறைக்கப்பட்டன. ஆனால், பிரிவி கவுன்சிலில் புகழ்பெற்ற கிருஷ்ணமூர்த்தி [4] வழக்கிலே, இந்தப் பிரச்சினையை வெகுவாக அலசிவிட்டுச் சில நிலைமைகளைத் தெளிவுபடுத்தியது. கிருஷ்ணமூர்த்தி வழக்கில், தத்து எடுத்தவர் தன்னுடைய உயிலில் தத்து எடுக்கப்பட்டவனுக்குச் சொத்தில் ஒரு பகுதியையும் பிறவற்றை மனைவி, பிற உறவினர்கள், தர்ம காரியங்கள் ஆகியவற்றிற்கும் ஒதுக்குவதாக எழுத அதைத் தத்துக் கொடுப்பவர் ஒப்புக் கொண்டார். ஆனால், பிரிவி கவுன்சில் இந்த ஒப்பந்தம் தத்து எடுக்கப்பட்ட மகனைக் கட்டுப்படுத்தாது என்று தீர்ப்பளித்தது. இந்து தர்ம சாஸ்திரங்கள் தத்து எடுக்கப்பட்ட மகனுக்கு என்னென்ன உரிமைகள் வழங்கியுள்ளனவோ அவற்றை உடன்பாடுகள் (agreements) மூலம் குறைப்பது நியாயமாகாது; தத்து எடுக்கப்பட்டவன் தன் உரிமைகளை நிலை நாட்டுவதற்கு முரண்தடை (Estoppel) யாகச் செய்யப்படும் உடன்பாட்டிற்கு அவன் பொறுப்பல்லன். தத்துக் கொடுப்பவர் தத்து எடுப்பிற்குப் பின் தத்து எடுப்பவனுக்குக் காப்பாளர் போல இருக்க முடியாது. அவருடைய செயல்கள் தத்து எடுக்கப்

[4] Krishnamurthy *Vs* Krishnamurthy I.L.R. 50 Madras 508.

பட்டவனை எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது; என்றாலும், தனக்குப் பிறகு தன்னுடைய மனைவிக்குச் சொத்தில் ஆயுள் பாத்தியதை உண்டு என்றும், அவளுக்குப் பிறகே தத்து எடுக்கப்பட்ட மகனுக்குச் சொத்து சேரும் என்றும் செய்துகொள்ளும் தத்து எடுப்பிற்கு முந்திய உடன்பாடு, அப்படி ஒரு வழக்கம் இருந்தால், செல்லும் என்று மேலும் அந்தக் கிருஷ்ணமூர்த்தி வழக்கில் பிரிவி கவுன்சில் கூறியது

பெண்ணைத் தத்து எடுத்தல்

பழைய சட்டத்தில் பெண்ணைத் தத்து எடுத்துக்கொள்வது பற்றிச் சொல்லப்படவில்லை. ஆனால், தேவதாசிகள் மத்தியில் பெண்ணைத் தத்து எடுக்கும் வழக்கம் இருந்துவந்திருக்கிறது. இந்த வழக்கத்தைப் பம்பாய் உயர்நீதிமன்றம்[5] அங்கீகரிக்கவில்லை. தாசி ஒரு பெண்ணைத் தத்து எடுப்பது ஒழுக்கக் குறைவானது என்ற அடிப்படையில் அவ் வழக்கம் செல்லாது என்று பம்பாய் உயர்நீதிமன்றம் கூறுகிறது. ஆனால், சென்னை உயர்நீதிமன்றம்[6] சற்று மாறுபடுகிறது. விபசாரத்திற்குப் பெண்ணை பயன்படுத்து கிற நோக்கம் இல்லாமலோ அல்லது விபசார வாழ்க்கையை மேற் கொள்வதற்குப் பயிற்சி கொடுக்கும் எண்ணம் இல்லாமலோ ஒரு தாசி தத்து எடுத்துக்கொண்டால் அது செல்லும் என்கிறது சென்னை உயர்நீதிமன்றம். தேவதாசிகள் குலத்தில் ஒருத்தி இரண்டு பெண்களைக் கூடத் தத்து எடுத்துக் கொள்ளலாம். தத்து எடுப்பைச் செல்லக் கூடியதாக்கச் சடங்குகள் எதுவும் அவசிய மில்லை. இத்தகைய தத்து எடுக்கப்பட்ட பெண்கள் தத்து எடுத்த தாயின் சொத்தை அடைவார்கள்.

பகுதி ஆ - இந்துத் தத்து எடுப்புகள், பராமரிப்புச் சட்டம், 1956

(The Hindu Adoptions And Maintenance Act, 1956)

1956 ஆம் ஆண்டு அமலுக்கு வந்த இந்துத் தத்து எடுப்பு கள், பராமரிப்புச் சட்டம், ஏற்கெனவே இந்துக்கள் மத்தியில் வழக்கில் இருந்த தத்து எடுப்புச் சட்டத்தில் மேலோட்டமான மாறுதல்களை அல்ல, மிகக்கடுமையான மாறுதல்களை விளைவித்தது. இந்தச் சட்டம் வந்ததற்குப் பின்னர் தத்து எடுப்பு இதில் கூறப் பட்டுள்ளவண்ணமே நிகழவேண்டும்; இச் சட்டத்தில் கண்டுள்ள

[5] Hira *Vs* Radha (1913) I.L.R. 37 Bombay 116.

[6] Venkatachalamma *Vs* Cheekati I.L.R. (1953) Madras 741 ; A.I.R. 1953 Madras 571.

விதிகளுக்கு முரணாக நடந்தால் அவை இல்லாநிலையதாகக் கருதப் படும். ஆனால், இச் சட்டம் வருவதற்கு முன்னால் பழைய சட்டப் படி நடந்த தத்து எடுப்புகள், பழைய சட்டத்திற்கே கட்டுப் பட்டவை. இப் புதிய சட்டம் எவ்வகையிலும் அவற்றைப் பாதிக்காது. பழைய சட்டத்தில் இருந்த மதத்தின் சாயல் புதிய சட்டத்தில் சற்றும் கிடையாது என்பது கவனிக்கத்தக்கது. இச் சட்டத்தின் முதல் நான்கு பிரிவுகளும் முன்னுரை போல அமைந் திருக்கின்றன. முதல் பிரிவு இச் சட்டத்தின் பெயரையும் அது அமலாக இருக்கும் பகுதியின் பெயரையும் குறிப்பிடுகிறது. இரண்டாவது பிரிவில் இச் சட்டம் யார்யாருக்கு உரியது என்பது சொல்லப்பட்டுள்ளது. இந்துத் திருமணச் சட்டத்தில் இந்து என்பவன் யார் என்பதற்குக் கொடுக்கப்பட்டுள்ள விளக்கமே இதிலும் உள்ளது. மூன்றாவது பிரிவில் சில சொற் களுக்கு விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. நான்காவது பிரிவில் இச் சட்டம் வந்ததால் நேர்ந்த விளைவு யாது என்பது சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. இச் சட்டம் வருவதற்கு முன்னால் இருந்த விதிகள் விளக்கங்கள், நூல்கள், வழக்கம், வழக்காறு யாவும் இச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ள விஷயங்களைப் பொறுத்த வரையில் செய லற்றுவிடும். அதைப் போலவே இதற்கு முன்னால் இருந்த சட்டம் இச் சட்டத்தின் விதிகளுக்கு முரண்படும் விஷயங்களில் செயலற்று விடும்.

5ஆவது பிரிவு, இந்தச் சட்டம் அமலான பிறகு தத்து எடுப்பு இச் சட்டத்தில் கண்டுள்ளவாறுதான் நடைபெறவேண்டும் என் றும், அதற்கு முரணாக நடைபெறும் தத்து எடுப்பு இல்லா நிலைய தாகும் என்றும் திட்டவட்டமாகக் கூறுகின்றது. ஒரு தத்து எடுப்பு இல்லாநிலையதாகும்போது தத்து எடுத்தவன் குடும்பத்தில் தத்து எடுக்கப்பட்டவனுக்கு எந்த உரிமையும் கிடைக்காது. அதே சமயம் பிறந்த வீட்டில் அவனுடைய உரிமைகள் அழிந்து விடாது.

தத்து எடுப்பிற்கு வேண்டியவை

6ஆவது பிரிவு செல்லத்தக்க தத்து எடுப்பிற்கு வேண்டியவை யாவை என்பதைக் கூறுகின்றது. முதலாவதாக தத்து எடுக்கும் நபருக்குத் தத்து எடுக்கத் தகுதியும் உரிமையும் இருக்கவேண்டும். இரண்டாவதாக, தத்து கொடுப்பவனுக்கு அவ்வாறு செய்யத்தகுதி இருக்கவேண்டும். மூன்றாவதாக, தத்து எடுக்கப்படுபவன் தத்து எடுக்கப்படுவதற்குரிய தகுதியினைப் பெற்றிருக்க வேண்டும். நான்காவதாக, இச் சட்டத்தில் காணப்படும் பிற நிபந்தனைகளுக்கு ஏற்பத் தத்து எடுக்கப்படவேண்டும்.

மேலே கண்ட நான்கில் எது குறைந்தாலும் தத்து எடுப்பு செல்லாததாகிவிடும். தத்து எடுக்க, கொடுக்க, எடுபட என்னென்ன தகுதிகள் வேண்டும் என்பதும், பிற நிபந்தனைகள் யாவை என்பதும் அடுத்துவரும் பிரிவுகளில் கூறப்பட்டுள்ளன.

தத்து எடுக்கத் தகுதி

7ஆவது பிரிவும் 8ஆவது பிரிவும் முறையே ஓர் இந்து ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள தத்து எடுக்கும் தகுதி பற்றிக் கூறுகின்றன.

புத்தித் தெளிவோடு இருக்கின்ற, உரிமை வயது வந்த எந்த இந்து ஆணும் ஒரு மகனையோ அல்லது மகளையோ தத்து எடுத்துக் கொள்ளலாம். மனைவி உயிரோடு இருந்தால், அவளுடைய ஒப்புதல் இல்லாமல் தத்து எடுக்கமுடியாது. மனைவி முழுமையாக இறுதியாக உலகைத் துறந்துவிட்டாலோ அல்லது இந்துவாக இல்லாமல் போய்விட்டாலோ அல்லது அதிகார வரம்புடைய தக்க நீதிமன்றத்தால் 'பித்துநிலையினள்' என்று அறிவிக்கப்பட்டுவிட்டாலோ அவளுடைய ஒப்புதல் இல்லாமல் தத்து எடுக்கலாம். 7ஆவது பிரிவின் விளக்கத்தின்படி தத்து எடுக்கும் காலத்தில் ஒருவனுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியர் இருந்தால் எல்லா மனைவியர் ஒப்புதலையும் பெறவேண்டியது அவசியம். எந்த ஒரு மனைவியினுடைய ஒப்புதலாவது அவசியமில்லை என்றால், அதற்கு முன்னால் உள்ள கட்டுவாசகத்தில் (Proviso) (எவ்வெப்போது மனைவியின் ஒப்புதல் தேவை இல்லை என்று சொல்லப்பட்டுள்ளவை) குறித்த காரணங்கள் இருக்கவேண்டும்.

அடுத்த பிரிவு இந்துப் பெண் ஒருத்தி எப்போது தத்து எடுக்கமுடியும் என்று கூறுகிறது. புத்தித் தெளிவோடு இருக்கின்ற, உரிமை வயது அடைந்துவிட்ட, திருமணமாகாத, திருமணம் ஆனாலும் செய்த திருமணம் கலைக்கப்பட்டுவிட்டாலோ அல்லது கணவன் இறந்து விட்டாலோ அல்லது கணவன் முழுமையாக, இறுதியாக உலகைத் துறந்து விட்டாலோ அல்லது இந்துவாக இல்லாமல் போய்விட்டாலோ அல்லது தகுந்த அதிகார வரம்புடைய நீதிமன்றம் கணவன் பித்துநிலையினன் என்று அறிவித்துவிட்டாலோ, ஒரு பெண் தத்து எடுத்துக் கொள்ளலாம்.

தத்து எடுப்புப் பற்றிய இந்து தர்மத்தின் கண்ணோட்டத்திற்குப் புறம்பான வகையில் சில அடிப்படை மாறுதல்களை இப் பிரிவுகள் உருவாக்கியிருக்கின்றன. மேலோட்டமாக இல்லாமல் அடிப்படையிலேயே மாறுதல்கள் நேர்ந்திருப்பதால், இதைப் புரட்சிகரமானது

என்று அழைப்பதில் தவறில்லை பழைய சட்டத்தில் உரிமை வயது அடையாத ஒருவன் நல்லது கெட்டதை, தத்து எடுப்பின் விளைவுகளை ஆய்ந்தறியும் மனத்திறன் பெற்றிருப்பானேயானால், தத்து எடுத்துக்கொள்ளத் தடை கிடையாது. ஆனால், இச் சட்டத்தின் ஏழாவது பிரிவுப்படி 18 வயதுக்கு மேற்பட்டவனே, அதாவது உரிமை வயது அடைந்தவனே தத்து எடுக்க முடியும். பழைய சட்டத்தில் கணவன் தத்து எடுக்க மனைவியின் ஒப்புதல் பெற வேண்டியது அவசியமன்று; அது மட்டுமன்று; அவள் எதிர்த்தாலும் தத்து எடுத்துக் கொள்ளலாம். ஆனால், இச் சட்டப்படி மனைவியின் ஒப்புதல் அவசியம். ஒப்புதல் இல்லாமல் தத்து எடுக்கக் கணவனுக்கு உரிமை கிடையாது. பழைய சட்டத்தில் ஆணைத்தான் தத்து எடுக்க முடியும்; பெண்ணைத் தத்து எடுக்க முடியாது. புதிய சட்டம் பெண்ணையும் தத்து எடுக்க வகை செய்துள்ளது. பழைய சட்டத்தில் கொடிய தொழுநோய் போன்றவற்றால் பீடிக்கப்பட்டவர்களைத் தத்து எடுக்க முடியாது. அத்தகைய தடைகளுக்குப் புதிய சட்டத்தில் இடமே இல்லை.

பழைய சட்டத்தில் ஒரு பெண் கிருத்திம முறையைத் தவிர மற்றவற்றில் தனக்காகத் தத்து எடுத்துக் கொள்ள முடியாது. கணவனுக்காக மட்டுமே தத்து எடுத்துக் கொள்ள முடியும். புதிய சட்டப்படி ஒரு பெண் தனக்காகத் தத்து எடுத்துக் கொள்ள முடியும். இது பெண்ணுக்குத் தரப்பட்டிருக்கும் புதிய உரிமையாகும்.

தத்துக் கொடுக்கத் தகுதி

தந்தை அல்லது தாய் அல்லது காப்பாளர் தவிர வேறு எந்த நபருக்கும் ஒரு குழந்தையைத் தத்துக் கொடுக்கும் தகுதி கிடையாது. தந்தை உயிரோடு இருந்தால் அத் தகுதி அவருக்கு மட்டுமே உண்டு. ஆனால், அந்த உரிமையை மனைவியின் ஒப்புதல் இல்லாமல் பயன்படுத்தக்கூடாது. மனைவி முழுமையாக, இறுதியாக உலக வாழ்வைத் துறந்து விட்டாலோ அல்லது இந்துவாக இல்லாமல் போய்விட்டாலோ அல்லது தக்க அதிகார வரம்புடைய நீதிமன்றம் அவள் பித்துநிலையினள் என்று அறிவித்துவிட்டாலோ கணவன் மனைவியின் ஒப்புதல் பெறவேண்டிய அவசியமில்லை.

தந்தை இறந்துவிட்டாலோ, அல்லது முழுமையாக, இறுதியாக உலக வாழ்வைத் துறந்துவிட்டாலோ அல்லது தக்க அதிகார வரம்புடைய நீதிமன்றம் அவர் பித்து நிலையினர் என்று அறிவித்துவிட்டாலோ மனைவி குழந்தையைத் தத்துக் கொடுக்கலாம்.

ஒரு குழந்தையின் தாய், தந்தை இருவரும் இறந்துவிட்டாலோ அல்லது இருவரும் உலக வாழ்வைத் துறந்து விட்டாலோ அல்லது இருவரும் குழந்தையைக் கைவிட்டு விட்டாலோ அல்லது தக்க அதிகாரவரம்புடைய நீதிமன்றம் இருவரும் பித்துநிலையினர் என்று அறிவித்து விட்டாலோ அல்லது குழந்தையின் தாய் தந்தை யார் என்று தெரியாமல் இருந்தாலோ குழந்தையைப் பராமரிப்பவர் நீதிமன்றத்தின் அனுமதியை முன்னதாகப் பெற்றுக்கொண்டு எந்த நபருக்கும் தத்துக் கொடுக்கலாம்; தானே வேண்டுமானாலும் தத்து எடுத்துக் கொள்ளலாம்.

காப்பாளருக்கு நீதிமன்றம் அனுமதி வழங்குவதற்கு முன்னர் தத்து எடுப்பு குழந்தைக்கு நலம்பயக்குமா, குழந்தையின் வயது, புரிந்துகொள்ளும் ஆற்றல் இவற்றைக் கணக்கில் கொண்டு பார்க்குமிடத்து, குழந்தையின் விருப்பத்திற்கு உரிய இடம் தரப் படுகிறதா என்பதைக் கவனிக்கும். மேலும், அனுமதி கோரும் காப்பாளர் நீதிமன்றம் அனுமதிக்கக்கூடிய ஒரு தொகை அல்லது பரிசு அல்லாமல் வேறு தொகை அல்லது பரிசு பெற்றிருக்கிறாரா அல்லது பெற உடன்பட்டிருக்கிறாரா அல்லது வேறு யாரேனும் அதற்கு வகை செய்திருக்கிறாரா அல்லது கொடுத்திருக்கிறாரா அல்லது, வகை செய்ய அல்லது கொடுக்க உடன்பட்டிருக்கிறாரா என்பதை நீதிமன்றம் பார்த்து நிறைவு கொண்டால் மட்டுமே உத்தரவிடும்.

மேலே கண்ட ஒன்பதாவது பிரிவு சில அம்சங்களில் பழைய சட்டத்திலிருந்து மாறுபடுகிறது. பழைய சட்டத்தில் தத்துக் கொடுக்கும் உரிமை தந்தைக்கு மட்டுமே இருந்தது. தந்தை இல்லை என்றால் தாய், அதுவும் தடை செய்யாதிருந்தால், தத்து கொடுக்கலாம். புதிய சட்டத்தில் தந்தை தாய் அல்லாமல் மூன்றாவது நபரான காப்பாளருக்கும் அந்த உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. பழைய சட்டத்தில் தந்தை தடை விதித்திருந்தால் தாய் தத்துக் கொடுக்க முடியாது. ஆனால், புதிய சட்டத்தில் தந்தை இறந்து விட்டாலோ அல்லது தகுதி இழந்து விட்டாலோ தந்தையின் சம்மதம் இல்லாமல் அல்லது உயிரோடு இருந்த காலத்தில் தந்தை தடை சொல்லியிருந்தாலும் தாய் மகனைத் தத்துக் கொடுக்கலாம்.

9 ஆவது பிரிவில் சில நிலைமைகளைத் தெளிவாக்க விளக்கமும் தரப்பட்டுள்ளது. 'தந்தை', 'தாய்' என்ற சொற்கள் குழந்தையை ஈன்றெடுத்த தந்தை, தாயையே குறிக்கும். தத்து எடுத்த தந்தையையோ தாயையோ அல்ல. அவர்களுக்குத் தத்து கொடுக்கும் உரிமை கிடையாது. காப்பாளர் என்பவர் குழந்தை என்ற நபரை

அல்லது நபரையும் அவருடைய சொத்தையும் கவனித்துக் கொள்பவராவார். குழந்தையின் தந்தை அல்லது தாயால் உயில்படி நியமிக்கப்பட்டவராகவும் காப்பாளர் இருக்கலாம் நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டவர் அல்லது நியமிக்கப்பட்டவராகவும் இருக்கலாம். நீதிமன்றம் என்பது நகர உரிமையியல் நீதிமன்றம் அல்லது மாவட்ட நீதிமன்றம் என்று கொள்ளவேண்டும்.

தத்து எடுக்கப்படத் தகுதி

ஒரு நபர் தத்து எடுக்கப்பட முக்கிய தகுதிகள் நான்கு என்று 10 ஆவது பிரிவு கூறுகின்றது. ஒன்று, தத்து எடுக்கப்படும் நபர் இந்துவாக இருக்க வேண்டும். இரண்டு, ஏற்கெனவே தத்து எடுக்கப்பட்டிருக்கக் கூடாது. மூன்று, திருமணம் ஆகியிருக்கக் கூடாது. திருமணமானவர்களைத் தத்து எடுக்கும் வழக்கம் அல்லது வழக்காறு சம்பந்தப்பட்ட தரப்பினரிடையே உண்டு என்றால் அவ்வாறு தத்து எடுத்துக் கொள்ளலாம். நான்கு, 15வயது பூர்த்தியாகி இருக்கக்கூடாது. 15 வயதுக்கு மேற்பட்டவர்களைத் தத்து எடுக்க அனுமதிக்கும் வழக்கம் அல்லது வழக்காறு இருந்தால் அவ்வாறு தத்து எடுத்துக் கொள்ளலாம்.

தத்து எடுப்பிற்குப் பிற நிபந்தனைகள்

தத்து எடுக்க, கொடுக்க, எடுக்கப்பட ஒரு நபருக்குத் தேவையான தகுதிகள் யாவை என்பது இதற்கு முன்னால் கூறப்பட்டது. இந்தப் பதினோராவது பிரிவில் செல்லத்தக்க தத்து எடுப்பிற்குத் தேவையான பிற நிபந்தனைகள் யாவை என்பது கூறப்பட்டுள்ளன.

ஒவ்வொரு தத்து எடுப்பிலும் கீழ்க்காணும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

1. மகனாகத் தத்து எடுப்பதென்றால், தத்து எடுக்கும் தந்தைக்கோ தாய்க்கோ வேறு இந்து மகனோ, மகனின் மகனோ, மகனுடைய மகனின் மகனோ (கொள்ளுப் பேரனோ) தத்து எடுக்கப்படும் காலத்தில் இருக்கக்கூடாது; மேலே கண்ட மகன்கள் முறையான ரத்த சம்பந்தமுடையவர்களாகவும் இருக்கலாம், அல்லது தத்து எடுக்கப்பட்டவர்களாகவும் இருக்கலாம்.

2. மகளாகத் தத்து எடுப்பதென்றால், தத்து எடுக்கும் தந்தைக்கோ தாய்க்கோ வேறு இந்து மகளோ அல்லது மகனின் மகளோ தத்து எடுக்கப்படும் காலத்தில் இருக்கக்கூடாது. மேலே கண்ட மகள்கள் முறையான ரத்த சம்பந்தமுடையவர்களாகவும் இருக்கலாம், அல்லது தத்து எடுக்கப்பட்டவர்களாகவும் இருக்கலாம்.

3. தத்து எடுப்பவர் ஆணாகவும், தத்து எடுக்கப்பட வேண்டியவர் பெண்ணாகவும் இருந்தால், தத்து எடுக்கும் தந்தை தத்து எடுக்கப்பட வேண்டிய பெண்ணைவிட 21 வயது மூத்தவராக இருக்க வேண்டும்.

4. தத்து எடுப்பவர் பெண்ணாகவும் தத்து எடுக்கப்பட வேண்டியவர் ஆணாகவும் இருந்தால் தத்து எடுக்கும் தாய் தத்து எடுக்கப்பட வேண்டிய மகனை விட 21 வயது மூத்தவராக இருக்க வேண்டும்.

5. ஒரே குழந்தை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களால் ஒரே சமயத்தில் தத்து எடுக்கப்பட முடியாது.

6. தத்து எடுக்கப்படும் குழந்தை உண்மையாகவே தத்துக் கொடுக்கப்பட்டு வாங்கப்பட வேண்டும். பெற்றோர்களோ அல்லது காப்பாளரோ இதைச் செய்யலாம்; அல்லது பிறந்த குடும்பத்திலிருந்து தத்து எடுக்கப்பட்ட குடும்பத்திற்கு அவர்களுடைய அதிகாரத்தின் கீழ்க் கொடுக்கப்படலாம். கைவிடப்பட்ட குழந்தையாகவோ அல்லது தாய் தந்தையர் யார் என்பது தெரியாத குழந்தையாகவோ இருந்தால் அக் குழந்தை வளர்க்கப்பட்ட இடம் அல்லது குடும்பத்திலிருந்து தத்து எடுக்கப்படும் குடும்பத்திற்குத் தரப்பட வேண்டும்.

தத்து எடுப்பு செல்லத் தகுந்ததாக தத்தவோமம் செய்வது முக்கியமானதன்று.

இந்தப் பதினோராவது பிரிவும் சில முக்கிய மாறுதல்களை ஏற்படுத்தியுள்ளது. ஆண் பெண்ணையும் பெண் ஆணையும் தத்து எடுக்க வேண்டும் என்றால் 21 வயது தத்து எடுப்பவர் மூத்தவராக இருக்க வேண்டும் என்று இப் பிரிவு கூறுகின்றது. பழைய சட்டத்திலோ தர்ம சாஸ்திரங்களிலோ இந்த விதி கிடையாது. தத்து எடுக்கும் சடங்கு முன்பு சிக்கலானது. இப்போது சற்று எளிதாகி விட்டது. குழந்தை என்ற நபரை மெய்யாகக் கொடுத்து வாங்கினால் தத்து எடுப்புச் சடங்கு முடிந்ததாகப் பொருள். தத்து வோமம் போன்ற சடங்குகளைச் செய்யவேண்டியது அவசியமல்ல.

தத்து எடுப்பின் விளைவு

தத்து எடுக்கப்பட்ட குழந்தை தத்து எடுத்த தந்தை அல்லது தாயின் குழந்தையாகவே தத்து எடுக்கப்பட்ட நாளிலிருந்து எல்லா காரியங்களுக்கும் கருதப்படும். தத்து எடுக்கப்பட்ட நாளிலிருந்து பிறந்த வீட்டிலுள்ள சகல பந்தங்களும் அறுந்து, அந்தப்

பந்தங்கள் யாவும் தத்து எடுக்கப்பட்ட குடும்பத்தில் வந்து சேர்ந்து விட்டதாகக் கருதப்படும்.

ஆனால், தத்து எடுக்கப்பட்ட நபர் தான் பிறந்த வீட்டிலேயே இருந்திருந்தால் யார் யாரை மணந்துகொள்ள முடியாதோ, அவர் களைத் தத்து எடுப்பிற்குப் பின்னரும் மணந்து கொள்ள முடியாது.

தத்து எடுக்கப்பட்ட குழந்தைக்குத் தத்து எடுப்பிற்கு முன் வந்தடைந்த சொத்துகள் தத்து எடுப்பிற்குப் பின்னரும் அந்த நபரிடத்திலேயே இருக்கும். அந்தச் சொத்தை அனுபவிப்பதோடு சில நிபந்தனைகளும் அதற்கிருந்தால் அவற்றைத் தத்து எடுக்கப் பட்ட குழந்தை நிறைவேற்றியே தீர வேண்டும்; அந்தச் சொத்தை அனுபவிப்பவர் தன்னுடைய பிறந்த குடும்பத்தைச் சேர்ந்த உறவினர்களைப் பராமரிக்க வேண்டிய கடமை உட்பட, சொத் துக்குச் சொந்தக்காரராக இருப்பதால் உள்ள பொறுப்புகளையும் நிறைவேற்ற வேண்டும்.

தத்து எடுப்பிற்கு முன் ஒரு நபருக்கு வந்த நிலச் சொத்தின் (Estate) உரிமையைத் தத்து எடுக்கப்பட்ட குழந்தை அடைய முடியாது.

தத்து எடுப்பின் விளைவுகள் பற்றிக் கூறும் 12ஆவது பிரிவு மிகவும் முக்கியமானது. தத்து எடுக்கப்படும் நபருக்குத் தத்து எடுப்பிற்கு முன் வந்தடைந்த சொத்துகள் என்பதும், தத்து எடுப் பிற்கு முன் ஒரு நபரை வந்தடைந்த சொத்தின் உரிமையில் தத்து எடுக்கப்பட்டவர் கை வைக்க முடியாது என்பதும் சில பிரச்சினை களையும் சிக்கல்களையும் தோற்றுவிக்கக் கூடும். தத்து எடுப்பிற்கு முன் தத்து எடுக்கப்படும் நபருக்கு அவருக்கே சொந்தமான தனிச் சொத்து இருக்குமானால் பிரச்சினை இல்லை. அவர் அந்தச் சொத்தைத் தத்து எடுக்கப்பட்ட குடும்பத்திற்கு எடுத்துச் செல்ல லாம். ஆனால், தத்து எடுக்கப்படுபவர் கூட்டுக் குடும்பத்தில் ஒரு பங்குரிமையராக (Coparcener) இருந்தால், அந்தச் சொத்தைத் தத்து எடுக்கும் குடும்பத்திற்குக் கொண்டு செல்ல முடியாது. தனக்கென்று தனியாகச் சொத்து அடைந்திருந்தால் மட்டுமே எடுத்துச் செல்லலாம். அப்போது அந்தச் சொத்தை அனுபவிப் பவர் சில உறவினர்களைப் பராமரிக்க வேண்டும் என்ற பொறுப்பு அச்சொத்தோடு சுமத்தப்பட்டிருந்தால், அதைத் தத்து எடுக்கப் படும் நபர் தவிர்க்க முடியாது.

தத்து எடுப்பிற்கு முன் தத்து எடுப்பவரை வந்தடைந்த சொத்தின் உரிமையை அவரைத் தத்து எடுக்கப்பட்டவர் எதிர்க்க முடியாது. இதை ஓர் எடுத்துக்காட்டு எளிதில் விளக்கும்.

"இந்து ஒருவன் தன் மனைவியையும் சொத்தையும் விட்டு விட்டு இறந்துவிடுகிருன். இந்து உரிமை இறக்கச் சட்டப்படி அவனுடைய மனைவி, சொத்திற்கு முழு உரிமை உடையவளாகி விடுகிருள். அவள் பின்னர் 1957-ல் ஒருவனைத் தத்து எடுத்துக் கொள்கிருள். தத்து எடுக்கப்பட்ட மகன் அந்தச் சொத்தில் உரிமை கொண்டாட முடியாது. 13ஆவது பிரிவு, தத்து எடுத்த தந்தையோ அல்லது தாயோ தங்கள் சொத்தைத் தத்து உடன் படிக்கையை மீருமல், உரிமை மாற்றம் செய்யவோ, உயில் மூலம் பிறருக்குக் கொடுக்கவோ உள்ள உரிமையைத் தத்து எடுப்பால், இழந்துவிட மாட்டார்கள் என்று கூறுகிறது.

14ஆவது பிரிவு சில சிக்கல்கள் எழும்போது யார் தத்து எடுத்த தாய் என்பதை எவ்வாறு நிர்ணயிப்பது என்பதைத் தெளிவுபடுத்துகிறது. மனைவி உயிரோடு இருக்கும்போது ஒருவன் தத்து எடுத்துக் கொண்டால் அவளே குழந்தையின் தத்து எடுத்த தாயாகக் கருதப்படுவாள். ஒருவன் ஒன்றுக்குமேற்பட்ட மனைவியர் இருந்து அவர்களுடைய சம்மதத்துடன் தத்து எடுத்தால் முதலில் மணந்து கொண்டவளே தத்து எடுத்த தாயாகக் கருதப் படுவாள். மற்றவர்கள் மாற்ருந் தாயாகக் கருதப்படுவார்கள். மனைவியை இழந்தவர் அல்லது பிரம்மச்சாரி தத்து எடுத்துக் கொண்டதற்குப் பின்னர் மணந்து கொண்டால், அவள் தத்து எடுக்கப்பட்ட குழந்தைக்கு மாற்ருந் தாயாகக் கருதப்படுவாள். அதைப்போலவே ஒரு விதவை அல்லது கன்னிப் பெண் தத்து எடுத்துக்கொண்ட பின்னர் மணந்து கொண்டால், அவர் தத்து எடுக்கப்பட்ட குழந்தைக்குச் சிற்றப்பாவாகக் கருதப்படுவார்.

15ஆவது பிரிவு, முறைப்படி நடந்த தத்து எடுப்பைத் தத்து எடுத்த தந்தையோ, தாயோ, பிறரோ ரத்து செய்ய முடியா தென்றும், அல்லது தத்து எடுக்கப்பட்ட நபர் தான் தத்து எடுக்கப் பட்டவன் என்ற தகுதியைத் துறந்துவிட்டுப் பழையபடி பிறந்த குடும்பத்திற்கே திரும்பி வர முடியாதென்றும் கூறுகிறது. தத்து எடுப்பு ஓர் ஒப்பந்தமல்ல; அதனுல் ரத்து செய்வது என்ற பேச்சுக்கே இங்கு இடமில்லை. தத்து எடுப்பு என்பது ஒரு தகுதி அல்லது அந்தஸ்து. ஆகவே, இதை மாற்ற முடியாது. ஒரு குடும்பத்திலிருந்து தத்து எடுக்கப்பட்டு இன்னொரு குடும்பத் திற்குச் சென்றபின் பழைய குடும்பத்திற்கே திரும்பி வருவது என்பது சாத்தியமல்ல.

16 ஆவது பிரிவு, தத்து எடுக்கப்பட்டதற்கு ஆதாரமாக அப் போது நிலவிய சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட ஆவணத்தை

(Document) நீதி மன்றத்தின் முன் வைத்தால், அதில் தத்துக் கொடுத்தவரும் எடுத்தவரும் தத்து எடுத்தற்காக கையொப்ப மிட்டிருந்தால், அது பொய் என்று நிரூபிக்கப்படும்வரை நீதிமன்றம் இச் சட்டத்தின் விதிகளைப் பூர்த்திசெய்தே தத்து எடுப்பு நிகழ்ந்த தாகக் கொள்ளும் என்று கூறுகிறது.

17ஆவது பிரிவு, தத்து எடுப்பிற்காகப் பணம் அல்லது பரிசு கொடுக்கப்படுவதை அல்லது வாங்கப்படுவதைத் தடை செய் கிறது. ஒரு நபர் தத்து எடுக்கப்படுவதற்குப் பிரதிபலனாக எந்த ஒரு நபரும் தொகை அல்லது வேறு பரிசு வாங்குவதும் அல்லது வாங்க உடன்படுவதும் ஒரு நபர் இன்னொரு நபருக்குத் தொகையோ அல்லது பரிசோ கொடுக்க வகைசெய்வதும் அல்லது கொடுப்பதும், அல்லது, வகைசெய்ய அல்லது கொடுக்க உடன் படுவதும் இந்தப் பிரிவால் தடைசெய்யப்படுகிறது. இந்த விதிக்கு முரணாக நடந்தால் அப்படி நடக்கும் நபருக்கு 6 மாத காலம் வரை சிறைத் தண்டனையும் அல்லது அபராதமும் அல்லது இரண்டும் கொடுக்கலாம். முன்னதாக மாநில அரசின் அனுமதி அல்லது மாநில அரசால் இதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் அதிகாரியின் அனுமதி இல்லாமல் குற்ற வழக்குத் தொடரப்படக் கூடாது.

சிற்சில சமயங்களில் பணத்திற்கு ஆசைப்பட்டுப் பெற் றோர்கள் தங்கள் குழந்தைகளைத் தத்து எடுப்பு என்ற பெயரால் விற்றுவிடுவார்கள். அதைத் தடுப்பதற்காகவே 17ஆவது பிரிவு உள்ளது.

4. பராமரிப்பு
(MAINTENANCE)

பகுதி அ—பழைய சட்டம்

'The aged parents, a virtuous wife, and an infant child must be maintained even by doing a hundred misdeeds.'

—Manu cited in the Mitakshara.

இந்து ஒருவன், தனக்குச் சொத்து இருந்தாலும் இல்லாவிட்டாலும், தன்னுடைய வயதான பெற்றோர்கள், நெறி தவரு மனைவி, இளங் குழந்தைகள் ஆகியோரைப் பராமரிக்க வேண்டும் என்று மனுஸ்மிருதி கூறுகிறது. அவர்களைக் காப்பாற்றுவதை முன்னிட்டுத் தவருன செயல்கள் செய்தாலும் பாதகமில்லை என்கிறது.

ஒருவனுக்குத் தன்னைச் சார்ந்தவர்களைப் பராமரிக்கும் பொறுப்பு அவர்களோடு தனக்கிருக்கும் சொந்த உறவினுலும், சொத்துக்கு உரிமையாளனுக இருப்பதாலும் ஏற்படுகிறது. வயதான பெற்றோர்கள், மனைவி, குழந்தைகள் முதலியோர் சொந்த உறவு என்ற வரம்பிற்குள் வருகிருர்கள். கூட்டுக் குடும்பம் இருக்கும்போது சொத்துக்கு உரிமையாளன் என்ற முறையில் கூட்டுக் குடும்பத்தினரைப் பராமரிக்க வேண்டிய பொறுப்பு இருக்கிறது.[1] ஒரு கூட்டுக் குடும்பத்தில் ஒரு பங்குரிமையர் (Co-parcener) இறந்துவிட்டால் அவனுடைய விதவையைப் பராமரிக்க வேண்டியது அந்தக் குடும்ப கர்த்தாவின் பொறுப்பு. கூட்டுக் குடும்பத்துப் பெண்களையும், பாகப்பிரிவினை கோரமுடியாத கூட்டுக் குடும்ப அங்கத்தினரையும் பங்கு உரிமையரின் முறையிலா மணப்பிறப்பில் பிறந்த பிள்ளைகளையும் கூட்டுக் குடும்ப கர்த்தா குடும்பச் சொத்தின் பொறுப்பிலேயே காப்பாற்ற வேண்டும்.

[1] Rama Rao *Vs* Raja of Pithabur 41 Mad 788 (p.c.)

மனைவி

திருமணமான பிறகு மனைவி கணவனோடு அவன் இருப்பிடத்தில் வாழக் கடமைப்பட்டவள். தன்னைக் கைப்பிடித்து வந்தவனைப் பராமரிக்க வேண்டியது அவளுடைய கணவனின் தலையாய கடமை. கற்புநெறி தவறுது வாழும் மனைவியைத் தனக்குச் சொத்தில்லை என்று சொல்லி ஒருவன் பராமரிக்காது தட்டிக் கழித்துவிட முடியாது. மனைவி தக்க நியாயமான காரணம் இருக்குமானல், கணவனை விட்டு நீங்கித் தனியாக வாழலாம். அப்படி வாழும் காலத்தில் தன்னைப் பராமரிக்கும்படியும் கணவனைக் கேட்கலாம். குறிப்பிட்ட சில காரணங்களுக்காக மனைவி தனியாகப் போய் வாழ உரிமை தந்து, 1946ஆம் ஆண்டு இந்துத் திருமணமான மகளிர், தனி இருக்கை, பராமரிப்பு உரிமைச் சட்டம் (The Hindu Married Women's Rights to Separate Residence and Maintenance Act) நிறைவேற்றப்பட்டது. இச் சட்டம் 1956ஆம் ஆண்டு அமலுக்கு வந்த இந்துத் தத்து எடுப்பு, பராமரிப்புச் சட்டத்தால் ரத்துசெய்யப் பட்டுவிட்டது.

வைப்பாட்டி

வைப்பாட்டி ஒருத்தியை (Concubine) ஒருவன் பராமரிக்க வேண்டிய அவசியமில்லை. ஆனல், ஒருவனுக்கு மட்டுமே அவள் வைப்பாட்டியாக இருந்து வாழ்ந்திருந்தால், தன்னைப் பராமரிக்கும்படி அவனுக்குப் பின் அவனுடைய வாரிசுதாரர்களைக் கேட்கலாம் என்பது பழைய சட்டம்.[1] மற்றபடி சட்டத்தில் அவளுக்கு எந்த அந்தஸ்தும் கிடையாது. தன்னை ஆசைநாயகியாக வைத்திருந்தவனின் வாரிசுதாரர்களிடம் அவள் பராமரிக்கும்படி கேட்கும் உரிமை அவன் மரணத்திற்குப் பின்னும் அவள் அவனுக்கு உண்மையாக இருப்பதைப் பொறுத்ததாகும். தன்னை வைத்திருந்தவனின் மரணத்திற்குப்பின் அவள் வேருெருவனேடு வாழ முற்பட்டு விட்டால் பராமரிப்புக் கேட்க முடியாது.

விதவை

ஒரு கூட்டுக் குடும்பத்தில் ஒரு பங்குரிமையர் இறந்துவிட்டால், விதவையாகிவிட்ட அவனுடைய மனைவி பராமரிக்கப்பட வேண்டும். கணவன் உயிரோடு இருந்த காலத்தில் அவளைப் புறக்கணித்து வாழ்ந்திருந்தாலும், அல்லது அவள் நியாயமான காரணங்களால் கணவனை விட்டுத் தனியே சென்று வாழ்ந்திருந்தாலும், கூட்டுக் குடும்பத்தில் கணவனுடைய சொத்திலிருந்து பராமரிக்கப் பட்டே யாக வேண்டும். ஆனல், அவள் மறுமணம் புரிந்து

[1] Bainagubai *Vs* Baimangubai 50 Bom. 604 (p.c.)

கொண்டாலோ, ஒழுக்கக் குறைவான வாழ்க்கையை மேற்கொண்டாலோ பராமரிப்பு நிறுத்தப்படும். ஆனால், கணவனுடைய சில சொத்துகளுக்கு அவள் பாத்தியதை உடையவளாக இருந்து, குடும்பத்தில் ஒரு சமரசம் ஏற்பட்டு, அதன் அடிப்படையில் தன் பாத்தியதையை விட்டுக்கொடுத்து விட்டுப் பராமரிப்புப் பெற்றுக் கொள்வதற்கு அவள் ஒப்புக்கொண்டிருந்தால், பின்னர் ஒழுக்கக் குறைவைக் காரணம் காட்டிப் பராமரிப்பை நிறுத்த முடியாது. ஒரு விதவை கற்புநெறி காப்பது அவள் பராமரிப்புப்பெற முக்கிய நிபந்தனை என்றாலும், இடையில் நெறி தவறியவள் மீண்டும் திருந்தி ஒழுக்கமான வாழ்வை மேற்கொண்டால், அவளுக்குப் பட்டினிப் பராமரிப்புக் (Starving Maintenance) கிடைக்கும்; அதாவது உணவுக்கும் உடைக்கும் போதுமான அளவு தரப்படும்.

பெற்றோரும் குழந்தைகளும்

பரம்பரைச் சொத்து இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஒருவன் தன் பெற்றோர்களைப் பராமரிக்க வேண்டும். ஆனால், பாட்டன் பாட்டியைப் பரம்பரைச் சொத்து இல்லாவிட்டால் பராமரிக்க வேண்டிய கட்டாயம் இல்லை. மாற்றாந்தாயைக் கூடப் பராமரிக்க வேண்டிய அவசியமில்லை. முறையான மணத்தில் பிறந்த மகனைப் பராமரிக்க வேண்டியது தந்தையின் கடமை. மகன் உரிமை வயது பெறும் வரைதான் இக் கடமை அவருக்கு உண்டு. உரிமை வயது அடைந்த பிறகும் சம்பாதிக்க முடியாமல் இருந்தால், தந்தைக்குப் பொறுப்புக் கிடையாது. ஆனால், பிறர் உதவியின்றி வாழ முடியாத துர்ப்பாக்கிய நிலையில் மகன் இருந்தால், அவனை உரிமை வயது அடையாதவனாகக் கருதி, தந்தை பராமரிக்க வேண்டும். தத்து எடுத்த மகனையும் பராமரிக்க வேண்டிய கடமை தந்தைக்கு உண்டு. முறையிலா மணப்பிறப்பில் பிறந்த குழந்தைகளை அக் குழந்தைகளின் தந்தை பராமரிக்கக் கடமைப் பட்டவர். ஆனால், குழந்தைகளின் தாய் இந்துவாக இருக்க வேண்டியது அவசியம். தந்தை இறந்ததற்குப் பின் முறையிலா மணத்தில் பிறந்த குழந்தைகள் தந்தையின் சொத்திலிருந்து பராமரிக்கப்பட வேண்டும்.

முறையான மணத்தில் பிறந்த மகளை அவள் மணம் செய்து கொள்ளும் வரை தந்தை பராமரிக்க வேண்டும். மகள் மணம் புரிந்து கொண்டபின், பராமரிக்க வேண்டிய அவசியமில்லை. திருமணம் ஆகாத மகள் தந்தையை எதிர்த்தாலோ, கீழ்ப்படிய மறுத்தாலோ, அவருடைய பாதுகாப்பில் இருக்க முடியாதென்றாலோ தந்தை அவளைப் பராமரிக்க வேண்டியதில்லை.

முறையிலா மணப்பிறப்பில் பிறந்த மகளைத் தந்தை பராமரிக்க வேண்டிய அவசியமில்லை. இது பழைய சட்டத்தில் உள்ள துர்ப்பாக்கிய நிலை. முறையிலா மணப்பிறப்பில் பிறந்த மகனுக்கு இருக்கும் சலுகை மகளுக்கு இல்லாமல் போனது பெரிய துரதிருஷ்டம். ஆனால், குற்ற இயல் நடைமுறைச் சட்டம் 488-ஆவது பிரிவுப்படி முறையிலா மணப்பிறப்பில் பிறந்த மக்களை வயது வரும் வரையில் காப்பாற்ற வேண்டியது, அவர்களின் தந்தையின் கடமை. இந்தச் சட்டப்படி மக்களின் தாய் இந்துவாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை; எந்த மதத்தினளாகவுமிருக்கலாம்.

பராமரிப்புத் தொகையின் அளவு

பராமரிப்புத் தொகை எவ்வளவு என்பதை நிர்ணயிக்கும்போது நீதிமன்றம் ஒவ்வொரு வழக்கிலும் உள்ள சகல விஷயங்களையும் கணக்கில் எடுத்துக் கொள்ளும். ஒரு விதவைக்குப் பராமரிப்புத் தொகையை முடிவு செய்யும்போது, அவள் கணவன் வீட்டில் வாழும்போது என்ன சுகத்தோடு வாழ்ந்தாளோ, அந்த சுகத்தோடு வாழ்வதற்கு ஏற்ற தொகையை நீதிமன்றம் நிர்ணயிக்கும். சொத்தின் மதிப்பு, இருக்கும் கடன், இறந்துபோன கணவனின் அந்தஸ்து, விதவையின் தேவைகள் முதலியனவும் கணக்கில் கொள்ளப்படும். பராமரிப்புத் தொகையை ஒரு விதவையின் விஷயத்தில் நிர்ணயிக்கும்போது அவளுடைய சீதனச் சொத்தும் கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படும். ஆனால், அவளுடைய உடைகளுக்கும் நகைகளுக்கும் விலக்கு உண்டு. சூழ்நிலைகள் மாறும்போது நிர்ணயிக்கப்படும் பராமரிப்புத் தொகையும் மாறும்.

பகுதி ஆ—இந்துத் தத்து எடுப்புகள், பராமரிப்புச் சட்டம் – 1956

1956ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டம் பராமரிப்புச் சம்பந்தமாகச் சில மாறுதல்களை ஏற்படுத்தியிருக்கிறது. பழைய சட்டப்படி தன்னுடைய குழந்தைகளையோ அல்லது பெற்றோர்களையோ பராமரிக்க வேண்டிய கடமை ஒரு பெண்ணுக்குக் கிடையாது. இப்புதிய சட்டப்படி சில நெருங்கிய உறவினர்களைப் பராமரிக்க வேண்டிய கடமை ஆண் பெண் இருபாலருக்கும் ஏற்பட்டிருக்கிறது. பழைய சட்டத்தில் சில உறவினர்களைப் பராமரிப்பது சட்டக் கடமையாகவும், சில உறவினர்களைப் பராமரிப்பது தார்மிகக் கடமையாகவும் இருந்தது. புதிய சட்டத்தில் தார்மிகக் கடமை எதுவும் கிடையாது. அத்தனையும் சட்டக் கடமையே. பழைய சட்டத்தில் சில உறவு முறையினர் தங்களைப் பராமரிக்கும்படி சம்பந்தப்பட்ட நபரை மட்டுமே, அவருக்குச் சொத்து இருந்தாலும்

இல்லாவிட்டாலும், கேட்கலாம்; சில உறவு முறையினர் சொத்தில் மட்டுமே பராமரிப்பு உரிமை கொண்டாட முடியும். சில உறவு முறையினர் நபர், சொத்து இரண்டிலும் பராமரிப்பு உரிமை கொண்டாட முடியும். புதிய சட்டத்தில் பராமரிப்புத் தர வேண்டிய வருக்குச் சொத்து இருக்கிறதா என்பது முக்கியமல்ல. என்றாலும், அவர் அடைந்த சொத்தின் அளவைப் பொறுத்துப் பராமரிப்பு உரிமை பாதிக்கப்படும். பழைய சட்டத்தில் முறையிலா மணப் பிறப்பில் பிறந்த மகள், தந்தையாகக் கருதப்படுபவனிடம் பரா மரிப்பு கேட்க முடியாது; புதிய சட்டத்தில் பராமரிப்புக் கேட்கும் உரிமையை அவள் பெற்றிருக்கிருள். பழைய சட்டத்தில் ஒருத்தி தன்னை வைப்பாட்டியாக வைத்திருந்தவனின் சொத்தில் அவனு டைய மரணத்திற்குப்பின் பராமரிப்பு உரிமை கொண்டாட முடியும். ஆனல், புதிய சட்டத்தில் வைப்பாட்டிக்கு அந்த உரிமை கிடையாது.

சென்ற 8ஆவது அத்தியாயத்தில் தத்து எடுப்புச் சம்பந்த மாகக் கூறப்பட்ட சட்டத்திலேயேதான் பராமரிப்புப் பற்றிய சட்டத் தின் விதிகளும் அடங்கியுள்ளன. இச் சட்டத்தின் மூன்ருவது பிரிவில் பராமரிப்புப்பற்றிக் கூறப்பட்டுள்ளது. 17ஆவது பிரி வோடு தத்து எடுப்பு முடிவடைகிறது. 18ஆவது பிரிவிலிருந்து பராமரிப்புத் தொடங்குகிறது.

பராமரிப்பு என்ருல் என்ன ?

பராமரிப்பு என்பது உணவு, உடை, இருக்கை, கல்வி, மருத்துவ வசதி சிகிச்சை முதலியவை உள்ளிட்டதாகும் என்று இச் சட்டத் தின் மூன்ருவது பிரிவான விளக்கத்தில் சொல்லப்பட்டுள்ளது. மேலும், திருமணமாகாத பெண்கள் விஷயத்தில் திருமணத்தாலும் திருமணம் சம்பந்தமாக முன்னும் பின்னும் ஏற்படுகிற நியாயமான செலவுகளும் பராமரிப்பில் அடங்கும். பராமரிக்க எவ்வளவு தேவை என்பது சம்பந்தப்பட்டவர்களின் அந்தஸ்து, வசதி முதலிய பல அம்சங்களைக் கணக்கில் கொண்டு தீர்மானிக்கப்படும்.

மனைவியைப் பராமரித்தல்

மனைவியின் பராமரிப்புக் குறித்து 18ஆவது பிரிவில் கூறப் பட்டுள்ளது. இந்தச் சட்டம் வருவதற்கு முன்னல் மணந்து கொண்டிருந்தாலும் சரி, பின்னல் மணந்து கொண்டிருந்தாலும் சரி, இச் சட்டத்தில் கண்டுள்ள விதிகளின்படி ஓர் இந்து மனைவி தன் வாழ்நாள் முழுவதும் கணவனல் பராமரிக்கப்பட வேண்டும். இது மனைவி ஒருத்தி கணவனிடமிருந்து விலகி, பராமரிக்கக்.

கோரும் உரிமையை இழந்துவிடாமல் தனியாக இருக்கலாம். அப்படி இருக்கத் தக்க காரணங்கள் காட்ட வேண்டும்.

அ. கணவன் அவளைக் கைவிட்ட குற்றத்தைச் செய்திருக்க வேண்டும். அதாவது நியாயமான காரணம் இல்லாமல், அவளுடைய ஒப்புதல் இல்லாமல் அல்லது அவளுடைய விருப்பத்திற்கு விரோதமாக அல்லது வேண்டுமென்றே புறக்கணித்துக் கைவிட்டிருக்க வேண்டும்.

ஆ. கணவன் அவளைக் கொடுமையாக நடத்த, கணவனுடன் வாழ்வது தீமையையும் அபாயத்தையும் தரும் என்ற நியாயமான அச்சம் அவள் மனத்தில் எழுந்திருக்க வேண்டும்.

இ. கணவன் உக்கிரமான தொழுநோயால் பீடித்திருக்கப்பட வேண்டும்.

ஈ. கணவனுக்கு உயிரோடு வேறு மனைவி இருக்க வேண்டும்.

உ. மனைவி இருக்கும் வீட்டிலேயே வைப்பாட்டியையும் வைத்திருக்க வேண்டும் அல்லது வைப்பாட்டி இருக்கும் வீட்டிலேயே போய்த் தங்குவதை வழக்கமாகக் கணவன் கொண்டிருக்க வேண்டும்.

ஊ. வேறு மதத்தைத் தழுவி இந்துவாக இல்லாமல் போயிருக்க வேண்டும்.

எ. தனியாக இருப்பதை நியாயப்படுத்துவதற்கு வேறு காரணம் இருக்க வேண்டும்.

மேலே கூறப்பட்டுள்ள எந்த ஒரு காரணத்தை முன்னிட்டும் மனைவி கணவனை விட்டு விலகித் தனியே சென்று வாழலாம். அப்போது கணவன் அவளைப் பராமரித்தே ஆகவேண்டும்.

ஆனால், ஓர் இந்துப் பெண் கற்புநெறி தவறினாலோ, இந்துவாக இராமல் போய்விட்டாலோ தனியான இருக்கையும் பராமரிப்பும் கணவனைக் கேட்க உரிமையற்றவளாகிவிடுவாள்.

இந்தப் பிரிவில் இறுதியாகச் சொல்லப்பட்டிருக்கும் மனைவி 'தனியாக இருப்பதை நியாயப்படுத்தும் காரணம்' என்பது சற்றுப் பிரச்சினைக்குரியது. கணவன் மனைவிக்குள் கசப்புணர்ச்சி ஏற்பட ஆயிரம் காரணங்கள் இருக்கலாம்; அவர்களுக்குள் நூற்றுக்கணக்கான பிரச்சினைகள் எழலாம். அவை எல்லாவற்றையும் சட்ட வரம்பிற்குள் கொண்டு வருவது சாத்தியமல்ல. அதனால்தான் அவை எல்லாம் சரியான காரணங்கள்தாமா என்பதைத் தீர்மா

ளித்து விருப்பத் தேர்வு செய்ய நீதிமன்றத்திற்கு உரிமை வழங்கப் பட்டிருக்கிறது. அற்பக்காரணங்களை எல்லாம் காட்டி மனைவி தனியாகப் பிரிந்து போக இச் சட்டம் நிச்சயம் இடம் கொடாது. ஆனால், சேர்ந்து வாழ்வதற்கே தகுதியற்ற குணங்களைக் கணவன் கொண்டிருந்தால், மனைவிக்கு ஒரு வகையில் விமோசனம் தர இது உதவும்.

விதவை மருமகளைப் பராமரித்தல்

ஓர் இந்து மனைவி, அவள் இச் சட்டம் வருவதற்கு முன்னால் மணந்து கொண்டிருந்தாலும் சரி, பின்னால் மணந்து கொண்டிருந் தாலும் சரி, அவளுடைய கணவன் இறந்ததற்குப் பின்னர் மாமனா ரால் பராமரிக்கப்பட உரிமை உடையவளாவாள். தன்னுடைய சம்பாத்தியத்திலிருந்தோ, பிற சொத்திலிருந்தோ அவள் தன்னை எந்த அளவுக்குப் பராமரித்துக் கொள்ள முடியுமோ அந்த அளவுக் குப் பராமரித்துக்கொள்ள வேண்டும் போதாத நிலையில் மாமனார் பராமரிப்பார். அவளுக்குச் சொத்தே கிடையாதென்றால், கணவ னுடைய அல்லது தன்னுடைய தந்தையினுடைய, அல்லது தாயி னுடைய நிலச் சொத்திலிருந்து பராமரிப்புப் பெற்றுக்கொள்ள முடியாதென்றால், அதைப் போலவே தன்னுடைய மகன் அல்லது மகள் அல்லது அவர்களுடைய நிலச் சொத்திலிருந்தும் பராமரிப்புப் பெற்றுக்கொள்ள முடியாதென்றால், மாமனார் பராமரிக்க வேண்டும்.

கூட்டுக் குடும்பத்தில் பங்குரிமைச் சொத்தில் மருமகளுக்குப் பங்கு கிடைக்காமலிருந்து, மாமனாருக்கு மருமகளைப் பராமரிக்கும் வகையில் பங்குரிமைச் சொத்து இருந்தால்தான் அவளைப் பரா மரிக்க முடியும். அவரிடமே வசதியில்லை என்றால், அந்தக் கடமை யைச் செய்யச் சொல்லிக் கட்டாயப்படுத்த முடியாது. மேலும், மருமகள் மீண்டும் மறுமணம் புரிந்து கொண்டால் இந்தப் பொறுப்பும் போய்விடும்.

மேலே கண்ட 19ஆவது பிரிவு மாமனாருக்கு மருமகளைச் சில கட்டங்களில் பராமரிக்க வேண்டிய பொறுப்பைத் தந்திருக்கிறது. மருமகளுக்கு எல்லா வாசல் கதவுகளும் மூடப்படுமானால் குறைந் தது மாமனார் வாசலாவது திறந்திருக்கட்டுமே என்ற நோக்கம் இதில் அடங்கியுள்ளது அப்போதுகூட மருமகளைப் பராமரிக்கும் சக்தி மாமனாருக்கு இருக்க வேண்டும்; இல்லை என்றால் அவரை யாரும் கட்டாயப்படுத்த முடியாது.

குழந்தைகளையும் பெற்றோர்களையும் பராமரித்தல்

ஓர் இந்து, ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும், தன் வாழ் நாள் முழுவதும் இச் சட்டத்தில் உள்ள விதிகளுக்கு

உட்பட்டுத் தன்னுடைய முறையான அல்லது முறையிலா மணத்தில் பிறந்த குழந்தைகளையும், தன்னுடைய வயதான அல்லது ஊனமான பெற்றோரையும் பராமரிக்க வேண்டும்.

முறையான அல்லது முறையிலா மணத்தில் பிறந்த குழந்தைகள் உரிமை வயது அடையாத பருவம் வரை தங்களுடைய தந்தை அல்லது தாயிடம் பராமரிப்புக் கேட்கலாம். வயதான அல்லது ஊனமான பெற்றோர்கள் அல்லது திருமணமாகாத மகள் ஆகியோர் தங்களைத் தங்கள் வருமானத்திலிருந்தோ சொத்திலிருந்தோ பராமரித்துக் கொள்ள முடியாத போதுதான் பராமரிப்புக் கேட்க முடியும். தங்கள் சொத்திலிருந்தோ வருமானத்திலிருந்தோ பராமரித்துக் கொள்ள முடியுமென்றால், பராமரிப்புக் கேட்க முடியாது.

இதில் பெற்றோர் என்ற சொல் குழந்தை இல்லாத மாற்றாந்தாயையும் (Step Mother) குறிக்கும்.

இந்த இருபதாவது பிரிவு ஏறக்குறைய தர்ம சாஸ்திரத்தில் கூறப்பட்டதை அப்படியே பிரதிபலிப்பதாகக் கொள்ளலாம். இதில் முக்கிய மாறுதல் மகனோடு மகளுக்கும் வயதான பெற்றோரையும், குழந்தைகளையும் பராமரிக்கும் பொறுப்புத் தரப்பட்டிருப்பதுதான். அடுத்த மாறுதல் மாற்றாந்தாயும் பெற்றோர் என்ற சொல்லில் அடங்குவதாகும். அதனால் அவளும் பராமரிக்கப்படும் தகுதி பெறுகிறாள்.

சார்ந்திருப்பவர் யார் ?

21ஆவது பிரிவு இறந்துவிட்டவனின் உறவினருள் யார்யார் சார்ந்திருப்பவர் (Dependants) என்பதைக் கூறுகிறது. கீழ்க் காண்பவர்கள் இறந்துவிட்ட நபரின் சார்ந்திருப்பவர்களாவர்.

1. அவனுடைய அல்லது அவளுடைய தந்தை.
2. அவனுடைய அல்லது அவளுடைய தாய்.
3. அவனுடைய விதவை, அவள் மறுமணம் புரிந்து கொள்ளாத வரை.
4. அவனுடைய அல்லது அவளுடைய மகன் அல்லது முன்னதாக இறந்துவிட்ட மகனின் மகன் அல்லது முன்னதாக இறந்துவிட்ட மகனுடைய முன்னதாக இறந்துவிட்ட மகனின் மகன், அவன் உரிமை வயது அடையாத வரை; பேரனைப் பொறுத்தவரை அவனுடைய தந்தை அல்லது தாயின் நிலச் சொத்திலிருந்தும் (Estate) கொள்ளுப் பேரனைப் பொறுத்த

வரை அவனுடைய தந்தை அல்லது தாய், தந்தை வழிப் பாட்டன் அல்லது பாட்டியின் நிலச் சொத்திலிருந்தும் பராமரிப்பு பெற முடியாது இருந்தால்.

5. அவனுடைய அல்லது அவளுடைய திருமணமாகாத மகள் அல்லது முன்னதாக இறந்துவிட்ட மகனின் திருமணமாகாத மகள், முன்னதாக இறந்துவிட்ட மகனுடைய முன்னதாக இறந்துவிட்ட மகனின் மகள், அவள் திருமணமாகாத வரை. பேத்தியைப் பொறுத்தவரை அவளுடைய தந்தை அல்லது தாயின் நிலச் சொத்திலிருந்தும் கொள்ளுப் பேத்தியைப் பொறுத்தவரை அவளுடைய தந்தை அல்லது தாய் தந்தை வழிப் பாட்டன் அல்லது பாட்டியின் நிலச் சொத்திலிருந்தும் பராமரிப்புப் பெற முடியாது இருந்தால்.

6. அவனுடைய விதவையாகிவிட்ட மகள். அவள் (அ) தன்னுடைய கணவனின் நிலச் சொத்திலிருந்தோ, (ஆ) தன்னுடைய மகன் அல்லது மகள் அல்லது அவர்களுடைய நிலச் சொத்திலிருந்தோ, (இ) தன்னுடைய மாமனர் அல்லது அவருடைய தந்தை அல்லது அவர்களுடைய நிலச் சொத்திலிருந்தோ, பராமரிப்பு பெற முடியாது இருந்தால்.

7. விதவையாகிவிட்ட மருமகள் அல்லது முன்னதாக இறந்துவிட்ட மகனுடைய மகனின் விதவை (அதாவது பேரனின் மனைவி), அவள் மீண்டும் மணம் புரிந்துகொள்ளாதவரை. மருமகளைப் பொறுத்தவரையில் தன்னுடைய கணவனின் நிலச் சொத்திலிருந்தும் அல்லது தன்னுடைய மகன் அல்லது மகள் அவர்களுடைய நிலச் சொத்திலிருந்தும், பேரனின் விதவையைப் பொறுத்தவரை தன்னுடைய மாமனரின் நிலச் சொத்திலிருந்தும் பராமரிப்புப் பெற முடியாதிருந்தால்.

8. அவனுடைய அல்லது அவளுடைய உரிமை வயது அடையாத முறையிலா மணத்தில் பிறந்த மகன், அவன் உரிமை வயது அடையாதவரை.

9. அவனுடைய அல்லது அவளுடைய முறையிலா மணத்தில் பிறந்த மகள், அவள் திருமணம் செய்து கொள்ளாதவரை.

இந்தப் பிரிவும் இதற்கு அடுத்த 22ஆவது பிரிவும் பராமரிப்புச் சம்பந்தமாகப் புதிய பொறுப்பு நிலைகளையும் (Liabilities) உரிமைகளையும் ஏற்படுத்தியுள்ளன. அதே சமயம் பங்குரிமைச் சொத்தில் உள்ள பழைய சட்டத்தின் பராமரிப்பு உரிமை சற்றும் பாதிக்கப்படவில்லை.[8] வைப்பாட்டியை நிரந்தரமாக வைத்திருந்தவன் இந்தச்

[8] Gowardan *Vs* Gangabai AIR 1964 M.P. 168.

சட்டம் வருவதற்கு முன்னால் இறந்துவிட்டாலும், வைப்பாட்டி தனக்கும் தன் குழந்தைகளுக்கும் அவனுடைய நிலச் சொத்தி லிருந்து பராமரிப்புக் கேட்க முடியும். இந்த உரிமை இந்தச் சட்டத் தால் போய்விடவில்லை.[4]

இறந்துவிட்டவனுடைய நிலச் சொத்திலிருந்து பராமரிக்கப்பட வேண்டிய உறவினர்கள் யார்யார் என்பதையே இந்தப் பிரிவு கூறுகின்றது என்பதை நன்றாகக் கவனத்தில் கொள்ள வேண்டும். இதில் கூறப்பட்டிருக்கும் உறவினர்கள் பலர் அவனுடைய சொத் துக்கு வாரிசுதாரர்களுமாவர். ஆகவே, ஒரே நபர் சார்ந்திருப்பவர் என்ற முறையிலும் வாரிசு என்ற முறையிலும் இரு உரிமை பெறு கின்றார். இது ஒரு வகையில் பாதுகாப்பாகும். ஒருவன் தன்னு டைய சொத்தை அந்நியன் ஒருவனுக்கு உயில் மூலம் கொடுத்து விடுவானேயானால், வாரிசு உரிமை இழந்துவிட்ட அவனுடைய மனைவியோ அல்லது தாயோ உயில் மூலம் நிலச் சொத்தைப் பெற்றவனைப் பராமரிக்கும்படி கேட்டுக்கொள்ள அப்போது முடியும்.

21ஆவது பிரிவில் யார்யார் சார்ந்திருப்பவர் என்பது கூறப் பட்டது. 22ஆவது பிரிவில் அவர்களுடைய பராமரிப்புப் பற்றி மேலும் கூறப்படுகிறது. இறந்துவிட்டவனின் சொத்தை அடைந்த வாரிசுக்கு உள்ள பராமரிக்கும் பொறுப்பு நிலை (Liability) என்ன என்று விவரமாகச் சொல்லப்படுகிறது. சார்ந்திருப்போரைப் பரா மரிக்கும் பொறுப்பு சில நிபந்தனைகளுக்கு உட்பட்டது. சார்ந்திருப் பவர், உயில் மூலமாகவோ உயில் இல்லாமலோ, இந்தச் சட்டம் வந்ததற்குப் பின்னர் இறந்துவிட்டவனின் நிலச் சொத்தில் எந்தப் பங்கும் பெறவில்லை என்றால், சொத்துரிமை பெற்ற வாரிசுதாரர்கள் அவரைப் பராமரிக்க வேண்டும். சொத்துரிமை பெற்றவர்களின் பொறுப்பு நிலை அவர்கள் பெற்ற சொத்தின் மதிப்பு அல்லது அடைந்த நிலச் சொத்தின் விகிதத்தைப் பொறுத்ததாகும். சார்ந் திருக்கும் நபரே சொத்தில் ஒரு பங்கைப் பெற்றிருந்தால், அந்தப் பங்கின் மதிப்பு பராமரிப்புக் கேட்டிருந்தால் என்ன கிடைக்குமோ அதைவிடக் குறைவாக இருந்தால், அவர் மற்றச் சார்ந்திருப்பவர் களைப் பராமரிப்பதற்காக எதுவும் கொடுக்கவேண்டியதில்லை. இதை ஓர் எடுத்துக் காட்டால் நன்கு விளங்கிக் கொள்ளலாம். இறந்துவிட்டவன் தன்னுடைய உயிலின்மூலம் தன்னுடைய மனைவிக்கு ஆண்டுக்கு ஆயிரம் ரூபாய் வருமானம் வரக்கூடிய சொத்தைக் கொடுத்துவிட்டுப் போவதாக வைத்துக் கொள்வோம்.

[4] Gopal Rao *Vs* Seetaramamma, AIR 1975 S.C. 1970.

ஆயிரம் ரூபாய் வருமானம் நியாயமானது; அவள் தன்னைப் பராமரித்துக் கொள்ளவும் போதும் சொத்து கிடைக்காது சார்ந்திருப்பவர் என்ற முறையில் நீதிமன்றத்தை அணுகியிருந்தாலும் அந்தத் தொகையே கிடைத்திருக்கும். இந்த நிலையில் வேறு ஒரு சார்ந்திருப்பவருக்குப் பராமரிப்புச்செய்ய, 'நீயும் பணம் கொடு' என்று நீதிமன்றம் அவளைக் கேட்காது. ஆனால், பராமரிப்புக்கு 500 ரூபாய் போதும் என்ற நிலையிருந்தால் மற்றச் சார்ந்திருப்பவரைப் பராமரிக்க வேண்டும் என்பதற்காக நீதிமன்றம் அதிகமாக இருக்கும் தொகையைக் கேட்கும்.

பராமரிப்புத் தொகை

பராமரிப்புத் தொகை எதாவது வழங்கப்பட வேண்டுமா, அப்படி என்றால் எவ்வளவு வழங்கப்பட வேண்டும்—என்பது நீதிமன்றத்தின் விருப்பத்திற்கு விடப்பட்டுள்ளது. நீதிமன்றம் பராமரிப்புத் தொகை பற்றி முடிவு செய்யும்போது, அடுத்துச் சொல்லப் பட்டிருக்கும் விஷயங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மனைவி, குழந்தை, வயதான அல்லது ஊனமடைந்துவிட்ட பெற்றோர்கள் இவர்கள் விஷயத்தில் பராமரிப்புத் தொகை நிர்ணயிக்கப்படும்போது,

1. அத்தரப்பினரின் நிலையும் அந்தஸ்தும்,
2. கேட்பவர்களின் நியாயமான தேவைகள்,
3. பராமரிப்புக் கேட்பவர் தனியே வாழ்ந்தால், அப்படி வாழ்வதில் நியாயம் இருக்கிறதா,
4. கேட்பவரின் சொத்தின் மதிப்பு அச் சொத்திலிருந்து வரும் வருமானம், அல்லது கேட்பவரின் சொந்த சம்பாத்தியம் அல்லது வேறு ஆதாரத்தில் வரும் வருமானம்,
5. இச் சட்டப்படி பராமரிப்புப் பெற உரிமை வாய்ந்தவர்களின் எண்ணிக்கை—

ஆகியவை கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

ஒரு சார்ந்திருப்பவருடைய பராமரிப்புத் தொகையை நிர்ணயிக்கும் போது,

1. கடன் அடைக்கப்பட்டது போக இறந்தவனின் நிகர சொத்தின் மதிப்பு,
2. சார்ந்திருப்பவர் சம்பந்தமாக உயிலில் எதாவது செய்யப் பட்டிருக்கும் முன்னேற்பாடு,

3. இறந்தவருக்கும் சார்ந்திருப்பவருக்கும் உள்ள உறவின் அளவு,
4. சார்ந்திருப்பவரின் நியாயமான தேவைகள்,
5. இறந்தவருக்கும் சார்ந்திருப்பவருக்கும் இடையே கடந்த காலத்தில் இருந்த உறவின் நெருக்கம்,
6. சார்ந்திருப்பவருடைய சொத்தின் மதிப்பு, அதிலிருந்து கிடைக்கும் வருமானம்; அல்லது தன்னுடைய சொந்தச் சம்பாத்தியம் அல்லது வேறு ஆதாரத்தில் வரும் வருமானம்,
7. இச் சட்டப்படி பராமரிப்புப் பெற உரிமை வாய்ந்தவர்களின் எண்ணிக்கை—

ஆகியவை கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

24ஆவது பிரிவு, எந்த ஒரு நபர் மதம் மாறி இந்துவாக இராமல் போய்விட்டாரோ அவர் இந்தச் சட்டத்தின்படி பராமரிப்புக் கேட்க உரிமையற்றவராவார் என்று கூறுகிறது.

25ஆவது பிரிவு, இந்தச் சட்டம் வருவதற்கு முன்னாலோ அல்லது பின்னாலோ நீதிமன்றத்தின் தீர்ப்பாணையாலோ உடன்பாட்டினாலோ நிர்ணயிக்கப்பட்டிருக்கும் பராமரிப்புத் தொகை மாற்றப்பட வேண்டியதை நியாயப்படுத்துவதற்குரிய முக்கிய சூழ்நிலைகள் இருந்தால், பின்னர் மாற்றிக் கொள்ளலாம் என்று கூறுகிறது.

26ஆவது பிரிவு, அடுத்த பிரிவில் சொல்லப்பட்டுள்ளவைகளுக்கு உட்பட்டு, இறந்தவனுடைய ஒப்பந்தத்தால் ஏற்பட்ட அவனால் கொடுக்கப்பட வேண்டிய கடன், பராமரிப்புக் கேட்கும் சார்ந்திருப்பவர்களின் உரிமையைவிட முதன்மையான இடம் பெறும் என்று கூறுகிறது.

27ஆவது பிரிவு, சார்ந்திருப்பவரின் பராமரிப்புக் கோரும் உரிமை இறந்துவிட்டவனின் முழு நிலச் சொத்தின் மீதோ ஒரு பகுதியின் மீதோ ஒரு பிணையை (Charge) ஏற்படுத்தாது. ஆனால், இறந்தவனின் உயிலின்படியோ, நீதிமன்றத்தின் தீர்ப்பாணைப்படியோ, நிலச் சொத்தின் உரிமையாளருக்கும் சார்ந்திருப்பவருக்கும் இடையே ஏற்பட்ட உடன்பாட்டின்படியோ பிணை ஏற்படலாம் என்று கூறுகிறது.

பராமரிக்கும் உரிமை ஒரு நபரின் தனிப்பட்ட உரிமை. அதை மற்றவருக்கு மாற்றிக் கொடுக்க முடியாது.

28 ஆவது பிரிவு, சொத்து மாற்றம் ஏற்படும்போது உண்டாகும் விளைவைப் பற்றிக் கூறுகிறது. நிலச் சொத்திலிருந்து பரா

மரிக்கப்பட வேண்டிய உரிமை ஒருவனுக்கு இருக்கும்போது, அந்த நிலச் சொத்தோ அதன் ஒரு பகுதியோ, மற்றவருக்கு மாற்றப் படும்போது, உரிமை மாற்றம் பெற்றவர் (Transferee) பராமரிப்பு உரிமை இருப்பதை அறிந்து அல்லது இனமாக அச் சொத்தைப் பெற்றால் சார்ந்திருப்பவர் உரிமை மாற்றம் பெற்றவரிடம் பரா மரிக்கக் கோரும் உரிமையைச் செயல்படுத்தச் சொல்லலாம். ஆனால், உரிமை மாற்றம் பெற்றவர் சொத்தைப் பிரதிபலனோடு (Considerations) அல்லது பராமரிப்பு உரிமை இருப்பதை அறி யாது அடைந்திருந்தால், சார்ந்திருப்பவர் உரிமையைச் செயல் படுத்தும்படி கேட்க முடியாது.

29ஆவது பிரிவும் 30ஆவது பிரிவும் முறையே இச் சட்டம் வந்ததால் ரத்தான சட்டங்கள் யாவை என்பதையும் இச் சட்டத் தால் விலக்கம் பெற்றவை யாவை என்பதையும் கூறுகின்றன. 1946ஆம் ஆண்டு அமலுக்கு வந்த இந்துத் திருமணமான மகளிர் தனிஇருக்கைப் பராமரிப்பு உரிமைச் சட்டம் (The Hindu Married Women's Right to Separate Residence and Maintenance Act.) ரத்தாகிறது. அதைப் போலவே இந்து உரிமை இறக்கச் சட்டம் 1956-ன் (Hindu Succession Act, 1956) 30ஆவது பிரிவிலுள்ள துணைப் பிரிவு 2 ரத்தாகிறது. இந்தச் சட்டம் வருவதற்கு முன் னால் நடந்த தத்து எடுப்பு எதையும் இச் சட்டம் பாதிக்காது. அத் தத்து எடுப்பு செல்லுமா என்பதும் அதன் விளைவுகளும் இச் சட்டம் அமலாகாததாக எண்ணப்பட்டுத் தீர்மானிக்கப்படும் என்று இறுதிப் பிரிவான 30 கூறுகிறது.

5. உரிமை வயது அடையாமையும் காப்பும்
(MINORITY AND GUARDIANSHIP)

பகுதி அ—பழைய சட்டம்

ஒரு மனிதனுக்குத் தன்னையும் தன்னைச் சார்ந்தவர்களையும் காக்க அறிவும் ஆற்றலும் தேவை. நல்லது எது கெட்டது எது, தன்னுடைய கடமை என்ன உரிமை என்ன, தான் செய்வது என்ன செய்யும் செயலின் விளைவு என்ன என்று பகுத்துணர்ந்து தெரிந்துகொள்வதற்குத் தன்னையும் உலகையும் புரிந்துகொள்ளும் சக்தி தேவை. அறிவு, ஆற்றல், புரிந்துகொள்ளும் சக்தி இவை யாவும் ஏறக்குறைய ஒரு குறிப்பிட்ட பருவத்தில் ஒருவனுக்கு உண்டாகும். அதுவரை விவரம்தெரியாத அவனுக்குப் பாதுகாப்புத் தேவை. அவனுக்காக அவன் நன்மைக்காகச் செயல்படக்கூடிய நபர் அத்தியாவசியம். அவனுடைய உடலும் உள்ளமும் வளர்ச்சியடைந்து, தன் வாழ்க்கையைத் தீர்மானிக்கிற சக்தி அவனிடம் ஏற்படும்வரை, அவனுக்குக் காப்புத் தேவை. வளர்ந்து தன் வாழ்க்கையைத் தீர்மானிக்கிற சக்தி உண்டாகும்வரை உள்ள காலத்தை உரிமை வயது அடையாத காலம் என்று சொல்வர்.

வயது வராத ஆணுக்கோ, பெண்ணுக்கோ காப்புத் தேவை என்பதைத் தர்ம சாஸ்திரங்கள் ஒப்புக்கொள்கின்றன. ஆனால், காக்கும் பொறுப்பை அவை அரசனுக்கே கொடுத்தன. மனுவும் கவுதமரும் இதைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இப்போது அரசன் கிடையாது. அரசனின் இடத்தை நீதிமன்றம் எடுத்துக்கொண்டிருப்பதாகச் சொன்னால் தவறில்லை. பிறந்த குழந்தைக்குக் காப்பாளராகத் தந்தையும் தாயும் இருப்பதை வழக்கம் (Custom) அங்கீகரித்துள்ளது. பெற்றோரைத் தவிர

மற்றோருக்கு அவ்வுரிமை இருப்பதை வழக்கம் ஏற்றுக் கொள்ள வில்லை.

உரிமை வயது

பழைய இந்துச் சட்ட அறிஞர்கள்மத்தியில் உரிமை வயது எது என்பதை நிர்ணயிப்பதில் ஒற்றுமை காணப்படவில்லை. வங்கத்தில் ஒரு நபருக்கு பதினைந்து வயது பூர்த்தியாகிவிட்டால் உரிமை வயது அடையாத காலம் முடிந்துவிட்டதாகக் கொள்ளப் படும். மற்ற மாநிலங்களில் பதினாறு வயது பூர்த்தியடைந்தால் தான் உரிமை வயது அடையாத காலம் முடிந்துவிட்டதாகக் கொள்ளப்படும். ஆனால், இந்த வேறுபாட்டை 1875ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 'இந்திய உரிமை வயதுச் சட்டம், (Indian Majority Act) போக்கிவிட்டது. இச்சட்டம் எல்லா இந்துக்களுக்கும், திருமணம் மணமுறிவு, தத்துஎடுப்பு நீங்கலாக, பொருந்தும். இச் சட்டப்படி, உரிமை வயது அடையாத நபருக்கும், அல்லது அவனுடைய சொத்துக்கும் அல்லது இரண்டிற்கும் நீதிமன்றத்தால் காப்பாளர் நியமிக்கப்பட்டிருந்தால், அல்லது காப்பில் உள்ளவர் சொத்து நீதிமன்றத்தின் மேற்பார்வையின் கீழ் இருந்தால், இருபத்தொரு வயது பூர்த்தியானதும் ஒருவன் உரிமை வயது அடைந்தவனாகக் கருதப்படுவான். மற்றவற்றில் பதினெட்டு வயது பூர்த்தியானதுமே உரிமை வயதை அடைந்துவிடுவான்.

காப்பாளர் வகைகள்

காப்பாளர்களுள் நான்கு வகையார் உண்டு. அவர்க ளாவர்:

1. இயற்கைக் காப்பாளர் (Natural Guardian)
2. உயில் வழிக் காப்பாளர் (Testamentory Guardian)
3. நீதிமன்றக் காப்பாளர் (Court Guardian)
4. நிகழ்வு நிலைக் காப்பாளர் (De Facto Guardian)

இயற்கைக் காப்பாளர் (Natural Guardian)

முதல் இயற்கைக் காப்பாளர் தந்தைதான்; பிறகு தாய். உரிமை வயது அடையாத நபரையும் அவன் சொத்தையும் காக்கும் காப்பாளராகத் தந்தையையும் தாயையும் தவிர வேறு நபர் இருக்க முடியாதென்று இந்துச் சட்டம் திட்டவட்டமாகக் கூறுகிறது. இயற்கைக் காப்பாளர் யாரும் உயிருடன் இல்லை என்றால், நீதிமன்றமே வழிகாட்ட வேண்டும்.

உரிமை வயது அடையாத ஒரு பெண்ணுக்குத் திருமணம் நடந்ததும், அவளைக் காக்கும் உரிமை கணவனுக்கு மாறிவிடுகிறது. கணவன் காக்காமல் சென்றுவிட்டால் வேறு யாரும், ஏன் அவளுடைய தந்தையும் தாயும் கூடக் காப்பாளராக இருக்க முடியாது.[1]

இங்கு தாய் என்பது ஈன்றெடுத்த தாயையே குறிக்கும். மாற்றுந்தாய் தாய் என்று கருதப்படமாட்டாள். ஆனால், நீதிமன்றம் அவளைக் காப்பாளராக நியமிக்கலாம்.

உரிமை வயது அடையாத குழந்தையின்மீது தந்தைக்கு இருக்கும் உரிமை மிக அதிகம். நீதிமன்றம்கூடத் தந்தையின் உரிமையில் தலையிட முடியாது. ஜாதியை விட்டுத் தள்ளி வைக்கப்பட்டாலும், மதம் மாறினாலும், மறுமணம் புரிந்துகொண்டாலும், நோயாளியாகப் போனாலும், ஒழுக்கக் குறைவான வாழ்க்கை நடத்தினாலும் குழந்தையினுடைய காப்பாளர் என்ற உரிமையை ஒரு தந்தையிடமிருந்து பறித்துவிட முடியாது. தகப்பன் உயிருடனிருக்கும் பொழுது அவன் தன் உரிமை வயது அடையாத குழந்தைகளைப் பாதுகாக்கும் உரிமை வகிப்பதற்குத் தகுதியற்றவன் என்று நீதிமன்றத்தார் அபிப்பிராயப் பட்டாலொழிய அவருக்குப் பதில் இன்னொருவரை நியமிப்பது என்ற பேச்சுக்கே இடம் கிடையாது. ஒரு தந்தை தனக்குப் பின்னால் தன் உரிமை வயது அடையாக் குழந்தைகளைக் காப்பதற்காக உயிலின் மூலம் காப்பாளரை ஏற்படுத்தலாம். அப்போது தன் மனைவியை அதாவது குழந்தையின் தாயைக்கூட ஒதுக்கிவிட்டு இன்னொருவரைக் காப்பாளராக நியமிக்கலாம். ஆனால், கூட்டுக் குடும்பச் சொத்துக்கு உயிலின் மூலம் காப்பாளரை நியமிக்க முடியாது.[2]

காப்பாளராக இருக்கத் தந்தைக்கு அடுத்த இடம் தாய்க்கு இருந்தாலும், தந்தையைப்போல் தாய் உயில்மூலம் காப்பாளரை நியமிக்க முடியாது.[3] மற்ற உரிமைகள் அவளுக்கு உண்டு. அவள் மறுமணம் புரிந்து கொண்டாலும் தொடர்ந்து அவளே காப்பாளராக இருப்பாள். ஆனால், ஒரு விதவை வேறு மதத்தினரை மணந்துகொண்டால், அவள் காப்பாளராக இருக்க முடியாது. ஏனென்றால் இந்துக் கணவனுக்குப் பிறந்த குழந்தை இந்து மதச் சூழ்நிலையிலேயே வளர்ந்திருக்கும். அக்குழந்தையை வேறுமதச்

[1] Ethilavulu Ammal *Vs* Pethakkal 1950 Mad. 390.
[2] Chidambara *Vs* Rangasamy 41. M. 561.
[3] Venkayya *Vs* Venkata 21 M 401 : 8 M.L.J. 112.

சூழ்நிலைக்குக் கொண்டு செல்வதைச் சட்டம் அனுமதிக்கவில்லை.[4] முறையிலா மணப்பிறப்பில் பிறந்த குழந்தைக்குக் காப்பாளராக இருப்பதில் தாய்தான் தந்தையைவிட முதல் இடம்பெறுகிருள். தாய் ஒழுக்கக் குறைவான வாழ்க்கை நடத்திஞலும் குழந்தையின் நலன்கள் பாதிக்கப்படாதவரையில், அவளே காப்பாளராக இருப் பாள். ஒரு கூட்டுக் குடும்பத்தில் தந்தை இறந்துவிட்டால், அந்தக் குடும்பத்திலுள்ள மூத்த ஆண் உறுப்பினனே சொத்தை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்வான். அப்போதும்கூடக் குழந்தை என்ற நபருக்குத் தாயே காப்பாளராக இருப்பாள். கூட்டுக் குடும்பச் சொத்து அல்லாமல் தனிப்பட்ட சொத்து குழந்தைக்கு இருந்தால் அதற்கும் காப்பாளராக இருப்பாள்.

உரிமை வயது அடையாத பருவத்தில் ஒரு பெண்ணுக்குத் திருமணம் நடந்துவிட்டால் கணவனே அவளுக்குக் காப்பாளன். அவனுக்குப் பிறகு காப்பாளர் பொறுப்பு ஏற்பதில் அவனுடைய உறவினர்களுக்கே பெண்ணின் வீட்டாரைவிட முதல் இடம் கிடைக்கும். ஆனுல், நீதிமன்றம் பெண்ணுக்குத் தந்தையைக் காப்பாளராக நியமிப்பதுதான் நன்மைதரும் என்று எண்ணிஞல், தந்தையைக் காப்பாளராக நியமிக்கலாம்.

இயற்கைக் காப்பாளர் உரிமை வயது அடையாத நபரின் சொத்துகளைப் பாதுகாப்பதற்காக அவசியமான, நியாயமான எல்லாச் செயல்களையும் செய்யலாம். நன்மை ஏற்படுமாஞல், அத்தியாவசியமாஞல், சொத்தை அடைமானம் வைக்கவும் விற்க வும் அவருக்கு உரிமை உண்டு. கடனுறுதிச் சீட்டு (புரோ நோட்டு Promissory Note) கூட உரிமை வயது அடையாதவருக்காக அவர் சொத்தை முன்வைத்துக் காப்பாளர் எழுதிக் கொடுக்க லாம். ஆனுல், எந்த உடன்பாட்டின் வழியாகவும் ஏதாவது கடமைகளை உரிமை வயது அடையாதவர் செய்ய வேண்டிய வகையில் அவரைப் பிணைக்கக் காப்பாளருக்கு உரிமை இல்லை. அதைப் போலவே உரிமை வயது அடையாதவரின் சொத்தை வேறு யாருக்கும் கொடையாகவும் (Gift) கொடுக்க முடியாது.

உயில்வழிக் காப்பாளர் (Testamentary Guardians)

உயில் எழுதித் தனக்குப் பின்ஞல் இன்னுர்தான் தன்னுடைய உரிமைவயது அடையாத குழந்தைகளுக்குக் காப்பாளராக இருக்க வேண்டும் என்று தந்தை காப்பாளரை நியமிக்கும் பழக்கம்

[4] Ganesha *Vs* Ratan 1937 M 976.

அனேகமாகப் பழங்காலத்தில் கிடையாது; தர்ம சாஸ்திரங்களிலும் இதற்கு ஆதாரம் இல்லை. ஆனால், உரிமை வயது அடையாத குழந்தைக்கு 'எல்லாமாகத்' தந்தையே இருந்ததால், உயில் எழுதும் பழக்கம் வர ஆரம்பித்ததும் தந்தைக்கு உயில் மூலம் காப்பாளரை நியமிக்கும் அதிகாரம் இருப்பதாகச் சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்டது; உயிலின் மூலம் காப்பாளரை நியமிக்கும் அதிகாரம் தந்தை ஒருவருக்கே உண்டு. இந்த அதிகாரம் முழு அதிகாரம். எனவே, அவர் தன் மனைவியைக்கூட விட்டு விட்டு வேறொருவரைக் காப்பாளராக நியமிக்க முடியும். ஆனால், கூட்டுக்குடும்பச் சொத்துக்கு அவர் காப்பாளர் நியமிக்க முடியாது. உயில்வழிக் காப்பாளராகப் பொறுப்பேற்பவர் அதிலுள்ள நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டே செயல்பட வேண்டும். ஒரு தாய்க்கு உயில் மூலம் காப்பாளரை நியமிக்கும் அதிகாரம் இல்லாவிட்டாலும் அவள் தன்னுடைய உயிலில் தன்னுடைய விருப்பத்தைத் தெரிவித்திருந்தால், நீதிமன்றம் தான் காப்பாளரை நியமிக்கும் போது அவள் விருப்பத்திற்கு உரிய இடம்கொடுக்கும்.

இயற்கைக் காப்பாளருக்கு என்னென்ன அதிகாரங்கள் உண்டோ அவை அத்தனையும் உயில்வழிக் காப்பாளருக்கும் உண்டு. ஒரே மாறுதல் அல்லது கட்டுப்பாடு, அவர் உயிலில் கண்ட நிபந்தனைகளின்படி நடக்க வேண்டும் என்பதுதான்.

நீதிமன்றக் காப்பாளர்கள் (Court Guardians)

நீதிமன்றம் காப்பாளர்களை எப்படி நியமிப்பது என்பதுபற்றிக் காப்பாளர் காப்பில் உள்ளவர் சட்டம் (Guardians and Wards Act) கூறுகிறது. உரிமை வயது அடையாதவரின் தனிப்பட்ட சொத்துக்குத்தான் நீதிமன்றம் காப்பாளர் நியமிக்க முடியும். பிரிவினையாகாத கூட்டுக்குடும்பச் சொத்துக்குக் காப்பாளரை நியமிக்க முடியாது. அதைப்போலவே உரிமை வயது அடையாதவரின் சொத்து, பொறுப்புரிமை அமைப்பாக (Trust) இருக்கும் போது பயனாளியாக (Beneficiary) இருக்கும் உரிமைவயது அடையாதவருக்குச் சொத்தை நிர்வகிக்கக் காப்பாளர் நியமிக்க முடியாது. தந்தையினுடைய உயில்வழி நிறைவேற்றுளர் (Executor) இருந்தாலும் காப்பாளர் நியமிக்க முடியாது. நீதிமன்றம் காப்பாளரை நியமித்துவிட்டால் பிற காப்புகள் பயனற்றுப்போய் விடும். இயற்கைக் காப்பாளரே நீதிமன்றத்தால் காப்பாளராக நியமிக்கப்பட்டால் அவருடைய இயற்கைக் காப்பாளருக்கு உரிய அதிகாரங்கள் மறைந்து நீதிமன்றக் காப்பாளருக்கு உரிய அதிகாரங்களே இருக்கும்.

நீதிமன்றம், காப்பாளரை நியமிக்கும்போது உரிமைவயது அடையாதவரின் நலன்கள், வயது, காப்பாளராக நியமிக்கப்பட விருப்பவரின் வயது, குணம்சம், சக்தி, இருவருக்குமிடையே உள்ள உறவின் நெருக்கம், இறந்துபோன பெற்றோர்களின் விருப்பம் அத்தனையையும் கணக்கில் எடுத்துக்கொள்ளும். உரிமை வயது அடையாதவருக்கு இன்னாரைக் காப்பாளராக வைத்துக் கொள்ளலாம் என்பதைத் தீர்மானிக்கும் அறிவுப் பக்குவம் வந்திருந்தால், அவனுடைய விருப்பத்தை நீதிமன்றம் ஏற்கலாம். காப்பாளருக்கும் காப்பில் உள்ளவருக்கும் உள்ள உறவு நம்பக உறவாகும். (Fiduciary Relationship.)

நிகழ்வு நிலைக் காப்பாளர் (De Facto Guardians)

நிகழ்வு நிலைக்காப்பாளர் என்பவர் சட்டப்படி எந்த உரிமையும் இல்லாமல் காப்பாளராகப் பொறுப்பேற்றுக் காரியங்கள் செய்பவர். அந்நியரான ஒருவர் உரிமைவயது அடையாதவரின் நலன்களைப் பாதுகாத்தால் அவர் நிகழ்வுநிலைக் காப்பாளராக அங்கீகரிக்கப் படுவார். ஏதோ சிலகாலம் உரிமைவயது அடையாதவருடன் இருப்பதோ, தனியாகச் சில காரியங்கள் உரிமைவயது அடையாத வருக்குச் செய்வதோ ஒருவனுக்கு நிகழ்வுநிலைக் காப்பாளர் என்ற தகுதியைத் தந்துவிடாது. காப்பாளராக அவன் அதன் முழுப் பொருளில் இயங்க வேண்டும். சட்டப்படி உள்ள காப்பாளருக்குச் சொத்தை நிர்வகிக்கவும் உரிமை மாற்றம் செய்யவும் என்னென்ன அதிகாரங்கள் உண்டோ அவை அத்தனையும் நிகழ்வுநிலைக் காப்பாளருக்கும் உண்டு.

காப்பில் உள்ளவரின் தீர்வு வழி

உரிமை வயது அடையாதவர் செல்லத்தகாத உரிமை மாற்றத்தை (Transfer) எதிர்த்து வழக்குத் தொடர்ந்து உரிமை மாற்றத்தைச் செல்லாததாக்கிக் கொள்ளலாம். காலவரையறைச் சட்டத்தின் (Limitation Act) விதிகளுக்கு ஏற்ப அவர் வழக்குத் தொடர வேண்டும். ஒருவன் உரிமை வயது அடைந்ததற்குப் பின்னரும் உரிமைமாற்றம் பற்றி வழக்குத் தொடராமல் இறந்து விட்டால், அவனுடைய சந்ததியார் அல்லது வாரிசுரிமை கொண்டாடுபவர் வழக்குப்போட முடியாது. அந்த உரிமை அவனுடைய தனிப்பட்ட உரிமையாகும். அதை அவன் மட்டுமே பயன்படுத்த முடியும். தன்னுடைய பிரதிநிதியாக இருந்து காப்பாளர் நடத்திய வழக்கில், தனக்கு எதிராகத் தீர்ப்பாணை வழங்கப்பட்டிருந்தால், காப்பாளருக்கும் எதிர்த்தரப்பினருக்கு மிடையே வஞ்சக்கூட்டு இருந்தது அல்லது மோசடி நடந்தது

என்ற காரணத்தைக் காட்டிமட்டுமல்ல காப்பாளர் மிக அலட்சிய மாக இருந்துவிட்டார் என்ற காரணத்தைக் காட்டியும் உரிமை வயது அடையாதவர் வழக்குத் தொடர்ந்து அத்தீர்ப்பாணையைத் தள்ளுபடி செய்யக் கேட்கலாம்.

பகுதி ஆ—இந்து உரிமை வயது அடையாமை, காப்புச் சட்டம் 1956

(The Hindu Minority and Guardianship Act, 1956)

இந்து உரிமை வயது அடையாமை, காப்புச்சட்டம் 1956 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25ஆம் தேதி அமலுக்கு வந்தது. இந்தச் சட்டத்தின் நோக்கம் என்ன என்பதை அதன் தோற்று வாய் (Preamble) தெளிவாகக் கூறுகிறது. இந்துக்கள் மத்தியில் உரிமை வயது அடையாமை குறித்தும், காப்புக் குறித்தும் இருந்து வரும் சட்டங்களில் சில பகுதிகளைத் திருத்தவும், கொடுக்கவும் இச் சட்டம் வந்திருப்பதாகத் தோற்றுவாய் கூறுகிறது. எனவே, உரிமை வயது அடையாமை, காப்புப்பற்றி இது முழுமையான சட்டம் அன்று என்று கொள்ளலாம். இச் சட்டம் சிலவற்றைத் திருத்தியிருக்கிறது; தொகுத்திருக்கிறது; அவ்வளவுதான். ஆகவே இதில் சொல்லப்பட்ட விஷயங்களுக்கு வேறு சட்டம் அமலாகாது. ஆனால், சொல்லப்படாத விஷயங்களுக்கு, காப்பாளர் காப்பில் உள்ளவர் சட்டம் (Guardians and Wards Act) அமலாகும்.

இச் சட்டத்தின் முதல் பிரிவில் சட்டத்தின் தலைப்பும் அது அமலாகும் நிலப்பரப்பும் கூறப்பட்டுள்ளது. இரண்டாவது பிரி வில் இச் சட்டம் காப்பாளர்கள், காப்பில் உள்ளவர்கள் சட்டம் 1890-க்கு ஒரு சேர்க்கைதான் என்றும், இச் சட்டத்தில் விலக் காகக் கூறப்பட்டிருப்பவை தவிர மற்றவற்றில் அச் சட்டத்தின் மதிப்பைக் குறைப்பதாகாது என்றும் கூறப்பட்டுள்ளது. 3ஆவது பிரிவில் இச் சட்டம் யாருக்கு உரியது என்பது—அதாவது இந்து என்பவன் யார் என்று கருதப்படும் என்பது சொல்லப்பட்டுள்ளது. (விளக்கம் இந்துத் திருமணச் சட்டத்தில் உள்ளது.)

4ஆவது பிரிவில் சில சொற்களுக்கு இச் சட்டத்தில் என்ன பொருள் என்ற விளக்கம் தரப்பட்டுள்ளது.

அ. 'உரிமை வயது அடையாமை' என்றால் ஒரு நபர் 18 வயதைப் பூர்த்தி செய்யவில்லை என்று பொருள்.

ஆ. காப்பாளர் என்றால் உரிமை வயது அடையாத அந்த நபரை அல்லது அவருடைய சொத்தை அல்லது இரண்டையும்

காத்துவரும் நபர் என்று பொருளாகும். இந்த விளக்கத்தில், அதாவது காப்பாளர் என்பதில், இயற்கைக் காப்பாளர் உரிமை வயது அடையாதவரின் தந்தை அல்லது தாயால், உயில் வழி நியமிக்கப்பட்ட காப்பாளர், நீதிமன்றத்தால் நியமிக்கப் பட்ட அல்லது அறிவிக்கப்பட்ட காப்பாளர் அல்லது நீதி மன்றக் காப்பில் உள்ளவர்கள் சம்பந்தமாக நிறைவேற்றப் பட்ட சட்டத்தால் அல்லது அதன் கீழ் அதிகாரம் பெற்ற நபர் ஆகியோர் அடங்குவர்.

இந்த விளக்கத்தில் கவனத்திற்குரியது ஒன்று உண்டு. இச் சட்டம் வருவதற்கு முன்னால் அங்கீகரிக்கப்பட்டிருந்த நிகழ்வுநிலைக் காப்பாளருக்கு (De Facto Guardian) இதில் இடம் கிடையாது. காப்பாளர் யார் என்ற விளக்கத்தில் அத்தகைய காப்பாளர் அங்கீகாரம் பெறவில்லை.

5ஆவது பிரிவில் இச் சட்டம் வந்ததால் நேர்ந்த விளைவு யாது என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இச் சட்டம் வருவ தற்கு முன்னால் இருந்த நூல்கள், விதிகள், விளக்கங்கள், வழக்கம், வழக்காறு யாவும் இச் சட்டத்தில் வகைசெய்யப்பட்டுள்ள விஷயங்களைப் பொறுத்த வரையில் செயலற்றுவிடும். அதைப் போலவே இதற்கு முன்னால் இருந்த சட்டம், இச் சட்டத்தின் விதி களுக்கு முரண்படும் விஷயங்களில் செயலற்றுவிடும்.

இயற்கைக் காப்பாளர்

6ஆவது பிரிவில் உரிமை வயது அடையாத ஓர் இந்துவுக்கு இயற்கைக் காப்பாளர் யார் என்பது கூறப்பட்டுள்ளது.

உரிமை வயது அடையாத அந்த நபர் அவருடைய சொத்து (பிரிவினையாகாத கூட்டுக் குடும்பச் சொத்து தவிர) இவற்றிற்குக் கீழ்க் கண்டவர்கள் இயற்கைக் காப்பாளர் ஆவர்:

அ. பையனுக்கும் திருமணமாகாத கன்னிப் பெண்ணுக்கும் தந்தை காப்பாளர். அவருக்குப் பிறகு தாய். ஆனால், குழந்தைக்கு 5 வயது ஆகவில்லை என்று சொன்னால் குழந்தை சாதாரணமாகத் தாயின் பாதுகாப்பிலேயே இருக்கும்.

ஆ. முறையிலா மணத்தில் பிறந்த பையனுக்கும், முறையிலா மணத்தில் பிறந்த திருமணமாகாத பெண்ணுக்கும் தாய்தான் முதலில் காப்பாளர். தந்தை அவளுக்குப் பின்னர்தான்.

இ. திருமணமான ஒரு பெண்ணுக்குக் கணவனே காப்பாளர்.

ஆனால், காப்பாளராக இருக்கும் நபர் இந்துவாக இல்லாமல் போய்விட்டாலோ, அல்லது முழுமையாக இறுதியாக உலகைத் துறந்துவிட்டு வனுந்திரம் சென்றுவிட்டாலோ அல்லது சந்நியாசியாகப் போய்விட்டாலோ அவர் இயற்கைக் காப்பாளராகப் பணியாற்ற இயலாதவராகிவிடுவார்.

இதிலிருந்து தந்தை உயிரோடு இருக்கும்வரையில் அவரே இயற்கைக் காப்பாளர் என்பது தெளிவாகும். உரிமை வயது அடையாதவனின் முழுச் சொத்துக்கு அல்லது தனிச் சொத்துக்குத்தான் தந்தையோ அல்லது தாயோ காப்பாளராக இருக்கும் உரிமை பெற்றவர். கூட்டுக் குடும்பச் சொத்துக்கு அவர்கள் காப்பாளராக இருக்க முடியாது. இயற்கைக் காப்பாளராக இருக்கும் தாய் பின்னர் மறுமணம் புரிந்துகொண்டாலும் தொடர்ந்து குழந்தைகளுக்குக் காப்பாளராக இருக்கலாம். அவளது மறுமணம் ஒரு தகுதியின்மையாகாது.[6]

குழந்தைக்கு 5 வயது ஆகும்வரை சாதாரணமாகத் தாயே காப்பாளர் என்று இச் சட்டம் கூறுகிறது. இதிலுள்ள 'சாதாரணமாக' என்ற சொல் சாதாரணச் சொல் அன்று. அதற்கு நிறையப் பொருள் உண்டு. தந்தையும் தாயும் சேர்ந்திருக்கும் போது பிரச்சினை கிடையாது. இருவரும் பிரிந்து இருக்கும்போது, தாய் ஒழுக்கக் குறைவானவளாக இருந்தால், ஐந்து வயது நிறையாத குழந்தையை நீதிமன்றம் தந்தையிடம் ஒப்படைக்கலாம். சாதாரணமாக 5 வயது நிறையாத குழந்தை தாயிடம்தான் இருக்க வேண்டும் என்றாலும், அசாதாரண சூழ்நிலையில் நீதிமன்றம் தலையிட்டுத் தந்தைக்குக் காப்பாளராக இருக்கும் உரிமையைத் தரலாம்.

(சிறுவிளக்கம்: இந்தப் பிரிவில் தந்தை, தாய் என்பது ஈன்றெடுத்த பெற்றோரையே குறிக்கும்; மாற்றாந் தந்தையையோ அல்லது மாற்றாந் தாயையோ அன்று.)

7ஆவது பிரிவுப்படி, தத்து எடுப்பிற்குப்பின் தத்து எடுக்கப்பட்டவனின் இயற்கைக் காப்பாளராக அவனுடைய தத்து எடுத்த தந்தையும் அவருக்குப்பின் தத்து எடுத்த தாயும் இருப்பர்.

இயற்கைக் காப்பாளரின் அதிகாரங்கள்

1. உரிமை வயது அடையாத நபருடைய நன்மைக்காக அவசியமான, நியாயமான, முறையான செயல்கள் எல்லாவற்றையும்

[6] Bakshi Ram Ladha Ram *Vs* Mst. Sheila Devi AIR 1960 Punjab 304.

செய்ய இயற்கைக் காப்பாருக்கு அதிகாரம் உண்டு. ஆனால், அந்த அதிகாரம் இந்தச் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும். மேலும், உரிமை வயது அடையாத நபரின் நிலச் சொத்தின் (Estate) இலாபத்திற்காக, பாதுகாப்பிற்காக, நன்மைக்காக எல்லாச் செயல்களும் செய்யலாம். ஆனால், உரிமை வயது அடையாதவரை ஒரு தனிப்பட்ட உடன்பாட்டில் பிணைக்க அதிகாரம் கிடையாது.

2. உரிமை வயது அடையாதவரின் அசையாச் சொத்தின் (immovable property) எந்தப் பாகத்தையும் நீதிமன்றத்தின் முன் அனுமதி பெறுமல் ஒரு காப்பாளர் அடைமானம் வைக்கவோ அல்லது பிணையாக்கவோ அல்லது விற்கவோ கொடையாகத் தரவோ மாற்றிக்கொள்ளவோ அல்லது வேறு ஏதாவது செய்யவோ கூடாது; மேலும் சொத்தின் எந்தப் பாகத்தையும் ஐந்தாண்டுக் காலத்திற்கு மேற்பட்ட குத்தகைக்கோ அல்லது உரிமை வயது அடையாதவன் உரிமை வயது அடைந்து ஓராண்டுக்குமேல் செல்லும் குத்தகைக்கோ நீதிமன்றத்தின் முன் அனுமதி இல்லாமல் கொடுக்கக்கூடாது.

3. இயற்கைக் காப்பாளர் உரிமை வயது அடையாதவனின் சொத்தை மேலே சொல்லப்பட்டிருக்கும் விதிகளுக்கு முரணுகக் கொடுத்தால் உரிமை வயது அடையாதவனே அல்லது அவன் வழியாக உரிமை கொண்டாடுகிறவர்களோ அந்தச் செயலைத் தவிர்த்துக் கொள்ளலாம். இயற்கைக் காப்பாளரின் ஒப்பந்தம் தவிர்தகு ஒப்பந்தமாகும்.

4. மேலே இரண்டாவது துணைப் பிரிவில் சொல்லப்பட்டிருப் பவைகளைச் செய்ய இயற்கைக் காப்பாளருக்கு நீதிமன்றம், அச் செயல் அவசியமென்றும் அல்லது ஆதார பூர்வமான நன்மை உரிமை வயது அடையாதவருக்கு இருக்கிறது என்றும் கருதினுலொழிய அனுமதி கொடுக்காது.

5. நீதிமன்றத்தின் முன் அனுமதி பெறுவதற்கு விண்ணப்பம் செய்து கொள்வது சம்பந்தமானவற்றில் 'காப்பாளர்கள், காப்பில் உள்ளவர்கள் சட்டம் 1890' (Guardians and Wards Act) தான் அமலாகும்.

இப் பிரிவில் அசையாப் பொருள்களின் உரிமை மாற்றத்திற்கே நீதிமன்றத்தின் முன் அனுமதி தேவை என்று சொல்லப்பட்டுள்ளது. அசையும் பொருள்களை உரிமை மாற்றம் செய்ய நீதிமன்றத்தின் அனுமதி வேண்டியதில்லை. ஆனால், நீதிமன்றம் பழைய சட்டத்தில் உள்ளவாறு அந்த உரிமை மாற்றம் உரிமை

வயது அடையாதவரின் அவசியத்திற்காக அல்லது நன்மைக்காகச் செய்யப்பட்டிருக்கிறதா என்பதைப் பரிசீலிக்கும்.

உயில்வழிக் காப்பாளர்களும் அவர்கள் அதிகாரங்களும்

9ஆவது பிரிவு உயில்வழிக் காப்பாளர் நியமிக்கப்படுவது பற்றிக் கூறுகிறது. உரிமை வயது அடையாதவனின் இயற்கைக் காப்பாளராக இருக்க உரிமை உள்ள ஓர் இந்துத் தந்தை உயில் வழியாகக் காப்பாளரை நியமிக்கலாம். (உரிமை வயது வராத நபருக்கும் சொத்துக்கும்). ஆனால், கூட்டுக் குடும்பத்தில் உள்ள பிரிவினையாகாத சொத்துக்குக் காப்பாளர் நியமிக்க முடியாது.

மேலே சொல்லப்பட்ட காப்பாளர் நியமனம், தாய் இறப்பதற்கு முன்னால் தந்தை இறந்து விட்டால் பயனற்றுப் போய்விடும். (ஏனென்றால் தந்தைக்குப் பின் தாய்தான் காப்பாளர்.) பின்னர் தாய் உயில் வழியாக வேறு யாரையும் காப்பாளராக நியமிக்காவிட்டால் பழையபடி தந்தையின் காப்பாளர் நியமனம் உயிர் பெறும்.

முறையான மணத்தில் பிறந்த உரிமை வயது அடையாத குழந்தைக்கு இயற்கைக் காப்பாளராக இருக்க உரிமை படைத்த ஓர் இந்து விதவையும், முறையான மணத்தில் பிறந்த உரிமை வயது அடையாத குழந்தையின் இயற்கைக் காப்பாளராக இருக்க வேண்டிய தந்தை அவ்வாறிருக்க முடியாத நிலையில் ஓர் இந்துத் தாயும், உயில் வழியாக உரிமை வயது வராத நபருக்கு அல்லது சொத்துக்கு அல்லது இரண்டிற்கும் காப்பாளர் நியமிக்கலாம்.

முறையிலா மணப்பிறப்பில் பிறந்த உரிமை வயது அடையாத குழந்தைக்கு இயற்கைக் காப்பாளராக இருக்க உரிமையுள்ள ஓர் இந்துத் தாய், உயில் வழியாக, உரிமை வயது வராத நபருக்கு அல்லது சொத்துக்கு அல்லது இரண்டிற்கும் காப்பாளர் நியமிக்கலாம்.

உயில்வழிக் காப்பாளராக நியமிக்கப்பட்டவர் உரிமை வயது அடையாதவனின் தந்தை அல்லது தாயின் மரணத்திற்குப் பின் இச் சட்டத்தில் குறிப்பாகக் கூறப்பட்டிருக்கும் விதிகளுக்கும், உயிலில் கூறப்பட்டிருக்கும் விதிகளுக்கும் உட்பட்டு இயற்கைக் காப்பாளருக்குரிய எல்லா உரிமைகளோடும் செயல்படலாம்.

உயில் வழியாக நியமிக்கப்பட்ட காப்பாளரின் உரிமை—உரிமை வயது அடையாத நபர் பெண்ணாக இருந்தால் அவள் திருமணத்துடன் முடிந்துவிடும்.

மேலே கண்டவற்றிலிருந்து, தந்தை உயில்வழி ஒரு காப்பாளரை நியமித்தாலும், தாய் உயிருடன் இருந்து அவள் இயற்கைக் காப்பாளராக இருக்கத் தகுதி பெற்றிருந்தால், தந்தைக்குப் பின் அவளே காப்பாளராக இருப்பாள். அவள் இறந்ததற்குப் பின்னர் தான் தந்தையின் உயிலில் கண்ட காப்பாளர் பொறுப்பேற்க முடியும். தாய் இறக்கும்போது அவள் தன்னுடைய உயிலில் ஒரு காபபாளரை நியமித்திருந்தால் அவள் நியமித்த காப்பாளரே பொறுப்பேற்க முடியும். தந்தை நியமித்த காப்பாளர் செயல்பட முடியாது. மேலும், முறையிலா மணப்பிறப்பில் பிறந்த குழந்தைக்குக் காப்பாளர் நியமிக்கும் உரிமை தாய்க்கு மட்டுமே தரப்பட்டுள்ளது. இந்தப் பிரிவால் பழைய சட்டத்தில் இல்லாத உரிமைகளைத் தாய் பெறுகிறாள். பழைய சட்டத்தின்படி தந்தை மட்டுமே உயில் எழுதிக் காப்பாளர் நியமிக்க முடியும். தாய்க்கு அந்த உரிமை கிடையாது. இந்தப் பிரிவு தாய்க்கு அந்த உரிமையைத் தருகிறது. கணவனுக்குப் பிறகு தாய் உயில் எழுதிக் காப்பாளர் நியமிக்கலாம். அது மட்டுமன்று, கணவன் உயிரோடு இருந்து காப்பாளனாக இருக்கும் தகுதியை இழந்துவிட்டால் அப்போது மனைவி உயில் மூலம் காப்பாளரை நியமிக்க முடியும்.

இச் சட்டத்தின் 10ஆவது பிரிவு, உரிமை வயது அடையாத ஒருவன் இன்னொரு உரிமை வயது அடையாதவனுடைய சொத்துக்குக் காப்பாளராக இருக்கத் தகுதியற்றவன் என்று கூறுகிறது.

நிகழ்வு நிலைக் காப்பாளர் (De Facto Guardian)

இந்தச் சட்டம் வந்ததற்குப் பிறகு உரிமை வயது அடையாதவனின் நிகழ்வுநிலைக் காப்பாளர் என்ற அடிப்படையில் எந்த ஒரு நபரும் உரிமை வயது அடையாதவனின் சொத்தில் புழங்கவோ அல்லது சொத்தை வேறு முறையில் கொடுக்கவோ முடியாது என்று 11 ஆவது பிரிவு கூறுகின்றது. பழைய சட்டம் அங்கீகரித்திருந்த நிகழ்வுநிலைக் காப்பாளரைப் புதிய சட்டம் அங்கீகரிக்கவில்லை. ஆனால், இச் சட்டம் வருவதற்கு முன்னால் நிகழ்வுநிலைக் காப்பாளர் செய்த செயல்களை இச் சட்டம் கட்டுப்படுத்தாது. அது சரியா என்பது பழைய சட்டத்தைக் கொண்டே பார்க்கப்படும்.

ஆரம்ப காலத்தில் நேர்மை நெறியின் அடிப்படையில் நிகழ்வு நிலைக் காப்பாளர்களைச் சட்டம் அங்கீகரித்தாலும், காலப்போக்கில் சுயநலமிகளின் பேராசையால் அத்தகைய காப்பாளர் பிரிவே சீரழிவைத் தேடிக்கொண்டது. உரிமை வயது அடையாதவர்களின் சொத்தை அபகரிக்கும் நோக்கத்தோடு பலர் அவனுடன்

உறவாடி, நிகழ்வுநிலைக் காப்பாளர் என்ற போர்வையில் தங்கள் நலனைப் பேணிக்கொண்டனர். உரிமை வயது அடையாதவரின் நிலை பரிதாபத்துக்கு உள்ளானது. சிற்சில சமயங்களில் உரிமை வயது அடையாத ஒருவனுக்கு, 'நான்தான் காப்பாளன்' என்று சொல்லிக் கொண்டு பல பேர் போட்டியிட்டனர். தேவையில்லாத வழக்குகள் இதனால் ஏற்பட்டன. இத்தகைய காப்பாளர்களால் எந்த நன்மையும் இல்லை என்ற நிலை பல்கிப் பெருகவேதான் சட்ட அறிஞர்கள் இதையே ஒழித்து விட்டனர்.

கூட்டுக் குடும்பச் சொத்து

உரிமை வயது அடையாதவனின் கூட்டுக் குடும்பத்தில் உள்ள பிரிவினையாகாத சொத்துக்குக் காப்பாளரை நியமிக்க முடியாது என்பது முன்பே சொல்லப்பட்டது. அது 12 ஆவது பிரிவில் சட்ட வடிவம் பெற்றுள்ளது. ஒரு கூட்டுக் குடும்பத்தில் பிரிவினை யாகாத சொத்துரிமை உரிமை வயது அடையாத ஒருவனுக்கு இருந்தால், அந்தச் சொத்து கூட்டுக் குடும்பத்தில் உள்ள மூத்த உறுப்பினரின் நிர்வாகத்தின்கீழ் இருந்தால், அந்தச் சொத்தைப் பொறுத்த வரையில் யாரும் காப்பாளராக நியமிக்கப்பட முடியாது என்று 12 ஆவது பிரிவு சொல்கிறது. ஆனால், அதே சமயம் அச் சொத்துக்குக் காப்பாளர் நியமிக்க உயர்நீதி மன்றத்திற்கு உள்ள அதிகார வரம்பை இப் பிரிவில் கூறப்பட்டுள்ளவை பாதிக்காது என்றும் சொல்கிறது.

உரிமை வயது அடையாத ஒருவனுக்குக் கூட்டுக் குடும்பத்தில் உள்ள பிரிவினையாகாத சொத்து அல்லாமல் தனிச் சொத்தும் இருக்கலாம். அவனுக்குத் தந்தையோ, தாயோ, உயில் வழிக் காப்பாளரோ தனிச்சொத்தைப் பாதுகாப்பதற்கு இல்லை என்றால், நீதிமன்றம் அத் தனிச் சொத்துக்குக் காப்பாளர் நியமிக்கும்.

உரிமை வயது அடையாதவரின் நலமே முக்கியம்

13ஆவது பிரிவு இச் சட்டத்தின் இறுதிப் பிரிவு. உரிமை வயது அடையாத ஓர் இந்துவுக்குக் காப்பாளரை நியமிக்கும் போதோ அறிவிக்கும்போதோ நீதிமன்றம் உரிமை வயது அடையாத நபரின் நல்வாழ்வையே பிரதானமாகக் கவனிக்கும். உரிமை வயது அடையாத நபரின் நல்வாழ்விற்கு ஒருவனுடைய அல்லது ஒருத்தியினுடைய காப்பு ஏற்றதல்ல என்று நீதிமன்றம் கருதினால், இச் சட்டத்தின் விதிகள் அல்லது திருமணம் சம்பந்தமான பிற சட்டங்கள் இவற்றின் அடிப்படையில் எந்த ஒரு நபருக்கும் காப்பாளராக இருக்கும் உரிமை கிடையாது.

ஒரு வழக்கில் உரிமை வயது அடையாத தன் மனைவி தன் பாதுகாப்பில் இருக்க வேண்டும் என்று கணவன் கேட்டிருந்தான். ஆனால், நீதிமன்றம் அவ் வழக்கின் சூழ்நிலைகளை ஆராய்ந்து பார்த்து, படித்த, பதினேழு வயது நிறைந்த சுயமாகச் சிந்திக்கக் கூடிய ஆற்றல் உள்ள பெண் கணவனிடம் செல்ல மறுக்கும் போது கணவனின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறியது.[6] தாயும் தந்தையும்கூடக் காப்பாளர்களாக இருக்கத் தக்கவர்கள் அல்லர் என்றால், உரிமை வயது அடையாத நபரின் நல்வாழ்விற்கு உதவுபவர்கள் அல்லர் என்றால், அவர்கள் காப்பாளர் பொறுப்பிலிருந்து நீக்கப்படுவார்கள். ஒரிசா மாநில வழக்கொன்றில், தாய்தான் தந்தைக்குப் பிறகு இயற்கைக் காப் பாளர் என்றாலும், அவளுடைய மறுமணம் காப்பாளராக இருக்கும் தகுதியை எடுத்துக்கொள்ளவில்லை என்றாலும், இந்த வழக்கின் சூழ்நிலைகளைப் பார்க்கும்போது, மறுமணம் புரிந்துகொண்ட தாய் முதல் கணவனின் மூலம் பெற்ற குழந்தையின் நல்வாழ்விற்கு ஏற்றவளல்லள், வேறொரு நபரே காப்பாளராக இருக்கவேண்டும் என்று தீர்ப்புக் கூறப்பட்டது.[7]

[6] Subramanyam *Vs* Santha AIR .967 Andra 294.

[7] Kusa parida *Vs* Baisunab Malik 1966 Orissa 60.

6. இந்துக் கூட்டுக் குடும்பம்

(HINDU JOINT FAMILY)

பண்டைய கால இந்துக் குடும்பத்தின் அமைப்பைப் பற்றிப் படிக்க நேர்கிற ஒரு நவீன இந்தியனுக்குத் தன்னுடைய அக்கால முன்னோர்களின் வழக்கை வியப்பையூட்டலாம். விடுதலை உணர்வும், ஜனநாயக எழுச்சியும் மிகுந்திருக்கும் இக் கால கட்டத்தின் மாணவனுக்கு அக் கால வாழ்க்கை முறையைப் புரிந்துகொள்வது கூடச்சிரமமாக இருக்கலாம். உலகம் முழுவதிலும் மனித இனத்தின் தோற்றத்தையும், சமூக வளர்ச்சியையும் எடுத்துப் பார்க்கும் போது, மனிதன் அக் காலத்தில் கும்பலாக அல்லது கூட்டமாக வாழ்ந்தான் என்பது புலப்படும். கூட்டத்திற்கு ஒரு தலைவன் இருப்பான்; அவனுக்குக் கட்டுப்படுவதுதான் ஏனையோர் கடமை. தனி மனிதனின் சுக துக்கங்கள் அன்று பெரிதல்ல. தனி மனிதனின் உணர்ச்சிகளுக்கு முக்கியத்துவம் அவ்வளவு கிடையாது. தனி மனிதன் தன்னுடைய கூட்டத்திற்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொள்வதுதான் அன்றைய வாழ்க்கை தர்மம். இத்தகைய நிலை எல்லா நாட்டிலும் இருந்திருக்கிறது. இந்தியா விதி விலக்கன்று.

கூட்டமாக வாழ்ந்த சமூகப்போக்கில் காலத்தினால் ஏற்பட்ட கோலம்தான் கூட்டுக் குடும்பம். கூட்டத்தில் தலைவனாக இருந்தவனுக்கு இருந்த ஏதேச்சதிகாரம் கூட்டுக்குடும்பத்தின் தந்தைக்குக் கிடையாது என்றாலும், கூட்டுக் குடும்பத்தில் தந்தையின் உரிமைகள் அதிகம். கூட்டுக் குடும்பம் இந்தியாவில் நிலவிய அலாதியான ஓர் அமைப்பு. இந்துச் சமூகத்தின் வாழ்க்கைக் கோட்பாடுகளுக்கும், பண்பாட்டிற்கும் அது ஓர் அடித்தளம். இந்தியாவில் இருந்தது போன்ற கூட்டுக் குடும்பம் வேறு நாடுகளில் இருந்ததில்லை என்று சொன்னாலும்கூட, இதைப் போன்ற வாழ்க்கைமுறை ஏறக்குறைய வேறு வடிவில் இருக்கத்தான்

செய்தது. ஏனென்றால் இவை எல்லாம் நிலப் பிரபுத்துவ சமூக அமைப்பின் பிரிக்க முடியாத அம்சங்கள்.

கூட்டுக் குடும்பம் என்றால் என்ன ? இத் தொடரில் இரண்டு அம்சங்கள் அடங்கி இருக்கின்றன. ஒன்று 'குடும்பம்'; மற்றொன்று 'கூட்டு'. குடும்பம் என்பது இரத்த சம்பந்தமுடைய தனிநபர்களால் ஆனது. பொது மூதாதையரிடமிருந்து இறங்கும் தாயாதிகள் (Agnates) அவர்களுடைய மனைவி, மகள்கள் ஆகியோர் குடும்பத்தில் அடங்குகின்றனர். தந்தையும் தந்தைவழி உறவினர்களும், அதாவது தாயாதிகளும் இருப்பதுதான் இதன் பிரதான அம்சம். பின்னர் அக் குடும்பத்தில் தந்தை இறந்துவிட்டால் கிளைவழி உறவினரின் குடும்பமாக (Family of Collaterals) அது இருக்கும். அடுத்தபடி சொத்தானது எல்லாருக்கும் பொது. அதில் கூட்டு உரிமையே உண்டு. சொல்லப்போனால் கூட்டு உரிமை என்பது இயற்கையாகவே அமைந்திருக்கிறது. குடும்பத்தின் உறுப்பினர்கள் கூட்டாக இருப்போம் என்று உடன்பாடு செய்துகொண்டு ஏற்பட்டதன்று அது. பிரிக்கமுடியாத நிலை தானாகவே இருக்கின்றது என்றே சொல்ல வேண்டும். ஆகவே, கூட்டுக் குடும்பம் என்று அழைப்பதைவிடப் பிரிவுபடாத குடும்பம் என்று அழைப்பது பொருத்தமுடையதாகவும் இருக்கும்.

மிதாக்ஷரப் பங்குரிமை (Mitakshara Coparcenary)

பங்குரிமை என்றால் என்ன என்பதை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். பிரிவினையாகாத இந்துக் கூட்டுக் குடும்பத்தின் சொத்தில் பிறப்பினாலேயே பிரிவினை கோரும் உரிமைக்கும் 'பங்குரிமை' (Coparcenary) என்று பெயர். பங்குரிமை உடையவரை 'பங்குரிமையர்' (Coparcener) என்று அழைப்பர்.

பங்குரிமை என்னும் அமைப்பு கூட்டுக் குடும்பத்தைவிடச் சிறிய அமைப்பு. கூட்டுக் குடும்பத்தில் அக் குடும்பத்தில் பிறந்த பிறப்பு ஒன்றின் அடிப்படையிலே சொத்துரிமை உடையவர்கள், தாங்கள் விரும்பும்போது பாகப்பிரிவினை கேட்க உரிமை உடையவர்களின் அமைப்பு பங்குரிமை. இதில் மூதாதையரும் அவருடைய நேர்வழியில் வந்த பிற ஆண் மக்களும் உறுப்பினர்கள். ஆனால், இதிலும் ஒரு கட்டுப்பாடு உண்டு. பொது மூதாதையரிடமிருந்து மூன்று தலைமுறை அப்பால் சென்று விட்டவர்கள் பங்குரிமையில் உறுப்பினராக இருக்கமுடியாது. எடுத்துக்காட்டாகச் சொத்தை வைத்திருப்பவர் (மூதாதையர் என்று கொள்வோம்) அவருடைய மகன், பேரன், கொள்ளுப்பேரன் ஆகியோர் பங்குரிமையில்

உறுப்பினராக இருக்க முடியும். ஆனால், கொள்ளுப்பேரனின் மகன், அவன் மூன்று தலைமுறையிலிருந்து தள்ளிப்போய்விடுவதால் பங்குரிமையில் உறுப்பினராக இருக்க முடியாது. இந்த மூன்று தலைமுறை வரையறைக்கும் ஒரு காரணம் உண்டு. ஒரு மூதாதையருக்கு மூன்று தலைமுறைவரை உள்ள வழித்தோன்றல்களே மதச் சடங்குகள் செய்யமுடியும். இந்த வரையறை பங்குரிமைக்கும் உரியதாயிற்று. இந்தப் பங்குரிமையில் ஆண்களுக்கு மட்டுமே உரிமை உண்டு; பெண்களுக்குக் கிடையாது. ஏனெனில் பிரிவினை கோரும் உரிமையுடைய நபரே பங்குரிமையில் உறுப்பினராக இருக்க முடியும். பெண்களுக்கு அவ் வுரிமை இல்லாததால் அவர்கள் பங்குரிமையில் உறுப்பினர் அல்லர். ஆனால், பாகப் பிரிவினை நடக்கும்போது, வீட்டுப் பெண்களுக்குச் சொத்துத் தரத் தடையில்லை. பங்குரிமை என்ற அமைப்புக்கு ஒரு பொது மூதாதையர் தேவைதான் என்றாலும், அவர் இல்லாமலே கிளை வழியினர் (Collaterals) அவர்களுடைய வழித்தோன்றல்களைக் கொண்டு பங்குரிமை என்ற அமைப்பு இருக்க முடியும்.

கீழே உள்ள வரை படம் பங்குரிமை என்ற அமைப்பைப் புரிந்துகொள்ள உதவும்.



இதில் 'மூ' என்பது மூதாதையர். அவருக்கு ஐந்து ஆண் மக்கள். அவர்கள் அ,ஆ,இ,ஈ,உ. பேரன்கள் ஊ,க,ச,ய,ர, ஆகிய ஐவரும். அவருடைய கொள்ளுப்பேரன்கள் எ,ல ஆகிய இருவரும். மூதாதையரின் 5 மகன்கள், 5 பேரன்கள், 2 கொள்ளுப் பேரன்கள் ஆகியோர் மட்டுமே பங்குரிமை அமைப்பில் உறுப்பினர் ஆவர். மற்ற வழித்தோன்றல்கள் மூன்று தலைமுறையிலிருந்து தள்ளிப் போய்விடுவதால் பங்குரிமை அமைப்பில் இருக்க முடியாது. ஆனால், மூதாதையர் இறந்துவிட்டால் ஏ,வ ஆகிய இருவரும்

பங்குரிமை பெற முடியும். ஏனென்ருல் மூதாதையர் இறந்த பிறகு அவர்கள் மூன்று தலைமுறைக்குள் வந்துவிடுகிருர்கள். அதாவது மூதாதையருக்குப் பின் 'அ'வுக்கும் 'உ'வுக்கும் மூன்ரு வது தலைமுறையில் வந்துவிடுகிருர்கள். ஆனல், அப்போதும் மூன்று தலைமுறைக்குள் வராத ஐ, ஒ, ழ, ஆகியோர் பங்குரிமை பெற முடியாது. மூதாதையரின் மறைவுக்குப்பின் பங்குரிமை கிளைவழியினர் (Collaterals) அவர்களுடைய வழித் தோன்றல் களின் அமைப்பாக இருக்கும். இதில் 'அ'வும் பின்னர் இறப்பதாக வைத்துக் கொண்டால் 'ஏ' பங்குரிமை பெற முடியும். ஒருவர் இறந்ததற்குப் பின்னர்தான் மூன்று தலைமுறை தள்ளி இருக்கும் வழித்தோன்றல் மூன்று தலைமுறைக்குள் வந்து பங்குரிமை பெறமுடியும்.

பங்குரிமைக்குள் பங்குரிமை (Coparcenary within a Coparcenary)

ஒரு பங்குரிமை அமைப்புக்குள் இன்ெனாரு சிறிய பங்குரிமை அமைப்பு இருக்க சாத்தியமுண்டு. எடுத்துக்காட்டாக, முன்பு சொல்லப்பட்ட வரைபடத்திலுள்ள 'உ' என்ற நபர் தனியாகச் சொத்து சேர்த்துவிட்டு இறந்து போகிருர் என்று வைத்துக் கொள்வோம். அந்தச் சொத்துக்கு உரிமை உடையவர்கள் அவருடைய மகன்களான 'ய'வும் 'ர'வும். இதில்'ர' விற்கு 'ல' என்ற மகன் பிறப்பதாக வைத்துக் கொள்வோம். இந்த ய,ர,ல, ஆகிய மூவரும் 'உ' வினுடைய தனிச் சொத்துக்கும் பங்குரிமை அமைக்க முடியும். இந்தப் பங்குரிமையை 'உ'வினுடைய கிளை வழியினரின் பங்குரிமையில் உள்ள ஒரு சிறிய பங்குரிமையாகச் சொல்லலாம்.

தடையுள்ள மரபுரிமை, தடையற்ற மரபுரிமை (Obstructed Heritage and Unobstructed Heritage).

மிதாக்ஷர முறையில் கூட்டுக் குடும்பத்தில் பிறந்த பிறப்பு ஒன்றிஞலேயே ஒருவன் சொத்தில் பெறும் உரிமைக்குத் தடை யற்ற மரபுவழி இறங்குரிமை என்று பெயர். அவ்வாறு பெருத உரிமைக்குத் தடையுள்ள மரபுவழி இறங்குரிமை என்று பெயர். கூட்டுக் குடும்பத்தில் பிறந்த ஒரு நபருக்கு அவனுடைய தந்தை உயிரோடு இருந்தாலும் உரிமை பாதிக்கப்படுவதில்லை. தந்தை உயிரோடு இருப்பது அவன் சொத்துரிமைக்குத் தடையாக இல்லை. பரம்பரைச் சொத்து, பரம்பரைச் சொத்தின் உதவியால் அடைந்த சொத்து ஆகியவை தடையற்ற மரபுவழி இறங்குரிமையில் அடங்கும். பரம்பரைச் சொத்தில் தந்தைக்கு இருக்கும் உரிமை அக் குடும்பத்தில் பிறந்த பிறப்பு ஒன்றிஞலேயே மகனுக்கும் இருக்கும். பிறப்பிஞல் அல்லாமல் சொத்துக்கு உரியவரான நபர்

இறந்தபிறகு இன்னொரு நபர் அடையும் சொத்து தடையுள்ள மரபு வழி இறங்குரிமையில் அடங்கும். ஏனென்றால் இதில்ஒரு நபர் உயி ரோடு இருப்பது இன்னொரு நபர் சொத்தை அடையத் தடையாக இருக்கும். எடுத்துக்காட்டாக ஒரு நபர் குழந்தை இல்லாமல் இருந்தால் அவர் இறந்த பிறகே அவருடைய சொத்து பிற வாரிசு களுக்குச் செல்லும். இது தடையுள்ள மரபுவழி இறங்குரிமையாகும். பிறப்பு ஒன்றினால் ஒருவன் பெறும் தடையற்ற மரபுவழி இறங்குரிமை இன்னொரு நபர் பிறப்பதினால் பறிபோய்விடாது. தொடர்ந்து தடையற்ற மரபுவழி இறங்குரிமையாகவே இருக்கும். தடையுள்ள மரபுவழி இறங்குரிமையில் சொத்துடையவருக்கு நெருங்கிய வாரிசு தோன்றிவிட்டால், எடுத்துக்காட்டாக மகன் பிறந்துவிட்டால், பிற வாரிசுகளின் உரிமை தடைபட்டுப் போகும். எனவே, தடையற்ற மரபுவழி இறங்குரிமையைச் சேர்ந்தடை உரிமை (Vested interest) என்றும் தடையுள்ள, மரபுவழி இறங்குரிமையை நிகழ்வடை உரிமை (Contingent interest) என்றும் சொல்லலாம். தடையற்ற மரபுவழி இறங்குரிமையில் சொத்து எஞ்சுநர் உரிமைப்படி செல்லும். தடையுள்ள மரபுவழி இறங்குரிமையில் சொத்து மரபுமுறை இறங்குரிமைபடி செல்லும்.

தந்தையினுடைய தனிச் சொத்து அல்லது அவராகச் சம்பாதித்த சொத்து அவருடைய மகனுக்கு எஞ்சுநர் உரிமைப்படி செல்லுமா அல்லது மரபுமுறை இறங்குரிமைப்படி செல்லுமா என்பது முக்கிய கேள்வி. சென்னை உயர்நீதிமன்றம்[1] மரபுமுறை இறங்குரிமைப்படி செல்லும் என்றும் பம்பாய் உயர்நீதிமன்றம்[2] எஞ்சுநர் உரிமைப்படி செல்லும் என்றும் தீர்ப்பளித்துள்ளன. மிதாக்ஷரத்தில் இருக்கும் இந்த வேறுபாடு தாயபாகத்தில் கிடை யாது. அம் முறையில் எல்லாச் சொத்துகளும் தடையுள்ள மரபு வழி இறங்குரிமையில் அடங்கும்.

பங்குரிமையமைப்பு உரிமைகள்

பங்குரிமையமைப்பில் இன்னாரின்னாருக்கு இன்னின்ன—சொத்து என்று வரையறை கிடையாது. முழுச் சொத்துக்கும் பங்குரிமையர் கூட்டு உரிமையாளர் ஆவார்கள்.

பங்குரிமையர் மத்தியில் எஞ்சுநர் உரிமை (Survivorship) உண்டு. அதாவது பங்குரிமையர் ஒருவர் இறந்த பின்னர் உயிருடன் இருக்கும் அடுத்தவர் அந்த உரிமையைப் பெறுவார்.

[1] Vairavan Chetty *Vs* Srinivachari 1921 I.L.R. 44 Mad. 499 .(F.B.)

[2] Fakirappa *Vs* Yellappa (1898) I.L.R. 22 Bom. 101.

பங்குரிமையன் ஒருவன் தான் விரும்பும்போது பாகப்பிரிவினை கேட்கலாம். தன்னைப் பராமரிக்க வேண்டும் என்று கேட்கும் உரிமையும் அவனுக்கு உண்டு. முறையற்ற உரிமை மாற்றத்தைக் கூட்டுக் குடும்ப நிர்வாகி அல்லது பிற பங்குரிமையர் செய்திருந்தால் குற்றம் சாட்டலாம்.

பங்குரிமை என்பது இந்துச் சட்டத்தால் ஏற்பட்ட அமைப்பாகும். விரும்புகிறவர்கள் ஒன்று சேர்ந்து செய்து கொண்ட ஏற்பாடல்ல. பங்குரிமை அமைப்பு ஒரு கூட்டு நிறுவனம். அதன் நிர்வாகி எல்லாருக்கும் பிரதிநிதியாக இருந்து பொறுப்பேற்றுக் காரியங்கள் செய்யவேண்டும்.

சொத்து வகைகள்

இந்துச் சட்டத்தில் இருவகைச் சொத்துகள் உண்டு. ஒன்று பங்குரிமைச் சொத்து; மற்றொன்று தனிச் சொத்து. பங்குரிமைச் சொத்தை, பரம்பரைச் சொத்து என்றும் பரம்பரைச் சொத்து இல்லாத கூட்டுக் குடும்பச் சொத்து என்றும் மேலும் இருவகையாகப் பிரிக்கலாம்.

இங்கு பரம்பரைச் சொத்து எனப்படுவது தந்தை, தந்தை வழிப் பாட்டன், அவனுடைய தந்தை இவர்களிடமிருந்து ஒருவன் பெறுவதாகும். அவனுடைய வழித் தோன்றல்கள் அப் பரம்பரைச் சொத்தில் பிறப்பு வழி உரிமை பெறுகிறார்கள். எனவே பரம்பரைச் சொத்துக்கு அவன் முழு உரிமையாளனாக இருந்தாலும்கூட வழித் தோன்றல்கள் இருக்கையில் அவ் வுரிமைக்குக் கட்டுப்பாடுகள் நேர்ந்துவிடுகின்றன. அவன் முறையற்ற உரிமை மாற்றம் செய்தால் அவனுடைய வழித் தோன்றல்கள் அதைத் தடுக்கலாம். ஆனால் அவன் மூன்று தலைமுறைக்கு அப்பாலுள்ள பாட்டனிடமிருந்து அதைப் பெற்றிருந்தால் அதைப் பரம்பரைச் சொத்தாகக் கொள்ளவேண்டியதில்லை. அதை அவன் விருப்பம் போல் உரிமை மாற்றம் செய்து கொள்ளலாம். அவனுடைய மகன் அதைத் தடை செய்ய முடியாது. அவனுக்கு மகனோ, பேரனோ, கொள்ளுப் பேரனோ இல்லாமல் இருந்தால், வேறு உறவினர்கள் இருந்தாலும் தன்னிடம் வந்து சேர்ந்த பரம்பரைச் சொத்தைத் தன்னுடைய விருப்பம் போல் உரிமை மாற்றம் செய்யலாம்.

தாய்வழிப் பாட்டனிடமிருந்து ஒருவனுக்கு வரும் சொத்து பரம்பரைச் சொத்தா என்பதில் முன்பு நீதிமன்றங்களுக்கிடையே மாறுபட்ட கருத்துகள் இருந்தன. பிரிவி கவுன்சில் (Privy Council) Atar *Vs* Thukar (35 I. A. 206) வழக்கில் தாய்வழிப் பாட்டனிட

மிருந்து ஒருவனுக்கு வருவது பரம்பரைச் சொத்து அல்ல; தந்தை வழி மூதாதையரிடமிருந்து வருவதுதான் பரம்பரைச் சொத்து என்று தீர்ப்பு வழங்கியது. இந்தத் தீர்ப்பே இறுதித் தீர்ப்பாக இருந்திருந்தால் பிரச்சினை எதுவும் கிடையாது. ஆனால், Venkayamma *Vs* Venkataraman (25M 678) வழக்கில் பிரிவி கவுன்சில், மகளுடைய மகன் தாய்வழிப் பாட்டனின் சொத்தை எஞ்சுநர் உரிமையாகப் பெற்றது பரம்பரைச் சொத்தே என்று தீர்ப்பு வழங்கியது. பிரிவி கவுன்சில் 'பரம்பரைச் சொத்து' என்று குறிப்பிட்ட வாசகத்தால் சென்னை உயர்நீதிமன்றம்[3] அதை ஒட்டியும் அலகாபாத் உயர்நீதிமன்றம்[4] அதை வெட்டியும் தங்கள் முன் இருந்த வழக்குகளில் தீர்ப்பளித்தன. பிரிவி கவுன்சில் 'பரம்பரைச் சொத்து' என்பதை அதன் சரியான பொருளில் கூறவில்லை என்பது அலகாபாத் உயர்நீதிமன்றத்தின் கருத்து. பின்னர், பம்பாய் உயர்நீதிமன்றமும், பாட்னு உயர்நீதிமன்றமும் அலகாபாத் உயர்நீதிமன்றத்தைப் பின்பற்றின. ஆனால், இன்னொரு வழக்கில், சற்று மாறுபட்ட சூழ்நிலை உள்ள வழக்கில், பாட்னு உயர்நீதி மன்றம் சென்னை உயர்நீதிமன்றத்தை ஒட்டித் தீர்ப்பு வழங்கியது. நல்ல வேளையாக இந்தக் குழப்பங்களுக்கெல்லாம் பிரிவி கவுன்சிலே முற்றுப்புள்ளி வைத்தது. Muhammad Hussain Khan *Vs* Babu Kisuva Nandan Sabai (46 M.L.W.I.) என்னும் வழக்கில் பரம்பரைச் சொத்து என்பது தந்தை வழியில் மூன்று தலைமுறை வரை உள்ள மூதாதையரிடமிருந்து ஒருவன் பெறுவது; தாய்வழிப் பாட்டனின் சொத்து அதை அடைபவனின் தனிச் சொத்தாகும். அதில் அவனுடைய மகனுக்கு பிறப்பின் வழியே உரிமை கிடையாது என்று பிரிவி கவுன்சில் தீர்ப்பு வழங்கியது.

ஆகவே பரம்பரைச் சொத்து என்பது தந்தை, அவருடைய தந்தை (பாட்டன்), பாட்டனின் தந்தை ஆகியோரிடமிருந்து ஒருவனுக்கு வருவதாகும். மூன்று தலைமுறைக்கு அப்பாலுள்ள தந்தை வழிப்பாட்டனின் சொத்தோ, தாய்வழி வருவதோ, அல்லது பிற சகோதரர்கள், உறவினர்களிடமிருந்து வருவதோ பரம்பரைச் சொத்தாகாது. ஆனால், ஒருவன் தனக்குத் தனியாகக் கிடைத்த சொத்தைக் கூட்டுக் குடும்பத்தில் சேர்த்துக்கொண்டு, அதைக் கூட்டுக் குடும்பச் சொத்தாக நடத்தலாம். அதற்குத் தடை கிடையாது. பரம்பரைச் சொத்தின் வருமானத்திலிருந்தோ, அதை விற்ற இலாபத்தாலோ, அதன் வழியாகவோ வரும் சொத்து யாவும் கூட்டுக் குடும்பத்தையே சேரும். கூட்டுக் குடும்பத்தைச் சேர்ந்த

[3] Vythinatha *Vs* Yeggaia 27M. 382.

[4] Jamna Prasad *Vs* Ram Pratab 29A. 667.

வர்கள் கூட்டு முயற்சியால், பரம்பரைச் சொத்தின் உதவியின்றிச் சேர்க்கும் சொத்து கூட்டுக் குடும்பச் சொத்தாகவே ஊகிக்கப் படும். ஆனால், அந்தக் கூட்டு முயற்சியில் சிலர் மட்டுமே சேர்ந்து சிலர் சேராது இருந்தால், அவ்வாறு எண்ண முடியாது. மேலும், கூட்டுக் குடும்பச் சொத்தாக எண்ணும் நோக்கம் சம்பந்தப்பட்டவர்களுக்கு இருக்க வேண்டும்.

கூட்டுக் குடும்பத்தில் உள்ள ஒரு நபர் தான் தனியாகச் சம்பாதித்த சொத்தைக் கூட்டுக் குடும்பச் சொத்தோடு சேர்த்துக் கொள்ளலாம். அப்போது அவன் தனிச் சொத்து என்று கருதும் உரிமையைத் தான் விட்டுவிட்டதை உலகுக்குத் தெளிவாகக் காட்ட வேண்டும். தனிச் சொத்தையும் கூட்டுக் குடும்பச் சொத்தையும் ஒன்றாகப் பதிவு செய்ய வேண்டிய அவசியம்கூடக் கிடையாது. ஆனால், ஒரு தந்தை தான் சம்பாதித்த சொத்தை வளர்ந்து விட்ட மகனின் நலத்திற்குப் பயன்படுத்துவதைக் கொண்டோ, மகனைத் தங்குதடையின்றி அனுபவிக்கச் சொல் வதைக் கொண்டோ, அவர் தன் தனிச் சொத்தைக் கூட்டுக் குடும்பச் சொத்தாக கருதுகிறார் என்று ஊகிப்பது சரியன்று.[5] ஆகவே பாச உணர்ச்சியால் தான் சம்பாதித்த தனிச் சொத்தை மற்றவர்கள் அனுபவிக்கக் கொடுப்பது, தன் தனிச் சொத்தைக் கூட்டுக் குடும்பச் செத்தாகக் கருதுவதாகாது. இரண்டு சொத்தை யும் இணைத்து, தனிச் சொத்தில் இருக்கும் உரிமையை விட்டு விட்டதை அழுத்தந்திருத்தமாக வெளிப்படுத்த வேண்டும்.

தந்தை தானாகச் சம்பாதித்த சொத்தை மகனுக்குக் கொடை யாகக் கொடுத்துவிட்டால், மகனுடைய கையில் அச் சொத்து பரம்பரைச் சொத்தாகக் கருதப்படுமா அல்லது அவனுடைய தனிச் சொத்தாகக் கருதப்படுமா என்பது ஒரு கேள்வியாக இருந்தது. இந்தியாவில் உள்ள பல்வேறு நீதிமன்றங்களுக்கிடையே இது குறித்துக் கருத்து மாறுபாடுகள் இருந்தன. அலகாபாத் உயர்நீதி மன்றம்[6] 'தனிச் சொத்து, மகன் தானாகச் சேர்த்துக் கொண்ட சொத்து' என்றது. கல்கத்தா[7] உயர்நீதிமன்றமும் பாட்னா உயர் நீதிமன்றமும் பரம்பரைச் சொத்து என்றன. ஆனால் உச்ச நீதி மன்றம் Arunachala Mudaliar *Vs* Murugananda (A.I.R, 1953. Sec. 495) வழக்கில் எல்லா உயர்நீதிமன்றத் தீர்ப்புகளையும், இந்து தர்ம சாஸ்திர நூல்களையும் பரிசீலனை செய்து, தந்தை கொடை

[5] Peria Karuppan *Vs* Arunachalam 50M. 582.

[6] Parsotham *Vs* Jankibai 29A 254.

[7] Muddu Gopal *Vs* Ram Baksh 6 W.R. 71.

யாகக் கொடுத்த சொத்தின் இயல்பு அவருடைய அடிப்படைக் கருத்தில் அமைந்தது என்று தீர்ப்புக் கொடுத்தது.

அரசாங்கம் ஒருவனுக்கு மானியமாகச் சொத்துக் கொடுத்தால், அது கூட்டுக் குடும்பச் சொத்தாகாது. கொடுக்கப்பட்டவனின் தனிச் சொத்தாகும். அந்த மானியம் புது மானியமாகவும் இருக்கலாம் அல்லது அரசாங்கம் ஏற்கெனவே எடுத்துக் கொண்டதைத் திருப்பித் தருவதாகவும் இருக்கலாம். ஆனால், அரசாங்கம் குடும்பத்தின் நன்மைக்காகத் தந்தாலோ, குடும்பத்தில் உள்ளவர்கள் கூட்டுச் சொத்தாகக் கருதினாலோ, கூட்டுச் சொத்தாக கருதும் வழக்கம் இருந்தாலோ, அரசாங்கம் தரும் மானியம் கூட்டுக் குடும்பச் சொத்தாகவே கருதப்படும். குடும்பத்தின் சொத்திலிருந்து அரசாங்கத்தின் நன்மைக்கும், உதவிக்கும் பணம் செலவு செய்ததால், அரசாங்கம் மகிழ்ந்து கொடுக்கும் மானியம் கூட்டுக் குடும்பச் சொத்தேயாகும்.[8]

தனிச் சொத்து (Separate Property)

கூட்டுக் குடும்பத்தில் பங்குரிமையராக இருக்கும் ஒருவன் தனியாகவும் சொத்து வைத்துக்கொள்ள முடியும். 'தந்தையின் நிலச் சொத்துக்குக் குந்தகம் ஏற்படாத வகையில், நண்பனிடமிருந்தோ, திருமணத்தின்போது கொடையாகவோ ஒருவன் பெறும் சொத்து மற்ற வாரிசுரிமை உடையவர்களுக்கு உரியதன்று' என்று யாஞ்ஞவல்கியமும் கூறுகிறது. தனிச் சொத்தை ஒருவன் தன் விருப்பம் போல் கொடுக்கலாம்; பயன்படுத்தலாம். அதில் பிற பங்குரிமையருக்கு உரிமை கிடையாது.

ஒருவனுக்குக் கீழ்க்காணும் முறைகளில் தனிச் சொத்துக் கிடைக்கலாம்.

தடையுள்ள மரபுரிமை

தந்தை வழியில் மூன்று தலைமுறைக்கு அப்பாற்பட்டவரிடமிருந்து ஒருவனுக்குக் கிடைக்கும் சொத்து தனிச் சொத்தாகும். தாய் வழியிலோ அல்லது பிற உறவினர்களின் சொத்தோ ஒருவனுக்கு கிடைத்தால் அதுவும் தனிச் சொத்தாகும்.

கொடை

தந்தையிடமிருந்தோ, அவர் வழி உறவினரிடருந்தோ, பிற உறவினரிடமிருந்தோ ஒருவனுக்குக் கொடையாகச் சொத்துக்

[8] Hur Purshad *Vs* Sheo Dayal, 3, I.A. 259.

கிடைக்கலாம். அச் சொத்து அவனுடைய தனிச் சொத்தாகும். திருமணத்தின்போது பெண் வீட்டாரிடமிருந்து கிடைக்கும் சொத்தும், அதை ஒட்டி நண்பர்களிடமிருந்தும் பிறரிடமிருந்தும் கொடையாக கிடைப்பதும் தனிச் சொத்தாகும். திருமணத்தை முன்னிட்டுக் கூட்டுக் குடும்பத்தில் உள்ளவர்களேகூடக் கொடை தரலாம். கொடையாகத் தந்தபின் அது கூட்டுக் குடும்பச் சொத்தாக இருக்காது. வாங்கியவனின் தனிச் சொத்தாகிவிடும்.

இழந்த சொத்தை மீட்டல்

குடும்பத்திற்குச் சொந்தமான சொத்து எப்படியோ அவர்கள் கையைவிட்டுப்போய் இன்னொருவருக்குச் சொந்தமாக இருக்கலாம். அந்தக் குடும்பத்தினர் அதை மீட்க எண்ணாமல் விட்டிருக்கலாம். பங்குரிமையுடைய ஒருவன் மற்றவர்கள் துணையின்றித் தானே முயன்று, இழந்த சொத்தை மீட்டுக்கொண்டு வருவானானால், அச் சொத்தில் தனக்குரிய பங்கு அல்லாமல் தன் செயலுக்குப் பரிசாக நான்கில் ஒரு பகுதியை எடுத்துக்கொள்ளலாம். அது அவனுடைய தனிச்சொத்தாகும். இழந்த சொத்தைத் தந்தை மீட்டால் சொத்தின் முழு உரிமையும் தந்தைக்கே செல்லும்.

கூட்டுக் குடும்பச் சொத்துக்குக் குந்தகம் இல்லாமல் சொத்து சேர்த்தல்

கூட்டுக் குடும்பத்தின் சொத்துக்கு எந்த வகையிலும் குந்தகம் நேராமல், அதன் உதவி இல்லாமல் ஒருவன் சேர்க்கும் சொத்து அவனுடைய தனிச் சொத்தாகும். கடன் வாங்கி ஒருவன் வாங்கும் சொத்து, விபத்தில் இறக்க அதனால் ஈடாகக் கிடைக்கும் பணம், ஈட்டுறுதிப் (Insurance) பணம், வருங்கால சேமநிதி ஆகியவை யாவும் ஒருவனின் தனிச் சொத்தாகும். ஒரு வழக்கில் கூட்டுக் குடும்பத்தின் நிதியிலிருந்து, அதன் நிர்வாகி பங்குரிமையருக்கு அவனுடைய சொந்த உபயோகத்திற்காக நிதி கொடுக்க, அதை அவர் ஆயுட் காப்பிற்காகப் பயன்படுத்திக் கொண்டார். அப் பணம் கூட்டுக் குடும்பப் பணமாகாது; அவனுடைய தனிச் சொத்தேயாகும் என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.[9]

அறிவால் அடைதல்

ஒருவன் குடும்பச் சொத்தின் செலவில் கல்வியோ, வேறு தொழிலோ பெற்றால் அதனால் கிடைக்கும் வருமானமும், சொத்தும் கூட்டுக் குடும்பத்துக்கே உரியது என்று மிதாக்ஷர நூல்கள் கூறு

[9] Bengal Insurance and R.P. Co. *Vs* Nelayammal 1937 M.W.N. 303. 1937 M. 990.

கின்றன. இது சம்பந்தமாகச் சில தீர்ப்பு வழிச் சட்டங்கள் (Case Laws) உண்டு. ஒருவர் தம்முடைய குடும்பத்தின் மூலம் சாதாரணக் கல்வியே பெற்றார். பின்னர் வியாபாரியாகி, தரகராகி ஏராளமாகச் சொத்து சேர்த்தார். அவருடைய வழக்கில் பிரிவி கவுன்சில் அவர் குடும்பம் தந்த கல்வியின் அடிப்படையில் இந்தச் சொத்துகளைச் சேர்க்கவில்லை; அவர் பெற்ற கல்வி ஒன்றும் சிறப்பானதன்று. தன்னுடைய மனத்திட்பத்தாலும், திறமையாலும், தனி முயற்சியாலும் சொத்துச் சேர்த்தார்; அது தனிப்பட்ட சொத்தேயாகும் என்று தீர்ப்பளித்தது.[10] இன்னொரு வழக்கில் சம்பந்தப்பட்டவர் ஓர் உயர் அதிகாரி. அவர் குடும்பத்தின் செலவில் இங்கிலாந்தில் படித்து ஐ. சி. எஸ். அதிகாரியானார். குடும்பச் செலவில் படித்து உயர்ந்ததனால் அவருடைய சம்பளம் கூட்டுக் குடும்பச் சொத்தாகவே கருதப்பட வேண்டும் என்று நீதி மன்றம் தீர்ப்பளித்தது.[11] ஒருவன் கூட்டுக் குடும்பச் சொத்தின் உதவியால் கல்வி பயின்று தொழில் புரிந்து வருமானம் பெற்றால், அது குடும்பச் சொத்தா அல்லது தனிச் சொத்தா என்னும் கேள்விக்குத் தீர்ப்பு அவன் பெற்ற கல்வி சிறப்புக் கல்வியா அல்லது சாதாரணக் கல்வியா என்பதை பொறுத்து அமைகிறது. நீதிமன்றத் தீர்ப்புகளிடையே இது சம்பந்தமாக எழுந்த வேறுபாடுகள் காரணமாக 1930ஆம் ஆண்டு 'இந்து கல்விப் பயன்கள் சட்டம்' (Hindu Gains of Learning) கொண்டு வரப்பட்டது. குடும்பத்தின் முழுச் செலவிலிருந்தோ அதன் ஒரு பாதிச் செலவிலிருந்தோ ஒருவன் கல்வி பெற்றான் என்பதற்காகவோ, ஒருவனும் அவனுடைய குடும்பமும் கூட்டுக் குடும்பத்தால் படிக்கும் காலத்தில் பராமரிக்கப்பட்டனர் என்பதற்காகவோ அவனுடைய சொத்து கூட்டுக்குடும்பச் சொத்தாக இருக்க வேண்டியதில்லை என்று அச் சட்டம் நிலைமைகளைத் தெளிவாக்கியது.

கூட்டுக் குடும்பச் சொத்து, சுயசம்பாத்தியச் சொத்து பற்றிய துணிபுகள்

ஒரு குடும்பம் கூட்டாக இருப்பதாலே சொத்தும் கூட்டாக இருக்கும் என்ற துணிபு (Presumption) சரியானதன்று. ஒரு குடும்பம் கூட்டுக் குடும்பமாக இருப்பதைக் கொண்டு அதன் உறுப்பினர் வைத்திருக்கும் சொத்து கூட்டானது என்று முடிவு செய்யலாகாது.[12] ஒரு சொத்து கூட்டுக் குடும்பச் சொத்தாக ஒப்புக கொள்ளப்பட்டிருந்தால், அது கூட்டுக் குடும்பச் சொத்து அல்ல என்று நிரூபிக்கப்படும்வரைக் கூட்டுக் குடும்பச் சொத்து என்ற

[10] Metharam *Vs* Rewachand 45C 666.

[11] Gokulchand *Vs* Hukumchand 2 Lab. 40.

[12] Krishnakumar Sintha *Vs* Kayastha Pathasala A.I.R. 1966 All 370.

துணிபே நிலைத்து நிற்கும். பாகப்பிரிவினை நடந்துவிட்டது என்பது நிரூபிக்கப்பட்டு விட்டாலோ, அல்லது ஒப்புக்கொள்ளப்பட்டு விட்டாலோ, பாகப்பிரிவினைக்கு பின்னரும் சொத்தின் ஒரு பகுதி மட்டும் தொடர்ந்து கூட்டுக் குடும்பச் சொத்தாகவே இருந்து வருகிறது என்று யாராவது சொன்னால், அப்படிச் சொல்பவர்தான் அதை நிரூபிக்க வேண்டும்[13] கூட்டுக் குடும்பத்தில் உறுப்பினராக இருக்கும் ஒருவர் அடையும் சொத்து, கூட்டுக் குடும்பச் சொத்து என்பது சரியான துணிபாகாது. கூட்டுக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் தன் பெயரில் சொத்து வாங்கினால் அச் சொத்து கூட்டுக் குடும்பச் சொத்தா அல்லது அவருடைய தனிச் சொத்தா என்பதை அவருக்கு அச் சொத்தை வாங்கக் கிடைத்த பணம் கூட்டுக் குடும்பச் சொத்திலிருந்து வந்ததா அல்லது அவருடைய சொந்தச் சொத்திலிருந்து கிடைத்ததா என்பதைக் கொண்டு தீர்மானிக்க வேண்டும். ஒருவன் அடைந்த சொத்து கூட்டுக் குடும்பச் சொத்து என்று சொல்லும்போது, கூட்டுக் குடும்பத்திற்குச் சொத்து இருந்தது என்பதையும், அச் சொத்தின் வருமானத்திலிருந்தே அவன் சொத்தை அடைந்திருக்க வேண்டும் என்பதையும் நிறுவ வேண்டும். அப்போது கூட்டுக் குடும்பத்தின் உட்கருவாக (Nucleus) இருக்கும் சொத்து அல்லது அதன் வருமானம் அவன் சொத்தை வாங்குவதற்கோ அல்லது அடைவதற்கோ போதுமானது என்பதையும், அது அவனுக்குக் கிட்டும் வகையில் இருந்தது என்பதையும் நிறுவிக் காட்டவேண்டும். கூட்டுக் குடும்பத்தின் உட்கருவாக அமைந்திருக்கும் சொத்து அல்லாமல் வேறு வருமானம் கிடையாது என்ற உண்மை தெளிவாக்கப்பட்டுவிட்டால், கூட்டுக் குடும்பத்தின் உட்கருவான சொத்து அவன் சொத்தை அடைவதற்குப் போதுமானது என்ற துணிபு மேலோங்கும்.[14] ஆனால், கூட்டுக் குடும்பத்தில் உட்கருவாக அமைந்திருக்கும் சொத்து, அதன் உறுப்பினர் ஒருவர் வேறு சொத்தை அடைவதற்குப் போதுமானது என்ற துணிபு எல்லாவற்றிற்கும் பொருந்தாது. எடுத்துக்காட்டாக கூட்டுக் குடும்பத்தின் சொத்து அனுபவிப்பதற்கு வசதியாக இருக்கட்டும் என்ற ஏற்பாட்டின்படி, உறுப்பினர் ஒருவருக்கு ஒரு பகுதிச் சொத்து தனியாக ஒதுக்கப்பட்டிருந்து. அதிலிருந்து அவர் பிற சொத்தை அடைந்திருந்தால், அவர் அடைந்த சொத்து கூட்டுக் குடும்பச் சொத்தாகக் கருதப்படமாட்டாது.[15] மனைவி பெயரில் ஓர் இந்து சொத்து வாங்கியிருந்தால், மனைவியால் எவ்வாறு சொத்து வாங்க

[13] Vinayak *Vs* Datto (1901) I.L.R 25 Bom. 367.

[14] Srinivas *Vs* Narayan A I.R. 1954 S.C. 709.

[15] Nagaya Sami *Vs* Kochadai A.I.R. 1969 Mad. 329.

முடிந்தது என்பது நிரூபிக்கப்படும் வரை அச் சொத்து பினுமி யாகவே எண்ணப்படும்.

நிர்வாகியின் அதிகாரங்களும், உரிமைகளும்

கூட்டுக் குடும்பத்தின் சொத்தைக் கவனித்துக் கொள்பவர் நிர்வாகியாவார். அவரைக் 'கர்த்தா' என்றும் சொல்வர். அவர் தான் குடும்பத்தின் தலைவராக இருந்து சகலத்தையும் பார்த்துக் கொள்வார். கர்த்தா தந்தையாகவும் இருக்கலாம் அல்லது குடும்பத்தில் உள்ள மூத்த ஆண்மகனாகவும் இருக்கலாம். தந்தை குடும்பத்தின் தலைவராகப் பொறுப்பேற்கும் நிலையில் வேறுயாரும் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள முடியாது. குடும்பத்தில் உள்ள மூத்த ஆண்மகன், தான் நிர்வாகியாக இருக்கும்போது தன் உரிமையைத் துறந்து, அடுத்தவனுக்கு அந்தப் பொறுப்பைத் தரலாம். அப்போது புதிதாகப் பொறுப்பேற்கும் இளையவன் 'கர்த்தா' என்று அழைக்கப்படுவான்.

குடும்பத்தின் வரவு செலவுகளை நிர்வாகியே கவனிப்பார். வருமானம் முழுவதையும் தன்னுடைய பொறுப்பிலேயே வைத்திருப்பார். சிக்கனமாகச் செலவு செய்ய வேண்டும் என்றோ அல்லது சேமிக்க வேண்டும் என்றோ யாரும் அவரைக் கட்டுப்படுத்த முடியாது. சொத்துக்கு அவர் பொறுப்புரிமையரும் (Trustee) அல்லர். குடும்பத்தின் நல்வாழ்வை முன்னிட்டு அவர் செய்யும் செலவுகளில், மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் அவருக்குப் பூரண சுதந்திரம் உண்டு. திருமணத்திற்காகவோ, குடும்பப் பராமரிப்புக்காகவோ, அல்லது வேறு மதச் சடங்குகளுக்காகவோ அவர் செலவு செய்யும் போது, அவர் எந்தக் கட்டுப்பாட்டிற்கும் உட்பட வேண்டுதில்லை.

குடும்பத்தின் நன்மைக்காகவும், கூட்டுக் குடும்பத்தின் வணிகத்திற்காகவும் நிர்வாகி கடன் வாங்க உரிமை உண்டு. நிர்வாகி குடும்பத்தின் நலனுக்காகப் புரோநோட்டு எழுதிக் கொடுத்தாலும் மற்றவர்களை அது பாதிக்காது; கூட்டுக் குடும்பத்தில் உள்ள மற்றவர்கள்மீது அதற்காக வழக்குத் தொடர முடியாது. புரோநோட்டு எழுதிக் கொடுத்தவர்மட்டுமே பாதிக்கப்படுவார். இந்துச் சட்டப்படி நிர்வாகி அல்லது தந்தை பட்ட கடனுக்குச் சொத்துரிமை உடைய கூட்டுக் குடும்பத்தினர் பொறுப்பேற்க வேண்டும் என்பது புரோநோட்டுக்குப் பொருந்தாது. அதில் யார் பெயர் இல்லையோ அவர்கள் மீது வழக்குத் தொடர முடியாது ஆனால், மற்றவர்கள் பெயர் அதிலே காணப்பட்டு அவர்களுக்கும் பொறுப்பு இருப்பது கூறப்பட்டிருந்தால் வழக்குத் தொடரலாம்.

ஒப்பந்தம் செய்து கொள்ளவும், கடனை அடைக்கவும், வரும் பணத்தை வாங்கிக் கொள்ளவும், சமரசம் செய்து கொள்ளவும் நிர்வாகிக்கு அதிகாரம் உண்டு. குடும்பம் வியாபாரமோ வேறு தொழிலோ செய்யும்போது நிர்வாகிக்கு இந்த அதிகாரம் அவசியமாகிறது. குடும்பத்தின் நன்மையை முன்னிட்டு நிர்வாகி சமரசம் செய்து கொண்டால், அது குடும்பத்தில் உள்ள அனைவரையும் கட்டுப்படுத்தும். உரிமை வயது அடையாதவர்களுக்கும் அது உரியதாகும்.

நிர்வாகிக்குக் கூட்டுக் குடும்பச் சொத்தை உரிமை மாற்றம் செய்ய அதிகாரம் உண்டு. ஆனல், அது சட்டப்படி ஏற்பட்ட தேவைக்கோ அல்லது குடும்பத்தின் நலன்களை முன்னிட்டோ இருக்க வேண்டும். அப்படி உரிமை மாற்றம் செய்தால் அது குடும்பத்தில் உள்ள உரிமை வயது அடைந்தவர் அடையாதவர் அனைவரையும் கட்டுப்படுத்தும். கூட்டுக் குடும்ப வியாபார விஷயத்தில் மேற்கொண்டு வியாபாரத்தை விரிவாக்குவதற்காக அல்லது ஏற்பட்ட கடனை அடைப்பதற்காகப் பணம் சேகரிக்கும் உரிமை நிர்வாகிக்கு உண்டு.

கூட்டுக் குடும்பத்தில் தகராறுகள் எழுந்தால் அதை இசைவுத் தீர்ப்புக்கு (Arbitration) விட நிர்வாகிக்கு அதிகாரம் உண்டு. இசைவுத் தீர்ப்பின் முடிவு அனைவரையும் கட்டுப்படுத்தும்.

பங்குரிமையரின் உரிமைகள் (Rights of Coparceners)

கூட்டுக் குடும்பத்தில் பிறக்கும் ஒன்றினுல்மட்டுமே ஓர் ஆண்மகனுக்குப் பங்குரிமைச் சொத்தில் உரிமை ஏற்பட்டுவிடும். தந்தைக்குப் பின்னுல்தான் மகன் என்ற நியதி இதில் கிடையாது. ஆனுல், ஒருவன் மூதாதையரிடமிருந்து மூன்று தலைமுறை தள்ளிப் போயிருந்தால், அப்போது பங்குரிமையில் உரிமை கொண்டாட முடியாது.

ஒரு பங்குரிமையர் ஆண் குழந்தை இல்லாமல் இறந்து விட்டால், சொத்தில் அவனுக்கு இருக்கும் உரிமை அவனுடைய வாரிசுகளுக்குச் சொல்லாது; மாருக எஞ்சுநர் உரிமைப்படி மற்றப் பங்குரிமையர்கள் அடைவார்கள். ஒருவன் பித்தனுக மாறி விட்டாலும்கூடத் தொடர்ந்து பங்குரிமையராகவே இருப்பான். பித்துநிலை பங்குரிமையர் என்ற தகுதியை அகற்றிவிடாது. ஆனுல் அப்போது அவன் பிரிவினை கேட்கமுடியாது. இதுதான் அவனுக்கு இருக்கும் தகுதியின்மை. பங்குரிமைச் சொத்தால் ஏற்படும்

பயனின் அளவு கூட்டுக் குடும்பத்தில் ஒருவர் இறக்கும்போது அதிகரிக்கும்; இன்னொருவர் பிறக்கும் போது குறையும்.

ஒவ்வொரு பங்குரிமையருக்கும் பாகப்பிரிவினை கோரும் உரிமை உண்டு. ஆனால், மராட்டியத்திலும் பஞ்சாபிலும் தந்தை தன்னுடைய தந்தையுடனோ அல்லது சகோதரர்களுடனோ பங்குரிமையராகக் கூட்டுக் குடும்பம் நடத்தினால், மகன் தந்தையின் சம்மதம் இல்லாமல் பாகப் பிரிவினை கோர முடியாது. பாகப் பிரிவினை என்பது அத்தனை பங்குரிமையரும் உடன்பட்டுத்தான் ஏற்பட வேண்டும் என்ற அவசியமில்லை. பாகப்பிரிவினையை விரும்பும் பங்குரிமையன் தன் எண்ணத்தை வெளிப்படுத்தினாலே போதுமானது. அதாவது மற்றவர்களுக்கு இன்னார் பாகப் பிரிவினையை விரும்புகிறார்கள் என்பது தெரியவேண்டும். ஒருவர் பங்குரிமை அமைப்பிலிருந்து போய் விட்டாலும் மற்றவர்கள் தொடர்ந்து இருக்கலாம். ஒருவர் போய்விட்டதால் மற்றவர்களும் போய்விட்டதாக அனுமானிக்க வேண்டியதில்லை. சொத்தை முறையாக அளந்து கணக்கிடுவதுதான் பாகப்பிரிவினை என்று கருத வேண்டியதில்லை. ஒருவனின் பங்கு எவ்வளவு என்பதைத் தீர்மானித்துவிட்டாலே பாகப்பிரிவினை முற்றுப் பெற்றுவிடும்

கூட்டுக் குடும்பத்தில் எல்லாப் பங்குரிமையரும் எல்லாச் சொத்தையும் கூட்டாக அனுபவிக்கலாம். ஒவ்வொரு பங்குரிமையரின் மனைவியும் குழந்தைகளும் கூட்டுக்குடும்பச் சொத்திலிருந்து பராமரிக்கப்பட வேண்டும். இன்னாருக்கு இவ்வளவு பங்கு என்ற பாகுபாடு இல்லாததால் அத்தனை பேரும் சமமாகவே பராமரிக்கப் படுவர். ஒரு பங்குரிமையருக்குக் குழந்தையே இல்லாமல் இருக்கலாம்; இன்னொருவருக்கு ஒரு குழந்தை மட்டுமே இருக்கலாம்; மூன்றாமவருக்குப் பல குழந்தைகள், அதுவும் பெண்களாக இருக்கலாம்; ஆனால் கூட்டுக் குடும்பத்தின் வருமானத்திலிருந்து அத்தனை பேரும் சமமாகவே பராமரிக்கப்படுவார்கள். கூட்டுக் குடும்பத்தில் வசதியை முன்னிட்டு ஒவ்வொருவரும் ஒவ்வொரு உடைமையை வைத்திருக்கலாம். அதில் தவறில்லை.

ஒரு பங்குரிமையர் சட்டத்திற்குப் புறம்பான, முறையற்ற, சொத்துக்குக் குந்தகம் விளைவிக்கக்கூடிய செயலைச் செய்வாரானால், மற்றப் பங்குரிமையர்கள் நீதி மன்றத்தை அணுகி அதைத் தடுக்கலாம். ஆனால், பல பங்குரிமையர்கள் இருக்கும் குடும்பத்தில் ஒருவர் செய்யும் அதிகார பூர்வமற்ற செயலைத் தடுக்க இன்னொருவர் தன் அளவில் மட்டும் வழக்குப்போட முடியாது. மற்றவர்களுக்காகவும் சேர்த்துத்தான் வழக்குப் போட முடியும். ஆனால்,

ஒரு வழக்கில் கூட்டுக் குடும்பத்திற்கு எதிராகத் தீர்ப்புச் சொல்லப் பட்டிருந்தால், பிரதிநிதியாக இருந்து வழக்கை நடத்திய நிர்வாகி எதுவும் செய்யாது வாளா இருக்கும்போது பாதிக்கப்பட்ட பங்குரிமையர் மேன்முறையீடு (appeal) செய்துகொள்ளலாம்.[16]

கூட்டுக் குடும்பத்தின் நிர்வாகியோ, தந்தையோ, வேறு பங்குரிமையரோ அதிகார பூர்வமற்ற மாற்றுக்கம் (Transfer) செய்தால் பிற பங்குரிமையர் நீதிமன்றத்தை அணுகலாம். எல்லாப் பங்குரிமையரும் மாற்றுக்கத்தை ஆதரிக்கிறார்கள் என்பது, விரும்பாதவனைக் கட்டுப்படுத்தாது. தாயின் வயிற்றில் இருக்கும் மகனும் பிறந்த மகன் போலவே இது விஷயத்தில் கருதப்படுவான். (மாற்றுக்கம் பற்றி விரிவாக அடுத்த இயலில் (இயல்-7) கூறப்பட்டிருக்கிறது.)

ஒவ்வொரு பங்குரிமையரும் தன் முயற்சியால் சொத்து சேர்த்துத் தனியாக வைத்துக் கொள்ளலாம். கிளைவழி உரிமை இறக்கத்தின் (Collateral Succeession) மூலம் ஒருவனுக்குக் கிடைக்கும் சொத்து அவனுடைய தனிச் சொத்தாகும். தனிச் சொத்தில் அவனுக்கு இருக்கும் உரிமை முழு உரிமையாகும்.

16 Ambi *Vs* Kelan 46 M.L.J. 375.

7. கூட்டுக் குடும்பத்தில் கடனும் மாற்றுக்கமும்

(DEBTS AND ALIENATIONS IN JOINT FAMILY)

ஒருவன் தான் வாங்கிய கடனை மட்டுமன்று, சிற்சில சமயங்களில் மற்றவர்களின் கடனையும் அடைக்க நேரிடலாம். தன்னுடைய முகவர் (Agent) தனக்காகக் கடன் வாங்கியிருந்தால், அதை அடைக்க வேண்டியது ஒருவனுடைய சட்டக் கடமையாகும். யாருடைய சொத்தை ஒருவன் அடைந்தானோ அவருடைய கடனை அடைப்பது தார்மிகக் கடமையாகும். பாவத்திற்கு அஞ்சி ஒருவனைக் கடனிலிருந்து மீட்பது மதக் கடமையாகும். வாரிசுகளுக்கும், கொடை பெறுபவர்களுக்கும் தார்மிகக் கடமை உண்டு. தந்தையின் கடனை மகன் அடைப்பது மதக்கடமையாகும்.

இலாபம் அடைபவன் அதனால்வரும் சுமையையும் சுமக்க வேண்டும். எனவே, ஒருவன் ஒருவருடைய சொத்தை அடைந்தால் அவருடைய கடனையும் தீர்க்கவேண்டும். கொடை பெறுபவனும் கொடை கொடுத்தவரின் கடனை அடைக்க வேண்டும். இதில் இலாபம் அடைந்தவர்களுக்குத் தனிப்பட்ட பொறுப்புக் கிடையாது அவர்கள் தங்கள் தனிச் சொத்திலிருந்து கடனை அடைக்க வேண்டியதில்லை. அடைந்த சொத்திலிருந்தே சொத்தைத் தந்தவரின் கடனை அடைக்க வேண்டும். சொத்தைக் கொடுத்து விட்டு இறந்தவனுக்குக் கடன் கொடுத்தவர்கள் பலபேர் இருக்க, ஒருவன் சிலருக்கு மட்டுமே கடனைக் கொடுத்து விட்டுச் சிலபேருக்குக் கொடுக்காமல் இருந்தால் அது கடனை அடைத்ததாகாது. ஆனால் சிலபேரின் கடனை அடைத்தவுடனேயே, அந்தக் கடனுக்கே சொத்து போதக் கூடியதாக இருந்தால் மற்றவர்கள் கடனை அடைக்காததற்காக மற்றக் கடன்காரர்கள்

வழக்குத் தொடர முடியாது; அது மட்டுமல்ல சொத்தின் மதிப்பைக் கொண்டு கடன்காரர்களுக்கு விகிதப்படி கூடக் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் வாரிசுதாரர் உயிலைக் கண்டதைச் செயல்படுத்தும் நிறைவேற்றாளரோ அல்லது உரிமை இறக்கச் சட்டத்தில் கூறப்பட்டிருக்கும் நிர்வாகியோ அல்லர்.

ஒரு பங்குரிமையர் (Coparcerner) கடன் வைத்துவிட்டு இறந்து விட்டால் அவனுடைய தனிச் சொத்து மட்டுமல்ல பிரிவினையாகாத பங்குரிமைச் சொத்தும் கடனுக்காகப் பலியாகலாம். ஆனால், பங்குரிமையர் உயிரோடு இருந்த காலத்திலேயே கடன் கொடுத்தவர் நீதிமன்றத் தீர்ப்பாணையை வைத்து ஜப்தி செய்திருக்க வேண்டும் அல்லது அடைமானம், பிணை எதாவது வாங்கியிருக்க வேண்டும். பங்குரிமையர் உயிரோடு இருக்கையில் அப்படி ஜப்திக்கோ அல்லது அடைமானத்திற்கோ இடம் இல்லாதிருந்தால், கடன் கொடுத்தவருக்குக் கூட்டுச் சொத்தில் வேறு தீர்வுவழி இல்லை. இது ஒருவனின் தந்தையோ அல்லது பாட்டனோ அல்லது கூட்டுக் குடும்ப நிர்வாகியோ தகாத காரணங்களுக்காகக் கடன் வாங்கியிருந்தால்தான் பொருந்தும்.

கூட்டுக்குடும்பத்தின் நன்மைக்காக அதன் நிர்வாகி, மற்றவர்களையும் கட்டுப்படுத்தும் வகையில் கடன் வாங்கலாம். அந்தக் கடனைத் திருப்பிக் கொடுப்பதில் அத்தனை பங்குரிமையருக்கும் பங்கு உண்டு. ஆனால், கூட்டுக்குடும்பத்தின் நன்மைக்காகத் தான் கடன் வாங்குவதாக நிர்வாகி சொன்னால், அது சரிதானா என்பதைக் கடன்கொடுத்தவர் தெரிந்து கொண்டு கொடுக்க வேண்டும். அப்போதுதான் அவர் அத்தனை பங்குரிமையர்மீதும் வழக்குத் தொடர முடியும். குடும்பத்தின் நன்மைக்காகக் கடன் வாங்கப்பட்டிருந்தால், குடும்பத்தில் பாகப்பிரிவினை நடந்த பின்னரும் கடன் கொடுத்தவர் அத்தனை பேரையும் வழக்கில் பிணைக்கலாம். போதுமான வருமானம் வரும்போது, ஊதாரித்தனமாக நிர்வாகி செலவு செய்துவிட்டுக் கடன் கேட்கும் போது, அதுவும் குடும்பத்தின் நன்மைக்கு என்று கேட்கும்போது, எந்தவித விசாரணையும் செய்யாமல் ஒருவன் கடன் கொடுத்தால் அவனை நல்லெண்ணத்தில் (Bonafide) கொடுத்த கடன்காரராகக் கருத முடியாது.[1] ஆனால், தீரவிசாரித்து, மனநிறைவு ஏற்பட்ட பின்னர் குடும்ப நிர்வாகிக்கு ஒருவன் கடன் கொடுத்தால், பின்னர் உண்மையில் கடனுக்கு அவசியம் இல்லை என்பதோ கடன் வாங்கப்பட்ட பணம் முழுவதும் அல்லது பாதி சரியாகப் பயன் படுத்தப்

[1] Radhika *Vs* Munni 1942 A.L.W. 424.

படவில்லை என்பதோ குடும்பத்தில் உள்ள மற்றவர்களைப் பொறுப்பிலிருந்து விடுவிக்காது; கொடுக்கப்பட்ட கடனும் அவர்களைப் பொறுத்தவரையில் செல்லாது என்று ஆகாது.

மதக்கடமை

தந்தை, பாட்டன், பாட்டனின் தந்தை ஆகியோர் வாங்கிய கடனை அடைக்க வேண்டியது மகன், பேரன், கொள்ளுப்பேரன் ஆகியோரின் கடமை. இந்தக் கடமை மதக்கடமை. கடனை நற்காரியத்திற்காக வாங்கியிருந்தால்தான் அடைக்க வேண்டும். பெற்றோர் அல்லது பாட்டன்கள் பெற்ற கடனை அடைக்க வேண்டும் என்று சாஸ்திரங்கள் கூறுவதில் மதரீதியாக அர்த்தம் உண்டு. கடன் என்பது பெரிய பாவம். ஆகவே, மகனோ, பேரனோ, கொள்ளுப் பேரனோ அதை அடைக்க வேண்டும். இல்லை என்றால் கடன்பட்டவருக்கு விமோசனம் கிடைக்காது. தந்தைக்கு, பாட்டனுக்கு, கொள்ளுப்பாட்டனுக்கு விமோசனம் கிடைப்பதில் உதவ வேண்டியது மகனின், பேரனின், கொள்ளுப் பேரனின் கடமையாகும். மகனாகப் பிறந்தவன், தந்தை நரகத்திற்குச் செல்லாமல் இருக்க உதவுவது அவனுடைய தலையாய கடமை. 'தந்தையினுடைய கடன்களை யார் அடைக்கவில்லையோ அவன் கடன்காரனின் (Creditor) வீட்டில் அடிமையாக, வேலைக்காரனாக அல்லது பெண்ணாக அல்லது நான்குகால் பிராணியாக மறுபடியும் பிறப்பான்' என்பது பிரகஸ்பதியின் வாக்கு. (He who does not discharge his debts will be reborn in the house of the creditor as a slave, a servant or a woman or a quadruped.)

கடன் நியாயமான காரணத்திற்காக இல்லாமல் ஒழுக்கக்குறைவான காரணங்களுக்காக இருக்குமானால் மகன் கடனை அடைக்க வேண்டியதில்லை. தந்தைதான் அந்தக் கடனுக்குப் பொறுப்பு. அவனுடைய தனிச் சொத்தைக் கடனுக்காக ஜப்திசெய்து கொள்ளலாம். தந்தை உயிரோடு இருந்தால் அவருக்குக் கூட்டுக் குடும்பத்தில் உள்ள சொத்தை ஜப்தி செய்து கொள்ளலாம். ஆனால் தகாத காரியங்களுக்காகத் தந்தையால் கடன் வாங்கப்பட்டிருந்தால், அவர் இறந்ததற்குப் பின்னர் கூட்டுக் குடும்பச் சொத்தை ஜப்தி செய்ய முடியாது.

மகன் தந்தையின் கடனை அடைக்கும் இம் மதக்கடமை மகனின் தனிப்பட்ட பொறுப்பன்று அதாவது கூட்டுக்குடும்பத்தில் அவனுக்குள்ள சொத்தே கடனை அடைக்க உரியது. கூட்டுக் குடும்பச் சொத்து இல்லையென்றால், அவனுடைய தனிச்சொத்து எவ்வகையிலும் கடனை அடைக்க எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

மகனின் பொறுப்பு நிலை (Liability) பற்றிக் கீழ்வருமாறு நீதிபதி வாடியா கூறுகிறார்.[2]

'எப்படி இருந்தாலும் மகனின் பொறுப்புநிலை தனிப்பட்ட பொறுப்புநிலை அன்று. அது தந்தையோடு கூட்டாக இருக்கும் மகன்களுக்கும் அவர்களுடைய பங்குரிமைச்சொத்திலுள்ள பாத்தியத்தைக்குமே பெறுப்பு நிலை உரியது. தந்தையின் பெறுப்புநிலை இருக்கும் வரை மகனின் பொறுப்புநிலை இருக்கும். கடன் தந்தை அளவில் காலாவதியாகி விட்டால், மகனின் பொறுப்புநிலையும் தீர்ந்துவிடும். ஆங்கிலச் சட்டத்தில் உணர்ந்து கொண்டிருப்பது போல இது கூட்டு அல்லது கூட்டுத் தனித்தனிப் பொறுப்பு (Joint and several lialibity) அன்று.

பாகப்பிரிவினைக்குப் பின்னல் தந்தை வாங்கிய கடனுக்கு மகன் பொறுப்பாளியல்லன். ஆனுல், தந்தை பாகப்பிரிவினைக்கு முன்னுல் கடன் வாங்கி யிருந்தால் பாகப்பிரிவினைக்குப் பின்னும் மகன் எவ்வளவு சொத்தை அடைந்தானே அவ்வளவுக்கும் பொறுப்பாளி. பாகப்பிரிவினைக்குப் பின் தந்தைமீது மட்டுமே வழக்கு போட்டுத் தீர்ப்பாணை வாங்கி இருந்தால், அதை மகனுக்கு எதிராக நிறைவேற்ற முடியாது.

மகன் தந்தையினுடைய கடனை அடைக்க வேண்டும் என்று சொல்லும் பிரகஸ்பதி, பேரன் பாட்டனின் கடனை அடைக்க வேண்டும் என்றுலும் அவன் வட்டியைக் கொடுக்க வேண்டிய தில்லை என்றும், கொள்ளுப்பேரன் கொள்ளுப் பாட்டனின் கடனை, அவனுடைய சொத்து தனக்கு வந்திருந்தாலன்றி, அடைக்க வேண்டியதில்லை என்றும் கூறுகிருர். ஆனுல் நீதி மன்றம்,[3] மகன், பேரன், கொள்ளுப்பேரன் இவர்களிடையே கடனை அடைப்பதில் மாறுபட்ட பொறுப்பு நிலை இருப்பதை அங்கீகரிக்கவில்லை.

அவ்வியவகாரிகா கடன் (Avyavaharika Debts)

அவ்வியவகாரிகா கடன் என்றுல் என்ன என்பது அழுத்தந் திருத்தமாக இதுவரை தெளிவாக்கப்படவில்லை. கோல்புருக் (Colebrooke) 'நல்லொழுக்கத்திற்கு எதிரான காரணங்களுக்காக வாங்கப்படும் கடன்' என்று கூறுகிருர். நீதி மன்றங்களுக்கிடையே இதைப்பற்றி விளக்குவதில் கருத்து வேறுபாடு உள்ளது. என்றுலும் பொதுவாக, 'சட்ட விரோதமான அல்லது ஒழுக்க விதிகளுக்கு முரணுன' கடன் என்று சொல்லலாம். இத்தகைய கடனை

[2] Mulchand *Vs* Jairam 37 Bom. L.R. 288; 1935 Bom. 287.

[3] Masit Ullah *Vs* Damodar Prasad 44A 368.

மகனோ, பேரனோ, கொள்ளுப்பேரனோ அடைக்க வேண்டிய அவசியமில்லை. இது பற்றி பிரகஸ்பதி (Brihaspati), 'சாராயமது'ப் (Spiritious liquors) பழக்கம், சூதாடுதல், பிரதிபலன் இல்லாமல் தரும் வாக்குறுதிகள், காமத்தாலும் கோபத்தாலும் செய்யும் காரியங்கள் அல்லது பணத்திற்குப் பிணையாளாக (Surety) இருப்பதால் ஏற்பட்ட, அபராதம் கட்ட வேண்டிய, சுங்கம் செலுத்த வேண்டிய பணம் இவற்றின் அடிப்படையில் ஒருவன் கடனாளியானால், அவனுடைய கடனை அடைக்க வேண்டிய கட்டாயம் மகனுக்குக் கிடையாது' என்று கூறுகிறார்.

தந்தையினுடைய கடனை மகன் அடைக்க வேண்டும் மதக் கடமை, கண்ணை மூடிக்கொண்டு செய்யப்படுகின்ற காரியமன்று. தந்தை அடைந்த கடனின் தன்மைகளையும் குணம்சங்களையும் பொறுத்தே கடன் அடைக்கப்பட வேண்டுமா என்பதை முடிவு செய்ய வேண்டும். கடன் வாங்க வேண்டிய அவசியம் தந்தைக்கு இருந்ததா, என்ன காரணத்திற்காக வாங்கினார், எப்போது வாங்கினார் என்பதைப் பார்க்க வேண்டும். மகன் கடனை அடைக்க வேண்டியது மத நோக்குக் கடமையாதலால் வாங்கப்பட்ட கடனையும் மதநோக்கில் பார்ப்பது அவசியம். அப்படிப் பார்த்துக் கடன் நியாயமாக வாங்கப்பட்டிருந்தால் அதை அடைக்க வேண்டும். கடன், அநியாயமாக ஒழுக்கக் குறைவான காரியங்களுக்காக வாங்கப்பட்டிருந்தால் அதை அடைக்க வேண்டியதில்லை. ஒரு கடன் முறையான காரியங்களுக்காக வாங்கப்பட்டு, பின்னர் தந்தையின் முறைகேடான காரியங்களுக்குப் பயன்படுத்தப்பட்டிருந்தால், கடனை அடைக்க வேண்டிய பொறுப்பிலிருந்து மகன்கள் தப்ப முடியாது.[4] நீதிமன்றத்தின் முன் கடன் எத்தகைய கடன் என்று பிரச்சினை கிளம்புமானால் அதை ஆய்ந்து பார்த்து மகனுக்குப் பொறுப்பு உண்டா இல்லையா என்பதைத் தீர்மானிக்க வேண்டியது நீதிமன்றத்தின் கடமை.

முன்கடன் (Antecedent Debt)

முன்னதாகப் பெற்ற கடன் என்றால், வழக்கில் சம்பந்தப்பட்டுள்ள பிரச்சினைக்கு முன்னதாக, காலத்திலும் விஷயத்திலும் அக் கடன் இருக்க வேண்டும். வழக்கிலுள்ள பிரச்சினையின் ஒரு பகுதியாக அக் கடன் இராமல், அதற்கு முந்தியதாக, தனியானதாக இருக்கவேண்டும்.

இதை ஓர் எடுத்துக்காட்டால் எளிதில் புரிந்துகொள்ளலாம் கூட்டுக் குடும்பத்தின் தந்தை 'அ' என்பவரிடமிருந்து 2,000

[4] Henraj *Vs* Kaenchand I.L.R. 1943 All Loganathan *Vs* Ponnusamy 81 L.W. 100.

ரூபாய் கடன் வாங்குவதாக வைத்துக்கொள்வோம். அந்தக் கடனை அவர் தன் உபயோகத்திற்காக வாங்கியிருக்கலாம். பின்னர், கூட்டுக் குடும்பச் சொத்தைக் கடனுக்குப் பிணையமாக (Sceurity) அவர் அடைமானம் வைக்கலாம். வாங்கிய பணத்தைத் தகாத காரியங்களுக்காக அல்லாமல் நற்பணிக்கே செலவு செய்தார் என்று கொள்வோம். அப்போது அந்த அடைமானம் தந்தை, மகன்கள் இருவரையும் கட்டுப்படுத்தும்.[5] இங்கு அந்தக் கடன் முன் கடனாகும். காலத்தாலும் விஷயத்தாலும் அது அடைமானத்திற்கு முந்தியது.

தந்தை முன் கடன் வாங்கியிருந்து அது ஒழுக்கக் குறைவான காரியங்களுக்காக அல்லாமல் இருந்தால், அந்தக் கடனை அடைக்கத் தந்தை கூட்டுக் குடும்பத்தின் சொத்தை விற்கலாம் அல்லது அடைமானம் வைக்கலாம்.[6]

முன் கடன் இருந்தது என்பதை நிருபிக்க வேண்டிய பொறுப்பு மாற்றுக்கம் பெறுபவருக்கே (Alienee) உண்டு. தந்தை ஒழுங்கான காரியத்திற்குக் கடன் வாங்கவில்லை என்பதை நிருபிக்க வேண்டிய பொறுப்பு மகனுக்கு உரியது. தந்தை ஒழுக்கக் குறைவான வாழ்வு வாழ்ந்தார் என்று மட்டும் மகன் நிருபித்தால் போதாது. அந்த ஒழுக்கக் குறைவான வாழ்விற்கும் வாங்கிய கடனுக்கும் நேரடியான தொடர்பு உண்டு என்பதையும் நிறுவ வேண்டும்.

யார் மாற்றுக்கம் செய்யலாம் (Who can alienate)

பங்குரிமையர் அத்தனை பேரும் ஒன்றாக, அவர்கள் வயது வந்தவர்களாக இருந்தால், கூட்டுக் குடும்பச் சொத்தை இன்னொருவருக்கு மாற்றுக்கம் (Alienation) செய்யலாம். குடும்பத்தைக் கவனித்துக் கொள்ளும் நிர்வாகி, சட்ட பூர்வமான தேவையை முன்னிட்டும், சொத்தின் நலன் கருதியும் மாற்றுக்கம் செய்யலாம். தந்தை நிர்வாகி என்ற முறையில் மாற்றுக்கம் செய்யலாம். வேறு யாருமே இல்லை என்றால் எஞ்சி நிற்கும் பங்குரிமையர் மாற்றுக்கம் செய்யலாம்.

கூட்டுக் குடும்ப நிர்வாகி சட்ட பூர்வமான தேவையை முன்னிட்டும், சொத்தின் நலனிற்காகவும் கூட்டுக் குடும்பச் சொத்தை மாற்றுக்கம் செய்தால் அந்த மாற்றுக்கம் மற்றப் பங்

5 Madhusudan *Vs* Bhagwan 1929 Bom. 444.

6 Sat Narain *Vs* Sri Krishnadass 1936 63 I.A. 384.

குரிமையரைக் கட்டுப்படுத்தும். உரிமை வயது அடையாத ஒருவனின் மங்கை அவனுடைய தந்தை அல்லது பாட்டன் பெற்ற கடனுக்காக வேறு எந்த வழியுமே இல்லை என்றால் நிர்வாகி மாற்றுக்கம் செய்யலாம். ஒரு தேவை ஏற்படும்போது அதை எப்படிச் சமாளிப்பது, எவ் வகையில் மாற்றுக்கம் செய்வது என்பதை நிர்வாகியே முடிவு செய்வார். அவர் நல்லெண்ணத்தோடும், குடும்பத்தின் நலனைக் கருதியும் செயல்களைச் செய்திருந்தால் அல்லது மாற்றுக்கம் செய்திருந்தால், அவருக்குப் பதில் அந்த இடத்தில் இன்னொருவர் இருந்திருந்தால் வேறு விதமாகச் சமாளித்திருப்பார் அல்லது இன்னும் சிறந்த முறையில் ஏற்பாடுகள் செய்திருப்பார் என்று யாரும் அவருடைய மாற்றுக்கத்தின் மீது பிரச்சினைகளைக் கிளப்ப முடியாது.[7]

மாற்றுக்கம் செய்வதற்கு மற்ற வயது வந்தவர்களின் ஒப்புதலைப் பெற வேண்டியது அவசியமன்று. ஆனால், ஒரு குடும்பத்தில் வயது வந்தவர்களும் வராதவர்களும் இருக்கும் போது வயது வந்தவர்கள் ஒப்புதல் தந்துவிட்டார்கள் என்பது சட்ட பூர்வமான தேவை மாற்றுக்கம் செய்வதற்கு இருக்கிறது என்று காட்ட ஆதாரமாகாது. குடும்பத்தில் எல்லோரும் வயது வந்தவர்களாக இருந்து, எல்லோரும் ஒப்புதல் கொடுத்தால் அதில் பிரச்சினையே கிடையாது.

சட்ட பூர்வமான தேவை இல்லாத சமயத்தில் நிர்வாகி மாற்றுக்கம் செய்துவிட்டால், அந்த மாற்றுக்கம் தவிர்தகு மாற்றுக்கமே (Voidable alienation) தவிர இல்லாநிலை மாற்றுக்கம் (Void alienation) அன்று. பங்குரிமையர்கள் விரும்பினால் அந்த மாற்றுக்கத்தை ஏற்றுக் கொள்ளலாம், அல்லது தள்ளி விடலாம்.

கீழ்க்காண்பவற்றைச் சட்ட பூர்வமான தேவை என்று சொல்லலாம்.

அ. அரசாங்கத்திற்குக் கட்ட வேண்டிய வரி.

ஆ. குடும்பச் சொத்திலிருந்து அடைக்கப்பட வேண்டிய கடன்.

இ. குடும்பத்தில் உள்ளவர்களைப் பராமரித்தலும் திருமணம் செய்தலும்.

ஈ. ஈமச் சடங்குகளும், பிற குடும்பச் சடங்குகளும் செய்தல்.

[7] Veerabadrappa *Vs* Lingappa 1963 Mysore 5, Ramji Rai *Vs* Gopal Ahir 1963 Pat 34.

உ. நிலச் சொத்துப் (Estate) பற்றி வழக்காடுவதால் வரும் அவசியச் செலவுகள்.

ஊ. குடும்பத்தைச் சேர்ந்தவரைப் பெரிய குற்ற வழக்கி லிருந்து காப்பாற்றச் செலவு செய்தல்.

எ. குடும்பம் செய்த வியாபாரத்தில் ஏற்பட்ட கடனை அடைத்தல்.

நிர்வாகி, சொத்தின் நலன் கருதி மாற்றுக்கம் செய்யலாம் என்று சொல்லப்பட்டது. சொத்தின் நலன் என்றால் என்ன என்பது குறித்துக் கருத்து வேறுபாடுகள் எழுந்தன சொத்துக்கு அழிவு வரும் அல்லது அபாயம் வரும் என்ற அச்சுறுத்தல் இருக்கும்போது அதைப் பாதுகாக்கும் காப்பு நோக்கோடு செய்யப் படும் மாற்றுக்கமே சொத்தின் நலன் கருதிச் செய்வதாகும் என்பது ஒரு கருத்து.[8] மாற்றுக்கம் செய்யும்போது கிடைத்த தகவல்களின் படி அப்படிச் செய்வதுதான் சரி என்று முன்னெச்சரிக்கையுடன் நடக்கும் உரிமையாளன் என்ன செய்திருப்பானோ அதைச் செய் திருக்கும் செயல் சொத்தின் நலன் கருதிச் செய்யப்பட்டதாகும் என்பது இன்னொரு கருத்து.[9]

ஒரு நிர்வாகியைவிட, மற்றப் பங்குரிமையரைவிட, ஒரு தந்தைக்கு மாற்றுக்கம் செய்வதில் அதிக அதிகாரங்கள் உண்டு. ஒரு தந்தை நியாயமான வரையறைக்கு உட்பட்டு அன்பாலும் பாசத்தாலும் ஒருவனுக்குத் தன்னிடமிருக்கும் பரம்பரைச் சொத்தை (அது அசையும் பொருளாக இருந்தாலும் சரி, அசையாப் பொருளாக இருந்தாலும் சரி) கொடையாகக் கொடுக்கலாம். மேலும் தானே பெற்ற கடனை, அது முன் கடனாக இருந்து சட்ட விரோதமான அல்லது ஒழுக்கக்குறைவான காரணத்திற்காக வாங்கப்படாதிருந்தால், அடைக்கத் தன்னிடம் பரம்பரையாக வந் துள்ள அசையும் சொத்து அசையா சொத்து ஆகியவற்றை அதில் மகன், பேரன், கொள்ளுப்பேரன் இவர்களுக்கு உரிமை இருந்தாலும் தந்தை விற்கலாம் அல்லது அடைமானம் வைக்கலாம். தன்னால் விவசாயம் செய்ய முடியவில்லை என்று நல்லெண்ணத்துடன் மகன்களுடைய நன்மையைப் பாதிக்காவண்ணம், தந்தை தன் நிலத்தின் ரயத்து உரிமையை (Raiyat interest) மற்றவருக்குக் கொடுக்கலாம்.

கூட்டுக் குடும்பச் சொத்தைத் தந்தை உரிமை மாற்றம் செய்வது சம்பந்தமாகக் கவனிக்கப்பட வேண்டிய கோட்பாடுகள்

[8] Bhagwandass *Vs* Mahadeo 45A 390.

[9] Jagat Narain *Vs* Mathuradas 50A 969.

யாவை என்பதைப் பிரிவிகவுன்சில்[10] ஒரு வழக்கில் எடுத்துக் காட்டியுள்ளது. அவ் வழக்கில், அந்தக் குடும்பத்தின் சொத்து 1905ஆம் ஆண்டிலும் 1907ஆம் ஆண்டிலும் அடைமானத்தில் வைக்கப்பட்டிருந்தது. கூட்டுக் குடும்பத்தின் சொத்துக்கு அப் போது நிர்வாகி *சீதாராம்* என்பவர். அவருக்கு உரிமை வயது அடையாத மகன்கள் இருவர் உண்டு. பின்னர், 1908ஆம் ஆண்டில் *சீதாராம்* 11,000 ரூபாய்க்கு ஒருவருக்குச் சொத்தை அடைமானம் வைத்தார். 1912ஆம் ஆண்டில் அவரும் இன்னொரு அடைமானம் பெற்றவரும் பணத்தைப் பெறுவதற்காக வழக்குத் தொடர்ந்து மறுதரப்பிலா (Exparte) தீர்ப்பாணை (Decree) பெற்றார் கள். பின்னர், அடைமானம் வைத்தவரின் உரிமை வயது அடையாத இரு சிறுவர்களும், தந்தை வைத்த அடைமானம் தங்களைக் கட்டுப்படுத்தாதென்றும், கொடுக்கப்பட்ட தீர்ப்பாணை தங்களைப் பொறுத்தவரையில் இல்லா நிலையது என்றும் வழக்குப் போட்டார்கள். கீழ் நீதிமன்றம் அவர்கள் கூற்றை ஏற்றுக் கொண்டு மகன்களைப் பொறுத்தவரையில் தீர்ப்பாணையைத் தள்ளுபடி செய்தது. பின்னர், பிரிவிகவுன்சிலுக்கு மேன்முறையீடு செய்யப்பட்டது. 1908ஆம் ஆண்டு வைக்கப்பட்ட அடைமானம் முன்பு அடைமானம் வைக்கப்பட்டவைகளுக்குப் பணம் கொடுத் துத் தீர்க்கவே என்று பிரிவிகவுன்சில் கண்டறிந்து, பழைய அடைமானங்கள் உண்மையில் முன்கடன் (Antecedents) என்று முடிவு செய்து, மகன்களை அது கட்டுப்படுத்தும் என்று தீர்ப்புத் தந்தது. அப்போது கீழ்வரும் கோட்பாடுகளை பிரிவிகவுன்சில் முன்வைத்தது.

1. பிரிவினையாகாத கூட்டுக் குடும்ப நிலச் சொத்தின் நிர்வாக உறுப்பினர், நிர்வாகி என்ற முறையில் அவசியமான காரணங்கள் அல்லாமல் நிலச்சொத்தை மாற்றாக்கம் செய்யவோ அல்லது அதன்மீது சுமையை ஏற்படுத்தவோ முடியாது.

2. அவர் தந்தையாகவும், மற்ற உறுப்பினர்கள் மகன்களாக வும் இருந்தால், ஒழுக்கக் குறைவான காரியங்களைத் தவிர, மற்ற வற்றிற்காகப் பெற்ற கடனுக்குத் தன்னுடைய நிலச்சொத்தைத் தீர்ப்பாணையின் பேரில் எடுத்துக் கொள்ளுமாறு செய்யலாம்.

3. அவர் நிலச் சொத்தை அடைமானம் வைக்க விரும்பினால், அந்த அடைமானம் முன்கடனை அடைப்பதற்காக அல்லது அவ சியமான காரணங்களுக்காக ஏற்பட்டாலொழிய அது நிலச் சொத்தைக் கட்டுப்படுத்தாது.

[10] Brij Narain *Vs* Mangla Prasad 46A 95.

4. முன் கடன் என்றால் அது காலத்திலும் விஷயத்திலும் முன்னதாக இருக்க வேண்டும். அதாவது வழக்கிலுள்ள விவகாரத்தின் ஓர் அங்கமாக அது இராமல் உண்மையில் தனியான கடனாக இருக்கவேண்டும்.

5. கடன் வாங்கிய அல்லது நிலச் சொத்தின் மீது சுமை ஏற்படுத்திய தந்தை உயிருடன் இருக்கிறாரா இல்லையா என்பது எவ்வகையிலும் மேற்சொன்னவற்றைப் பாதிக்காது.

ஒரு தந்தை தன்னுடைய முன்கடனை (ஒழுக்கக் குறைவான காரியங்களுக்காக இல்லாமல் இருந்தால்) அடைப்பதற்கும், குடும்பத்தின் அவசியத்திற்காகவும் தன்னுடைய குடும்பத்தின் கூட்டுச் சொத்தை (மகன்களுக்கு உரிமை இருந்தாலும்) விற்கலாம்; அடைமானம் வைக்கலாம். மகன்களுடைய உரிமை தந்தையின் கட்டுப்பாட்டிலே இருந்தாலும், மாற்றுக்கம், குடும்பத்தின் தேவையை முன்னிட்டோ முன்கடனை அடைப்பதற்காகவோ இல்லாமல் நடந்திருந்தால், அது ஒரு பங்குரிமையரின் சாதாரண மாற்றுக்கமாகக் கருதப்பட்டுத் தள்ளப்பட்டுவிடும். (ஆனால் சென்னை பம்பாய் மாநிலங்களில் மாற்றுக்கம் செய்பவரின் பங்கு எவ்வளவோ அவ்வளவுக்கு மாற்றுக்கம் செய்துகொள்ளலாம்.[11] தந்தை அப்படி அடைமானம் வைத்துவிட்டுக் கடன் வாங்கியிருந்தால், அடைமானம் பெறுபவர் அதை அடைமானமாகக் கருதாமல் வெறுங் கடனாகக் கருதி வழக்குத் தொடரலாம். அப்போது மகன்களையும் வழக்கில் இழுக்க முடியும். வழக்கிலிருந்து மகன்கள் தப்பிக்கவேண்டுமென்றால் தந்தை வாங்கிய கடன் சட்டவிரோதமானது, ஒழுக்கக் குறைவான காரியங்களுக்கானது என்பதை நிரூபிக்க வேண்டும், ஏனென்றால் மகனுக்குத் தந்தையின் கடனை அடைக்க வேண்டிய மதக் கடமை இருக்கிறது. தந்தை சட்டவிரோதமான அல்லது ஒழுக்கக் குறைவான காரியங்களுக்காகக் கடன் வாங்கினார் என்றும் அவர் வைத்த அடைமானம் தங்களைக் கட்டுப்படுத்தாது என்றும் மகன் சொன்னாலும் அடைமானம் பெற்றவருக்கு வேறுவழி இருக்கிறது. அப்போதும் மகன், தந்தை குடும்பத்தின் நன்மைக்காகக் கடன் வாங்கப்படவில்லை மாறாகச் சட்டவிரோதமாகவும், ஒழுக்கக் குறைவான காரியத்திற்காகவும் வாங்கப்பட்டது என்று நிறுவித்தான் பொறுப்பிலிருந்து விடுபடமுடியும்

மாற்றுக்கத்தைத் தள்ளுபடிசெய்தல்

ஒரு பங்குரிமையரோ, நிர்வாகியோ, தந்தையோ தன்னுடைய அதிகார வரம்பை மீறி மாற்றுக்கம் செய்தால் அதை மற்றவர்கள்

[11] Asman *Vs* Ganpat, 40 Bom L.R. 946.

தள்ளுபடி செய்யலாம். அதாவது தந்தையினுடைய அந்த ஒப்பந்தம் (பங்குரிமையர் என்றால் பங்குரிமையரின் ஒப்பந்தம், நிர்வாகி என்றால் நிர்வாகியின் ஒப்பந்தம்) தவிர்தகு ஒப்பந்த மாகும். எனவே, மற்றப் பங்குரிமையர் அதைத் தவிர்த்துக் கொள்ளலாம். தாயின் வயிற்றில் இருக்கும் மகனுக்கும் தவிர்த்துக் கொள்ளும் அந்த உரிமை உண்டு. ஏனென்றால் தாயின் வயிற்றில் இருக்கும் மகன் மற்ற மகன்களுக்கு எல்லா வகையிலும் சமம். தத்து எடுக்கப்பட்ட மகன் அவன் மாற்றுக்கத் திற்குப் பிறகு தத்து எடுக்கப்பட்டிருந்தால், தந்தையின் மாற்றுக்கம் குறித்து எதுவும் செய்ய முடியாது. ஆனால், தந்தை செய்த மாற்றுக்கம் அது செய்யப்பட்ட காலத்தில் செல்லக் கூடியதாக இருந்திருக்க வேண்டும். மகன் இல்லாதபோது தந்தை மாற்றுக்கம் செய்திருந்தால், பிறகு பிறக்கும் மகன் அந்த மாற்றுக்கத்தைச் சரியானதன்று என்று நீதிமன்றத்தை அணுக முடியாது. தமிழ் நாட்டையும், மத்தியப் பிரதேசத்தையும், மராட்டிய மாநிலத்தையும் பொறுத்தவரையில் ஒரு பங்குரிமையர் தன்னுடைய அதிகார வரம்பை மீறிக் குடும்பச் சொத்தை மாற்றுக்கம் செய்திருந்தால், மற்றப் பங்குரிமையர் தங்களுக்குச் சொத்தில் எந்த அளவுக்கு உரிமை இருக்கிறதோ அந்த அளவுக்கு அந்த மாற்றுக்கத்தைத் தள்ளுபடி செய்துகொள்ளலாம். வங்காளத்திலும் உத்திரப் பிரதேசத்திலும் ஒரு பங்குரிமையர் முன் கடனை அடைப்பதற்கோ அல்லது சட்டபூர்வமான தேவைக்கோ அல்லாமல் குடும்பச் சொத்தை உரிமை மாற்றம் செய்திருந்தால், அந்த உரிமை மாற்றம் முழுவதுமே இல்லாத நிலையது (Void) என்று அறிவிக்கக்கோரி நீதிமன்றம் செல்ல மற்றப் பங்குரிமையருக்கு உரிமை உண்டு.

தமிழ் நாட்டிலும், மராட்டியத்திலும் ஒரு மாற்றுக்கம் தள்ளுபடி செய்யப்பட்டால், மாற்றுக்கம் பெற்றவருக்கு ஒரு பணமும் கிடைக்காது. வங்கத்திலும் உத்திரப்பிரதேசத்திலும்கூட இதே நிலைதான். ஆனால், ஒரு வழக்கில் சூழ்நிலை சற்று மாறுபட்டிருந் ததால் நீதிமன்றம் வேறுவிதமான முடிவிற்கு வந்தது.[12] அந்த வழக்கில் தந்தைதான் கூட்டுக் குடும்பத்தின் நிர்வாகி. அவருக்கு இரண்டு மகன்கள் உண்டு. ஒருவன் உரிமை வயது அடையாத வன்; இன்னொருவன் உரிமை வயது அடைந்தவன். தந்தை உரிமை வயது அடைந்தவனின் ஒப்புதல்பேரில் சொத்தை ரூ. 3,000-க்கு அடைமானம் வைத்தார். பின்னர் உரிமை வயது வந்த மகன் தன் சார்பிலும், உரிமை வயது வராத மகன் சார்பிலும் அந்த அடைமானத்தைத் தள்ளுபடி செய்யச் சொல்லி வழக்குத்

[12] Mahabir Prasad *Vs* Ramyad 12 B.L.R. 90.

தொடர்ந்தான். அந்த வழக்கில், தந்தையும் மகனும் அச் சொத்தை அடைமானம் வைக்க உரிமை இல்லை என்று தெரிந்தே செய்தார்கள்; இந்த அடைமானம் சரியானது இல்லைதான் என்று நீதிபதி முடிவு செய்தாலும், சில நிபந்தனைகளை விதித்தார்; சொத்தைப் பெற்றதும் அதைப் பிரித்து ஆளுக்கு ஒரு பாகமாக வைத்துக் கொள்ளவேண்டும். ஆனால், தந்தை, மூத்த மகன் ஆகியோர் சொத்து மட்டும் கூட்டாகவும் தனித்தனியாகவும் கடனை அடைப்பதற்குப் பற்றுரிமை (lien) யாக இருக்க வேண்டும்.

பினாமி மாற்றங்கள்

ஒருவன் இன்னொருவரின் பெயரில் சொத்து வாங்குவதோ அல்லது தன்னுடைய சொத்தை இன்னொருவருக்குப் பெயரளவில் மாற்றம் செய்வதோ பினாமி (Benami) மாற்றமாகும். இன்னொருவரின் பெயரில் சொத்து வாங்கும்போதோ அல்லது இன்னொருவருக்குச் சொத்தைக் கொடுக்கும்போதோ அதை அவர்கள் அனுபவித்துப் பயன் அடையட்டும் என்ற நோக்கத்தில் செய்வதில்லை. உண்மையான மாற்றுக்கம் போலக் கருதக்கூடிய ஒரு போலித் தோற்றம் தருவதே பினாமி மாற்றம். ஒரு சொத்து பினாமி சொத்தா இல்லையா என்பதைக் கீழ்வரும் காரணங்களைக் கொண்டு கண்டு பிடிக்கலாம்:

1. சொத்து யார் பெயரில் இருக்கிறதோ அவருக்குச் சொத்தை வாங்க செல்வம் எங்கிருந்து வந்தது ?
2. சொத்து யாருடைய உடைமையில் (Possession) இருக்கிறது. அது எவ்வாறு கையாளப்பட்டு வருகிறது ?
3. சம்பந்தப்பட்ட தரப்பினருக்கிடையே உள்ள உறவு நிலை.
4. பினாமி மாற்றம் ஏற்படுவதற்குரிய சூழ்நிலைகளும், ஏற்பட்ட நோக்கமும் என்னென்ன ?
5. சொத்து சம்பந்தப்பட்ட உரிமை மூல ஆவணம் (Title deeds) யாரிடம் இருக்கிறது ?
6. சம்பந்தப்பட்ட தரப்பினரின் பினாமி மாற்றத்திற்கு முந்திய நடவடிக்கைகளும் பிந்திய நடவடிக்கைகளும் யாவை ?

ஒரு சொத்து மாற்றத்தை பினாமி என்று நிரூபித்து விட்டால் மட்டுமே எல்லாச் சந்தர்ப்பங்களிலும் உண்மையான உரிமையாளன் சொத்தைத் திரும்பப் பெற்றுவிட முடியாது. பினாமி மாற்றம் ஏதேனும் மோசடி செய்யும் நோக்கத்தோடு செய்யப்பட்டிருந்து, மோசடியும் நிறைவேற்றப்பட்டிருந்தால் அல்லது பினாமி

மாற்றத்தின் தன்மைகளைக் கவனிக்காது பிரதிபலனுடன் (Consideration) மற்றவருக்கு உரிமை மாற்றம் (Transfer) பினமிதாரர் செய்திருந்தால், அல்லது அது பொது மக்கள் நலத்திற்கு விரோதமானதாக இருந்தால் உண்மையான உரிமையாளர் அந்தப் பினமிச் சொத்தைத் திரும்பப் பெற முடியாது. ஆனால், மோசடி நிறைவேற்றப்படாதிருந்தால், உரிமை மாற்றம் பெயரளவிற்குத்தான் நடந்தது என்று உரிமையாளன் கூறலாம்.

தாயபாக முறை

தாயபாக முறையில் தந்தைக்கும் மகனுக்குமிடையே 'பங்குரிமை' முறை எதுவும் கிடையாது. பரம்பரைச் சொத்தில் பிறப்பு ஒன்றினலேயே மகனுக்கு மிதாக்ஷரத்தில் கிடைக்கும் உரிமை தாயபாகத்தில் கிடையாது. தந்தை உயிரோடு இருக்கும் வரை மகனுக்கு அதில் உரிமை கிடையாது. எனவே, மகன் பாகப்பிரிவினை பற்றித் தந்தை உயிரோடு இருக்கையில் பேச முடியாது. தந்தை தன் சொத்தை எப்படி வேண்டுமானாலும் கொடுக்கலாம். தாயபாகத்தில் தந்தையின் மறைவிற்குப் பின்னர் தான் பங்குரிமையே வருகின்றது. எனவே, தாயபாக பங்குரிமை நிலை 'பொது நிலச் சொத்துரிமை' (Tenancy-in-Common) நிலை போல் இருக்கிறது என்று சொல்லலாம். அதனால் ஒருவர் இறந்ததும் அவருடைய வாரிசு அந்த இடத்தைப் பூர்த்தி செய்வார். வாரிசு சில சமயங்களில் பெண்ணுகவும் இருக்கலாம். எடுத்துக்காட்டாக மகன் இல்லாமல் ஒரு பங்குரிமையன் இறந்துவிட்டால் அவனுடைய விதவை பங்குரிமையர் ஆக முடியும். அதற்குப் பிறகு உரிமை மாற்றம் செய்வதற்கு யாருக்கும் எந்தத் தடையும் கிடையாது. மகன் தனியாகவும், கூட்டுக் குடும்பச் சொத்துக்குச் சம்பந்தமில்லாமல் சொத்து சேர்த்துக் கொள்ளலாம். அதைப் போலவே தான் பட்ட கடனை அடைக்கத் தன்னுடைய பங்கை அடைமானம் வைக்கலாம்; விற்கலாம்.

8. பாகப் பிரிவினை
(PARTITION)

பாகப்பிரிவினை என்றால் என்ன என்று மிக ஆதிகால மனிதனுக்குத் தெரியாது. கும்பலாக வாழ்ந்த மனிதனுக்கு நிலத்தை தனிமனிதர்கள் பிரித்துக் கொள்ள முடியும் என்ற கண்ணோட்டமே கிடையாது. சிறியதாக இருந்த கும்பல் பெரியதாகி, அவர்களுக்குள்ளே குரோத மனப்பான்மை வளர்ந்து கும்பலின் கட்டுக்கோப்பு பலவீனப்படத் தொடங்கிய கால கட்டத்தில் 'குடும்ப உணர்வு' மனிதர்களிடையே தலைதூக்கியது. மனிதர்கள் சற்று நாகரிகம் அடைந்து, சமுதாய வாழ்விலும் சில ஒழுங்கு முறைகளை மேற்கொண்டதும், குடும்ப அமைப்பு சமுதாயத்தின் பிரதான அங்கமாகி ஆழமாக வேர்விட்டது. ஒருவன் மற்றவனைவிடக் கெட்டிக்காரனாகவும், திறமை உள்ளவனாகவும், பல்வேறு வகையில் உழைத்துச் சொத்துச் சேர்க்கத் தெரிந்தவனாகவும் இருக்கவே, தான் சம்பாதித்ததைத் தான் அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணம் அவனிடம் எழுந்தது. இந்தத் தனி மனிதனின் சிந்தனைகளும், செயல்களும் சமுதாயத்தில் செல்வாக்குப்பெறவே படிப்படியாகக் குடும்பத்தில் பாகம் பிரித்துக்கொள்ளும் நிலையும் ஏற்பட்டது.

இந்தியாவின் பெரும் பகுதியில் பின்பற்றப்படும் மிதாக்ஷர சட்டத்தில் கூறப்பட்டிருக்கும் பங்குரிமையில் ஒவ்வொரு பங்குரிமையருக்கும் இன்னது பங்கு என்ற வரையறை கிடையாது. பங்குரிமை இருக்கும்வரை அவர்கள் சொத்தைக் கூட்டாகவே அனுபவிக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சொத்து உரியது என்ற பங்கோ, பாகுபாடோ கிடையாது. ஆனால், பாகப் பிரிவினை ஒவ்வொருவருக்கும் உரிய பங்கு என்ன என்பதைத் திட்டவட்டமாகத் தீர்மானிக்கிறது. ஒவ்வொன்றையும் அளந்து பங்குபோட வேண்டும் என்ற அவசியம் கிடையாது. பங்குரிமையருக்கு உள்ள பங்கு என்ன என்பதைத் தீர்மானித்துவிட்டாலே

சொத்து கூட்டானது என்ற கண்ணோட்டம் மறைந்துவிடும். பாகப் பிரிவினை 'கூட்டு' என்ற அந்தஸ்தை அறுத்துவிடும். பாகப் பிரிவினை கோருவது பங்குரிமையரின் அசைக்க முடியாத உரிமை. மற்றப் பங்குரிமையர்கள் விரும்புகிறார்களா இல்லையா என்பது முக்கியமன்று. ஒருவன் பாகப்பிரிவினை வேண்டும் என்று திட்ட வட்டமாகத் தெரிவித்துவிட்டால், அதை நடத்தியே தீர வேண்டும். பாகப்பிரிவினை கேட்பதற்குரிய காரணங்கள் என்ன வாக இருந்தாலும், உரிமை வயது அடையாதவர் குடும்பத்தில் இருந்தாலும் பாகப் பிரிவினை நடந்தாக வேண்டும்.

பாகப்பிரிவினை எவ்வாறு ஏற்படுகிறது ?

தந்தை செய்யும் பாகப்பிரிவினை

தந்தையே தான் உயிரோடு இருக்கும்போது, குடும்பத்தில் பாகப்பிரிவினை செய்யலாம். அது அத்தனை மகன்களையும் கட்டுப் படுத்தும். மகன்கள் பாகப்பிரிவினைக்கு ஒப்புதல் அளிக்கிறார்கள் என்பதால் அன்று. தனக்குள்ள தந்தை என்ற தகுதியின் அடிப் படையில் தந்தை பாகப்பிரிவினை செய்யலாம். தனக்கும் மற்றவர் களுக்கும் தந்தை சொத்தைச் சமமாகப் பிரிப்பதென்றால், அவர் யாருடைய சம்பந்தத்தையும் பெறவேண்டியதில்லை. ஆனால், அந் நியன் ஒருவனுக்கு சொத்து சம்பந்தமான தகராற்றைத் தீர்த்துக் கொள்வதற்கு ஏதாவது கொடுக்க வேண்டுமென்றால் அல்லது ஒரு மகனுக்குக் கூடக் கொடுக்க வேண்டும் என்றால் மற்ற மகன்களின் ஒப்புதலைப் பெற வேண்டியது அவசியம். இந்தப் பாகப்பிரிவினை செய்யும் உரிமை தந்தைக்கே உள்ள தனி உரிமை. பாட்டன் உயிரோடு இருந்தால்கூட அவன் பாகப்பிரிவினை பேரன்களுக்குச் செய்ய முடியாது. தன்னுடைய தனிச் சொத்தைத் தந்தை எப்படி வேண்டுமானாலும் கொடுக்கலாம். ஒரு மகனுக்குக் கொடுத்து விட்டு இன்னொரு மகனுக்குக் கொடுக்காமல் இருக்கலாம். அது அவரது விருப்பம்.

தானே கோரும் பாகப்பிரிவினை

பங்குரிமையில் (Coparcenery) ஒரு பங்குரிமையருக்குப் பாகப் பிரிவினை கோரும் உரிமை எப்போதும் உண்டு. மற்றப் பங்குரிமையர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், விரும்பும் பங்குரிமையர் பாகப்பிரிவினை கேட்கலாம். அப்படி ஒருவன் திட்டவட்டமாகக் கேட்டு அவன் பங்கு என்ன என்பது நிர்ணயம் செய்துவிட்டாலே பாகப்பிரிவினை ஆகிவிட்டதாகத்தான் பொருள். சொத்தை அளந்து வரையறை செய்ய வேண்டும் என்ற அவசியமில்லை.

அதற்குப் பின்னர் ஒன்றாக ஒரே வீட்டிலே இருந்தாலும், கூட்டுக் குடும்பம் என்ற அந்தஸ்து இருக்காது. ஒரு பங்குரிமையர் பாகப் பிரிவினையை விரும்புகிறார் என்பதையோ அல்லது வேண்டும் என்பதையோ தெரிந்து கொள்வதில் சிற்சில சமயங்களில் சிரமம் ஏற்படுவதுண்டு. இது சம்பந்தமாகப் பல வழக்குகள் ஏற்பட்டதுண்டு.[1] உச்ச நீதிமன்றம் இந்த பிரச்சினையை ஆய்ந்து, பின்பற்றுவதற்குச் சில கோட்பாடுகளைத் தந்திருக்கிறது. கூட்டுக் குடும்பத்தில் பாகப்பிரிவினை வேண்டும் என்று விரும்புகிறவர், பாகப் பிரிவினை வேண்டும் என்பதைக் குடும்பத்தில் யார் யாருக்குச் சொல்ல வேண்டுமோ அவரவர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். ஒருவன் தன் எண்ணத்தைத் தெரியப்படுத்தும் முறை சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாறுபடலாம். ஆனால், மற்றவர்கள் அவன் பாகப்பிரிவினையை விரும்புகிறான் என்பதைத் தெரிந்த கொள்ள வேண்டியது அவசியம். பாகப்பிரிவினையை ஒருவன் விரும்புகிறான் என்பது சம்பந்தப்பட்ட மற்றவர்களின் கவனத்திற்கு வந்த பின்னர், பாகப்பிரிவினை அவன் வேண்டும் என்று விரும்பிய நாளிலிருந்தே தொடங்கி விட்டதாகப் பொருள். பாகப்பிரிவினை வேண்டும் என்ற எண்ணம் தோன்றிய காலத்திலிருந்தே பாகப் பிரிவினை வந்துவிட்டதாகப் பொருள் கொண்டாலும், எண்ணம் தோன்றிய காலத்திற்கும் மற்றவர்கள் அதைப்பற்றித் தெரிந்து கொண்ட காலத்திற்கும் இடையே உள்ள காலத்தில் கூட்டுச் சொத்தில் சேர்ந்த மற்றவர்களின் உரிமை பாதிக்கப்படமாட்டாது.

இசைவுத் தீர்ப்பு முறையில் பாகப்பிரிவினை

கூட்டுக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இசைவுத் தீர்ப்பு முறைக்கு (Arbitration) உட்பட்டுப் பாகப்பிரிவினை செய்து கொள்ளலாம். இசைவுத் தீர்ப்பு முறைக்கு உட்படுவதே அனைவரும் பாகப்பிரிவினையை விரும்புகிறார்கள் என்பதற்கு ஆதாரம். இசைவுத் தீர்ப்பாளர் முடிவு சொல்ல வேண்டும் என்ற அவசியமில்லை. இசைவுத் தீர்ப்பிற்கு உட்பட்டதுமே கூட்டுக் குடும்ப அந்தஸ்து போய்விடும்.

வழக்கு மூலம் பாகப் பிரிவினை

ஒரு பங்குரிமையர் பாகப்பிரிவினை கேட்டு வழக்குப் போட்டுவிட்டாலே, அது மற்றவர்களுக்குத் தன் எண்ணத்தைத் தெரிவித்து விட்டதாகப் பொருள். அது மட்டுமல்ல வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட தேதியிலிருந்து கூட்டுக் குடும்பத்திலிருந்து பிரிந்து விட்டதாகவும் கொள்ளப்படும். இதனால் மற்றப் பங்குரிமை

[1] Raghavamma *Vs.* Chenchamma 1964 S.C. 136.

யர் பிரிந்து விட்டதாக எண்ண வேண்டியதில்லை. அவர்கள் தம்முள் இணைந்து இருக்கிறார்களா என்பதை அவர்களுடைய நடத்தையிலிருந்தே தீர்மானிக்க வேண்டும். ஒரு வயது வந்த பங்குரிமையர் பாகப்பிரிவினை கோரி வழக்குப் போட்டால், நீதி மன்றம் அதை நிராகரிக்க முடியாது. அவர் தீங்கு செய்யும் எண்ணம் உடைவர்களின் தூண்டுதல் பேரில் வழக்காடலாம். அது நீதிமன்றத்திற்குச் சம்பந்தமில்லாத விஷயமாகப் போய்விடும். ஆனால், உரிமை வயது அடையாதவன் ஒருவன் பாகப்பிரிவினை கோரி வழக்குத் தொடர்ந்தால், வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து கூட்டுக் குடும்பத்திலிருந்து பிரிந்து விட்டதாக எண்ணக் கூடாது. அவ்வாறு உரிமை வயது வந்தவர் விஷயத்தில் தான் கொள்ளப்படும். உரிமை வயது அடையாதவன் பிரிவினை கேட்கும் போது, அதனால் அவனுக்கு நன்மை உண்டா என்பதை நீதிமன்றம் ஆய்ந்து பார்க்கும். நன்மை உண்டு என்றால் கேட்ட வாறு தீர்ப்பாணை வழங்கும். நன்மை இருக்காது என்றால் தீர்ப்பாணை வழங்காது.

உடன்பாட்டின் மூலம் பாகப்பிரிவினை

பங்குரிமையர்கள் தங்களுக்குள் செய்துகொள்ளும் உடன் பாட்டின் மூலம் பாகப்பிரிவினை செய்து கொள்ளலாம். சொத்துகளை அளந்து பார்க்க வேண்டிய அவசியமில்லை. பங்குரிமையரில் ஒருவர் அல்லது அதற்கு மேற்பட்டவர் உரிமை வயது அடை யாதவராக இருந்தாலும் பாகப்பிரிவினை செய்து கொள்ளலாம். எல்லோருக்கும் உரிமை வயது வந்தபின்தான் பாகப்பிரிவினை நடக்க வேண்டும் என்றால், அது எல்லாக் குடும்பங்களிலும் சாத்தியமல்ல. மேலும், பாகப்பிரிவினை கேட்கும் உரிமை ஒரு பங் குரிமையருக்கு இருக்கும்போது, அவர் மற்றவர்கள் உரிமை வயது அடையும்வரை காத்திருக்க வேண்டியதில்லை. ஆனால் செய்யப் பட்ட பாகப்பிரிவினை உரிமை வயது அடையாதவர்களுக்கு நன்மை தரக்கூடியதில்லை என்றால், அவர்கள் உரிமை வயது வந்ததும் நீதிமன்றத்தை அணுகி, தங்கள் வரையில் பாகப்பிரிவினை உடன்பாட்டைத் தள்ளி விடச் சொல்லலாம்.

மத மாற்றத்தால் பாகப்பிரிவினை

பங்குரிமையருள் ஒருவன் இந்து மதத்தை விட்டு அயல் மதத் திற்கு மாறிவிட்டால், கூட்டுக் குடும்பத்தில் அவனுடைய உறவு அறுந்துவிடும். மதமாற்றம் நிகழ்ந்த தேதியிலிருந்து பாகப் பிரிவினை தொடங்கியதாகக் கொள்ளப்படும். மதம் மாறியவனை விட்டுவிட்டு மற்றவர்கள் தொடர்ந்து கூட்டுக் குடும்பத்தை நடத்தலாம்.

மேலே கண்ட முறைகள் அல்லாமல் வேறு முறையிலும் பாகப் பிரிவினை ஏற்படலாம். பாகப்பிரிவினை ஏற்படுவதற்கு அடிப்படையான தேவை பங்குரிமையர் பாகப்பிரிவினை வேண்டும் என்பதைத் திட்ட வட்டமாகத் தெரிவிப்பதுதான். பாகப்பிரிவினை நடக்கும் போது தாயின் வயிற்றில் இருக்கும் மகன், பிறந்துவிட்ட மகனுக்குச் சமம். எனவே, அவன் பாகப்பிரிவினைக்குப் பிறகு பிறந்தாலும் தந்தைக்கும் மற்றவர்களுக்குமிடையே நடந்த பாகப்பிரிவினையை மீண்டும் கிளறி எதிர்க்கலாம். பாகப்பிரிவினை நடக்கும்போது தாயின் வயிற்றில் இல்லாமல் அதற்குப் பிறகு கருத்தரித்து பிறந்த மகன் தன்னுடைய தந்தைக்குச் சொந்தில் ஒரு பங்கு இருக்கிறதா இல்லையா என்பதைப் பொறுத்தே பழைய பாகப்பிரிவினையை எதிர்த்து வழக்காட முடியும். தந்தை தனக்கொரு பங்கு வைத்திருந்தால் மீண்டும் நடந்து முடிந்த பாகப்பிரிவினையைக் கிளற முடியாது. ஆனால், தந்தை தனக்கொரு பங்கும் வைத்துக் கொள்ளவில்லை என்றால் அவன் நீதிமன்றத்தை அணுகலாம்.

பாகப் பிரிவினைக்குத் தடைகள்

வயது வந்த ஒவ்வொரு பங்குரிமையருக்கும் பிரிவினை கோர உரிமை உண்டு என்பது இன்றைய சட்டம் என்றாலும் சாஸ்திரங்கள் சில தடைகளைச் சொல்கின்றன. தந்தை உயிரோடு இருக்கும் போது மகன்களுக்குள் பாகப்பிரிவினை கூடாது; குழந்தை பெறும் வயதைத் தாய் தாண்டும்வரை பாகப்பிரிவினை செய்யக்கூடாது; இந்தச் சாஸ்திரத் தடைகள் எல்லாம் இன்று பின்பற்றுவதற்குரிய சிபாரிசுகளாகவே வைக்கப்பட்டிருக்கின்றன.

ஐந்தாறு தலைமுறைகளாகப் பாகப்பிரிவினை நடக்கவில்லை என்பது ஒருவன் பாகப்பிரிவினை கேட்கும்போது எதிர்ப்பதற்குச் சட்ட பூர்வமான காரணமாகாது. ஆனால், பங்குரிமையர்கள் பாகப்பிரிவினை செய்து கொள்வதில்லை என்று உடன்பாடு செய்து கொள்ளலாம். அந்த உடன்பாடு அவர்களைக் கட்டுப்படுத்தும். ஆனால், அவர்களுடைய வாரிசுகளை அது கட்டுப்படுத்தாது. ஆனால், பம்பாய் உயர்நீதிமன்றம்[2] ஒரு வழக்கில் பங்குரிமையர் பாகப்பிரிவினை செய்து கொள்வதில்லை என்று செய்து கொண்ட ஒப்பந்தம் அவர்களைக் கட்டுப்படுத்தாது என்று தீர்ப்புக் கூறியிருக்கிறது. ஆனால், அலகாபாத்,[3] பாட்னா,[4] கல்கத்தா,[5] உயர்

[2] Ramalinga *Vs* Virupakshi 7B 538.
[3] Rup Singe *Vs* Bhabuti 58IC 632.
[4] Kamesuwar *Vs* Raj Bansi 1943 Pat 433.
[5] Rajendrer *Vs* Sham Chund 6C 106.

நீதிமன்றங்கள் கட்டுப்படுத்தும் என்று தீர்ப்பு வழங்கியிருக்கின்றன. சென்னை உயர் நீதிமன்றம்[6] ஒரு வழக்கில் பங்குரிமையர் ஒரு குறிப்பிட்ட காலம் வரையிலும் அல்லது தங்கள் வாழ்நாள் வரையிலும் அல்லது குறிப்பிட்ட சம்பவம் நடக்கும் வரையிலும் பாகப்பிரிவினை செய்துகொள்வதில்லை என்று உடன்பட்டால்—பாகப்பிரிவினைக்கு நிரந்தரத் தடை இல்லாமல்—அதைத் தடுப்பதற்குத் தடையொன்றும் சட்ட பூர்வமாக இல்லை என்று கூறியிருக்கிறது. ஆனால், ஒருவர் தன்னுடைய உயிலில், பாகப்பிரிவினையைத் தடை செய்தோ அல்லது கால வரையின்றித் தள்ளிப் போட்டோ எழுதி வைத்திருப்பாரானால் அது செல்லுபடியாகாது.[7]

பாகப்பிரிவினைக்கு உட்படும் சொத்துகள்

கூட்டுக் குடும்பத்தின் அசையும் சொத்துகள் அசையா சொத்துகள் யாவும் பாகப்பிரிவினைக்கு உட்பட்டவை. ஆனால், சில சொத்துகளை மட்டும் கூட்டாகவோ அல்லது தன்னுடைய முறை வரும்போதோதான் அனுபவிக்க முடியும். எல்லாருக்கும் பொதுவாக இருக்கும் பாதை, கிணறு, கடவுள் விக்கிரகங்கள் ஆகியவற்றைப் பாகப்பிரிவினை செய்யமுடியாது. சாமி கும்பிடும் இடத்தைப் பொதுவாகத்தான் வைக்கவேண்டியிருக்கும் ஒவ்வொருவரும் தங்கள் முறைப்படி வேண்டுமானால் பூஜை செய்து கொள்ளலாம். பங்குரிமையர்கள் தங்கள் மனைவியருக்குச் சொந்த உபயோகத்திற்கு என்று கொடுக்கப்பட்ட நகைகளை, உடைகளைப் பாகப்பிரிவினை செய்யமுடியாது. எளிதாகப் பிரிக்க முடியாத அசையும் சொத்துகளை ஒருவருக்குக் கொடுத்துவிட்டு இன்னொருவருக்கு இழப்பு ஈடு கொடுக்கலாம்.

மேலும் பாகப்பிரிவினை செய்யும்போது கடன் இருந்தால் அதை அடைப்பதற்கும், மதச் சடங்குகள் செய்வதற்கும், சொத்துரிமை இல்லாத பிற உறவினர்களைப் பராமரிப்பதற்கும், திருமணமாகாத சகோதரிகளின் திருமணச் செலவிற்கும் வகைசெய்ய வேண்டும். அவ்வாறு வகை செய்யாமல் பாகப்பிரிவினை செய்யப்பட்டிருந்தால், எந்தச் சகோதரன், சகோதரிகளின் திருமணச் செலவையும், தாயின் ஈமச்சடங்கு, கருமாதிச் செலவுகளையும் ஏற்றுக் கொள்கிறானோ அவன் மற்றவர்களிடமிருந்து விகிதாச்சாரப்படி அத் தொகையைப் பெற்றுக்கொள்ள உரிமை உண்டு.

[6] Arumugha *Vs* Ranganathan 38 L.W. 736 : 65 M.L.J. 741.
Radhanath *Vs* Tarrucknath 3 C.W.N. 126.

[7] Mokoondo *Vs* Gonesh I.C. 104.

பங்கு உடையவர்கள்

பாகப்பிரிவினையில் ஓர் அம்சத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். பாகப்பிரிவினை கேட்க உரிமை உடையவர்கள் வேறு; பாகப்பிரிவினையில் பங்குபெற உரிமை உடையவர்கள் வேறு. வயது வந்த ஒரு பங்குரிமையருக்குப் பாகப்பிரிவினை கோரும் உரிமை உண்டு. இந்த உரிமை மனைவி, தாய், பாட்டி ஆகியோருக்குக் கிடையாது. இவர்களுக்குத் தமிழ்நாடு நீங்கலாக மற்ற இந்தியப் பகுதிகளில் பாகப்பிரிவினை ஏற்படும்போது பங்கு கிடைக்கும். ஆனால், பாகப்பிரிவினையை ஓர் உரிமையாகக் கேட்க முடியாது.

மகன், பேரன், கொள்ளுப்பேரன் ஆகியோர் தந்தை, பாட்டன், கொள்ளுப்பாட்டன் ஆகியோரை எதிர்த்துப் பாகப்பிரிவினை கேட்க முடியும் (ஆனால் மராட்டியத்தில் தந்தை மற்றவர்களோடு அதாவது தன்னுடைய மூதாதையர் அல்லது கிளைவழியினரோடு கூட்டாக இருக்கும்போது, அவருடைய சம்மதம் இல்லாமல் மகன் பாகப்பிரிவினை கேட்க முடியாது.) தந்தைக்கும் மகன்களுக்கு மிடையே பாகப்பிரிவினை ஏற்படும்போது அவர்கள் சொத்தைச் சமமாகப் பிரித்துக் கொள்ளலாம். இதில் யாராவது பங்குரிமையர் இறந்து போய்விட்டால், மூன்றாவது தலைமுறையைத் தாண்டாத அவனுடைய ஆண் வாரிசுகள் இறந்து போனவனின் சொத்தை அடையலாம்.



இந்த வரைபடத்தில் 'த' தந்தை. அவருக்கும் அவருடைய 'அ', 'ஆ', 'இ', 'ஈ' ஆகிய மகன்களுக்கும், அவர்களுடைய வாரிசு களிடையேயும் பாகப்பிரிவினை நடக்கிறது. 'அ' தன் மகன் 'ய' வுடன் தன் பங்கைப் பெற்றுக் கொள்கிறான். 'ஆ' உயிரோடு இல்லை. எனவே, அவனுக்குரிய பங்கு அவனுடைய மகன்க ளாகிய 'ர'வுக்கும் 'ல'வுக்கும் கிடைக்கிறது. மூன்றாவது மகனான 'இ' யும் உயிரோடு இல்லை. அவனுடைய மகனான 'வ' வும் உயிரோடு இல்லை. ஆனால் 'வ'வின் மகன்கள் (அதாவது 'த'வின்

கொள்ளுப்பேரன்கள்) 'ழ'வும் 'ல'வும் இருக்கிறார்கள். 'இ' உயிரோடு இருந்தால் அவனுக்கு என்ன கிடைக்குமோ அதை 'ழ'வும் 'ல'வும் பெற்றுக் கொள்வார்கள். நான்காவது மகனை 'ஈ' உயிரோடு இல்லை. அவன் வழியில் அவனுடைய கொள்ளுப் பேரனை ட' மாத்திரமே உயிரோடு இருக்கிறான். 'ட' 'த'விலிருந்து மூன்று தலைமுறைத் தள்ளிப் போய்விடுகிறான். எனவே, அவனுக்குப் பங்கு கிடைக்க வழியில்லை. எனவே 'ஈ' யினுடைய பங்கு தந்தைக்கும் அவருடைய மகன்களுக்கும் செல்லும். தந்தை $\frac{1}{4}$ பாகம் எடுத்துக்கொள்வார். மற்ற மூன்று மகன்களில் 'அ' உயிருடன் இருக்கிறான். அவன் $\frac{1}{4}$ பாகம் எடுத்துக் கொள்வான். 'ஆ'வினுடைய பங்கான $\frac{1}{4}$ பாகம் அவன் உயிரோடு இல்லாததால் அவனுடைய மகன்களான 'ர'வுக்கும் 'ல'வுக்கும் செல்லும். அவர்கள் இருவரும் அந்த $\frac{1}{4}$ பாகத்தில் சரிபாதி ($\frac{1}{8}$ பாகம்) எடுத்துக் கொள்வார்கள். 'இ'யினுடைய பங்கான $\frac{1}{4}$ பாகம் அவன் உயிரோடு இல்லாததால் அவனுடைய பேரன்களான (அவனுடைய மகன் 'வ'வும் உயிரோடு இல்லை.) 'ழ'வுக்கும் 'ல'வுக்கும் செல்லும். அவர்கள் இருவரும் அந்த $\frac{1}{4}$ பாகத்தில் சரிபாதி எடுத்துக் கொள்வார்கள். இதில் 'ஈ' பாகப்பிரிவினைக்குப் பின் இறந்திருந்தால் 'ஈ'யினுடைய பங்கு 'ட'விற்குக் கிடைத்திருக்கும். ஏனென்றால் அப்போது 'ட', 'ஈ'யிலிருந்து மூன்று தலை முறைக்குள் வந்து விடுவான்,

முறையிலா மணப் பிறப்பு மகன்

முதல் மூன்று வருணத்தில் முறையிலா மணப் பிறப்பில் பிறந்தவனுக்குப் பராமரிக்கப்படும் உரிமை உண்டே தவிரத் தந்தையின் சொத்தில் உரிமை கொண்டாட முடியாது. ஆனால், நான்காவது வருணத்தில் (சூத்திரர்) ஒருவன் ஒருத்தியைத் தனக்கே உரியவளாகத் தொடர்ந்து வைத்திருந்து பிறந்த முறையிலா மணப்பிறப்பு மகன் தந்தையிடம் பாகப்பிரிவினை கோர முடியாது; என்றாலும் அவருக்குப்பின் அவருடைய ஆண் மக்களிடம் பிரிவினை கேட்க முடியும். ஆனால், தந்தை பிரிவினையாகாத குடும்பத்தில் இருந்து இறந்திருந்தால், முறையிலா மணப் பிறப்பில் பிறந்தவன் அவருக்குப் பின் அவருடைய மகன்களிடம் பாகப்பிரிவினை கோரமுடியாது. முறையிலா மணத்தில் பிறந்தவன் முறையான மணத்தில் பிறந்திருந்தால் என்ன பங்கு கிடைக்குமோ அதில் பாதியைத்தான் பெற உரிமை படைத்தவன். ஆனால், தந்தை தான் உயிரோடு இருக்கும்போது முறை மணப்பிறப்பில் பிறந்தவனுக்குத் தரும் அளவு சொத்தை முறையிலா மணத்தில் பிறந்தவனுக்கும் கொடுக்கலாம்.

ஆகவே, முறையிலா மணப் பிறப்பில் பிறந்த ஒருவன், (அ) தன் தாய், தந்தை ஒருவருக்கே தொடர்ந்து வைப்பாட்டியாக இருந்திருந்தால் (ஆ) தந்தை சூத்திரராக இருந்தால் (இ) பிரிவினையான குடும்பத்தில் (அதாவது கிளைவழியினருடன் இல்லாமல் மகன்களோடு இருந்தால்) இருந்திருந்தால், தந்தை உயிரோடு இருக்கும்போது பாகப்பிரிவினை கோர உரிமை இல்லாவிட்டாலும், அவருக்குப்பின் முறையான மணப் பிறப்பில் பிறந்தவர்களிடம் பிரிவினை கேட்கலாம். ஆனால், (அ) தந்தை பிரிவினையாகாத கிளை வழியினருடன்கூடிய கூட்டுக் குடும்பத்தில் இருந்திருந்தால், (ஆ) தந்தை தான் உயிரோடு இருக்கும் காலத்திலேயே முறை மணத்தில் பிறந்த மகன்களுக்குச் சொத்தைக் கொடுத்திருந்தால், (இ) தந்தை சூத்திரராக இல்லாமல் முதல் மூன்று வருணத்தவராக இருந்திருந்தால், பாகப்பிரிவினை கேட்க முடியாது. ஆனால், தந்தை சூத்திரராக இருந்து கூட்டுக் குடும்பத்தில் இருந்தாலும் அவருக்குத் தனிச் சொத்து இருந்தால், அவருடைய மறைவிற்குப் பின் முறை மணப்பிறப்பில் பிறந்தவர்களிடம் தந்தையின் தனிச் சொத்தைப் பொறுத்தவரை அவன் பிரிவினை கேட்கலாம்.

தத்து எடுக்கப்பட்ட மகன்

தத்து எடுக்கப்பட்ட மகனுக்கு ஈன்றெடுக்கப்பட்ட மகனுக்குரிய சகல உரிமைகளும் உண்டு. எனவே, அவன் தந்தையோடு சொத்தைச் சமமாகப் பங்கிட்டுக்கொள்வான். ஆனால், முதல் மூன்று வருணத்தில் தத்து எடுத்தவருக்குத் தத்து எடுப்பிற்குப் பின் ஒரு மகன் பிறந்துவிட்டால், தத்து எடுக்கப்பட்டவனின் நிலை முற்றிலும் மாறிவிடும். ஈன்றெடுக்கப்பட்ட மகனுக்குள்ள உரிமைகள் தத்து எடுக்கப்பட்டவனுக்குக் கிடையாது. தத்து எடுக்கப்பட்டவனுக்கு என்ன பங்கு கிடைக்கும் என்பதில் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபாடு உண்டு. தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் $\frac{1}{5}$ பாகமே முதல் வருணத்தில் தத்து எடுக்கப்பட்டவனுக்குக் கிடைக்கும். ஈன்றெடுக்கப்பட்ட மகனுக்கு $\frac{4}{5}$ பாகம் கிடைக்கும். அதாவது தத்து எடுக்கப்பட்டவனைவிட நான்கு மடங்கு அதிகமாகக் கிடைக்கும். இதில் தந்தை இருக்கும்போது பாகப்பிரிவினை நடந்தால் தந்தையும் தத்து எடுக்கப்பட்டவனைவிட நான்கு மடங்கு அதிகம் எடுத்துக்கொள்வர்.

பாகப்பிரிவினைக்குப் பின்னர்ப் பிறந்த மகன்

தாயின் வயிற்றில் இருக்கும் மகனுக்குப் பிறந்துவிட்ட மகனுக்குள்ள சகல உரிமைகளும் உண்டு. பாகப்பிரிவினை செய்யும்போது அவனுக்குப் பங்கு வைக்காமல் விட்டுவிட்டால், அல்லது

அவனது உரிமையைப் பாதிக்கும் வகையில் எதாவது செய்தால், பின்னர் அவன் நீதிமன்றத்தை அணுலகாம், நடந்து முடிந்த பாகப்பிரிவினையை எதிர்த்துத் தன் உரிமையை நிலைநாட்டிக் கொள்ளலாம். பாகப்பிரிவினை நடக்கும்போது தாயின் வயிற்றிலும் இல்லாமல் அதற்குப் பிறகு பிறந்த மகன், தன் தந்தை தனக்கென்று ஒரு பங்கு ஒதுக்கிக் கொண்டிருந்தால், அதற்கே வாரிசு ஆவான். நடந்து முடிந்த பாகப்பிரிவினையைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று அவன் கேட்க முடியாது. ஆனால், அவனுடைய தந்தை தனக்கென்று ஒரு பங்கு வைத்துக் கொள்ளாதிருந்தால். நடந்த பாகப்பிரிவினையில் பங்கு கேட்டு வழக்காடலாம் ஆனால், தந்தை தனக்கு ஒதுக்கப்பட்ட பங்கை அழித்துவிட்டார் என்று சொல்லிப் பாகப்பிரிவினை சம்பந்தமாக பழையபடி எதையும் கிளற முடியாது.[8]

தகுதியற்ற பங்குரிமையர்

பங்குரிமையருள் ஒருவன் பித்தனாக, குருடனாக, பிறவி மந்தனாக இன்னும் பிற கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டவனாக இருந்தால், அவன் கூட்டுக் குடும்பத்தால் பராமரிக்கப்படுவான். பாகப்பிரிவினையின்போது அவனுக்கு எந்தப் பங்கும் கிடைக்காது; பராமரிப்பு மாத்திரமே கிடைக்கும். ஆனால், அவனுடைய தகவின்மை (Diability) பாகப்பிரிவினைக்குப் பின் சரியாகிவிட்டால், அவனுக்குச் சொத்தில் உரிமை உண்டு. பாகப்பிரிவினைக்குப் பின் பிறந்த மகனுக்கு உள்ள உரிமைகள் யாவும் அவனுக்கு உண்டு. ஆனால், அவனுடைய தகவின்மை தனிப்பட்டதாக இருந்தால், அவனுடைய வழித்தோன்றல்கள் அவன் இறந்துவிட்டால் எவ்வாறு சொத்துப் பெறுவார்களோ அவ்வாறு பெறுவார்கள். ஆனால், 'இந்து மரபு முறை இறங்குரிமை (தகவின்மை நீக்கச் சட்டம்' (Hindu Inheritanee (Removal of Disabilities) Act 1928) பித்தனாக, பிறவி மந்தனாக இருப்பவர்களைத் தவிர மற்றவர்கள் விஷயத்தில் இருந்த தடைகளைப் போக்கிவிட்டது.

பெண்களின் பங்கு

மனைவி, விதவைத் தாய், பாட்டி அனைவருக்கும் பாகப்பிரிவினை கோரும் உரிமை இல்லாவிட்டாலும், பாகப்பிரிவினை ஏற்படும் போது, பங்கு பெறுவதற்கு உரிமை உண்டு. இதில் தாய், பாட்டி என்று சொல்லும்போது மாற்றாந்தாய், பாட்டி அனைவரும் அடங்குவர். பெண்களுக்குத் தரப்படும் பங்கு அவர்களுடைய பராமரிப்புக்குப் பதிலாகத் தரப்படுவதாகும். எனவே, அவர்களுடைய

[8] Shivaji Rao *Vs* Vasantrao 33 Bom, 267,

மரணத்திற்குப்பின் சொத்து எப்படி வந்ததோ அப்படியே போய்விடும். அதாவது மற்றவர்கள் சொத்திலிருந்துதான் அவர்களுடைய சொத்து உருவாக்கப்பட்டுத் தரப்படுகிறது. எனவே, அவர்களுடைய மரணத்திற்குப்பின் சொத்து மற்றவர்களுக்குச் சென்றுவிடும். ஆனால், தென்னிந்தியாவைப் பொறுத்தவரைப் பராமரிப்புக்குப் பதிலாகப் பெண்களுக்குச் சொத்து தரும் வழக்கம் ஏறக்குறைய நடைமுறையில் இல்லாமல் போய்விட்டது என்று சொல்லலாம்.

மனைவி

தந்தை உயிரோடு இருக்கும்போதே பாகப்பிரிவினை நடந்தால், மகனைப் போலவே மனைவிக்கும் சமமாகச் சொத்துக் கொடுக்க வேண்டும். அவளுக்குக் கணவனிடமிருந்து அல்லது மாமனாரிடமிருந்து சொத்துக் கிடைத்திருந்தால், அதையும் கணக்கில் எடுத்துக்கொண்டு மகனுக்குச் சமமாகப் பங்கு கிடைத்திருக்கிறதா என்று பார்க்க வேண்டும். அவளுக்குக் கிடைத்த சொத்து, பாகப் பிரிவினையில் கிடைக்கும் சொத்தைவிட அதிகமாக இருக்குமானால், பாகப்பிரிவினையில் அவளுக்குப் பங்கு கொடுக்க வேண்டியதில்லை. மனைவிக்குப் பாகத்தில் பங்கு கொடுப்பது சென்னை மாகாணத்தில் வழக்கற்றுப் போய்விட்டது.

தாய் (விதவை)

பாகப்பிரிவினை செய்யும்போது கணவன்மூலம் அல்லது மாமனார் மூலம் தாய்க்குக் கிடைத்துள்ள சொத்தையும் கணக்கில் எடுத்துக் கொண்டுதான் தாயின் பங்கை நிர்ணயிப்பார்கள். பரம்பரைச் சொத்து அல்லது பரம்பரைச் சொத்தால் வந்த வருமானம் இவற்றில் தான் தாய்க்குப் பங்கு கிடைக்கும். மகன்களோடு பாகப்பிரிவினை நடக்கும்போது, பரம்பரைச் சொத்தின் உதவியில்லாமல் மகன்கள் சம்பாதித்த சொத்தில் தாய் எந்த உரிமையும் கொண்டாட முடியாது. ஈன்றெடுத்த தாய்க்குள்ள உரிமைகள் மாற்றாந்தாய்க்கும் உண்டு. பாகப்பிரிவினையில் தாய்க்கும் ஒரு பங்கு கொடுக்கும் வழக்கம் சென்னை மாகாணத்தில் அற்றுப்போய்விட்டது.

பாட்டி, கொள்ளுப்பாட்டி

பாகப்பிரிவினையில் ஒரு பாட்டி தன் மகன்களுக்குச் சமமாகப் பங்கு பெறுவாள். அதாவது, உயிரோடு இருக்கும் மகன்களுக்கும் செத்துவிட்ட மகனின் மகன்களுக்குமிடையே பாகப்பிரிவினை நடக்கும்போதும், தன்னுடைய மகன் இறந்து பேரன்களுக் கிடையே பாகப்பிரிவினை நடக்கும்போதும் அவள் சம பங்கினைப்

பெறுவாள். ஆனால், பாகப்பிரிவினை தன்னுடைய மகனுக்கும் பேரனுக்குமிடையே நடந்தால் (பம்பாய், அலகாபாத், உயர்நீதி மன்றப்படி [9]) அவளுக்குப் பங்கு கிடையாது, ஆனால் கல்கத்தா உயர்நீதிமன்றம் இதற்கு மாறான முடிவை எடுத்திருக்கிறது.[10] தாய்க்கு உள்ள உரிமை போலவே பாட்டிக்கும் கொள்ளுப்பாட்டிக்கும் பரம்பரைச் சொத்திலிருந்துதான் பங்கு கிடைக்கும். மகன்கள் தாங்களாகத் தேடிய சொத்திலிருந்து பங்கு கிடைக்காது. பாகப் பிரிவினையில் பங்கு கேட்கும் உரிமை பாட்டிக்கோ கொள்ளுப் பாட்டிக்கோ சென்னை மாகாணத்தில் கிடையாது.

பகுதிப் பாகப்பிரிவினை (Partial Partion)

ஒரு கூட்டுக் குடும்பத்தில் ஒருசிலர்மட்டும் பிரிந்து போக மற்றவர்கள் தொடர்ந்து கூட்டாக இருந்தால், அது உறுப்பினர்களைப் பொறுத்த அளவில் பகுதிப் பாகப்பிரிவினையாகும். சொத்தில் ஒரு பகுதியைப் பங்குரிமையர்கள் பிரித்துக் கொண்டு மறு பாதியைக் கூட்டாக வைத்துக் கொண்டால், சொத்தைப் பொறுத்த அளவில் அது பகுதிப் பாகப்பிரிவினையாகும் பகுதி, பாகப்பிரிவினையாகிவிட்டாலே கூட்டுக் குடும்ப அந்தஸ்து போய் விட்டதாகவே எண்ணப்படும். அவ்வாறு போகவில்லை என்பதை, சாதாரணமாக ஒவ்வொரு விஷயமும் எப்படி நிருபிக்கப்படுமோ அப்படியே நிருபிக்க வேண்டும். சொத்தில் ஒரு பாதி பிரித்துக் கொள்ளப்பட்டு மறுபாதி கூட்டாக வைத்துக்கொள்ளப்பட்டால், பிரித்துக் கொண்ட பாதிக்கு எஞ்சுநர் உரிமை (Surviorship) அமலாகாது; பிரிவுபடாத சொத்துக்கே அது அமலாகும். ஆனால், சொத்தில் ஒரு பாதி 'பிரித்துக் கொள்ளப்பட்டது வெறும் வசதிக்காக என்றால், முழுச் சொத்துக்கும் எஞ்சுநர் உரிமை அமலாகும். பழைய இந்து தர்ம சாஸ்திரங்களில் பகுதிப் பாகப்பிரிவினை பற்றி எதுவும் சொல்லப்படவில்லை. ஆனால், இந்துச் சமூகத்தில் நடைமுறையில் அப்படிப்பட்ட பாகப்பிரிவினைகள் வந்துவிட்டன. ஆகவே, இது சம்பந்தப்பட்ட சட்டங்கள் நீதிபதிகள் உருவாக்கியவையே.

பாகப்பிரிவினையை மீண்டும் கிளறுதல்

நடந்து முடிந்துவிட்ட பாகப்பிரிவினையை மீண்டும் கிளற வேண்டிய அவசியம் சிற்சில சமயங்களில் ஏற்படலாம். ஒரு பங்குரிமையருக்குக் கொடுக்கப்பட்ட சொத்தில் ஓர் அந்நியருக்குப்

[9] Jamnabai *Vs* Vasudeo 54B 417.
Sheo Narain *Vs* Janaki Prasad 34A 505.

[10] Badri Roy *Vs* Bhagwat 8C 649.

பிணை (Charge) இருப்பது தெரியவந்தால், அல்லது அந்தச் சொத்தே வேருெருவருக்குச் சொந்தமானது என்று கண்டுபிடிக்கப் பட்டு, சொத்தை இழக்க நேர்ந்தால், பாதிக்கப்பட்டவன் பாகப் பிரிவினையைக் கிளறலாம். ஒரு பங்குரிமையர் இன்னெருவ பங் குரிமையரை மோசடி செய்து தனக்கு இலாபம் தேடிக்கொண்டிருந் தாலும் பாதிக்கப்பட்ட பங்குரிமையர் நீதிமன்றத்தை அணுகலாம். தனக்கு நேர்ந்துவிட்ட இழப்பிற்கு மற்றவர்கள் சொத்திலிருந்து நட்டஈடு பெறவும் உரிமை அவனுக்கு உண்டு. ஒரு பிரச்சினையில் பாகப்பிரிவினையைக் கிளற வேண்டுமா அல்லது நட்டஈடு போதுமா என்பது அப் பிரச்சினையின் விஷயத்தைப் பொறுத்த தாகும். பாகப்பிரிவினையின்போது, ஏதாவது ஒரு சொத்து தவறு தலாக அல்லது மோசடியாக விடப்பட்டிருந்தால், அதை மட்டும் மீண்டும் பாகப்பிரிவினை செய்து கொள்ளலாம். பாகப்பிரிவினை ஆவணத்திலோ அல்லது தீர்ப்பாணையிலோ ஏதேனும் தவறுதல் நேர்ந்திருந்தால், அதைத் திருத்திக்கொள்ள உரிமையியல் நடை முறைச் சட்டத்தில் (Civil Procedure Code) வகை செய்யப் பட்டுள்ளது. பாகப்பிரிவினைக்குப் பிறகு பிறந்த மகன், தந்தை அவருக்காக ஒரு பங்கை வைத்துக்கொள்ளாதிருந்தால், பாகப் பிரிவினையை மீண்டும் கிளறலாம். அதைப் போலவே தாய் வயிற்றில் ஒருவன் இருக்கும்போது செய்யப்பட்ட பாகப்பிரிவினை யில், அவன் நலன்களுக்கு விரோதமாக ஏதேனும் இருந்தால் பாகப்பிரிவினை மீண்டும் பரிசீலனைக்கு உள்ளாகும். கூட்டுக் குடும்பத்தில் பாகப்பிரிவினை ஏற்படும்போது, பங்குரிமையர் களுக்கு உரிமை வயது வராத மகன்கள் இருந்தால், அவர்களின் பிரதிநிதியாகத் தந்தையிருந்து காரியங்கள் செய்த பின்னர், மோசடி நடந்திருப்பதாக ஆதாரம் இருந்தாலொழிய வேறு காரணங்களுக்காக உரிமை வயது வராத மகன்கள் நடந்து முடிந்து விட்ட பாகப்பிரிவினையை மீண்டும் கிளற முடியாது.

பாகப்பிரிவினையின் விளைவுகள்

பாகப்பிரிவினை ஏற்பட்டதும் பங்குரிமை கலைக்கப்பட்டு விடுகிறது. ஒவ்வொருவரும் தத்தம் பங்கைத் தனித்தனியே வைத்துக்கொள்வர். ஒருவரின் மரணத்திற்குப் பின் சொத்து வாரிசுதாரர்களுக்குச் செல்லும். ஒரு பங்குரிமையர் பங்குரிமையை விட்டுவிட்டபின், தன் ஆண் வழித்தோன்றல்களுடன் சொத்தை வைத்துக் கொள்வாரேயானல், அவருக்கும் அவர் ஆண் வழித் தோன்றல்களுக்குமிடையே பங்குரிமை இருப்பதாகக் கொள்ள லாம். பாகப்பிரிவினை ஏற்பட்டதும் கூட்டுக் குடும்பத்தின் வணிகமும் முடிந்து விட்டதாகக் கொள்ளவேண்டும். அதற்குப்

பிறகு கூட்டாண்மைச் சட்டத்தின் விதிகளே (Partnership Act பொருந்தி வரும். ஒரு தந்தை பாகப்பிரிவினைக்குப் பின்னர்த் தன் மகன்களைத் தான் செய்யும் ஒப்பந்தங்களில் பிணைக்க முடியாது. பாகப்பிரிவினைக்கு முன் வாங்கிய கடனுக்காகப் பாகப்பிரிவினைக்குப் பின் ஒரு கடன்காரர், பாகப்பிரிவினை நடந்ததைத் தெரிந்து கொண்டே, புரோநோட்டு எழுதி வாங்குவாரேயானால், அது மகன்களைக் கட்டுப்படுத்தாது. அதைப் போலவே கூட்டுக் குடும்ப நிர்வாகி, பாகப்பிரிவினைக்குப் பின் காலாவதியாக வேண்டிய கடனின் காலத்தை எவ் வகையிலும் நீட்டிக்க முடியாது.[11]

மீண்டும் சேருதல் (Reunion)

மீண்டும் சேருதல் பற்றி பிரகஸ்பதியின் நூலில் கூறப்பட்டுள்ளது. தந்தை, சகோதரன், தந்தையின் சகோதரர்கள், ஆகியோரிடமிருந்து பிரிந்து சென்றவன், அன்பால் மீண்டும் ஒன்று பட்டால், அதை மீண்டும் சேருதல் என்று சொல்ல வேண்டும் என்பது பிரகஸ்பதியின் மொழியாகும். ஆகவே, பாகம் பிரித்துக் கொண்டு தனியே சென்றவர்கள் மீண்டும் பொங்கிவரும் பாச உணர்ச்சியால் ஒன்று சேர்ந்து பழையபடி வாழலாம். மீண்டும் சேருதல் சம்பந்தமாக நீதிமன்றங்களின் தீர்ப்புகளுக்கிடையே கருத்து வேறுபாடு உண்டு. யார் யார் ஒன்று சேரலாம் என்பதில் பல்வேறு 'முறைகளிலே' (Schools) காணப்படும் கண்ணோட்டமே இதற்குக் காரணம். மராத்திய முறைப்படியும், மிதிலை முறைப்படியும் முன்பிருந்த பாகப்பிரிவினையில் சம்பந்தப்பட்ட எந்த இரு தரப்பினரும் மீண்டும் சேர்ந்து கொள்ளலாம். ஆனால், காசி, வங்க, சென்னை முறைகள் பிரகஸ்பதியின் மொழியை அப்படியே ஏற்றுக் கொள்கின்றன. அதாவது தந்தை, சகோதரன், தந்தையின் சகோதரர்கள் ஆகியோரிடத்தில் மட்டுமே பிரிந்தவர் மீண்டும் சேர முடியும்.

மீண்டும் சேருதலுக்கு எழுத்து மூலமாக ஏற்பாடு செய்து கொள்ளவேண்டிய அவசியமில்லை. வாய்ச் சொற்களே போதுமானது. ஆனால், சம்பந்தப்பட்ட தரப்பினரிடையே மீண்டும் சேரும் விருப்பம் இருக்க வேண்டும். ஒன்றாக இருந்து ஒன்றாக வியாபாரம் செய்வது மீண்டும் சேருதலுக்கு ஆதாரமாகாது.[12] மீண்டும் சேருதல் நடைபெற வேண்டுமானால், மீண்டும் கூட்டுக் குடும்பமாக இருந்து, அதன் உரிமைகளையே ஏற்றுக்கொள்ளும் விருப்பம் இருக்க வேண்டும். உரிமை வயது அடையாத ஒருவ

[11] Rangssamy *Vs* Sivaprakasam 54LW 596.

[12] Bhubathi *Vs* Muralidahar 1943 ALJ 328PC.

னுக்கு ஒப்பந்தம் செய்துகொள்ளும் தகுதி இல்லாததால், அவன் மீண்டும் சேர முடியாது.

மீண்டும் சேருதலின் விளைவாகப் பழையபடி அக் குடும்பத்திற்குக் கூட்டுக் குடும்ப அந்தஸ்து ஏற்படும். குடும்பம் கூட்டாக இருந்து, பின்னர்ப் பாகப்பிரிவினையால் பிளவுபட்டு, மீண்டும் சேரும்போது சொத்து எஞ்சுநர் உரிமைப்படி செல்லுமா அல்லது மரபுமுறை இறங்குரிமை வழிச்செல்லுமா என்பது முக்கிய பிரச்சினை. பெரும்பாலான நீதிமன்றங்கள், எவ்வாறு கூட்டுக் குடும்பத்தில் உரிமை எஞ்சுநர் உரிமைப்படி செல்லுமோ அவ்வாறே மீண்டும் சேர்ந்த குடும்பத்திலும் உரிமை செல்லும் என்று முடிவெடுத்திருக்கின்றன.

தாயபாக முறையில் பாகப்பிரிவினை

தாயபாகக் கூட்டுக் குடும்பம் மிதாக்ஷரக் கூட்டுக் குடும்பத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டது என்பது முன்பே கூறப்பட்டது. தாயபாகத்தில் பரம்பரைச் சொத்துக்கும் தந்தையே முழு உரிமையாளர். அவர் உயிரோடு இருக்கும்போது மகன் பாகப்பிரிவினை கேட்க முடியாது. தந்தையின் மறைவிற்குப் பின்னரே தாயபாகத்தில் பங்குரிமை அமைப்பு உருவாகிறது என்று சொல்ல வேண்டும். மேலும், பெண்களும் இதில் பங்குரிமையராக இருக்க முடியும்; அவர்கள் மற்றப் பங்குரிமையரிடம் பாகப்பிரிவினை கேட்க முடியும். தந்தை உயிரோடு இருக்கும்போது, பாகப்பிரிவினை என்ற பேச்சுக்கே இடமில்லாததால், தாயாருக்குப் பங்கு என்ற பிரச்சினையும் எழாது. தந்தையின் மரணத்திற்குப் பின் மகன்களுக்கிடையே பாகப்பிரிவினை நடக்கும்போது தாயாருக்கும் ஒரு பங்கு கிடைக்கும். இறந்து விட்ட மகனின் வாரிசாக அவள் ஒரு பங்கை அடைந்திருந்தாலும், தனக்குரிய பங்கை அவள் இழக்க வேண்டியதில்லை. ஆனால், பாகப்பிரிவினையில் அவளுக்குத் தரப்படும் பங்கு பராமரிப்புக்குப் பதிலாகத் தரப்படுவது என்பதை இங்கே கவனத்தில் கொள்ளவேண்டும்.

பிரிக்க முடியாத சொத்துரிமை (Impartible Estate)

பாகப்பிரிவினைக்கு உட்படாத சொத்துரிமை பிரிக்க முடியாத சொத்துரிமையாகும். பிரிக்க முடியாத சொத்துரிமை அரசாங்கத்தின் மானியத்தாலோ வழக்கத்தாலோ (குடும்ப உடன்பாட்டாலோ) ஏற்படலாம். மானியத்தின் வழியாகப் பிரிக்க முடியாத சொத்துரிமையை உருவாக்கக்கூடிய தனி உரிமை அரசாங்கத்திற்கு அன்றி வேறு யாருக்கும் கிடையாது. வழக்கத்தின் வழிப் பிரிக்க முடியாத சொத்துரிமை ஏற்பட்டிருந்தால், அது நீண்ட காலமாக, இடை

விடாது வந்திருக்க வேண்டும். குழப்பமில்லாத சான்றுகளுடன் அதை நிறுவ வேண்டும். சிற்சில பிரிக்க முடியாத சொத்துரிமைகள் குடும்பத்தினர் உடன்பாட்டிலும் ஏற்படுவதுண்டு. குடும்பத்தில் உண்டான உடன்பாடு தொடர்ந்து தலைமுறை தலைமுறையாக வந்திருக்க வேண்டும். குடும்பத்தில் ஒருவரே, பெரும்பாலும் மூத்தவரே அச் சொத்தைப் பாதுகாப்பில் வைத்திருப்பார். மற்றவர்கள் பராமரிக்கப்படும் உரிமை மட்டுமே பெற்றிருப்பார்கள். யார் அச் சொத்தைப் பிரிக்க முடியாத சொத்துரிமை என்று கூறுகிறார்களோ அவர்கள்தான் அதை நிரூபிக்கவேண்டும்.

பிரிக்க முடியாத சொத்துரிமையை நிரூபிக்கும் பொறுப்பு

பிரிவிகவுன்சில், மார்த்தாண்ட ராவ், மலகரிராவ் (Martand Rao, Malhar Rao, 55 c 403) வழக்கில் பிரிக்க முடியாத சொத்துரிமையை நிரூபிக்கும் பொறுப்பு சம்பந்தமாகச் சில கோட்பாடுகளை தெளிவாக்கியிருக்கிறது. ஒரு குறிப்பிட்ட சொத்துரிமை பிரிக்கக்கூடியதா அல்லது பிரிக்க முடியாததா என்ற பிரச்சினை எழும்போது, பிரிக்க முடியாதது என்று சொல்லும் நபர், அவ்வாறு வைத்துக்கொள்ள அனுமதிக்கும் வழக்கம் இருக்கின்றது என்பதையும் அதன்படி அந்தச் சொத்துரிமை தனியொருவனின் கையிலேயே இருக்கும், அது பிரிவினைக்கு உட்படாது என்பதையும் நிரூபிக்க வேண்டும். ஒரு சொத்துரிமை பிரிக்க முடியாதது என்பதை நிறுவ அச் சொத்தின் தன்மைப்படி அது பிரிக்க முடியாதது. ஒரு நபரின் பொறுப்பிலேயே இருக்க வேண்டும் என்பதையும் அல்லது வழங்கிவரும் சிறப்பான வழக்கப்படி பிரிக்க முடியாதது, ஒரு நபரின் பொறுப்பிலேயே இருப்பது என்பதையும் ஒருவன் காட்டவேண்டும். உரிமை இறக்கம் பற்றிய சாதாரணச் சட்டத்திலிருந்து மாறுபட்டு இருக்கும் அச் சிறப்பான வழக்கம் பழமையானதாகவும், மாற்றம் இல்லாததாகவும் இருக்க வேண்டும். அது அவ்வாறு இருப்பதை மிகத் தெளிவான சான்றுகளுடன் நிறுவவேண்டும். வெள்ளையர் ஆட்சி வருவதற்கு முன்பே அப்படி ஒரு வழக்கம் இருந்திருந்தால், பின்னர் வெள்ளையர் ஆட்சியுடன் நடந்த உடன்பாட்டில் அதற்கு முரணாகக் குறிப்பிடப்படாது இருந்தால், அவ் வழக்கம் தொடர்ந்து இருப்பதாக ஊகித்துக் கொள்ளப்படும். பிரிக்கப்படக்கூடிய சொத்துரிமை பிரிக்கப்படாமல் நெடுநாள் இருப்பது சாத்தியம் என்றாலும், ஒரு ஜமீன் முழுவதுமாக நீண்டகாலம் அப்படியே இருந்திருப்பது உரிமை இறக்கம் பற்றிய சாதாரண [illegible]ச் சட்டம் அங்கு அமலாகவில்லை என்பதையே காட்டுவதாக எடுத்துக்கொள்ளப்படும்.

பிரிக்க முடியாத சொத்துரிமையில் உரிமை இறக்கம்

பிரிக்க முடியாத சொத்துரிமை, கூட்டுக் குடும்பச் சொத்தாக இருந்தாலும் அது பங்குரிமை சொத்தாகக் கருதப்படமாட்டாது. ஏனென்றால், அதில் பிரிவினை கோரவோ கூட்டாக அனுபவிக்கவோ வழியில்லை. எனவே, பிரிக்கமுடியாத சொத்துரிமையை வைத்திருப்பவர், அப்போதைக்கு மாற்றுக்கம் (Alienation) செய்வதை ஒரு பங்குரிமையர் தடுக்க முடியாது. அது மட்டுமன்று, பராமரிப்புக் கேட்பதற்குக்கூட உரிமை கிடையாது. ஆனால், அச் சொத்தை வைத்திருப்பவர்களுக்குப் பின்னால் அதை யார் அடைவது என்ற பிரச்சினை வரும்போது, அது பங்குரிமைச் சொத்தாகக் கருதப்படும். அதாவது அச் சொத்து எஞ்சுநர் உரிமைப்படி செல்லும். கீழ்க்காணும் கொள்கைகள் பொதுவாகப் பிரிக்கமுடியாத சொத்துரிமையின் உரிமை இறக்கம் பற்றிப் பிரச்சினை எழும்போது கவனிக்கப்படும். பிரிக்கமுடியாத சொத்துரிமைக்குரிய குணம்சங்கள் நீங்கலாக மற்றவற்றில் பிரிக்கக்கூடிய சொத்தின் விதிகளே பிரிக்கமுடியாத சொத்துரிமைக்கு அமலாகும். பிரிக்கமுடியாத சொத்துரிமை ஏற்படுத்தும் ஒரே மாறுதல் இப் பிரிக்கமுடியாத சொத்துரிமை பிரிக்கக்கூடிய சொத்துரிமையாக இருந்திருந்தால், யார் யார் வாரிசுதாரர்களாக இருந்திருப்பார்களோ அவர்கள் மத்தியில் ஒரே ஒரு வாரிசைத் தேர்ந்தெடுப்பதற்கு உள்ள ஒரு தனி விதி. பிரிக்க முடியாத சொத்துரிமைக்கு வாரிசு ஆவது சம்பந்தமாக ஏதேனும் வழக்கம் இருந்தால், அது அனுசரிக்கப் படும். வழக்கம் இல்லாவிட்டால் மூத்த மகன் வாரிசாவான். பிரிக்க முடியாத சொத்துரிமையைப் பிரிக்கக்கூடிய சொத்துரிமையாகக் கருதி யார்யார் வாரிசுதாரர் என்பதை முதலில் கணக்கிட வேண்டும், பின்னர், வழக்கப்படியோ அல்லது சிறப்பு விதிப் படியோ ஒரு வாரிசுதாரரை தேர்ந்தெடுக்கவேண்டும். பொதுவாக மூத்த மகன் வாரிசாகப் பொறுப்பேற்பான். மூத்த மகன் என்றால், முதல் மனைவிக்குப் பிறந்தவன் என்பது பொருள் அன்று. முதலில் பிறந்தவன் என்றே பொருள் கொள்ளவேண்டும்.

பிரிக்க முடியாத சொத்துரிமை பரம்பரைச் சொத்தாக இருந்து, அதன் உரிமையாளர் குடும்பத்தில் கூட்டாக இருந்தால், பிரிக்க முடியாத சொத்துரிமை எஞ்சுநர் உரிமைப்படி செல்லும். அச் சொத்து மூத்த மகன் பொறுப்பிலேயே இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் ஒவ்வொரு கிளை வழியிலும் மூத்த மகன் அச் சொத்துக்கு உரிமையாளனாக இருப்பான்.

பிரிக்க முடியாத சொத்துரிமை பரம்பரைச் சொத்தாக இருந்து, ஆனால் அதன் உரிமையாளர் குடும்பத்தில் கூட்டாக இராமல்

தனியே இருந்திருந்தால், பிரிக்கக்கூடிய சொத்துக்கு அமலாகும். சாதாரண உரிமை இறக்க விதிகளே அமலாகும். கடைசியாக, சொத்துரிமையை வைத்திருப்பவர் ஆண் வாரிசு இல்லாமல் இறந்துவிட்டால், அவரது விதவையாகி விட்ட மனைவிக்குச் சொத்துரிமை செல்லும். மனைவியும் இல்லையென்றால், மகளுக்குச் செல்லும். ஒரு கூட்டுக் குடும்பத்தில் தகுதி வாய்ந்த ஆண்கள் இருக்கும்போது, பெண் மரபு முறை இறங்குரிமை பெற முடியாது. ஆனால், பிரிக்க முடியாத சொத்துரிமையில் பெண்ணும் மரபு முறை இறங்குரிமை பெறும் வழக்கம் இருந்தால், அப்போது அவள் மரபு முறை இறங்குரிமை பெறலாம்.

பிரிக்க முடியாத சொத்துரிமை ஒருவனின் தனிச் சொத்தாக இருந்தால், (அவன் கூட்டுக் குடும்பத்தில் இருந்திருந்தால் கூட) தனிச் சொத்தில் உரிமை இறக்கம் (Succession) எவ்வாறு செல்லுமோ அவ்வாறு செல்லும்.

பிரிக்க முடியாத சொத்துரிமைகள் என்னும் கொள்கை இப்பொழுது ஒழிக்கப்பட்டு விட்டது இந்திய உரிமை இறக்கச்சட்டம் பிரிக்க முடியாத உடைமை, பிரிக்கக்கூடிய உடைமை என்ற பாகுபாடுகளை அகற்றிவிட்டு ஒரே மாதிரியான விதிகளைக் கொண்டு வந்து விட்டது. ஆனாலும்கூட இந்திய அரசாங்கத்துடன் பழைய சமஸ்தான அரசர்கள் செய்துகொண்ட உடன்பாட்டின்படி சொத்துரிமை ஒரு தனி நபருக்குச் செல்லுமானால், அல்லது இந்திய உரிமை இறக்கச் சட்டம் வருவதற்கு முன்னால் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் விதிப்படி சொத்துரிமை ஒரு தனி நபருக்குச் செல்லுமானால், அதைத் தடுப்பதற்கு இன்று அமலில் உள்ள இந்திய உரிமை இறக்கச் சட்டத்தாலும் முடியாது.

9. சீதனம்
(STRIDHANA)

முற்காலத்தில் ஆண்களுக்குச் சமமாகப் பெண்கள் உரிமை பெற்றிருக்கவில்லை. பெண்களுக்கென்று சுதந்திரமாக இருந்த அம்சங்கள் மிகக்குறைவு. ஏறக்குறைய இல்லை என்றே சொல்ல லாம். கணவனையே கண்கண்ட தெய்வமாக எண்ணி வாழும் வாழ்க்கையையே பல நூல்கள் மிக அழுத்தமாக வலியுறுத்து கின்றன. கணவனை விடுத்து மதச் சடங்கு செய்யும் உரிமை கூடப் பெண்களுக்குக் கொடுக்கப்படவில்லை. பெண்ணுடைய சம்பாத்தியமும், சொத்தும் அவனை மணந்து கொண்டவனுக்கே சொந்தம். அதைக் கணவன் தன் சொத்தாகக் கருதி, தனது விருப்பம் போல் யாருக்கு வேண்டுமானாலும் தரலாம். என்ருலும் மனுஸ்மிருதியும், யாஞ்ஞவல்கிய ஸ்மிருதியும் சில சொத்துகள் மனைவிக்கே தனியாக உரியவை என்று அங்கீகரித்திருக்கின்றன. அவைதான் சீதனம். திருமண நிகழ்ச்சியில் தீ வளர்க்கும்போது கொடுக்கப்படுபவை, மணப் பெண்ணை அழைத்து வரும்போது கொடுக்கப்படுபவை, அன்பின் அடையாளமாகத் தரப்படுபவை, தந்தை, தாய், சகோதரன் ஆகியோர் கொடுப்பவை என்று ஆறு வகையில் வரும் சொத்துகள் அவ்வாறு அங்கீகாரம் பெற்ற சீதன மாகும். 'அன்பின் அடையாளமாகத் தரப்படுபவை' என்பதில் மாமனர், மாமியார், மற்றும் மணமக்கள் பெரியவர்கள் காலில் விழுந்து வாழ்த்துக் கேட்கும் போது தரப்படுபவை முதலியனவும் அடங்கும். விஞ்ஞானேஸ்வரர் (Vijnaneshwara) தன்னுடைய உரையில் பெண்களின் சீதனச் சொத்துக்குரிய எல்லையை விரி வாக்கினர். அவருடைய உரையின் விளக்கப்படி ஒரு பெண்ணுக் குக் கிடைக்கும் மரபுமுறை இறங்குரிமைச் சொத்து (Inheritance) அவள் வாங்கும் சொத்து, பாகப்பிரிவினையில் பெறும் சொத்து, எதிர்நிலை உடைமை (Adverse possesion) புதையல் அல்லது கண்டெடுக்கும் சொத்து ஆகியவையும் சீதனச் சொத்தாகும். மிதாக்ஷரத்தில் உள்ள விஞ்ஞானேஸ்வரரின் இந்த

விளக்கத்தைக் காசி முறையும் (Beneras School) மயுக முறையும் (Mayukha School) ஒப்புக் கொள்கின்றன. சென்னை உயர்நீதி மன்றமும்,[1] சென்னைப் பகுதியில் பின்பற்றப்படும் நூல்களிடையே முரண்பாடுகள் காணப்பட்டால் மிதாக்ஷரத்தை அனுசரித்தே சீதனச் சொத்து எது என்றும், அவைகளின் உரிமை இறக்கம் எப்படி இறங்குகின்றன என்றும் தீர்ப்பளித்துள்ளது. ஆனால், மிதிலை முறையும், தாயபாக முறையும் அந்த விளக்கத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. அவைகள் ஸ்மிருதிகளில் சீதனச் சொத்து எவை என்று கூறப்பட்டுள்ளனவோ அவைகளை மட்டுமே அங்கீகரிக் கின்றன. பிரிவுகவுன்சில் ஒரு வழக்கில் [2] (Sheo Shankar *Vs* Debi Sahai) மனுஸ்மிருதியின் விளக்கத்தையே ஏற்றுக்கொண்டுள்ளது. பொதுவாக, எந்த சொத்தின் மீது ஒரு பெண் எந்தத் தடையும் இல்லாமல் தன் விருப்பம் போல் பிறருக்குக் கொடுக்கும் உரிமையைப் பெற்றிருக்கிறாளோ, அந்தச் சொத்தைச் சீதனம் என்று சொல்லலாம். ஒரு பெண்ணுக்கு இருக்கும் உரிமை அவள் வாழும் பகுதியில் பின்பற்றப்படும் விதிகள், சொத்தை அடைந்த காலம், சொத்து வந்த முறை ஆகியவற்றைப் பொறுத்ததாகும்.

சொத்து வரும் முறைகள்

(அ) திருமணக் காலத்திற்கு முன்பு ஒருத்தி கன்னியாக இருக்கும்போதே, உறவினர்கள் மூலம் அல்லது பெற்றோர்கள், சகோதரர்கள் மூலம் கொடையாகச் சொத்தை அடையலாம்; சிற்சில சமயங்களில் அந்நியர்கள் கூட அவ்வாறு கொடுக்கலாம். அப்படிக் கொடையாக வரும் சொத்தில் பெண்ணுக்கு முழு உரிமை உண்டு. வேறு யாரும் அதில் குறுக்கிட முடியாது.

(ஆ) திருமணத்தின் போதும் கொடையாகச் சொத்துக் கிடைக் கலாம். அச் சொத்திலும் அதைப் பெறும் பெண்ணைத் தவிர வேறு யாருக்கும் உரிமை கிடையாது.

(இ) திருமணத்திற்குப் பின்னர், கணவனோ மற்றவர்களோ ஒருத்திக்குச் சொத்துக் கொடுக்கலாம். கணவன் கொடையாகவும் தரலாம்; உயில் வழியாகவும் தரலாம். கணவன் மனைவியைச் சொத்துக்கு முழு உரிமையாளராக ஆக்குகிறானா அல்லது நிபந்தனைகளுடன் கூடிய உரிமைகளைத் தருகிறானா என்பது ஒப்பாவணத்தின் (Deed) வாசகத்தைக் கொண்டே முடிவாகும்.

[1] Salemma *Vs* Lutchmana 8 MLJ 14.
Subramanian *Vs* Arunachalam 28 MI (FB).

[2] Sheo Shankar *Vs* DeLi Sahai 25A 468.

(ஈ) கன்னிப் பருவத்திலும், விதவையான பிறகும் ஒருத்தி தன் கைத்திறத்திஞலும், சுய உழைப்பிஞலும் பெறும் சொத்து அவளுடைய சீதனச் சொத்தாகும். கணவன் வாழும் காலத்தில் அவள் அவ்வாறு சம்பாதிக்கும் சொத்தும் மிதாக்ஷர முறையில் அவளுடைய சீதனச் சொத்தேயாகும். ஆனுல், தாயபாக முறையில் அப்படி இல்லை. கணவன் இறந்த பிறகே அவள் சம்பாதித்த அச் சொத்தில் அவள் முழு உரிமை பெறுவாள். கணவனும் மனைவியும் கூட்டாக வியாபாரம் நடத்திச் சம்பாதிக்கும் சொத்தில், மனைவி இறந்த பிறகு மனைவியின் உரிமை அவளுடைய சீதன வாரிசு களுக்கே செல்லும். கணவன் அல்லது அவனுடைய வாரிசு களுக்குச் செல்லாது [3].

(உ) பொதுவாக மராட்டியம் தவிரப் பிற பகுதிகளில் ஒருத்தி வாரிசுரிமை பெறும்போது அச் சொத்துக்கு முழு உரிமையாளராக இருக்கமாட்டாள். அதில் அவளுக்கு இருக்கும் உரிமைக்குக் கட்டுப்பாடுகள் இருக்கும். ஆனுல், மிதிலை முறையைப் பொறுத்த வரையில் அசையும் சொத்துகளை மரபுமுறை இறங்குரிமையாக (Inheritance) அடைந்தால், அச் சொத்து அடைந்தவளின் சீதனச் சொத்தாகவே எண்ணப்படும்.

(ஊ) ஒருத்தி தன் சீதனச் சொத்தின் மூலமாகவோ அல்லது அதன் வருமானத்தின் மூலமாகவோ ஒரு சொத்தை வாங்கிஞல், அது அவளுடைய சீதனச் சொத்தாகும்.

(எ) பாகப்பிரிவினையின் போது ஒரு தாய்க்கோ பாட்டிக்கோ ஒதுக்கப்படும் சொத்து, ஒருத்திக்கு மரபு முறை இறங்குரிமையில் வரும் சொத்துப் போலவே இருக்கும். அதாவது அச் சொத்தில் முழு உரிமை இருக்காது. ஆனுல், அச் சொத்தைக் கொடையாகத் தந்திருந்தால், அப்போது அது சீதனமாகும்.

(ஏ) ஒருத்தி எதிர் நிலை உடைமையாக (Adverse possession) ஒரு சொத்தை வைத்திருந்தால், அது அவள் சீதன சொத்தாகும். இதில் மிதாக்ஷரம், தாயபாகம் இரண்டிற்கும் வேறுபாடில்லை.

(ஐ) பராமரிப்புக்காகப் பணம் அல்லது சொத்துக் கொடுக்கப் பட்டிருந்தால் அது அவளுடைய சீதனமாகும். அந்தப் பணம் அல்லது சொத்து நீதிமன்றத்தின் தீர்ப்பாணையாலும் கிடைக்கலாம் அல்லது உடன்பாட்டிஞலும் கிடைக்கலாம். பராமரிப்புக்காகக் கிடைப்பவை கணவன் வாழும் போதும் கிடைக்கலாம் அல்லது அவள் விதவையான பிறகும் கிடைக்கலாம். பராமரிப்புக்காகக் கிடைப்பதிலிருந்து அவள் வாங்கும் சொத்தும் சீதனச் சொத்தாகும்.

[3] Muthu Ramakrishna *Vs* Marimuthu 26 MLJ 531.

மேலே குறிப்பிட்டுள்ள முறைகள் அல்லாமல் வேறு சில வழிகளில் ஒருத்தி அடையும் சொத்தும் சீதனச் சொத்தாகும். ஒருத்தி விலைமகளாக வாழ்க்கை நடத்திச் சம்பாதிக்கும் சொத்து அவளுடைய சீதனச் சொத்தாகும்.[4] ஒருத்திக்கு குடும்பத்தில் ஏற்படும் சமரச ஏற்பாட்டின்படி கிடைக்கும் சொத்தும் சீதனச் சொத்தாகும். சில வரையறைகளுடன் சொத்தை வைத்து அனுபவித்துக் கொண்டு வரும் ஒருத்தி பின்னடைவுரிமையருடன் (Reversions) சமரசம் செய்து கொண்டு, அந்த ஏற்பாட்டின்படி அடையும் சொத்து சில சமயங்களில் சீதனச் சொத்தாகும், அதாவது அவள் சீதனச் சொத்தாக வைத்துக் கொள்ளும் வகையில் சமரசம் ஏற்பட்டால், அப்போது அது சீதனச் சொத்தாகும். சமரசத்தின் விளைவாக ஏற்படுவது சீதனச் சொத்தா இல்லையா என்பதைச் சம்பந்தப்பட்டவர்களின் விருப்பம், அவளுடைய கோரிக்கையின் தன்மை ஆகியவற்றைக் கொண்டே முடிவு செய்ய வேண்டும். அவள் சில சொத்துகளுக்கு முழு உரிமையாளராக இருக்க விரும்பி, அல்வாறே வேண்டுகோள்மூலம் சமரசம் ஏற்பட்டிருந்தால், அவள் பெறும் சொத்து சீதனச் சொத்து என்பதில் ஐயமில்லை. ஆனால், அவள் அவ்வாறு வேண்டாமலிருந்து சமரசமும் அவளுக்கு வரையறையுடன் கூடிய சொத்துரிமைக்கு வழி செய்திருந்தால். அவள் பெறும் சொத்து, சீதனச் சொத்தாக எண்ணப்படாது.

சுல்கம் (Sulka) என்பது பற்றித் 'திருமணத்'தில் சொல்லப்பட்டுள்ளது. அது பெண் வீட்டார் மாப்பிள்ளை வீட்டாரிடமிருந்து பெற்றுக் கொள்ளும் பொருளாகும். இதில் ஒரு பாதி பெண்ணின் தந்தைக்கும் இன்னொரு பாதி பெண்ணுக்கும் செல்லும். பெண்ணுக்குச் செல்லும் பொருள் அவளுடைய சீதனமாகும். திருமணத்தில் தந்தையும் கணவனும் போடும் நகைகள் பெண்ணின் சீதனமாகும். ஆனால் திருமண நிகழ்ச்சிக்காகமட்டும் பெண்ணுக்குச் 'சும்மா' போடும் நகைகள் (அதாவது கொடுக்கும் நோக்கமின்றி) சீதனமாகாது. பொதுவாக இரண்டாவது மணம் புரிந்து கொள்பவன் முதல் மனைவிக்குப் பரிசுகள் தருவதில்லை. அப்படித் தந்தால் அது அவளுடைய சீதனமாகும்.

உரிமை வயது அடைந்த ஒருத்தி, கன்னியாக அல்லது விதவையாக இருந்தால், தன் விருப்பம்போல் தன் சீதனத்தை யாருக்கு வேண்டுமானாலும் கொடுக்கலாம். திருமணமாகியிருந்தால், சீதனச் சொத்து உறவினர்கள் கொடையாகக் கொடுக்கப்

[4] Mandaram *Vs* Mandaram 24 MLJ 223,
Jaganath *Vs* Narayan 34B 553.

பட்டதாக இருந்தால், அவள் விருப்பம்போல் செய்வதில் தடை உண்டு. இதில்மட்டும் கணவனுக்கும் உரிமை அவன் உயிரோடு இருக்கும்வரை உண்டு. கொடையாக உறவினர் ஒருத்திக்குத் தரும் சொத்தில் பொதுவாகக் கணவனுக்கு உரிமை இருக்கக் கூடாதுஎன்றாலும், குடும்பத்தில் கொடிய துன்பமோ, வறுமையோ நோயோ ஏற்பட்டால், அச் சீதனச் சொத்தைக் கணவன் பயன் படுத்திக்கொள்ளலாம். இது கணவனுக்கு மட்டுமே உள்ள தனி உரிமை.எனவே, அவனுக்கு எதிராக நீதிமன்றத் தீர்ப்பாணை பெற்ற யாரும் அச் சீதனச் சொத்தில் உரிமை கொண்டாட முடியாது. ஆனால், உறவினர் அல்லாது பிற அந்நியர்களிடமிருந்து ஒருத்திக்குக் கொடையாகச் சொத்துக் கிடைக்கும்போது, அல்லது அவள் தன்னுடைய திறமையால் சொத்தைச் சேர்க்கும்போது, அதில் கணவனின் உரிமை அதிகரிக்கும். தர்ம சாஸ்திரங்களின்படி அச் சொத்துகள் கணவனின் ஆளுகைக்கு உட்பட்டதாகும். தாயபாக முறைப்படி கொடிய தொல்லை இல்லாத நேரத்தில்கூடக் கணவன் அச் சொத்தைப் பயன் படுத்திக் கொள்ள முடியும், எனவே, இத்தகைய சொத்துகளைக் கணவனின் சம்மதம் இல்லாமல் மனைவி தன் விருப்பம் போல் யாருக்கும் கொடுக்க முடியாது. ஆனால், கணவன் இறந்த பிறகு எந்தத் தடையும் இல்லாமல் அச் சொத்தை அவள் வைத்துக்கொள்ளலாம்; விருப்பம் போல் கொடுக்கலாம். கணவன் உயிரோடு இருக்கும்போதுகூட அவனுக்கு அத்தகைய சீதனச் சொத்தில் உரிமை இருந்தாலும் சொத்துக்கு உரிமையாளர் மனைவிதான். எனவே, மனைவி இறந்து விட்டால் கணவனோ அல்லது அவனுடைய வாரிசுகளோ அச் சொத்தை அடைய முடியாது; அவளுடைய சீதன வாரிசுகளே அடைவர்.[5]

உரிமை இறக்கத்தில் பின்பற்றப்படும் கொள்கைகள்

சீதனச் சொத்தில் உரிமை இறக்கப் பிரச்சினை எழும்போது, அதில் மதத்தின் சாயல் இருக்காது. தாய் கற்பு நெறியுடன் இருந்தாளா என்பது முக்கியமல்ல. முறையிலா மணத்தில் பிறந்த குழந்தைக்கும் சொத்தில் உரிமை உண்டு. என்றாலும், முறை மணத்தில் பிறந்த வாரிசு உயிரோடு இருந்தால், சொத்து, அந்த நபருக்கே செல்லும். அப்போது, முறையிலா மணத்தில் பிறந்த நபர் உரிமை கொண்டாட முடியாது. மாற்றாந் தாயின் சீதனச் சொத்துக்குக் கணவனின் சொந்த மகனும் தத்து எடுப்பு மகனும் போட்டியிட்டால், இருவரும் சமமாகவே எண்ணப்படுவர். சீதனச் சொத்தில் யாருக்கு முதல் இடம் என்பதில் உறவின் நெருக்கமே

5 Subbamma *Vs* Lutchmana 8 MLJ 14.

முக்கியமாகக் கருதப்படுவதால், பேரனைவிட மகனுக்கே முதல் இடம் உண்டு.

தாயின் *சீதனச் சொத்துக்கு* மகனைவிட மகளுக்கே முதல் இடம் உண்டு. அதனால், மகள்வழிப் பேரனைவிட மகன் வழிப் பேத்திக்கு முதல் இடம் கிடைக்கும். *சீதனச்* சொத்தின் வாரிசு தாரர்கள் பொது நிலச் சொத்துரிமையர் (Tenants-in-Common) ஆவர்; கூட்டுநிலச் சொத்துரிமையர் (Joint Tenants) அல்லர். உண்மையில் *சீதனச்* சொத்தின் வாரிசுதாரர்கள் ஒரு தாயின் மக்களாக இருந்தாலும் பொது நிலச் சொத்துரிமையராகவே இருக்க முடியும். மகள் வழிப்பேத்திகள், மகள் வழிப் பேரன்கள், மகன் வழிப் பேரன்கள் ஆகியோர் *சீதனச்* சொத்தில் பெண் வாரிசு தாரர்களின் சொத்துரிமை வரையறைக்கு உட்பட்டது. ஆனால், ஆண்களின் சொத்துரிமை முழுமையானது. மராட்டியத்தில் மட்டும் பெண்களுக்கும் முழுச் சொத்துரிமை உண்டு.

உரிமை இறக்கம் (Succession)

ஒரு கன்னியின் *சீதனச்* சொத்தைத் தவிர மற்றவற்றில் உரிமை இறக்கம் சம்பந்தமாகத் தாயபாக முறைக்கும் மிதாக்ஷர முறைக்கும் வேறுபாடு உண்டு. இந்த இரண்டு முறைகளும் கன்னியின் *சீதனச்* சொத்தில் ஏற்படும் உரிமை இறக்கப் பிரச்சினையில் முரண் பட்டு நிற்கவில்லை.

கன்னியின் *சீதனச்* சொத்துக்குக் கீழ்க் காண்பவர்கள் முறைப் படி உரிமை உடையவர்கள்:

1. தாய்வழிச் சகோதரர்
2. தாய்
3. தந்தை
4. தந்தையின் சபிண்டாக்கள். அவர்கள் முறை மணத்தில் பிறந்தவர்களாக இருக்க வேண்டும். உறவின் நெருக்கத் திற்கு முதல் இடம் தரப்படும். உறவின் நெருக்கம் அவன் சார்ந்திருக்கும் முறையைக் (School) கொண்டு தீர் மானிக்கப்படும்.
5. தாயின் உறவினர்கள், உறவின் நெருக்கத்திற்கே முதல் இடம்.

முறையான திருமணம் ஆகாத ஒருத்திக்கு முறையிலா மணத்தால் குழந்தைகள் பிறந்திருந்தால், அவர்களுக்குச் *சீதனச்*

சொத்தில் உரிமை உண்டா என்ற பிரச்சினை எழும். மேலே கண்ட பட்டியலில் அவர்களுக்கு இடமில்லை. தர்ம சாஸ்திரங்கள் அவர்களுக்கு உரிமை வழங்கவில்லை. ஆனால், நேர்மை, நெறி, நீதி, மனச்சாட்சி இவற்றின் அடிப்படையில் நீதிமன்றம்[6] முறையிலா மணத்தில் பிறந்த மகனுக்கும் மகளுக்கும் சீதனச் சொத்தைச் சமமாக எடுத்துக்கொள்ளும் உரிமையை வழங்கியிருக்கிறது.

மணமானவளின் சீதனச் சொத்துக்கு உரிமை இறக்கம் (Succession To Stridhana of a Married Woman)

மாப்பிள்ளை வீட்டாரிடமிருந்து தரப்படும் சுல்கத்தைப்(Sulka) பொறுத்தவரையில் கீழ்க்காண்பவர்கள் காசி, பம்பாய், சென்னை, மிதிலை முறைப்படி உரிமையுடையவர்கள்.

1. தாய்வழிச் சகோதரர்கள்
2. தாய்
3. தந்தை
4. மேலே உள்ள யாரும் இல்லை என்றால் தந்தையின் வாரிசுதாரர்கள்.

ஆனால், தாயபாகத்தில் பின்பற்றப்படும் முறை வேறு. அது பின்வருமாறு:

1. முழுச் சகோதரர்கள்
2. தாய்
3. தந்தை
4. கணவன்.

மிதாக்ஷரத்தின்படி சுல்கம் (Sulka) என்னும் சீதனத்தை ஒரு கன்னியின் சீதனச் சொத்துக்கு யார்யார் முறைப்படி உரிமை உடையவர் ஆவார்களோ அவர்களே அடைவார்கள்.

சுல்கம் அல்லாத பிற சீதனத்திற்கு மிதாக்ஷரத்தில் கீழ்க்காண்பவர்கள் முறைப்படி உரிமை உடையவர்கள் :

1. திருமணமாகாத மகள்.
2. வேறு எதுவும் கொடுக்கப்படாத வசதியற்ற திருமணமான மகள். ஒருத்தியின் மகள்கள் பல்வேறு அளவில் வறுமையில் வாடுவார்களேயானால், ஒவ்வொருவரது

6 Sudarsan Singh *Vs* Surerh Singh 1960 Pat. 45

சூழ்நிலையையும் சீர்தூக்கிப் பார்த்து நீதிமன்றம் சீதனத்தை விநியோகிக்கும்.

3. சொத்து அல்லது வசதிகள் கொடுக்கப்பட்ட (வசதியுள்ள) திருமணமான மகள்.

4. மகள் வழிப் பேத்திகள் (வேறு சொத்து அல்லது வசதிகள் கொடுக்கப்பட்ட, கொடுக்கப்படாத என்ற பாகுபாடுகள் பேத்திகளுக்குப் பொருந்தாது. மகள்களுக்கு மட்டுமே அந்தப் பாகுபாடு பொருந்தும். முறைமண மகள் இல்லாவிட்டால், முறையிலா மணத்தில் பிறந்த மகள் சீதனச் சொத்தை அடையலாம். ஆனால், முறையிலா மணத்தில் பிறந்த பேத்தி சீதனத்தில் உரிமை கொண்டாட முடியாது.)

5. மகள் வழிப் பேரன்

6. மகன்கள்

7. மகன் வழிப் பேரன்கள்

8. கணவன்

9. கணவனின் சபிண்டாக்கள்

(ஆனால், அசுர முறையில் மணமானவளின் சுல்கம் (Sulka) அல்லாத பிற சீதனச் சொத்து கணவன், அவன் சபிண்டாக்களுக்குச் செல்லாமல் கீழ்க் கண்டபடி செல்லும்.)

10. தந்தையின் வாரிசுகள். (ஆனால், நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள்[7] மத்தியில், குழந்தை இல்லாமல் ஒருத்தி இறந்து விட்டால், அவளுடைய சீதனம் பெற்றோர்களுக்கே செல்லும் வழக்கம் இருந்து வருகிறது.)

11. அரசன்.

சென்னை மாநிலத்தில் சீதனச் சொத்தின் உரிமை இறக்கம்

சென்னையில் சீதனச் சொத்துரிமைகளைப் பற்றி அதிகார பூர்வமான நூல்கள் ஸ்மிருதி சந்திரிகா, பராசர மாதவையா, சரஸ்வதி விலாசா, வியவகார நிர்ணய என்பவைகளே. ஆனால், இந் நூல்களில் ஒற்றுமையிலாவிடின், மிதாக்ஷரத்தைப் பின்பற்றுவதே சென்னை உயர் நீதிமன்றத்தின் கொள்கை.

பொதுவாக, சென்னை மாநிலத்தில் எல்லாச் சீதனங்களுக்கும் மிதாக்ஷர விதிதான் உரிமை இறக்கத்தில் அமலிலிருக்கிறது

[7] Palaniappa *Vs* Chokalingam 57 MLJ 817.

மிதிலை முறையில் உரிமை இறக்கம் (Succession in Mythila School)

மிதிலை முறைக்கு அதிகார பூர்வமான நூல் 'விவாத சிந்தாமணி' (Vivada Chintamani) யாகும். இதில் சீதனம் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை சுல்கம் (Sulka), யவ்தகா (Yautaka), பிற சீதனங்கள்.

சுல்கம் (Sulka) உரிமை இறக்கம் மிதிலை முறையில் எந்த மாறுபாட்டையும் கொண்டிருக்கவில்லை. மற்ற மாநிலங்களில் பின்பற்றப்படும் முறையே மிதிலை முறையிலும் பின்பற்றப்படுகிறது.

யவ்தகா (Yautaka) என்னும் சீதனம் மணப்பெண் மணமகனுடன் மணையில் உட்கார்ந்து இருக்கும்போது தரப்படுவதாகும். இச் சீதனம் முதலில் மணமாகாத மகள்களுக்கும், பின்னர் மணமான மகள்களுக்கும் அவர்களுக்குப் பின்னர் மிதாக்ஷரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முறைப்படி செல்லும்.

பிற சீதனங்கள் மகன்களுக்கும், மணமாகாத மகள்களுக்கும் செல்லும். அவர்கள் சொத்தைச் சமமாகப் பங்கிட்டுக் கொள்வார்கள். மற்ற வாரிசுதாரர்கள் மிதாக்ஷரத்தில் குறிப்பிட்டுள்ள முறைப்படி சொத்தை அடைவார்கள்.

மயுக முறையில் உரிமை இறக்கம் (Succession Mayukha School)

மயுகமுறை மேற்கு இந்தியாவில் பின்பற்றப்படும் முறையாகும். இம் முறையில் பரிபாசிக சீதனம் (Paribhasika—Technical Stridhana), அபரிபாசிக சீதனம் (Aparibhasika Stridhana—Non-Technical Strithana) என இருவகை உண்டு. பரிபாசிக சீதனத்தில், சுல்கம் (Sulka), யவ்தகா பத்ரிதாத சீதனமும், அன்வாதேயக சீதனமும், மற்றும் பிற சீதனங்களும் அடங்கும். அபரிபாசிக சீதனத்தில் ஸ்மிருதிகளில் வெளிப்படையாகச் சொல்லப்படாத பிற சீதனங்கள் அடங்கும்.

சுல்கம் (Sulka) மிதாக்ஷரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முறைப்படி செல்லும். யவ்தகா சீதனம் முதலில் மணமாகாத மகள்களுக்கும் பின்னர் மணமான மகள்களுக்கும், அவர்களுக்குப் பின்னர் மிதாக்ஷரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முறைப்படி செல்லும்.

பத்ரிதாத சீதனம் அன்வாதேயக சீதனம் என்பவை, திருமணத்திற்குப் பிறகு ஒருத்திக்கு அவளுடைய கணவனாலோ பிற தாய் வீட்டு, புகுந்த வீட்டு உறவினர்களாலோ தரப்படுவதாகும்.

இதில் கீழ்க்காண்பவர்கள் முறைப்படி உரிமை உடையவர்கள்:

1. திருமணமாகாத மகள்கள், மகன்கள் — இவர்கள் சொத்தைச் சமமாகப் பங்கிட்டுக் கொள்வார்கள்.
2. திருமணமான மகள்கள், மகன்கள் — இவர்கள் சொத்தைச் சமமாகப் பங்கிட்டுக் கொள்வார்கள்.
3. மகள் வழிப் பேத்திகளும், பேரன்களும் — இவர்கள் சொத்தைச் சமமாகப் பங்கிட்டுக் கொள்வார்கள்.
4. மகன்வழிப் பேரன்கள்.
5. இந்த முறைப்படி உரிமை இறக்கம் நடைபெறவில்லை என்றால், மிதாக்ஷரத்தில் உள்ள முறைப்படி சொத்துகள் செல்லும்.

பிற சீதனத்தில் கீழ்க்காண்பவர்கள் முறைப்படி உரிமையுடையவர்கள்:

1. மணமாகாத மகள்கள்
2. சொத்து அல்லது வசதி கொடுக்கப்படாத மணமான மகள்கள்
3. சொத்து அல்லது வசதி கொடுக்கப்பட்ட மகள்கள்
4. மகள்வழிப் பேத்திகளும், மகள்வழிப் பேரன்களும்
5. மகன்கள்
6. மகன்வழிப் பேரன்கள்
7. மற்றவர்கள் மிதாக்ஷரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முறைப்படி உரிமை அடைவார்கள்.

* அபரிபாசிக சீதனத்தில் கீழ்க்காண்பவர்கள் முறைப்படி உரிமை அடைவார்கள்.

1. மகன்கள்
2. மகன்வழிப் பேரன்கள்
3. மகன்வழிக் கொள்ளுப் பேரன்கள்
4. மகள்கள்
5. மகள்வழிப் பேரன்கள்
6. மகள்வழிப் பேத்திகள்
7. மற்றவர்கள் மிதாக்ஷரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முறைப்படி உரிமை அடைவார்கள்.

தாயபாக முறையில் உரிமை இறக்கம்

தாயபாகத்தில் சீதனம் நான்கு வகைப்படும். (1) சுல்கம், (2) யவ்தகா, (3) அன்வதேயகா, (4) அய்வ்தகா.

சுல்கம் என்பது ஒரு பெண் தன் கணவன் வீட்டிற்குச் செல்வதற்கு வழங்கும் பரிசு. 'சுல்கம்' எனும் சீதனச் சொத்துக்கு உரிமை இறக்கம் கீழ்க்காண்பவர்களே:

1. முழு சகோதரர்கள்
2. தாய்
3. தந்தை
4. கணவன்.

யவ்தகா சீதனத்தில் கீழ்க்காண்பவர்கள் முறைப்படி உரிமை உடையவர்கள்:

1. நிச்சயதார்த்தம் நடத்தாத மகள்கள்
2. நிச்சயதார்த்தம் நடந்த மகள்கள்
3. ஆண் குழந்தை உள்ள அல்லது பெறக் கூடிய மணமான மகள்கள். குழந்தைகள் உள்ள விதவை மகள்.
4. மணமாகிக் குழந்தையற்ற மகள் அல்லது குழந்தையற்ற விதவை மகள்
5. மகன்கள் (தத்து எடுத்த மகனும் இதில் அடங்குவான்)
6. மகள்வழிப் பேரன்கள்
7. மகன்வழிப் பேரன்கள்
8. மகன்வழிக் கொள்ளுப் பேரன்கள்
9. சக்களத்தி மகன்கள்
10. சக்களத்தியின் பேரன்கள்
11. சக்களத்தியின் கொள்ளுப் பேரன்கள் (குறிப்பு: சக்களத்தி ஒன்றுக்கு மேற்பட்டும் இருக்கலாம்.)

இறந்தவளின் திருமணம் ஒப்புக்கொள்ளப்பட்ட (Approved Form) திருமணமெனில்,

1. கணவன்
2. சகோதரன்
3. தாய்

4. தந்தை
5. கணவனின் இளைய சகோதரர்கள்
6. கணவனின் சகோதரர் மகன்
7. சகோதரியின் மகன்
8. கணவனின் சகோதரி மகள்
9. சகோதரரின் மகள்
10. மகளின் கணவன் (மருமகன்)
11. கணவனின் வாரிசுகள்
12. தந்தையின் வாரிசுகள்

இறந்தவளின் திருமணம் ஒப்புக்கொள்ளப்படாத (Unapproved Form) அசுர முறை என்றால்,

1. தாய்
2. தந்தை
3. சகோதரன்
4. கணவன்.

மேற்படி வாரிசுகளில்லாவிடின்,

1. கணவனின் இளைய சகோதரர்கள்
2. சகோதரியின் மகன்
3. கணவனின் சகோதரி மகள்
4. சகோதரனின் மகள்
5. மகளின் கணவன் (மருமகன்)
6. கணவனின் வாரிசுகள்
7. தந்தையின் வாரிசுகள்

திருமணத்திற்குப் பிறகு தந்தை மகளுக்குத் தருவது அன்வ தேயகாவாகும். இதில் கீழ்க்காண்பவர்கள் முறைப்படி உரிமை யுடையவர்கள்.

1. கன்னியாக இருக்கும் மகள்
2. மகன்கள்
3. திருமணம் நிச்சயயிக்கப்பட்ட மகள்கள்

4. ஆண் குழந்தை இருக்கும் அல்லது பெறக்கூடிய மணமான மகள்
5. குழந்தை இல்லாத அல்லது விதவையாகிவிட்ட மகள்
6. மகன்வழிப் பேரன்
7. மகள்வழிப் பேரன்
8. மகன்வழிக் கொள்ளுப்பேரன்
9. சக்களத்தியின் மகன்கள்
10. சக்களத்தியின் மகன்வழிப் பேரன்
11. சக்களத்தியின் கொள்ளுப்பேரன்
12. சகோதரர்கள்
13. தாய்
14. தந்தை
15. கணவனும், கணவனின் வாரிசுகளும்

திருமணத்திற்கு முன்னும் பின்னும் உறவினர்கள் ஒருத்திக்குக் கொடுக்கும் சொத்து அயவ்தகா எனப்படும். இதில் கீழ்க்காண்பவர்கள் முறைப்படி உரிமையுடையவர்கள்:

1. மகன்களும், திருமணமாகாத மகள்களும் சம பங்குகளைக் கூட்டாக அடைவார்கள். திருமணமாகாத மகன் இல்லை என்றால், மணமான மகளைவிட மகனுக்கே முதல் இடம்.
2. ஆண் குழந்தை உள்ள அல்லது பெறக்கூடிய மணமான மகள்கள்
3. மகன்வழிப் பேரன்
4. மகள்வழிப் பேரன்
5. குழந்தை இல்லாத மகள், குழந்தை இல்லாத விதவையாகிவிட்ட மகள்.

மேலே கண்ட முறையில் உள்ளவர்கள் யாரும் இல்லை என்றால், கீழ்க்கண்ட வாரிசுகள் அடைவார்கள்.

1. சகோதரன்
2. தாய்
3. தந்தை
4. கணவன்

5. கணவனின் இளைய சகோதரன்
6. கணவனின் சகோதரனின் மகன்
7. சகோதரியின் மகன்
8. கணவனின் சகோதரியின் மகன்
9. சகோதரனின் மகள்
10. மகளின் கணவன் (மருமகன்)
11. கணவனின் வாரிசுகள்
12. தகப்பனின் வாரிசுகள்.

தாய்வழியில் வேறு யாருமே இல்லை என்றால், இறுதியில் சீதனச் சொத்து அவனுக்குச் செல்லும்.

விலைமகளின் சொத்து

மணமாகாத பெண்ணும் விலைமகளாக இருக்கலாம்; மணமான பெண்ணும் விலை மகளாக இருக்கலாம். தாசிக் குலத்தில் பிறந்த பெண்ணும் அத் தொழிலைத் தொடரலாம். குடும்பப் பெண் விலை மகளாகும்போது அவள் கீழ்நிலைக்குச் சென்று விட்டாலும், குடும்பத்தில் உள்ள உறவு அறுந்துவிடாது. கற்பு நெறியுள்ள பெண்ணின் சீதனச் சொத்து எப்படிச் செல்லுமோ அப்படியே இவளுடைய சொத்தும் செல்லும். இதுதான் சரியான கோட்பாடு. எனினும் இதற்கு எதிராகப் பல வழக்கு முடிவுகள் இருக்கின்றன. ஆனால், பின்னர் வேறு சில முடிவுகள் விலைமகளாகி விட்ட குடும்பப் பெண்ணின் சொத்துக்கு அவளுடைய [8] சகோதரி, [9] மகள் ஆகியோர் வாரிசுரிமை கொண்டாடுவதை அங்கீகரித்திருக்கின்றன.

தாசிக் குலத்தில் பிறந்த விலைமகளைப் பொறுத்தவரையில் அவள் குழந்தைகளில் முறை மணத்தில் பிறந்த குழந்தைகள், முறையிலா மணத்தில் பிறந்த குழந்தைகள் என்ற வேறுபாடு கிடையாது. முக்கியமாகச் சம்பாதிப்பவள் பெண். ஆதலால், வாரிசுரிமையில் மகனைவிட மகளுக்கே முதல் இடம் உண்டு.

[8] Narayan *Vs* Laxman 51C 784.
[9] Tara *Vs* Krishnan 31B 495.

10. மகளிர் சொத்துரிமை

(WOMEN'S ESTATE)

'எஸ்டேட்' என்ற சொல் உண்மையில் ஒருவனுக்கு நிலத்தில் உள்ள உரிமையைக் குறிக்கும். என்றாலும் இன்று வழக்கில் ஒருவனுடைய எல்லாச் சொத்துரிமைகளையும் குறிக்கும் ஒரு சொல்லாக இயங்கி வருகிறது. அசையும் சொத்து, அசையாச் சொத்து, இன்னும் ஒருவனுக்குள்ள பல சொத்துகளையும் குறிக்கும் பொதுச் சொல்லாக இன்று பயன்படுகிறது. அது மட்டுமல்ல ஜமீன்தாரி, இனும், கீழ்வார உரிமை நிலங்களையும் குறிப்பிட்டுக் காட்ட 'எஸ்டேட்' என்ற சொல்தான் கையாளப்படுகிறது.

மகளிர் எஸ்டேட் அல்லது சொத்துரிமையில் ஒருத்தியினுடைய எல்லாச் சொத்துகளும் அடங்கும். ஒருத்திக்கு எல்லா வகையில் வந்த சொத்துகளும், அது அசையும் பொருளாக இருந்தாலும், அசையாப் பொருளாக இருந்தாலும், முழுச் சொத்துரிமை இருந்தாலும், வரை சொத்துரிமை (Limited Estate) இருந்தாலும் இச் சொல்லில் அடங்கும். என்றாலும், இந்த இயலில் (Chapter) சொத்துரிமை என்ற சொல் அதன் பரந்த அல்லது பொதுவான பொருளில் வழங்கப்படவில்லை. ஒருத்திக்கு ஒரு சொத்தில் உள்ள வரை உரிமை (Limited Interest) அல்லது வரையறையுரிமை (Qualified interest) என்பதைக் குறிக்கும் அளவிலேயே பயன்படுத்தப்படுகிறது வரை சொத்துரிமையோ (Limited estate) அல்லது வரையறையுரிமைச் சொத்தோ ஒருத்திக்கு பாகப்பிரிவினையின் போதோ அல்லது மரபு முறை இறங்குரிமையாலோ கிடைக்கலாம். இப்படி அவளுக்குக் கிடைக்கும் சொத்து, அவளுடைய மரணத்திற்குப் பின்னர் யாரிடமிருந்து சொத்தை அடைந்தாளோ அவர்களுடைய வாரிசுகளுக்குச் செல்லும். ஏனென்றால் சீதனச் சொத்தைப்போல் இதில் அவளுக்கு முழு உரிமை கிடையாது. இந்த வரை சொத்துரிமை இந்தியா முழுவதிலும்

அங்கீகரிக்கப்பட்டிருந்தாலும், மராட்டியத்தில் மட்டும் இந்தப் பொதுவிதிக்கு இரண்டு விதிவிலக்குகள் உண்டு. இறந்து போனவனின் கோத்திரத்திலேயிருந்து இதர கோத்திரத்திற்குச் சென்றவள் சொத்தை அடைந்தால் அல்லது ஒரு பெண்ணினுடைய சொத்தை இன்னொரு பெண் அடைந்தால், அப்போது அவள் அச்சொத்துக்கு முழு உரிமை உடைவளாக இருக்கலாம். மராட்டியத்தில் உள்ள இந்த விதிவிலக்குகளைத் தவிரப் பிற பகுதி எங்கும் ஒருத்திக்கு வரை சொத்துரிமையே உண்டு என்று அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

மகளிர் சொத்துரிமை ஆயுள் சொத்துரிமை அல்ல (Not life estate) இந்து தர்ம சாஸ்திரத்தில் ஆயுள் சொத்துரிமை என்ற கண்ணோட்டம் கிடையாது. மேலும், சிற்சில சமயங்களில் ஒருத்தி முழு உரிமையாளர் போல நடந்துகொள்ள வாய்ப்பிருக்கிறது. ஆகவே அவளுடைய ஆயுள் சொத்துரிமையாகக் கருதமுடியாது. அதே சமயம் தனக்குப் பிறகு சொத்தை அடையப்போகும் வாரிசுகளுக்காகச் சொத்தைப் பொறுப்புரிமையாக (Trust) வைத்துக் கொண்டிருக்கிருள் என்றும் சொல்ல முடியாது. அவளுக்குக் கட்டுப்பாடுகள் சில இருந்தாலும்கூடச் சொத்தை அனுபவிப்பதில் அவளுக்குப் பூரண சுதந்திரம் இருக்கிறது.

விதவையின் அனுபவிக்கும் அதிகாரம்

ஒரு விதவைக்குத் தன்னை அடைந்த சொத்தில் பரிபூரண உரிமை அதை அனுபவிப்பதில் இருக்கிறது. சொத்தின் உரிமையில் சட்டம் சில கட்டுப்பாடுகளை விதித்திருந்தாலும், சொத்தின் பயனை அவள் முழுமையாக அனுபவிக்கலாம். அதன் வருமானம் குறித்து அவள் யாருக்கும் பதில் சொல்லக் கடமைப்பட்டவளல்லள். தனக்குள்ள வரை சொத்துரிமையை விற்க, அடைமானம்வைக்க, கொடையாகக் கொடுக்க அவளுக்கு உரிமை உண்டு. சொத்திலிருந்து வரும் வருமானத்தைச் சேமிக்க வேண்டிய அவசியமோ, சிக்கனமாகச் செலவு செய்ய வேண்டிய அவசியமோ அவளுக்குக்கிடையாது. கணவன் கடன் வைத்துப் போய் இருந்தாலும் அதை அவள் அடைக்க வேண்டியதில்லை. மதச் சடங்குகளுக்காக அவள் செலவு செய்ய வேண்டியதில்லை. மற்றக் குடும்ப உறுப்பினர்களை அவள் பராமரிக்கத் தேவையில்லை. அவளோடு விதவையான சக்களத்திகளும் இருந்தால், ஒருவருக்கொருவர் ஒத்துப் போக முடியாத சூழ்நிலையில், பாகப்பிரிவினை செய்து கொள்ளலாம்.

தர்ம சாஸ்திரங்கள் விதவை கற்புநெறி தவருமல் எளிய வாழ்க்கை நடத்த வேண்டும் என்று வலியுறுத்துகின்றன.

தேவைக்குமேல் அவள் செலவு செய்யக்கூடாது என்று சொல்கின்றன. என்றாலும், ஒரு விதவை ஆடம்பரமாக வாழ்ந்தால், அவளை யாரும் எதுவும் கேட்கமுடியாது. வரும் மொத்த வருமானத்தையும் செலவு செய்யும் அதிகாரம் அவளுக்கு உண்டு. வருமானத்தை வீணாக்கினாலும் ஒன்றும் செய்ய முடியாது. சொத்தைச் சிதைத்துத்தான் வீணாக்கக்கூடாதே தவிர வரும் வருமானத்தை என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம்.

அனுபவிக்கும் சொத்தால் வருவாய்க் குவிப்பு (Accumulation) நேர்ந்தால் அதில் விதவைக்கு முழு உரிமை உண்டு. ஆனால், கணவன் உயிரோடு இருக்கும்போதே சொத்தில் 'சேர்மானம்' (Accretions) இருந்து அதை விதவை பெற்றால் முழு உரிமை கொண்டாட முடியாது. அவளுடைய உரிமை வரை உரிமைதான். வெறும் சேர்மானம் மாத்திரமே அவளை வந்து அடைந்தாலும் கூட அவள் உரிமை வரை உரிமைதான். ஆனால், கணவன் இறந்த பிறகு சொத்துத் தகராறு ஏற்பட்டு, சம்பந்தப்பட்டவர்கள் நீதிமன்றம் ஏறி, இறுதியில் சொத்தின் வருமானக் குவிப்பை அவள் அடைந்தால், அதை முழு உரிமையுடன் வைத்துக் கொள்ளலாம். தன் விருப்பம் போல யாருக்கு வேண்டுமானாலும் கொடுக்கலாம். உயில் எழுதி யாருக்கும் கொடுக்காமல் இறந்துவிட்டால், அவளுடைய வாரிசுகளுக்கு அந்த வருமானக்குவிப்பு செல்லும். ஆனால், சொத்தையும் அதன் வருமானத்தையும் கணவன் இறந்த பின்னால் பெற்ற ஒருத்தி, தான் இறக்கும் காலம்வரை சேமித்த வருமானத்தை யாருக்கும் கொடுக்கவில்லை என்றால், அது பழையபடி சொத்தோடு சேர்ந்து கணவனின் வாரிசுகளுக்குச் சென்றுவிடும். ஆனால், வேறு யாருக்காவது கொடுக்க வேண்டும் என்று விரும்பி, அவ்வாறு நடந்திருந்தால், அப்போது கணவனின் வாரிசுக்குச் செல்லாது. இது போன்ற பிரச்சினைகளில் விதவையின் விருப்பம், நடத்தை முதலியவற்றைக் கொண்டே தீர்மானிக்க வேண்டும்.

ஒரு விதவை சம்பாதிக்கும் சொத்து தனிச் சொத்தா அல்லது அவள் அடைந்த வரைசொத்துரிமையோடு (Limited Estate) சேர்ந்ததா என்பதை அவளுடைய விருப்பத்தையும் சூழ்நிலைகளையும் கொண்டு முடிவு செய்ய வேண்டும்.

விதவையின் நிர்வகிக்கும் அதிகாரம்

ஒரு சொத்தை அதன் முழு உரிமையாளன் எப்படிப் பொறுப்புடன் நிர்வகிப்பானோ அப்படியே ஒரு விதவை நிர்வகிக்க வேண்டும். அவளுடைய நிர்வாகம், சொத்துக்கும், அவளுக்குப் பிறகு அது செல்லப்போகிறவர்கள் நலத்திற்கும், உரிமைக்கும் குந்தகம்

விளைவிக்காத வரையில், தடையில்லாமல் செல்லலாம். யாரும் அவளை அப்போது கட்டுப்படுத்த முடியாது. அதுமட்டுமன்று; சொத்தை நிர்வகிப்பதை முன்னிட்டு நியாயமான காரணங்களுக்காக அவள் கடன் பட்டால், சொத்தின் மீது பிணை (Charge) ஏற்படுத்தலாம். அப்படி ஏற்படுத்தப்பட்ட பிணை அவளுக்குப் பிறகு அச் சொத்தை அடையும் பின்னடைவுரிமையரைக் (Reversioner) கட்டுப்படுத்தும்.

சொத்துக்கு உரிமையாளர் என்ற முறையில் ஒரு விதவை எல்லாவற்றிற்கும் பிரதிநிதியாக இருந்து தேவையான எல்லாச் செயல்களையும் செய்யலாம். சொத்தை அபகரித்தவர்களிடமிருந்து மீட்கவும், காக்கவும் வழக்கு நடத்தலாம். வழக்கின் முடிவுகள் பின்னடைவுரிமையரைக் கட்டுப்படுத்தும். ஒரு விதவை தேவையான காரியங்களுக்காகக் கடன் வாங்கலாம். ஒரு விதவை வாங்கும் சாதாரணக் கடன் அவளுக்குப் பின்னால் பின்னடைவுரிமையரைக் கட்டுப்படுத்துமா என்பதில் நீதிமன்றங்களுக்கிடையே ஒருமித்த கருத்து கிடையாது. கணவனுடைய வியாபாரத்தை விதவை தொடர்ந்து நடத்திக் கடன்பட்டால் வியாபாரச் சொத்து இருக்கும் அளவுக்கு அது பின்னடைவுரிமையரைக் கட்டுப்படுத்தும். இதில் கருத்து வேறுபாடு கிடையாது. கடன் வியாபாரக் கடனாக இல்லாமல், சொத்தின் மீது எந்தப் பிணையும் ஏற்படுத்தாமல், விதவை கடன் வாங்கி இறந்துவிட்டால், அது அவளுடைய தனிப்பட்ட கடனாகவே கருதப்பட வேண்டும் என்பது அலகாபாத்[1], சென்னை[2] பாட்னா[3], உயர்நீதிமன்றங்களின் முடிவாகும். அப்போது கடன்காரர் விதவை வாங்கிய கடனுக்காக அவள் இறந்த பிறகு சொத்தின் மீது வழக்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது. இந்த முடிவைக் கல்கத்தா உயர்நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளவில்லை. விதவை நியாயமாகப் பட்ட கடனைப் பின்னடைவுரிமையர் அடைக்கவேண்டியதே சரி என்று[4] கல்கத்தா உயர்நீதிமன்றம் ஒரு வழக்கில் தீர்ப்பு வழங்கியுள்ளது. பம்பாய் உயர்நீதிமன்றமும்[5] கல்கத்தா உயர்நீதிமன்றத்தின் முடிவை ஒட்டியே இன்னொரு வழக்கில் தீர்ப்பளித்துள்ளது.

ஒரு விதவை நல்லெண்ணத்தின் அடிப்படையில் சொத்து சம்பந்தமான தகராறுகள் எழும்போது சமரசம் செய்து கொள்ள

[1] Krishan Devi *Vs* Chand Mal 1934 All 423.

[2] Ramasami *Vs* Sellattammal 4M 375.

[3] Barhamdeo *Vs* Lal Bhadur 1934 P 216.

[4] Ramcoomar *Vs* Ichamoyi 6C 36.

[5] Dhondo Yeshwant *Vs* Mishrilal 1936 B 59.

லாம். செய்துகொள்ளும் சமரசத்தில் மோசடியோ அல்லது வஞ்சக் கூட்டோ இருக்கக் கூடாது. தன்னுடைய சொந்த நலனிற்காக இல்லாமல் சமரசம் சொத்தின் நலனிற்காகவும் உரிமைக்ககாகவும் இருக்க வேண்டும். இப்படி விதவை செய்யும் நியாயமான சமரசம் பின்னடைவுரிமையர்களைக் கட்டுப்படுத்தும். விதவைக்குச் சமரசம் செய்யும் உரிமை கிடையாது என்பதை அன்றே பிரிவுகவுன்சில்[6] ஏற்றுக்கொள்ளவில்லை. சமரசம் செய்து கொள்வது போலவே ஒரு விதவை குடும்பத்தில் உடன்பாடும் செய்து கொள்ளலாம். குடும்பத்தில் உண்மையிலேயே சொத்தில் உள்ள பாத்தியதை குறித்தோ பங்கு குறித்தோ தகராறு இருந்தாலோ அல்லது தகராறு வரக் கூடிய வாய்ப்பு இருந்தாலோ சம்பந்தப்பட்டவர்கள் உடன் பாடு செய்து கொள்ளலாம். உடன்பாடு ஏற்படுவதற்குக் கட்டாய மாகத் தகராறு இருக்க வேண்டும் அல்லது வரக்கூடிய வாய்ப்பு இருக்க வேண்டும். மோசடியாகவோ, வஞ்சகக் கூட்டுடனோ உடன்பாடு ஏற்படக் கூடாது. உண்மையான தகராறு இருந்து நல்லெண்ணத்தின் அடிப்படையில் உடன்பாடு ஏற்பட்டால், அது பின்னடை உரிமையர்களைக் கட்டுப்படுத்தும்.

விதவையின் மாற்றுக்கம் செய்யும் அதிகாரம்

ஒரு விதவைக்குத் தான் பெற்ற சொத்தை மாற்றுக்கம் செய்யும் அதிகாரம் உண்டு. சொத்திலிருந்து கிடைக்கும் வருமானத்திற்கு அவள் முழு உரிமையாளர் என்றாலும் வருமானம் போன்றவை நீங்கலாக இருக்கும் சொத்தின் மூலகத்தில் (Corpus) அவளுடைய உரிமை வரை உரிமையாகும்; என்றாலும் சட்ட அவசியத்தை முன்னிட்டும் சொத்தின் நன்மையை முன்னிட்டும் விதவை மாற்றுக்கம் செய்யலாம். சட்ட அவசியமும் சொத்தின் நன்மையும் மதக் காரணத்திற்காகவும் இருக்கலாம்; மதச் சார்பற்ற காரணத் திற்காகவும் இருக்கலாம்.

மதக் காரணம்

மதக் காரணத்தை முன்னிட்டு விதவை மாற்றுக்கம் செய்யும் போது இரண்டு விஷயங்களைக் கவனிக்க வேண்டும். இரண்டு மதச் செயல்களைத் தர்ம சாஸ்திரங்கள் அங்கீகரித்திருக்கின்றன. ஒன்று இறந்ததும் செய்யும் ஈமச் சடங்கும், அதற்குப் பின்னால் இறந்தவனின் ஆத்மா விமோசனம் பெறுவதற்காகச் சாஸ்திரங்கள் கூறியவாறு அவ்வப்போது செய்யும் சடங்குகளுமாகும். மற்றொன்று, முன்னதைப் போல் முக்கியமானதன்று என்றாலும் இறந்தவனின் ஆத்மாவின் நலனிற்காகச் செய்யப்படும் பிற சடங்குகளாகும்.

[6] Ramsumram Prasad *Vs* Shyam Kamari 44 MLJ 751.

சொத்தின் வருமானமோ அல்லது சொத்தின் மதிப்போ முதல் வகை மதச் செயலைச் செய்யப் போதாது என்றால் சொத்தை, முழுமையாகவும் விதவை விற்க முடியும். ஆனால், இரண்டாவது வகை மதச்செயலுக்காகச் சொத்தை முழுமையாக விற்க முடியாது. ஒரு பகுதியை மாத்திரமே மாற்றுக்கம் செய்யலாம். முதல்வகை மதச் செயலை 'ஆன்மிக அவசியம்' என்றால், இரண்டாவது வகை மதச் செயலை 'ஆன்மிக ஆடம்பரம்' என்று அழைக்கலாம்

'ஆன்மிக அவசியம்' என்பதில் கணவனுக்குச் செய்ய வேண்டிய ஈமச் சடங்கு, பின்னர் சாஸ்திரங்களில் கூறியவண்ணம் அவ்வப்போது செய்ய வேண்டிய சடங்குகள், மகள்களின் திருமணம், கணவனின் கடனை அடைத்தல் போன்றவை அடங்கும். இவைகளைச் செய்யாவிட்டால் 'பாவம்' ஆகும். எனவே, ஆன்மிக அவசியத்தை முன்னிட்டு விதவை சொத்து முழுவதையும் மாற்றுக்கம் செய்யலாம்.

புனித இடங்களுக்கு யாத்திரை போவது போன்றவைகளை 'ஆன்மிக ஆடம்பரம்' என்று சொல்லலாம். யாத்திரை போனால் புண்ணியம் கிடைக்கலாம். ஆனால், அது கட்டாயம் செய்ய வேண்டிய செயல் அன்று. எனவே, 'ஆன்மிக ஆடம்பரத்தை' ஒட்டி விதவை முழுச் சொத்தையும் மாற்றுக்கம் செய்ய முடியாது. சூழ்நிலைகளை ஒட்டி அவசியமாயிருந்தால் சொத்தில் ஒரு பகுதியை மட்டுமே மாற்றுக்கம் செய்யலாம். விதவை மாற்றுக்கம் செய்தது சரிதானா என்பதை அப்போதுள்ள சூழ்நிலைகளின் சகல தன்மைகளையும் ஆய்ந்து பார்த்துத்தான் முடிவு செய்ய வேண்டும். ஒரு வழக்கில், ஒரு விதவை ஏராளமாகச் சொத்தைப் பெற்றாள். பெற்ற சொத்தில் 1/75 பகுதியை மாத்திரம் பூரி ஜெகந்நாதர் கோயிலுக்குப் பிரசாதம் செய்து தினமும் படைப்பதற்காகக் கொடுத்தாள். அவள் கொடுத்தது அவள் உரிமைக்கு உட்பட்ட செயல் என்றே நீதிமன்றம்[7] தீர்ப்பு வழங்கியது.

மதச் சார்பற்றக் காரணங்கள்

மதச்சார்பற்றக் காரணங்களுக்காகவும் ஒரு விதவை மாற்றுக்கம் செய்யலாம். அரசுக்குத் தர வேண்டிய வரி பாக்கி இருந்தாலோ, வழக்கிலிருந்து சொத்தைக் காப்பதற்கோ, தனக்குள்ள உரிமையை நிலைநாட்டுவதற்கோ கணவன் யார் யாரைப் பராமரிக்க வேண்டுமோ அவர்களைப் பராமரிப்பதற்காகவோ, குடும்பத்தில்

[7] Sardar Singh *Vs* Kunji Bihari 44 MLJ.
Devi Dayal *Vs* Sri Radha Kirishna 15 Luck. 595.

உள்ள பிற பெண்களின் திருமணச் செலவிற்காகவோ, விதவை சொத்தை மாற்றுக்கம் செய்யலாம். இந்த மாற்றுக்கம் செய்யும் உரிமையும் வரையறைக்கு உட்பட்டது. அத்தியாவசியமான காரணம் இல்லாமல் அவள் மாற்றுக்கம் செய்ய முடியாது. ஆனால், அத்தியாவசியமான காரணம் இருக்கும்போது சொத்தை விற்கவும், அடைமானம் வைக்கவும் அவளுக்கு உரிமை உண்டு. அடைமானம் வைப்பதைவிட விற்பதுதான் அவசியம் என்றும், அதுதான் தேவையான பணம் தரும் என்றும் தோன்றினால், அவள் ஒரு பகுதியை விற்கலாம். அடைமானம் பெறுபவர் அல்லது சொத்தை வாங்குபவர் தீர விசாரித்து, சொத்தை விதவை மாற்றுக்கம் செய்ய வேண்டிய சூழ்நிலை உண்மையில் நியாயமான காரணங்களுக்காக இருக்கிறதா என்பதைக் கவனிக்க வேண்டும். அடைக்கப்பட வேண்டிய கடன் இருந்தால், உடனடியாகச் சொத்தை மாற்றுக்கம் செய்து கடனை அடைக்க வேண்டிய நிலைமைகள் இருக்கிறதா என்பதை ஆய்ந்து பார்க்க வேண்டும். மாற்றுக்கம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தமான சூழ்நிலை இருந்தால் மாற்றுக்கம் செய்யலாம்.

மேலே கண்ட மதச்சார்பற்ற காரணங்கள் சட்ட அவசியத்தை ஒட்டி எழுந்திருப்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். சொத்தின் நன்மைக்காகவும் விதவை மாற்றுக்கம் செய்யலாம். சொத்தின் நன்மை என்பது என்ன என்பதைத் திட்டவட்டமாகத் தீர்மானிக்க முடியாது. சொத்தை அழிவிலிருந்து காப்பதற்காகவும், மற்றவர்கள் அபகரித்துச் செல்லாமல் தடுப்பதற்காகவும், செய்யப் படும் செயல் எல்லாம் சொத்தின் நன்மைக்காகச் செய்யப்படுவதாகச் சொல்லாம். பொதுவாக எச்சரிக்கை உணர்வுள்ள ஒரு சொத்தின் உரிமையாளன் ஒருவன் என்னென்ன செய்வானோ அதை எல்லாம் ஒரு விதவை செய்யலாம்.

மாற்றுக்கமும் சக்களத்திகளும்

ஒருவனுக்கு இரண்டுக்கு மேற்பட்ட மனைவிகள் இருந்து, அவனுக்குப்பின் அவன் சொத்தை அவர்கள் அடையும்போது மாற்றுக்கம் குறித்துப் பிரச்சினை எழுவது இயற்கை. இரண்டு விதவைகளில் ஒருத்தி மற்றவளின் சம்மதம் இல்லாமல் மாற்றுக்கம் செய்ய முடியாது. மாற்றுக்கம் செய்வது மிக அவசியமான செயலுக்கு என்றாலும், மற்றவளின் சம்மதம் இன்றியமையாதது. ஆனால், அவர்கள் தம்முள் பாகப்பிரிவினை செய்து கொள்ளலாம். அப்போது மற்றவர் சம்மதம் இல்லாமல் செயல்படலாம். ஆனால், எதிர்காலப் பின்னடை வுரிமையர் நலன்களுக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் சொத்தின் எந்தப் பகுதியையும் இருவரும்

மாற்றுக்கம் செய்ய முடியாது. இருவரும் கூட்டாகச் சொத்தை அனுபவிக்கும்போது, தம்முள் இருக்கும் பகை காரணமாக ஒருவர் சம்மதத்தை இன்னொருவர் பெறுமல் செயல்பட முடியாது. ஆனால், அத்தியாவசியமான காரணத்தை முன்னிட்டு ஒரு விதவை மற்றொரு விதவையின் சம்மதத்தை மாற்றுக்கம் செய்யக்கேட்டு, மற்றொரு விதவை எந்த நியாயமான காரணங்களும் இல்லாமல் சம்மதம் கொடுக்க மறுத்தால், முன்னவள் மாற்றுக்கம் செய்யலாம். அப்படி அவள் செய்யும் மாற்றுக்கம் சொத்து முழுவதையும் கட்டுப் படுத்தும்.[8]

மாற்றுக்கத்தை நிரூபிக்கும் பொறுப்பு

ஒரு விதவைக்கு அவளுக்குக் கிடைத்த சொத்தில் வரை உரிமையே உண்டு. எனவே, அவள் மாற்றுக்கம் செய்யும்போது மாற்றுக்கம் பெறுபவருக்கு (Alienee) ஒரு புதிய பொறுப்பு ஏற்படு கிறது. குழந்தையாக இருக்கும் வாரிசின் நிர்வாகி எந்த நிலையில் இருக்கிறாரோ அந்த நிலையில் மாற்றுக்கம் பெற்றவரும் இருக்கிறார் எனலாம். செய்யப்பட்ட மாற்றுக்கம் சரியானது என்பதைக் காட்ட, மாற்றுக்கம் பெற்றவர், அவசியத்தை முன்னிட்டும் சொத்தின் நன்மையை முன்னிட்டும் மாற்றுக்கம் செய்ய வேண்டிய நிலைமை இருந்தது என்பதை நிறுவ வேண்டும்; அல்லது தான் உண்மையிலேயே விசாரித்து மாற்றுக்கம் செய்ய வேண்டிய அவசியம் இருப்பதைக் கண்டு திருப்தியடைந்து அதற்கு ஒப்புக் கொண்டதை நிரூபிக்க வேண்டும். மாற்றுக்கம் செய்யும்போது இந்த அவசியம் பின்னால் இல்லாமல் போனால் பாதகமில்லை. பின்னடை வுரிமையராக வரப்போகிறவர்கள் மாற்றுக்கத்திற்குத் தங்களின் சம்மதத்தைத் தெரிவித்தால் அதற்கு ஒரு முக்கியத்துவம் உண்டு. மாற்றுக்கம் செய்யவேண்டிய சூழ்நிலை உண்மையில் நிலவியது என்பதற்குப் பின்னடைவுரிமையரின் சம்மதம் முதல் நோக்கு (Prima Faoie) ஆதாரமாகும். என்றாலும், பின்னடைவுரிமையரின் சம்மதத்தைக் கொண்டு மாற்றுக்கம் செய்யவேண்டிய அவசியம் இருந்தது என்று தீர்மானிக்கும் அனுமானம் மறுப்பிற்கு உரிய தாகும். எனவே, அடுத்து வரும் பின்னடைவுரிமையர் உள்ளிட்ட அனைத்துப் பின்னடைவுரிமையரின் சம்மதத்தையும் பெறுவது நல்லது. ஆனால், பெண்ணாக இருக்கும் பின்னடைவுரிமையரின் சம்மதமும், மாற்றுக்கம் ஏற்படும் சூழ்நிலைகளைப் பற்றிய முழு அறிவும் இல்லாமல் மற்றவர்கள் தரும் சம்மதமும், மாற்றுக்கத் திற்கு நியாயமான காரணம் இருந்தது என்பதை நிரூபிப்பதற்கு உதவாது.

[8] Gawrinath Kakji *Vs* Mt. Gapa Kuar 28 LW 378.

ஒரு ஒப்பாவணத்தில் (Deed) காணப்படும் வாசகங்கள் (Recital) அடிப்படையில் மாற்றுக்கத்தின் அவசியத்தை நிர்ணயிக்க முடியாது. அந்த வாசகங்கள் எதற்குப் பயன்பட்டாலும், விதவை செய்த மாற்றுக்கத்தின் நியாயத்தை வலுப்படுத்தாது. மாற்றுக்கம் செய்து பல ஆண்டுகள் ஆனபின்னர், விதவை செய்த மாற்றுக்கம் சரியானதுதானு என்ற பிரச்சினை எழுந்தால்,அப்போது நிலவிய நியாயமான காரணங்களை அறிந்துகொண்டு மாற்றுக்கம் சரியா, தவறு என்று முடிவெடுப்பது கடினம். இது போன்ற வழக்குகளில் ஒப்பாவணத்தின் மூலமும், துணிபு மூலமும் அவசியத்தை முன்னிட்டே மாற்றுக்கம் நடந்திருக்க வேண்டும் என்று நீதிமன்றம் முடிவிற்கு வரக்கூடும். மாற்றுக்க ஒப்பாவணத்தில் காணப்படும் வாசகங்கள் மாற்றுக்கத்தின் அவசியத்தை கூறுமல் இருந்தாலும் இதர சான்றுகளை அனுசரித்து நீதிமன்றம் அவசியம் இருந்ததாகவே கருதக்கூடும். குமாரசாமி *Vs* நாராயணசாமி[9] வழக்கில் ஒரு விதவை செய்த மாற்றுக்கத்தை 50 ஆண்டுகள் கழித்து பின்னடைவுரிமையர்கள், செய்த மாற்றுக்கம் சரியானதன்று என்று சொல்லி வழக்குத் தொடர்ந்தனர். 50 ஆண்டுகள் கடந்து விட்டதால் அப்போது இருந்த நிலைமை என்னவாயிருக்கும் என்று தீர்மானிப்பது இயலாததாகிவிட்டது. எனவே, நீதிமன்றம் செய்யப்பட்ட மாற்றுக்கம் சரியானது என்று சொல்லித் தீர்ப்புக் கூறியது. இதனுல் காலம் கடந்துவிட்ட எல்லா மாற்றுக்கமும் சரியானது என்று பொருள் அல்ல. காலம் கடந்து விட்டாலும் கிடைக்கக்கூடிய ஆதாரங்களை வைத்து நீதிமன்றம் முடிவுக்கு வர வாய்ப்பு உண்டு.

ஒரு விதவை தன்னுடைய அதிகார வரம்பை மீறி மாற்றுக்கம் செய்தால், அது இல்லாநிலை மாற்றுக்கம் அல்ல; தவிர்தகு மாற்றுக்கமே.

வரையுரிமை விடுப்பு (Surrender)

இந்து விதவை ஒருத்தி தானுகவே தன் சொத்துரிமையை பின்னடைவுரிமையருக்காகத் துறந்துவிடலாம். அப்படித் துறந்து விட்டால் உரிமை இறக்கம் பொறுத்தவரையில் அவள் இறந்து விட்டவளின் நிலையிலேயே எண்ணப்படுவாள். இப்படித் தானுகத் தன் உரிமையைத் துறப்பதை வரையுரிமை விடுப்பு என்பர்.

ஒரு வரையுரிமை விடுப்பு செல்லத் தக்கதாக இருக்கக் கீழ்க் காணும் காரணங்கள் அதில் இருக்கவேண்டும். (1) வரையுரிமை

[9] Kumaraswamy *Vs* Narayanaswamy 36 LW 186.

விடுப்பு அடுத்து வரும் எல்லாப் பின்னடை உரிமையருக்காகவும் இருக்கவேண்டும். பின்னடையுரிமையர் பலர் இருந்தால், ஒரு வருக்குச் சாதகமாகச் செய்யக்கூடாது. (2) தன்னுடைய சொத்தில் ஒரு பாதியைக் கொடுத்துவிட்டு, மறுபாதியை விதவை வைத்துக் கொள்ளக் கூடாது. தன்னிடம் வந்து சேர்ந்த முழுச் சொத்துரிமையையும் கொடுத்துவிட வேண்டும். (3) வரை யுரிமை விடுப்பு நல்லெண்ணத்தில் செய்யப்பட வேண்டும். பின்னடைவுரிமையருடன் சொத்துரிமையைப் பிரித்துக் கொள் வதற்காகச் செய்யக்கூடாது. ஆனால், விதவையின் பராமரிப்புக் காக ஏதாவது ஒரு வகையில் வழி செய்தால், அது வரையுரிமை விடுப்பைப் பாதிக்காது. (4) தன்னுடைய உரிமைகளை அறியா மலும், தன்னுடைய சூழ்நிலையின் தன்மைகளை உணர்ந்து கொள்ளாமலும் ஒரு விதவை வரையுரிமை விடுப்புச் செய்தால், அது செல்லத் தக்கதன்று.

வரையுரிமை விடுப்பிற்குத் தக்க காரணங்கள் இல்லை என்று கூறி, அதைச் செல்லத் தகாதது என்று வழக்காட முடியாது.

பின்னடைவுரிமையரின் உரிமைகள்

பின்னடைவுரிமையருக்கு விதவையின் கையில் இருக்கும் சொத்து, அவளுக்குப் பின்னால்தான் வரும் என்றாலும், அச் சொத்துப் பாழாகாமல் இருக்கிறதா என்பதைக் கவனிக்கவேண்டிய கடமை இருக்கிறது. ஒரு விதவை மாற்றுக்கம் செய்யும்போது, செய்யும் மாற்றுக்கம் தன்னைக் கட்டுப்படுத்தாது என்று அறிவிக்கு மாறு நீதிமன்றத்தை அணுகப் பின்னடைவுரிமையருக்கு உரிமை உண்டு. விதவை, சொத்தைப் பாழாக்குவதைத் தடுக்கும் வகையில் உரிமையியல் வழக்கு அவன் தொடரலாம். பொது வாக உரிமையியல் வழக்கை விதவைக்குப் பின் அச் சொத்தை அடையப்போகும் பின்னடை உரிமையரே தொடரவேண்டும் ஆனால், அவன் வழக்குத் தொடர மறுத்தால், விதவையோடு வஞ்சக் கூட்டுக் கொண்டால், தன்னுடைய செயலால் தான் எதுவும் செய்யமுடியாத நிலைக்கு ஆளாக்கிக் கொண்டால், விதவைக்குச் சம்மதம் கொடுத்திருந்தால், அவனுக்கு அடுத்து இருக்கும் பின்னடைவுரிமையர் வழக்குத் தொடரலாம். விதவை சொத்தைச் சரியாகக் கவனிக்கவில்லை என்றால், அதனால் சொத்துப் பாழாகிறது என்றால், சொத்தைப் பராமரிப்பதற்குப் பேணுநர் (Receiver) நியமிக்கும்படி நீதிமன்றத்தைப் பின்னடைவுரிமையர் அணுகலாம். ஒரு பின்னடைவுரிமையர் மற்றப் பின்னடையுரிமை யர்களுக்காக, அவர்களின் பிரதிநிதியாக வழக்குத் தொடர்ந்து, விதவை செய்யும் மாற்றுக்கம் பின்னடைவில் (Reversion)

தங்களைக் கட்டுப்படுத்தாது என்று நீதிமன்றத்தை அறிவிக்கக் கோரி, நீதிமன்றம் அவ்வாறு செய்தால், நீதிமன்றத்தின் தீர்ப் பாணை மற்றப் பின்னடை வுரிமையர்கள், மாற்றுக்கம் பெற்றவர் ஆகியோர் இடையே மீண்டும் இது சம்பந்தமாக வழக்குத் தொடர ஒரு தீர்ப்புத் தடையாக (Res judicata) இருக்கும். விதவை இறந்த பிறகு அச் சொத்தை அடையும் பின்னடைவுரிமையர், மற்றவர்கள் உடைமையில் அச் சொத்து இருந்தால் அதைப் பெற் றுக்கொள்ள உரிமை உடையவராவார். விதவை உயிரோடு இருக்கும்போது அவள் செய்த மாற்றுக்கம் செல்லாது என்று ஒரு பின்னடைவுரிமையர் வழக்குப் போடாமல் இருந்தது, பின் னர் அச் சொத்தினுரிமையை அடைந்தவுடன் மாற்றுக்கம் பெற்ற வருக்கு எதிராக உடைமை கேட்டு வழக்குப் போடத் தடை யாகாது.

மாற்றுக்கம் பெற்றவரின் உரிமைகள்

விதவையின் சொத்தை மாற்றுக்கம் பெற்றவர், தான் நல்லெண் ணத்துடனும், விதவை மாற்றுக்கம் செய்ய வேண்டிய அவசியம் இருந்ததை விசாரித்துத் தெரிந்துகொண்ட பின்னும் தான் மாற்றுக் கத்திற்கு உடன்பட்டதாக நிரூபித்தால், அம் மாற்றுக்கம் செல்லத் தக்கதாகும். மாற்றுக்கம் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டால்கூட, விதவை மாற்றுக்கம் செய்ய உரிமை படைத்த விஷயங்களில் செய்த மாற்றுக்கத்திற்காகத் தான் கொடுத்த பணத்திற்கு அச் சொத்தின்மீது பிணை (Charge) ஏற்படுத்தலாம். மேலும், தன்னிடம் மாற்றுக்கத்தால் வந்த சொத்தின்மீது தனக் குள்ள உரிமை இனிமேல் எவ்வகையிலும் பாதிக்கப்படாது என்ற நம்பிக்கையின் பேரில் சொத்தின்மீது செய்த அபிவிருத்திக்காக (Improvement) மாற்றுக்கம் பெற்றவர் இழப்பீடும் பெற்றுக் கொள்ளலாம்.

11. மரபு முறை இறங்குரிமை
(INHERITANCE)
பகுதி அ—பழைய சட்டம்

1956ஆம் ஆண்டு இந்து உரிமை இறக்கச் சட்டம் (Hindu Succession Act) நிறைவேற்றப்படுவதற்கு முன்னர், இந்தியாவின் பல்வேறு பகுதிகளில், பல்வேறு முறைகள் உரிமை இறக்கத்தில் பின்பற்றப்பட்டன. கூட்டாக இருக்கும் சொத்துக்கு ஒரு முறையும், தனியாக இருக்கும் சொத்துக்கு ஒரு முறையும் அமலில் இருந்தன. கூட்டாக இருக்கும் சொத்தில் ஒருவனுக்கு இருக்கும் உரிமை அவனுடைய மரணத்திற்குப்பின் எஞ்சுநர் உரிமைப்படி பிற உறுப்பினர்களுக்குச் சென்றது. தனிச் சொத்தில் இருந்த உரிமை ஒருவனின் மரணத்திற்குப் பின் அவனுடைய பிற வாரிசுகளுக்கு மரபு முறை இறங்குரிமைப்படி சென்றது. மிதாக்ஷரத்தில் கூட்டுச் சொத்து ஒரு முறையிலும், தனிச் சொத்து இன்னொரு முறையிலும், சென்றடையும் இருமுறைகளும் இருந்தன. ஆனால், தாயபாகத்தில் மரபு முறை இறங்குரிமை மட்டும்தான் அங்கீகரிக்கப் பட்டிருந்தது.

'மகன்கள் சொத்தை எடுத்துக்கொள்வார்கள்; அவர்களுக்குப் பிறகு அவர்களுடைய சபிண்டாக்கள் சொத்துக்கு உரியவர்களாவார்கள்' என்ற மனுவின் மொழிதான் இந்துக்களின் மரபுமுறை இறங்குரிமைக்கு அடித்தளம். மனு கூறிய சபிண்டாவுக்குப் பொருள் கொள்வதில் ஏற்பட்ட கருத்து மாறுபாடுதான் மிதாக்ஷர முறைக்கும் தாயபாக முறைக்கும் உள்ள வேறுபாடு. மிதாக்ஷர ஆசிரியர் விஞ்ஞானேஸ்வரர் சபிண்டா என்பதற்கு, 'இரத்த சம்பந்தமானது அல்லது ஒரே பிண்டத்தைச் சேர்ந்தது' என்று பொருள் கொள்கிறார். ஆனால், தாயபாகத்தின் ஆசிரியர் ஜீமூத வாகனர், 'ஈமச் சடங்கு செய்யப் பாத்தியதை உடைய உறவு'

என்று பொருள் கொள்கிறார். ஆகவே, மிதாக்ஷரத்தில் உறவின் நெருக்கத்தை ஒட்டி வாரிசுகள் அமைவர்; தாய பாகத்தில் இறந்து போனவனின் ஆன்ம விமோசனத்திற்குச் சடங்குகள் செய்யத் தகுதி உள்ளதைப் பொறுத்து வாரிசுகள் அமைவர்.

தகுதியின்மைகள்

ஒருவனுக்கு வாரிசாக இருக்க இன்னொருவனுக்குத் தகுதியில்லாமல் போவதும் உண்டு. குறிப்பிட்ட நபருக்கு வாரிசாக இருக்கத் தகுதி கிடையாது என்று யார் சொல்கிறார்களோ, அவர்களே தகுதி கிடையாது என்பதை நிரூபிக்க வேண்டும்.[1] இத் தகுதியின்மைகள் சிலவற்றை ஆட்சிமன்றம் இயற்றிய சட்டங்கள் போக்கிவிட்டன என்றாலும், இந்துச் சட்டம் ஆரம்ப காலத்தில் அங்கீகரித்திருந்த தகுதியின்மைகள் ஐந்து வகைப்படும் என்று சொல்லலாம். அவையாவன: 1. உடல்வழித் தகுதியின்மை, 2. மனவழித் தகுதியின்மை, 3. ஒழுக்க வழித் தகுதியின்மை, 4. மதவழித் தகுதியின்மை, 5. நேர்மை நெறி வழித் தகுதியின்மை.

பிறவியிலிருந்தே ஒருவன் குணமாகாத குருடாக, செவிடாக, ஊமையாக இருந்தால், அவனுக்கு வாரிசாக இருக்கும் தகுதி கிடையாது. செயல்படமுடியாத அளவுக்கு உடற்குறை பிறவியிலிருந்தே இருந்தாலும் அவன் வாரிசாக விளங்க முடியாது. மேலும், உக்கிரமான தொழுநோய் போன்றவைகளும் தகுதியின்மையே யாகும். ஆனால், 1928ஆம் ஆண்டு நிறைவேற்றப் பட்ட 'இந்து மரபுமுறைச் (தகவின்மை நீக்க) சட்டம்' (Hindu Inheritance Removal of Disabilities Act of 1928) இத் தகுதியின்மைகளைப் போக்கிவிட்டது. இச் சட்டம் மிதாக்ஷர முறைக்கு அமலாகுமே தவிரத் தாயபாக முறைக்கு அமலாகாது.

உரிமை இறக்கம் ஏற்படும் சமயத்தில் ஒருவன் பித்து நிலையில் இருந்தால், அவன் வாரிசாக முடியாது. முழுமையாகப் பிறவி மண்டுவாக இருத்தலும் சொத்தை அடைவதற்கு ஒரு தடையே. ஆனால், இந்து மரபு முறை இறங்குரிமைச் (தகவின்மை நீக்க) சட்டம் 1928' வந்த பிறகு மிதாக்ஷர முறையில். பிறவியிலிருந்தே பித்தனாக அல்லது மண்டுவாக இருப்பவர்கள் மட்டும்தான் வாரிசாக இருக்கத் தகுதியற்றவர்கள் ஆவார்கள்.

கற்புநெறி தவறிய ஒழுக்கக் குறைவான பெண் தாயபா முறைப்படி, சொத்தின் கடைசி உரிமையாளர் ஆணாக இருந்தால்,

[1] Chunder Vs Kristo 18, W.R. 375.

வாரிசாக முடியாது. ஆனால், மிதாக்ஷரத்தில் இந்த விதி கிடையாது. இம் முறைப்படி ஒழுக்க நெறி தவறிய விதவை மட்டுமே வாரிசாக இருக்க முடியாது, சூத்திரர்களைத் தவிர மற்ற வருணத்தவர் மத்தியில் முறையிலா மணத்தில் பிறந்தவர்கள் வாரிசாக விளங்கமுடியாது. சூத்திரர்கள் மத்தியிலும் தொடர்ந்து ஒருவனுக்கே வைப்பாட்டியாக வாழ்க்கை நடத்தியவளுக்குப் பிறந்த மகன்களே தந்தை கூட்டுக் குடும்பத்தில் இல்லை என்றால், வாரிசாக விளங்க முடியும்.

மதம் மாறுவதும், சாதியை இழப்பதும் ஒரு தகுதியின்மையாக முன்பு அங்கீகரிக்கப் பட்டிருந்தது. 'வகுப்புத் தகவின்மை நீக்கச் சட்டம் 1850' வந்த பின்னால், இத் தகுதியின்மைகள் வழக்கொழிந்து போயின. ஆனால், ஒருவன் துறவியாகி விட்டால் அல்லது உலகை முழுமையாகத் துறந்துவிட்டால் வாரிசுரிமை கொண்டாட முடியாது.

ஒருவன் யாரைக் கொலை செய்தானோ அவனுடைய சொத்துக்கு வாரிசாகச் சென்று அதை அடையக் கூடாது என்பது நேர்மை நெறியின் அடிப்படையில் பின்பற்றப்படும் சட்டமாகும். கொலை செய்தவனை இறந்துபோனவனாகவே இவ்விஷயத்தில் கருத வேண்டும். அதுமட்டுமன்று. கொலைகாரனின் வழியாகவும் வேறு யாரும் கொலை செய்யப்பட்டவனின் சொத்தில் பாத்தியதை கொண்டாட முடியாது.

ஒருவனுடைய தகுதியின்மை அவனுடைய தனிப்பட்ட தகுதியின்மை யாகும். எனவே, அவனுடைய அடுத்த வாரிசுகள் சொத்தை அடைய எந்தத் தடையும் கிடையாது. கொலைகாரன் விஷயத்தில் மட்டுமே, அவன் மட்டுமல்லன், அவனுடைய வாரிசுகளும் இறந்தவனின் சொத்தை அடைய முடியாது.

சில விளக்கங்கள்

அ. ஒருவன் இறந்தவுடனேயே அவனுடைய சொத்துரிமை அவனுடைய வாரிசுகளுக்குக்குச் சென்றுவிடும். சொத்துரிமையை நிறுத்திவைத்தல் என்ற நிலைமைக்கே இடம் கிடையாது. இறந்தவனுக்குப் பின்னர் சொத்தை அடைய வேண்டிய வாரிசு தாயின் வயிற்றில் இருந்தால் மட்டுமே சொத்துரிமையை நிறுத்திவைக்கும் நிலை ஏற்படும். ஒருவன் இறந்து, அவன் இறக்கும் காலத்தில் இருந்த நெருங்கிய வாரிசுக்குச் சொத்து சென்ற பின்னர், அவனை விட அதிகப் பாத்தியதை உள்ள வாரிசு பிற்காலத்தில் பிறந்தாலும், சொத்தை அடைந்தவனின் உரிமை பாதிக்கப்படாது. ஆனால்,

சொத்து அவனைச் சென்றடையும் காலத்தில் அதிக பாத்தியதை உள்ளவன் தாயின் வயிற்றில் இருந்தால், அவனுக்குள்ள உரிமையும் பறிபோய்விடாது. சொத்துரிமையை அடைந்த ஒரு விதவை தத்து எடுத்துக்கொண்டால், அவளுடைய உரிமை தத்து எடுக்கப்பட்டவனுக்குச் சென்றுவிடும்.[2] இறந்தவனுடைய சொத்து அவனுடைய வாரிசை வந்தடைந்ததும், அந்த வாரிசு தனக்குச் சொத்தில் ஆசையில்லை என்றும், தான் சொத்தில் உரிமை கொண்டாடவில்லை என்றும் சொல்வானாகில், அவன் முழுமையாக உலகைத் துறந்து துறவற வாழ்வை மேற்கொண்டாலொழிய அல்லது வேறு தூரத்து வாரிசுக்குச் சொத்தை மாற்றித் தருவதற்குரிய முறைகளை மேற்கொண்டாலொழிய, சொத்து அவனை விட்டு வேறு தூரத்து வாரிசுக்குச் செல்லாது.

ஆ. இந்துச் சட்டத்தில் இருவகை உரிமை இறக்கம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஒன்று எஞ்சுநர் உரிமை; மற்றொன்று மரபு முறை இறங்குரிமை. பங்குரிமை அமைப்பில் ஒருவன் இறந்ததும் அவனுடைய உரிமையை உயிருடன் இருப்பவர்கள் அடைவது எஞ்சுநர் உரிமை. மரபு முறை இறங்குரிமை என்பது பிறப்பு வழி வருவதாகும். இந்த இரண்டுவகை உரிமை இறக்கமும் மிதாக்ஷரத்தில் உண்டு. ஆனால், தாயபாகத்தில் எஞ்சுநர் உரிமை கிடையாது. மரபுமுறை இறங்குரிமை மட்டுமே உண்டு. ஆனால், மிதாக்ஷரம் தாயபாகம் இரண்டிலுமே விதவை அல்லது மகள் ஆணின் சொத்தைக் கூட்டாக அடையும்போது, அதை எஞ்சுநர் உரிமையோடு அனுபவிப்பர். ஒரு குடும்பம் கூட்டுக் குடும்பமாக இருக்கும்போது, அதில் இன்னார் வாரிசு என்ற பேச்சுக்கு இடம் கிடையாது. ஒருவர் இறந்தபின் இன்னொருவர் எஞ்சுநர் உரிமைப் படி அச் சொத்தை அடைவார். பாகப்பிரிவினையும் தனிச் சொத்தும் சமூக அமைப்பில் உண்டான பின்னர்த்தான் மரபு முறை இறங்குரிமைக்கான விதிகள் உருவாயின.

இ. பரம்பரைச் சொத்தில் மகன், பேரன், கொள்ளுப்பேரன் ஆகியோர் பிறப்பாலேயே உரிமை பெறுகிறார்கள். உரிமையாளர் ஒருவர் இருப்பது அவர்கள் உரிமைபெறத் தடையாக இருக்காது. ஆனால், தந்தை, பாட்டன், கொள்ளுப்பாட்டன் அல்லாது மற்றவர்களிடமிருந்து பெறும் உரிமை தடையுள்ளதாகும். ஏனென்றால், அத்தகைய உரிமையாளர் இருப்பது சொத்தை அடையத் தடையாகும். தடையுள்ள மரபுமுறை இறங்குரிமையில் (obstructed inheritance) சொத்தை அடைபவர்கள் பொதுநிலச் சொத்துரிமை

[2] Amarendra Vs Sanatan 38 L.W. 1.

யராக (Tenants - in - Common) இருப்பர். கூட்டு நிலச் சொத்துரிமையாராக (Joint Tenants) இருக்கமாட்டார்கள். தடையற்ற உரிமை இறக்கத்தில் அவர்கள் கூட்டுநிலச் சொத்துரிமையராக இருப்பர்.

ஈ. எதிர்நோக்கு இறங்குரிமை (Spes Successionis) என்பது ஒருவனுக்கு இன்னொருவனுடைய சொத்தை அடைய இருக்கும் வாய்ப்பாகும். இந்த வாய்ப்புக் கிடைக்காமல் போவதற்கும் வழி உண்டு. எனவே, ஒருவன் எதிர்நோக்கு இறங்குரிமையை மாற்றுக்கம் செய்ய முடியாது.

உ. ஒரு தந்தை வழி மூதாதையர் இறந்தால், அவருடைய மகன், முன்னதாக இறந்துவிட்ட மகனின் மகன் (பேரன்), தந்தை, பாட்டன் இருவரும் இறந்துபோக எஞ்சியிருக்கும் கொள்ளுப்பேரன் ஆகியோர் அவருடைய தனிச் சொத்துக்குப் பங்குரிமையராக உரிமை பெற்றுச் சொத்தை அடைவார்கள். அதாவது பேரன் தன் தந்தையின் பிரதிநிதியாகவும், கொள்ளுப்பேரன் தன் பாட்டனின் பிரதிநிதியாகவும் இருப்பார்கள். இதைப் 'பிரதிநிதித்துவக் கொள்கை' (Doctrine of Representation) என்று சொல்வார்கள். மேலே கண்டது போன்ற நிலைமைக்குத் தவிர மற்றவற்றிற்கு இக் கொள்கை பொருந்தி வராது.



மேலே உள்ள வரைபடத்தில் உள்ள 'க' என்பவர் 'அ' என்னும் மகன், முன்னதாக இறந்துவிட்ட 'ஆ' என்னும் மகன் வழிப்பேரன்கள் 'ஈ' 'உ', மற்றும் இறந்துவிட்ட 'இ' என்னும் மகன் 'ஊ' என்னும் பேரன் வழிக் கொள்ளுப்பேரன்கள் 'எ' 'ஏ' ஆகியோரை விட்டுவிட்டு இறந்துபோவதாக வைத்துக்கொள்வோம். 'க' வினுடைய தனிச்சொத்தை உயிரோடு இருக்கும் அவனுடைய

வழித் தோன்றல்கள் அனைவரும் பங்குரிமையராக அடைவார்கள். 'அ' வுக்கு ஒரு பங்கும் 'ஆ' விற்குரிய பங்கு 'ஈ' க்கும் 'உ' க்கும் 'இ' க்குரிய பங்கு 'எ' க்கும் 'ஏ' க்கும் செல்லும். அதாவது பின்னர் பாகப்பிரிவினை ஏற்பட்டால் 'க' வினுடைய மூன்று மகன்களுக்கும் மூன்று பங்காகப் பிரிக்கப்படும். இப்படிப் பிரிப்பதைக் கிளைவிகிதம் ((Per stripes) என்பர். இதன்படி 'க' வினுடைய சொத்தில் $\frac{1}{3}$ பாகம் 'அ' வுக்குக் கிடைக்கும். 'ஆ'வின் கிளைக்கு $\frac{1}{3}$ பாகம் கிடைக்கும் 'ஆ'வின் $\frac{1}{3}$ பாகத்தை 'ஈ'யும் 'உ'வும் தலைவிகிதப்படி (Per capita) பிரித்துக் கொள்வார்கள். அதாவது இருவருக்கும் $\frac{1}{6}$ பாகம் கிடைக்கும். 'இ'யின் கிளைக்கும் $\frac{1}{3}$ பாகம் கிடைக்கும். அதை 'எ'யும் 'ஏ'யும் தலைவிகிதப்படிப் பிரித்துக் கொள்வார்கள். ஆகவே இருவருக்கும் $\frac{1}{6}$ பாகம் கிடைக்கும்.

மிதாக்ஷர ஆண் சொத்தில் மரபுமுறை இறங்குரிமை

ஒருவனுக்கு எந்தச் சொத்தில் முழு உரிமை இருக்கிறதோ அவனுடைய அந்தச் சொத்துக்குத்தான் மரபுமுறை இறங்குரிமை அமலாகும். எஞ்சுநர் உரிமைக்கு உட்பட்ட சொத்து இருக்குமானால் அதற்கு மரபுமுறை இறங்குரிமை அமலாகாது. எடுத்துக்காட்டாக, கூட்டுக் குடும்பத்தில் எஞ்சுநர் உரிமைதான் உண்டு. எனவே, அதுதான் அங்கு அமலாகும். ஒருவனுக்குத் தனிச் சொத்து இருக்குமானால், அதில் மட்டும் மரபு முறை இறங்குரிமையே அமலாகும். ஒருவன் தானாகச் சம்பாதித்த தனிச் சொத்து பங்குரிமை அமைப்பில் ஒரே ஆளாக இருக்கும் எஞ்சுநரின் சொத்து, பங்குரிமை அமைப்பைவிட்டுப் பாகம் பிரித்துக் கொண்டு வெளியேறித் தனியாக வைத்துக்கொண்டிருக்கும் சொத்து ஆகியவற்றிற்கும் மரபு முறை இறங்குரிமையே உரியது.

மிதாக்ஷரத்தில் தாயபாகம் போல் அல்லாது உறவின் நெருக்கமே வாரிசாக இருக்கத் தகுதி என்பது முன்பே சொல்லப்பட்டது. வாரிசுகளில் முதல் இடம் பெறக்கூடியவர் யார் என்பது சம்பந்தமாக ஏதாவது சிக்கல் எழுந்தால்தான், அதைத் தீர்த்துக்கொள்ளத் தாயபாகம் போல் இறந்தவனின் ஆன்மிக நலனுக்காகச் சடங்கு செய்யப் பாத்தியதை உடைவர்கள் யார் என்று பார்ப்பது மிதாக்ஷரத்தில் வழக்கம்.

மரபுமுறை இறங்குரிமையில் சபிண்ட உறவு முக்கிய இடம் வகிக்கின்றது. சபிண்ட உறவு முறையில் இரண்டுவகை உண்டு. ஒன்று சமான கோத்திர சபிண்டர் (Samana Gotra Sabinda); மற்றொன்று பின்ன கோத்திர சபிண்டர் (Bhinna Gotra Sabinda). ஒரே கோத்திரத்தில் உள்ளவர்களின் இரத்த சம்பந்தமான உறவினர்கள் சமான கோத்திர சபிண்டர்களாவார்கள். இன்னொரு

கோத்திரத்தின் வழியாக வரும் இரத்த சம்பந்தமான உறவினர்கள் (அதாவது பெண்கள் வழி ஏற்படும் உறவு) பின்ன கோத்திர சபிண்டர்கள் ஆவார்கள். இவ்வழி வரும் வாரிசுகள் பந்துக்கள் எனப்படுவர்.

சமான கோத்திர சபிண்டர்களை கோத்திரஜ சபிண்டர்கள் என்றும் அழைப்பார்கள். இந்தச் சபிண்டர்கள் இறந்தவனுடன் ஆண் வழியாக உறவு உள்ளவர்கள். சமான கோத்திரத்தில் இரண்டு பிரிவுகள் உண்டு. ஒன்று சபிண்டர்கள் அடங்கியது; மற்றொன்று சமநோதகாக்கள் அடங்கியது. எனவே, மிதாக்ஷரத்தில் வாரிசுரிமை உடையவர்களை 1. சபிண்டாக்கள் 2. சமநோதகாக்கள் 3. பந்துக்கள் என்று வரிசைப்படி சொல்லலாம். வாரிசுரிமையில் சபிண்டர்களுக்குத்தான் முதல் இடம். சபிண்டர்கள் யாரும் இல்லை என்றால் சமநோதகாக்களுக்கு அடுத்த இடம் கிடைக்கும் இந்த இரு பிரிவு வாரிசுகளுமே இல்லை என்றால், பந்துக்களுக்கு அதற்கு அடுத்த இடம் கிடைக்கும்.

சபிண்டர்கள் மத்தியில் உரிமை இறக்கம்

யாரிடமிருந்து சபிண்ட உறவு முறையைக் கணக்கிடத் தொடங்குகிறோமோ அவரைக் 'கொடிவழி முன்னவர்' (Propositus) என்று சொல்வர். கொடிவழி முன்னவரிடமிருந்து சபிண்ட உறவினரைக் கணக்கிடும்போது, சபிண்டர்கள் மொத்தம் 57 பேர். அவர்கள் யார் யார் என்பது கீழே குறிக்கப்பட்டுள்ளது.

1. கொடிவழி முன்னவரிடமிருந்து ஆண் வழியில்வரும் 6 ஆண்வழித் தோன்றல்கள் (இறங்கு முறை உறவினர்) (Descendants)	6
2. கொடிவழி முன்னவரிடமிருந்து ஆண் வழியில் வரும் 6 ஆண் ஏறுமுறை உறவினர் (Ascendants)	6
3. மேற் சொன்ன 6 ஏறுமுறை உறவினரின் மனைவிகள்	6
4. 6 ஆண் ஏறுமுறை உறவினரின் ஒவ்வொரு கிளைவழி வரும் 6 ஆண் இறங்குமுறை உறவினர்கள்	6 × 6 = 36
5. விதவை, மகள், மகள் வழிப்பேரன்	3
மொத்தம்	57

இதில் மகள் வழிப் பேரன் பின்ன கோத்திர சபிண்டர் பட்டியலில் வர வேண்டியவன். ஏனென்றால், அவன் கொடிவழி முன்னவருக்குப் பெண்வழியாக உறவாகின்றான். ஆனால், அவனை இப் பட்டியலில் சேர்த்திருப்பதிலிருந்து அவனுக்குக் குடும்பத்தில் உள்ள முக்கிய இடம் புலனாகும்.

வாரிசுகளின் வரிசை

இந்து ஒருவன் இறந்ததும் அவனுடைய வாரிசுகள் கீழ்க் காணும் வரிசைப்படி உரிமை பெறுவார்கள்.

1. மகன், 2. பேரன், 3. கொள்ளுப்பேரன் : ஒருவன் இறந்ததும் அவனுடைய மகன்களுக்கு அவனுடைய சொத்து செல்லும். மகன்கள் மூன்று பேர் இருந்து அதில் இரண்டு பேர் இறந்து போயிருந்தால். இறந்துபோன மகன்களின் மகன்கள் (பேரன்கள்) வாரிசாவார்கள். பேரன்களும் இறந்து போயிருந்தால், கொள்ளுப் பேரன்கள் வாரிசாவார்கள். அதாவது முன்பு பார்த்த பிரதிநிதித் துவக் கொள்கைப்படி பேரனும், கொள்ளுப் பேரனும் தத்தம் தந்தையின் பிரதிநிதியாகச் சொத்தை அடைவார்கள். எனவே, மகன், பேரன், கொள்ளுப் பேரன் ஆகியோர் சொத்தைக் கிளைவிகிதப்படி (ஒவ்வொரு மகனும் ஒவ்வொரு கிளை) பெறுவார்கள்; தலைவிகிதப் படி அன்று.

ஒரு குடும்பத்தில் பாகப்பிரிவினை ஏற்பட்டுச் சில மகன்கள் பிரிந்துபோக, தந்தை சில மகன்களுடன் கூட்டாக வாழ்ந்தால், தந்தை இறந்ததற்குப் பிறகு, அவருடைய பரம்பரைச் சொத்து, தானே சம்பாதித்த சொத்து அத்தனைக்கும் அவரோடு கூட்டாக இருக்கும் மகன்கள் (அவர்கள் பாகப்பிரிவினைக்கு முன்னால் பிறந்திருந்தாலும் சரி, பின்னால் பிறந்திருந்தாலும் சரி) உரிமை இறக்கம் பெறுவார்கள். அதாவது பிரிந்துபோன மகன்களுக்குச் சொத்தில் பாத்தியதை கிடையாது.[1]

தத்து எடுக்கப்பட்ட மகனுக்குச் சொந்த மகனுக்குரிய சகல உரிமைகளும் உண்டு என்றாலும், ஒருவன் தத்து எடுத்ததற்குப் பிறகு சொந்த மகனைப் பெற்றுவிட்டால், நிலைமை சற்று மாறும். சொந்த மகனுக்குக் கிடைக்கும் சொத்தில் $\frac{1}{4}$ பாகமே தத்து எடுக்கப்பட்ட மகனுக்குக் கிடைக்கும். அதாவது தத்து எடுக்கப் பட்டவனுக்கு $\frac{1}{5}$ பாகமும் சொந்த மகனுக்கு $\frac{4}{5}$ பாகமும் கிடைக்கும்.

[1] Narasimham *Vs* Narasimham 55 M 577 Indernarain *Vs* Rupnarain 1965 M.P. 107.

ஆனல், சென்னை, வங்க மாநிலங்களில் சூத்திரர்கள் மத்தியில் தத்து எடுக்கப்பட்டவனும் சொந்த மகனும் சமமாகச் சொத்தை அடைவதுதான் வழக்கமாக இருக்கிறது. இந்துச் சட்டத்தின்படி விலைக்கு வாங்கப்படும் மகனுக்கு மரபுமுறை இறங்குரிமை பொருந்தாது.[4]

முறையிலா மணத்தில் பிறந்த மகன்கள் முதல் மூன்று வருணத்தில் மட்டும் தந்தையின் சொத்தை அடையமுடியாது. சூத்திரனுக்குப் பிறந்த முறையிலா மணப்பிறப்பு மகன் தந்தையின் சொத்து, பரம்பரைச் சொத்தாக இருந்தாலும், தானே சம்பாதித்த தாக இருந்தாலும் அவற்றை அடையலாம். ஆனல், அப்போது தந்தை கிளைவழியினரிடமிருந்து பாகம் பிரித்துக்கொண்டு தனி யாக இருந்து இறந்திருக்க வேண்டும். மேலும், அவன் தாய், அவன் தந்தைக்கு மட்டுமே தொடர்ந்து நிரந்தர வைப்பாட்டியாக இருந்திருக்க வேண்டும். ஆனல், முறையிலா மணத்தில் பிறந்த வன் தன் தந்தையின் சரியான வாரிசுகளுடன் போட்டியிடும் போது, முறை மணத்தில் பிறந்தவனுக இருந்தால் என்ன பெற் றிருப்பானே அதில் பாதியைத்தான் பெறமுடியும்.

4 விதவை : மகன், பேரன், கொள்ளுப் பேரன், யாருமே இல்லை என்றல், இறந்தவனின் மனைவி (விதவை) சொத்தை அடைவாள். விதவையினுடைய சொத்துரிமை முழு உரிமை அன்று. அது, வரை உரிமையே (limited interest). எனவே, அந்த விதவையின் மறைவிற்குப் பின்னர், சொத்து அவளுடைய கணவனின் நெருங்கிய வாரிசுகளுக்குச் செல்லுமே தவிர அவளுடைய வாரிசுகளுக்குச் செல்லாது. விதவை சொத்துரிமை அடைவது என்பது அவள் கற்பு நெறியுடன் இருப்பதைப் பொறுத்ததாகும். ஆனல், சொத்து வந்தடைந்த பின்னர் அவள் கற்பு நெறி தவறிவிடுவதால், சொத்துரிமை பறிக்கப்பட்டுவிட மாட்டாது. கணவன் உயிரோடு இருக்கும்போதே அவள் நடத்தை கெட்டவளாக இருந்து, அதைக் கணவன் மன்னித்திருந்தால், விதவையான பின் அவள் சொத்தை அடைவதற்குப் பழைய நடத்தை ஒரு தடையாகாது[5]. ஒருவ னுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விதவைகள் இருந்தால், விதவைகள் எஞ்சுநர் உரிமையோடு கூட்டாக அச் சொத்தை அடைவார்கள். இரண்டு விதவைகள் இருந்து அதில் ஒருத்தி மறுமணம் புரிந்து கொண்டால், மீதியிருக்கும் ஒரு விதவை எஞ்சுநர் உரிமைப்படி முழுச் சொத்துக்கும் உரியவளாவாள். கற்பு நெறி தவறியிருப்பது ஒன்றுதான் விதவையானவளுக்குக் கணவனின் சொத்தை

[4] Vachereddy Chinna Basavappa *Vs* Gowdappa 1 Suth 41 (P.C.)

[5] Radhe *Vs* Bhawani 40 A 178. Gangadhar *Vs* Yellu 36 B 138.

அடைவதற்கு உள்ள தகுதியின்மையாகும். கணவன் உயிரோடு இருந்தபோது எவ்வளவு சச்சரவுகள் தம்பதியர் மத்தியில் இருந்தாலும் அது தடையாகாது.

5. மகள் : விதவை இறந்துவிட்டால் அல்லது மறுமணம் புரிந்து கொண்டால், பல விதவைகள் இருந்து அத்தனை பேரும் மறுமணம் புரிந்து கொண்டால் அடுத்து சொத்தை அடையக் கூடிய வாரிசாக மகள் இருப்பாள். மகள் கற்புடன் இருக்கிறாளா இல்லையா என்பது சொத்தை அடைவதற்கு முக்கிய பிரச்சினையன்று. மகளுடைய சொத்துரிமை வரையுரிமையாகும்; முழு உரிமை அன்று. எனவே, அவளுடைய மரணத்திற்குப்பின் தந்தையின் பிற வாரிசுகளுக்கே சொத்து செல்லும். மகள்களில் சில பேருக்குத் திருமணம் ஆகியிருந்து சில பேருக்கு ஆகவில்லை என்றால், திருமணம் ஆகாத மகள்கள் திருமணம் ஆன மகள்களை விடுத்துச் சொத்தை அடைவார்கள். எல்லா மகள்களும் மணமானவர்களாக இருந்தால் (அதில் சிலபேர் விதவையாயிருந்தாலும்) வசதியான மகளை விடுத்து, வசதியற்ற மகள் சொத்தை அடைவாள்.[6] யார் வசதியுள்ள மகள், யார் வசதியற்ற மகள் என்பது ஒவ்வொருவர் புகுந்த இடத்தின் நிலை, அந்தஸ்து முதலியவற்றைக் கொண்டு தீர்மானிக்கப்படும். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மகள்கள் சொத்தை அடையும்போது, அதை எஞ்சுநர் உரிமையோடு பெறுவார்கள். என்றாலும் அவர்கள் தம்முள் சொத்தைப் பிரித்துக் கொண்டு வாழத் தடையில்லை. மராட்டிய மாநிலத்தைப் பொறுத்த வரையில் சொத்தை அடையும் மகளுக்கு முழு உரிமை உண்டு. எனவே, மகள் இறந்ததும் சொத்து அவளுடைய வாரிசுகளுக்கே செல்லும்; அவளுடைய தந்தையின் வாரிசுகளுக்கு அல்ல.

மகள் கற்புநெறி தவறியவளாக இருப்பது தந்தையின் சொத்தை அடையத் தடையாகாது. ஆனால், திருமணமாகிக் கற்புடன் வாழும் மகளுக்கும், மணமாகாது விலைமகளாக வாழ்ந்து கொண்டிருக்கும் மகளுக்கும் போட்டி ஏற்பட்டால், முன்னவளே சொத்தைப் பெற உரிமை உள்ளவளாவாள். ஏனென்றால், விலைமகள் திருமணமானவளுமல்லள்; குலப்பெண்ணுமல்லள்; கன்னியுமல்லள். முறையிலா மணத்தில் பிறந்த மகளுக்குத் தந்தையின் சொத்தில் எந்த உரிமையும் கிடையாது.

6. மகள் வழிப் பேரன் : மகள் வழிப் பேரன் உண்மையில் ஒரு பின்ன கோத்திர சபிண்டாவானாலும், இந்துக் குடும்ப அமைப்பில்

[6] Manki *Vs* Kundan 47 A 403. Totawa *Vs* Basava 23 B 229.

அவனுக்குள்ள முக்கியத்துவத்தால் வாரிசு வரிசையில் அவன் ஆறுவது இடத்தைப் பெறுகிறுன். ஒருவனுடைய எல்லா மகள் களும் இறந்த பின்னர்தான் மகள்வழிப் பேரன் சொத்தை அடைய முடியும். மகள் வழிப் பேரனின் சொத்துரிமை முழுமையானது. (மகளிடம் சொத்து வரும்போது அது வரையுரிமையாகும்; எஞ்சுநர் உரிமைப்படி சொத்து செல்லும்.) அவனுடைய மரணத் திற்குப் பின் சொத்து அவனுடைய வாரிசுகளுக்குச் செல்லும். மகள்களுக்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மகன்கள் இருந்தால், அவர்கள் சொத்தைப் பொதுநிலச் சொத்துரிமையுடன் அனுபவிப்பார்கள். மகள்வழிப் பேரனின் வாரிசுரிமை எதிர்நோக்கு இறங்குரிமை (Spes successionis) யாகும். ஏனென்றால், அவ னுடைய தாய் அல்லது சின்னம்மா உயிரோடு இருக்கும்போது அவன் இறந்துவிட்டால், அவனுடைய மகன் வாரிசுரிமை கொண்டாட முடியாது.

7. தாய்: மகள் வழிப் பேரனும் இல்லை என்றுல் அடுத்த வாரிசு தாய். ஒரு விதவையைப் போல, மகளைப் போல தாயாரின் உரிமையும் வரையுரிமையாகும். தாய் என்பதில் தத்து எடுத்த தாயும் அடங்குவாள். ஆனால் மாற்றுந்தாய்க்கு இதில் இடமில்லை.[7] மகனின் சொத்தை அடைவதற்குத் தாயாருக்குள்ள உரிமை மறுமணம் புரிந்து கொள்வதாலோ அல்லது கற்புநெறி தவறி விடுவதாலோ போய்விடாது. அதுமட்டுமன்று; முறையிலா மணத் தில் பிறந்த மகனுடைய சொத்தையும் தாயார் அடைய முடியும். மயுகச் சட்டப்படி (Mayukha) தந்தைக்குத்தான் தாயைவிட முதல் இடம். வரிசையில் தந்தைக்குப் பின்தான் தாய் வருவாள். மேலும், அதில் மாற்றுந்தாய்க்கும் வாரிசுரிமை உண்டு.

8. தந்தை: தாயாருக்கு அடுத்த இடம் வாரிசுப் பட்டியலில் தந்தைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தந்தை என்பதில் தத்து எடுத்த தந்தையும் அடங்குவார். ஆனால், மாற்றுந் தந்தைக்கு வாரிசாக இருக்கும் உரிமை கிடையாது. தாயபாகத்திலும், மயுக முறையிலும் தந்தைதான் வாரிசு வரிசைப் பட்டியலில் முதல் இடம் பெறுகிறுர். சூத்திரர்கள் மத்தியில் முறையிலா மணத்தில் பிறந்த மகனின் சொத்தை அவனுடைய தந்தையாகக் கருதப்படு பவர் அடையலாம்.

9. சகோதரர்கள்: தந்தைக்கு அடுத்து வருபவர்கள் சகோ தரர்கள். சகோதரர்களுள் அரைஇரத்தச் சகோதரனை விட முழு

[7] Collector of Madura *Vs* Moottoo Ramalinga 12 M.I.A. 397.
Navaneethakrishna *Vs* Collector of Tinnevelly 69 M.L.J. 632.

இரத்தச் சகோதரனுக்குத்தான் முதல் இடம். சகோதரர்கள் சொத்தை பொதுநிலச் சொத்துரிமையாக (Tenancy in Common) அடைவார்கள். (பங்கு பிரிக்காமல் பொதுவாக அனுபவித்து வரு வார்கள்.) கூட்டுக் குடும்பத்தில் பாகப் பிரிவினை செய்துகொண்டு போன சகோதரனை விட்டுவிட்டு, பாகப்பிரிவினை செய்துகொள் ளாத சகோதரனே சொத்தை அடைவான். ஆனால், பாகப்பிரிவினை செய்துகொள்ளாத அரை இரத்தச் சகோதரனுடன் பாகப்பிரிவினை செய்துகொண்ட முழு இரத்தச் சகோதரன் சொத்தைச் சமமாக அடைவான். ஒரு சகோதரன் இறந்துவிட்டால் அவனுடைய மகன்கள் பிற பெரியப்பா சிற்றப்பாவுடன் பிரதிநிதித்துவ முறையில் உரிமை இறக்கம் பெறமுடியாது.[8] ஆனால், மயுக முறை யில் சகோதரனும், இறந்துவிட்ட சகோதரனின் மகனும் ஒன்றாகச் சொத்தை அடைவார்கள்.

10 சகோதரனின் மகன் : சகோதரனின் மகன்களுக்குள்ளும் முழு இரத்தத்தினருக்கே முதல் இடம் உண்டு. மகன், பேரன் கொள்ளுப்பேரன் ஆகியோருக்கு மட்டுமே கிளை விகிதப்படி (Per stripes) சொத்தைப் பெறும் விதி உரியதாகும். எனவே, சகோதரனின் மகன்கள் தலைவிகிதப்படி சொத்தைப் பெறுவார்கள்.

11. சகோதரனின் மகனுடைய மகன் : சகோதரனின் மகன் வரை வாரிசுகளை நிர்ணயிப்பதில் எந்தச் சிரமமும் இருக்கவில்லை. அதற்குப் பிறகே சிரமம் ஏற்பட்டது. ஏனென்றால், தர்ம சாஸ் திரங்களில் சகோதரனின் மகனுக்குப் பிறகு சொத்தை அடைவது யார் என்பது திட்டவட்டமாகச் சொல்லப்படவில்லை. சகோதர னின் மகனுக்குப் பின்னால் கோத்திரஜர்கள், சொத்தை அடை வார்கள் என்று மிதாக்ஷரத்தில் கூறப்பட்டுள்ளது. தந்தை வழிப் பாட்டி, சபிண்டாக்கள், சமநோதகாக்கள் அனைவருமே கோத்தி ரஜர்கள்தாம். எனவே, அடுத்த வாரிசு யார் என்பதில் சிக்கல் எழுந்தது. சகோதரனின் மகனுக்குப்பின் தந்தைவழிப் பாட்டி சொத்தை அடைவதா அல்லது மூன்று தலைமுறை வழித் தோன்றல் கள் அல்லது 6 தலைமுறை வழித்தோன்றல்கள்வரைப் பார்த்து விட்டு அவள் சொத்தை அடைவதா என்பது முக்கிய பிரச்சினை யாக இருந்தது. சென்னை உயர்நீதி மன்றம் ஒரு வழக்கில்[9] ஏற் கெனவே இன்னொரு வழக்கில்[10] எடுத்த முடிவை ஒட்டி, சகோதர னின் மகன் என்ற சொல்லில் சகோதரனின் பிறவழித்தோன்றல்கள் அடங்கவில்லை; எனவே, சகோதரனின் மகனுக்குப் பின்னர்

[8] Chinnasamy *Vs* Ponna Goundan 1956 M.L.J. (2) 567.

[9] Chinnaswamy *Vs* Kunju 35 M. 152.

[10] Suraya *Vs* Lakshminarasamma 5 M 291.

தந்தை வழிப் பாட்டியே உரிமையுள்ளவள் என்று தீர்ப்புக் கூறியது. ஆனால், டாக்டர் சர்வாதிகாரி (Dr. Sarvadhikari) 'மகன்' அல்லது 'புத்திர' என்ற சொல்லில் சகோதரன் வழிப் பேரனும் அடங்குவான்; எனவே, அவன்வரைப் பார்த்துவிட்டுத் தான் செல்ல வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்தார். இக் கருத்தைப் பிரிவிகவுன்சிலும்[11] ஏற்றுக் கொண்டது. எனவே, சகோதரனுடைய மகனின் மகனுக்குப் பிறகே தந்தை வழிப் பாட்டி உரிமை பெறுவாள். அவளுக்குப் பிறகு தந்தை வழிப் பாட்டன் என்று கிளைவழியில் வாரிசுகள் நிர்ணயிக்கப்படுவார்கள்.

சட்டவழி வாரிசுகள் (Statutory Heirs)

1929ஆம் ஆண்டு, அமலுக்குவந்த 'மரபு முறை இறங்குரிமை இந்துச் சட்டம்' (திருத்தம்) (1929ஆம் ஆண்டின் 2-வது சட்டம்) (The Hindu Law of Inheritance (Amendment) (Act II of 1929) சபிண்டாக்களின் வாரிசுப் பட்டியலில் மேலும் நான்கு பேர்களைச் சேர்க்க வகைசெய்தது. மகன் வழிப் பேத்தி, மகள் வழிப் பேத்தி, சகோதரி சகோதரியின் மகன் ஆகியோர் இச் சட்டத்தால் வாரிசுரிமை பெற்றனர். இவர்கள் முறைப்படி தந்தை வழிப் பாட்டனுக்குப் பின்னும் தந்தையின் சகோதரனுக்கு முன்னும் வரிசையில் இடம் பெறுவார்கள். பின்னர், 1937-ல் கொண்டுவரப்பட்ட 'இந்துப் பெண்கள் சொத்துரிமைச் சட்டம்' (Hindu Women's Rights to Property Act) மேலும் இரண்டு பேர்களை வாரிசுப் பட்டியலில் சேர்த்தது. முன்னதாக இறந்து விட்ட மகனின் விதவை, முன்னதாக இறந்துவிட்ட மகன்வழி முன்னதாக இறந்துவிட்ட பேரனின் விதவை ஆகிய இருவரும் தான் அச் சட்டத்தால் புதிதாக அறிவிக்கப்பட்ட வாரிசுகள். இந்த இரு விதவைகளும் கொடிவழி முன்னவரின் மகன்களோடும் விதவைகளோடும் சொத்தை அடைவார்கள்.

சமநோதகாக்கள்

கோத்ரஜ சபிண்டர்களுக்குப் பிறகு சமநோதகாக்கள் வாரிசு உரிமை உடையவர்கள். ஒருவனுடைய சமநோதகாக்கள் மொத்தம் 147பேர். அவர்கள் யார் யார் என்ற விவரம் கீழே தரப் பட்டுள்ளது.

1. ஆண் வழியில் 7 முதல் 13 தலைமுறை வரை உள்ள ஆண் இறங்குமுறை உறவினர்கள் 7

[11] Buddha Singh *Vs* Laltu (1915) 42 I.A. 208. AIR 1915 P.C. 70.

2.	ஆண் வழியில் 7 முதல் 13 தலைமுறை வரை உள்ள ஆண் ஏறுமுறை உறவினர்கள்	7
3.	7 முதல் 13 தலைமுறை வரை உள்ள ஒவ்வோர் ஆண் ஏறுமுறை உறவினரின் 6 தலைமுறை வரை உள்ள ஆண் இறங்குமுறை உறவினர்கள்	$6 \times 7 = 42$
4.	எண் 2ல் சொல்லப்பட்டிருப்பவர்களின் கிளைவழியில் 13 தலைமுறைவரை உள்ள ஆண் இறங்குமுறை உறவினர்கள்கள்	$7 \times 13 = 91$
	மொத்தம்	147

இதில் சொல்லப்பட்டிருக்கும் வாரிசுகளில் பலர் வாரிசுப் பிரச்சினை எழும் காலத்தில் உயிரோடு இருப்பது சற்றும் சாத்தியமன்று. என்றாலும், கணக்கிடுவதற்காகச் சொல்லப்பட்டுள்ளது. இவர்கள் மத்தியில் உரிமை இறக்கம் ஏற்படும்போது எட்ட வழியினரைவிடக் கிட்ட வழியினரே உரிமை பெறுவர். அதைப் போல உறவு முறையில் எட்ட உறவு முறையினரைவிடக் கிட்ட உறவு முறையினரே உரிமை பெறுவர்.

பந்துக்கள் (Bandhus)

பந்துக்கள் என்பவர்கள் கொடிவழி முன்னவருக்குப் பெண்கள் வழியாக உறவாவார்கள். இந்தப் பந்துக்கள் நேரடியாக, அல்லது தந்தை அல்லது தாய் வழியிலோ உள்ள மூதாதையரின் மூலமாக ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பெண்கள் வழியாகக் கொடிவழி முன்னவருக்கு உறவாவார்கள். இவர்கள் பெண்வழி உறவாதலால் சபிண்டர்களுக்கும், சமநோதகர்க்களுக்கும் பிறகே வாரிசுப் பட்டியலில் இடம் பெறுவார்கள்.

பந்துக்களில் மூன்று பிரிவினர் உண்டு.

1. **ஆத்ம பந்துக்கள்**

   (அ) தந்தையின் சகோதரி மகன்.
   (ஆ) தாயின் சகோதரி மகன்.
   (இ) தாயின் சகோதரர் மகன்.

2. **பித்ரு பந்துக்கள்**

   (அ) தந்தைவழிப் பாட்டனின் சகோதரி மகன்.
   (ஆ) தந்தைவழிப் பாட்டியின் சகோதரி மகன்.
   (இ) தந்தைவழிப் பாட்டியின் சகோதரர் மகன்.

3. மாத்ரு பந்துக்கள்

(அ) தாய்வழிப் பாட்டனின் சகோதரி மகன்.

(ஆ) தாய்வழிப் பாட்டியின் சகோதரி மகன்.

(இ) தாய்வழிப் பாட்டியின் சகோதரர் மகன்.

மேலே கொடுக்கப்பட்டிருக்கும் பந்துக்களின் பட்டியல் விரிவானதல்ல. சில உறவுகளைச் சுலபத்தில் புரிந்து கொள்வதற்காகக் காட்டப்பட்டிருக்கும் மாதிரிகளே. திருமணத்தில் சபிண்ட உறவு எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறதோ அதே முறையைக் கையாண்டு இங்கு இருவரும் ஒருவருக்கொருவர் பந்துவா என்பதைப் பார்க்க வேண்டும்.

வாரிசு வரிசையில் முதலில் வருபவர்கள் ஆத்ம பந்துக்கள்; இரண்டாவது வருபவர்கள் பித்ரு பந்துக்கள்; மூன்றாவது வருவது மாத்ரு பந்துக்கள். பந்துக்கள் மத்தியில் இரத்த உறவின் நெருக்கத்தைக் கொண்டுதான் வாரிசை நிர்ணயிக்க வேண்டும். எட்ட வழியினரைவிடக் கிட்ட வழியினரே முதலில் உரிமை பெறுவார். இரத்த உறவின் நெருக்கத்தை நிர்ணயிப்பதில் சிக்கல் ஏற்பட்டால், ஆன்மிகச் சடங்கு செய்யப் பாத்தியதை உடையவர் யார் என்பதைக் கண்டுபிடித்து, வரிசையை முடிவு செய்ய வேண்டும். அரை இரத்தப் பந்துவைவிட முழு இரத்தப் பந்துவுக்கே முதல் இடம். ஒரே தலைமுறையில் பந்துக்கள் இருந்தால், ஆண் வழியில் வந்த பந்து பெண் வழியில் வந்த பந்துவை விட முதலில் உரிமை பெறுவார். இரண்டு பந்துக்களுக்குள் எல்லாத் தகுதிகளும் சமமாக இருந்தால், யாருடைய உறவு வழியில் பெண்கள் குறைவோ அவனுக்கே முதல் உரிமை கிடைக்கும். எப்போதும் பெண் பந்துவைவிட ஆண் பந்துவுக்கே உரிமை உண்டு.

தாயபாகத்தில் உரிமை இறக்கம்

தாய பாகத்தில் இறந்தவனின் ஆன்மிக நலனுக்குச் சடங்குகள் செய்யப் பாத்தியதை ஒருவனுக்கு உள்ளதைப் பொறுத்தே வாரிசு உரிமைத் தீர்மானிக்கப்படுகிறது. என்றாலும், ஆன்மிகச் சடங்கு என்ற கோட்பாட்டை அமல் செய்ய முடியாத நிலைமைகளில் உறவின் நெருக்கம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறது. தாயபாகத்தில் வாரிசுகள் மூன்று வகையினர். சபிண்டர்கள் சகுலியர்கள், சமனோதகாக்கள் ஆகியோர் அம்மூன்று வகையினர். 'பார்வண சிராத்தம்' என்னும் சடங்கு செய்ய ஒருவருக்குள்ள உறவின் உரிமையைப் பொறுத்தே இப் பிரிவுகள் தோன்றின. வாரிசுப்பட்டியலில் சபிண்டர்கள் முதலிலும், சகுலியர்கள்

இரண்டாவதும், சமநோதகாகாக்கள் மூன்றுவதுமாகவும் இடம் பெறுவார்கள்.

தாயபாக உரிமை இறக்கத்தில் கீழ்க்காணும் கோட்பாடுகள் பின்பற்றப்படும். இறந்தவனுக்குப் பிண்டத்தைக் (முழு உணவு உருண்டை) கொடுப்பவர்கள், அவனிடமிருந்து பெறுபவர்களைவிட முதல் உரிமை பெறுவார்கள். அதாவது மகன், பேரன், கொள்ளுப் பேரன் ஆகியோர் தந்தை, பாட்டன், கொள்ளுப்பாட்டன் ஆகியோரைவிட முதல் உரிமை பெறுவார்கள். தந்தைவழி மூதாதையர், தாய்வழி மூதாதையர் ஆகிய இருவழி மூதாதையருக்கும் 'படைக்கும்' (சாமிக்குப் படைத்தல் போல்) உரிமை பெற்றவர்கள், தந்தைவழி மூதாதையருக்கு மட்டும் படைக்கும் உரிமை பெற்றவர்களைவிட முதல் உரிமை பெறுவார்கள். அதாவது அரை இரத்தச் சகோதரனைவிட முழு இரத்தச் சகோதரனின் உரிமை முதல் உரிமை. தாய்வழி மூதாதையருக்குப் படைக்கும் உரிமை பெற்றவர்களைவிடத் தந்தைவழி மூதாதையருக்குப் படைக்கும் உரிமை பெற்றவர்கள் முதல் உரிமை பெறுவார்கள். படைப்பில் அதிக எண்ணிக்கையில் உணவு உருண்டை படைக்க உரிமை உள்ளவர்கள் குறைந்த எண்ணிக்கையில் உணவு உருண்டை படைக்க உரிமை உள்ளவர்களைவிட முதல் உரிமை பெறுவார்கள். இரண்டு பேர் சம அளவில் உணவு உருண்டை படைப்பவர்களாக இருந்தால், அவர்களுள் எட்ட மூதாதையருக்குப் படைப்பவரை விடக் கிட்ட மூதாதையருக்குப் படைப்பவர் முதல்உரிமை பெறுவார்.

பகுதி ஆ—இந்து உரிமை இறக்கச் சட்டம், 1956.
(The Hindu Succession Act, 1956)

இந்து உரிமை இறக்கச் சட்டம் 1956ஆம் ஆண்டு ஜூன் மாதம் 17ஆம் தேதி அமலுக்கு வந்தது. இந்துக்களின் இன முறைச் சட்டத்தில் நேர்மை நெறிக்கும், சட்ட இயலுக்கும் ஏற்பப் பல்வேறு சீர்திருத்தங்கள் செய்ய ஆட்சி மன்றம் எடுத்துக் கொண்ட முயற்சியின் விளைவுகளில் இச் சட்டமும் ஒன்று. ஏற்கெனவே உள்ள சட்டங்களைத் திருத்தித் தொகுத்து ஆட்சி மன்றம் இச் சட்டத்தை இயற்றியிருக்கிறது.

உரிமை இறக்கத்தில் இப் புதிய சட்டம் உருவாக்கியிருக்கும். சில மாறுதல்கள் மகத்தானவை. இதற்கு முன்பிருந்த இந்துச் சட்டத்தில் பெண்ணுக்குக் கொடுக்கப்பட்ட சொத்துரிமை வரையுரிமையாகவே இருந்தது. இப் புதிய சட்டம் வரையுரிமையை ஒழித்து விட்டு முழு உரிமையைத் தந்திருக்கிறது. இப் புதிய சட்டத்தினால் மேலும் பல பெண்கள் வாரிசுரிமை பெறுகிறார்கள்.

விதவை, தாய், மகள் ஆகியோருடைய நிலை ஒரு மகனுடைய நிலைக்குச் சமமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இன்னொரு முக்கிய மாறுதலும் இச் சட்டத்தால் நேர்ந்திருக்கிறது. பல்வேறு உறவு முறையினரும் ஒரே சமயத்தில் சொத்தை அடைவதற்கு (அவர்கள் பெண்களாக இருந்தாலும்) வகை செய்யப்பட்டிருக்கிறது. எடுத்துக்காட்டாக மகள், தாய், விதவை, மகன் ஆகியோர் ஒருவன் இறந்த பின்னர் ஒரே சமயத்தில் சொத்தை அடைய முடியும். மொத்தத்தில் இச் சட்டம் பெண்களின் நிலையை வெகுவாக உயர்த்தியிருக்கிறது என்று சொல்லலாம். முதல்நிலை வாரிசுகளாக அறிவிக்கப்பட்டிருக்கும் பன்னிரண்டு பேர்களில் எட்டுப்பேர் பெண்களாக இருப்பது கவனிக்கத் தக்கது. புதியனவற்றை எவ்வாறு சட்டம் புகுத்தியுள்ளதோ அவ்வாறே பழையனவற்றையும் கழித்துள்ளது. வாரிசுகளை வரிசைப்படுத்துவதில் ஒருவனுக்கு ஆன்மிகச் சடங்கு செய்ய இருக்கும் உரிமை பழைய சட்டத்தில் பிரதான இடம் வகித்தது. அந்த உரிமைக்கு இச் சட்டம் விடை கொடுத்து அனுப்பிவிட்டது. சபிண்டர், சமனோதகாக்கள், பந்துக்கள் போன்ற பிரிவுகளை வெறும் சட்ட வரலாற்றுச் செய்தியாக்கி விட்டது. கூட்டுக் குடும்பத்தின் தலையாய அம்சமாக விளங்கிய எஞ்சுநர் உரிமை என்னும் கோட்பாடு, இன்று பலவீனப்பட்டுப் பெயரளவில் இருந்து கொண்டு வருகிறது. உத்தியோகம் பார்க்கும் மத்தியதர வர்க்கமும், தொழிலாளர் வர்க்கமும் பல்கிப் பெருகும் இந் நாளில் அந் நாளைய கண்ணோட்டத்தில் கூட்டுக் குடும்பம் இருப்பது என்பது சற்றும் இயலாதது. பெண்களுக்குப் புதிய உரிமைகள் தந்த இச் சட்டம் சில உரிமைகளைப் பறித்துக் கொண்டும் இருக்கிறது. பெண்களுடைய சொத்தை அடைவதில் பெண்களுக்குக் கொடுக்கப்பட்ட முதல் இடம் இப்போது சட்டத்தால் போக்கப்பட்டு விட்டது.

பங்குரிமை அமைப்பே இப்போது மறைந்து விட்டதால் கூட்டுக் குடும்பத்தில் பிறப்பினாலேயே ஒருவனுக்கு ஏற்படும் உரிமையும் போய்விட்டது. ஒரு விதவை மறுமணம் புரிந்து கொள்வதும், மதம் மாறுவதும் கணவனின் சொத்தை அடைய முன்பு ஒரு தகுதியின்மையாக இருந்தது. அத் தகுதியின்மை இப்போது நீக்கப்பட்டு விட்டது. ஒரு விதவையானவள் கணவன் இறக்கும் காலத்தில் கற்புநெறி தவறியவளாக இருப்பது அவனது சொத்தை அடைய ஒரு தகுதியின்மை என்றிருந்த நிலையும் இப்போது அகன்றுவிட்டது. முன்பு பங்குரிமையருக்கு உயில் எழுதும் உரிமை கிடையாது. ஆனால், இப்போது அந்த உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், என்ன காரணத்தினாலோ கொடை கொடுக்கும் உரிமை வழங்கப்படவில்லை. முறையிலா

மணத்தில் பிறந்தவன், தன் தந்தை சூத்திரனாக இருந்தால் அவருடைய சொத்துக்குப் பாத்தியதை உடையவன் என்பது பழைய சட்டம். புதிய சட்டத்தில் இந்தப் பாத்தியதை அங்கீகரிக்கப்படவில்லை. ஆனால், இப்போதும் அவன் தன் தாயாரின் சொத்தை அடையத் தடை கிடையாது. சொத்தை அடைவதில் திருமணமான மகள், திருமணமாகாத மகள், வசதியுள்ள மகள், வசதியற்ற மகள் என்று காட்டப்பட்ட பேதங்கள் ஒழிக்கப்பட்டு விட்டன.

முதல் மூன்று பிரிவுகள்

இச் சட்டத்தின் முதல் பிரிவு, இச் சட்டத்தின் பெயரையும் அது வழங்கப்படும் நிலப்பரப்பையும் கூறுகிறது. இரண்டாவது பிரிவில், இந்து என்பவன் எவன் என்பது கூறப்பட்டிருக்கிறது. (விரிவான விளக்கம் இந்துத் திருமணச் சட்டம் 1955-ல் கூறப்பட்டுள்ளது.) மூன்றாவது பிரிவில், இச் சட்டத்தில் கையாளப்பட்டிருக்கும் சில சொற்களுக்கு விளக்கங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

தந்தை வழியர் அல்லது தாயாதி (Agnate)

இரண்டு பேர் (ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி) இரத்த சம்பந்தத்தாலோ அல்லது தத்து எடுப்பாலோ முழுவதும் ஆண்கள் வழியாக உறவு கொண்டிருந்தால் ஒருவர் இன்னொருவரின் தாயாதி ஆவார். இதனால் மகன்வழிப் பேரன் தந்தைவழிப் பாட்டனுக்குத் தாயாதியாவார். சகோதரனின் மகன்கள் ஒருவருக்கொருவர் தாயாதியாவார்கள். அதாவது தாயாதி உறவில் இடையே பெண்கள் இணைப்பாக வரக்கூடாது. தத்து எடுக்கப்பட்ட மகனும் சொந்த மகன் போலவே கருதப்படுவான்.

அலியசந்தானச் சட்டம் (Aliyasantana Law)

இந்தச் சட்டம் இயற்றப்படவில்லை என்றால் 1949ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சென்னை அலிய சந்தானச் சட்டம் அல்லது வழக்க வழி அலிய சந்தானச் சட்டம் ஆகியவை யார் யாரைக் கட்டுப்படுத்துமோ அவர்களுக்கு உரிய சட்டம் அலிய சந்தானச்சட்டம். அலிய சந்தான வழக்கவழிச் சட்டம் (Customary Law) மாற்றப்பட்டு, திருத்தப்பட்டு 1949ஆம் ஆண்டு சென்னை அலிய சந்தானச் சட்டமாக உருவெடுத்தது. என்றாலும், அச் சட்டத்திற்கு அப்பாலும் வழக்கவழி அலிய சந்தானச் சட்டம் இருந்தது. மேலே சொன்ன இரண்டையுமே இந்தச் சட்டத்தின் 17ஆவது பிரிவு ஒதுக்கிவிட்டது. 17ஆவது பிரிவால் என்ன

மாறுதல்கள் திருத்தங்கள் நேர்ந்துள்ளன என்பதை 17ஆவது பிரிவிற்குரிய விளக்கத்தில் கூறப்பட்டுள்ளது. அலிய சந்தானச் சட்டம் மலபார் பகுதியில் வாழும் இந்துக்களுக்கு உரியது. இதில் உரிமை இறக்கம் பெண்கள் வழியாக ஏற்படும் உறவின் அடிப் படையில் இருக்கும்.

உறவு வழியர் (Cognate)

இரண்டுபேர் இரத்த சம்பந்தத்தால் அல்லது தத்து எடுப்பால் முழுவதும் ஆண்கள் வழி அல்லாத உறவாக இருந்தால், ஒருவர் இன்னொருவரின் உறவு வழியர் ஆவார். உறவு வழியர் தாயாதி யிடமிருந்து ஒரு வகையில் மாறுபட்டவர். தாயாதி முழுவதும் ஆண் வழியில் வரும் உறவாகும். ஆனால், உறவு வழியர் அப்படி அல்லர். இதில் இடையில் பெண்கள் வரலாம். அதாவது ஆண்கள், பெண்கள் இருவருமே இடையில் வரலாம். எனவே, மகள்வழிப் பேரன், சகோதரியின் மகன் ஆகியோர் உறவு வழியர் ஆவர்.

வழக்கம், வழக்காறு (Custom and Usage)

வழக்கம், வழக்காறு என்பவை தத்தம் பகுதியில் குடியினர், வகுப்பினர், குழுவினர், குடும்பத்தார் ஆகியோரிடையே தொடர்ந்து, ஒரே மாதிரியாக, நெடுங்காலம் பின்பற்றப்பட்டு வரும் விதி என்று அங்கீகாரம் பெற்றிருக்க வேண்டும். அந்த விதி நிச்சயமானதாகவும், பொது நலனுக்கு எதிரானதாக இல்லாமலும் இருக்க வேண்டும். ஒரு வழக்கம் ஒரு குடும்பத்துக்கே உரிய தென்றால், அக் குடும்பம் அவ் வழக்கத்தைப் பின்பற்றாமல் விட்டிருக்கக்கூடாது.

முழு இரத்த, அரை இரத்த, தாய்வழி இரத்த உறவு

ஒரே தாரத்திற்குப் பிறந்தவர்கள் முழு இரத்தச் (Full Blood) சகோதரர்கள் ஆவார்கள். அதே நபரின் இரண்டாவது தாரத் திற்குப் பிறந்தவர்கள் முதல் தாரத்துச் சகோதரர்களுக்கு அரை இரத்தச் (Half Blood) சகோதரர் ஆவார்கள். இந்த முழு இரத்த உறவு, அரை இரத்த உறவு என்பவை முறை மணப்பிறப்புக் குழந்தைகளுக்கே உரியவை. ஒருவனின் வைப்பாட்டி பிள்ளை முறைமணப் பிறப்பினரோடு இந்த உறவைக் கொண்டாட முடியாது. ஒருத்தி முதலில் ஒருவனை மணந்து கொண்டு பெற்ற குழந்தைகளுக்கும், பிறகு இன்னொருவனை மணந்து கொண்டு பெற்ற குழந்தைகளுக்கும் இடையே உள்ள உறவு தாய்வழி இரத்த உறவாகும் (Uterine Blood).

வாரிசு (Heir)

இந்தச் சட்டப்படி உயில் எழுதாமல் இறந்தவனின் சொத்துக்கு வாரிசுரிமை உடைய நபர், அவர் பெண்ணாயிருந்தாலும் சரி ஆணாயிருந்தாலும் சரி, வாரிசு எனப்படுவார். ஒருவன் உயில் எழுதி விட்டு இறந்தாலும், அவன் எழுதிய உயில் செல்லாததாகி விட்டால் உயில் எழுதாமலேயே இறந்துவிட்டவனாகக் கருதப்படுவான். உயில் பாதி செல்லக்கூடியதாகவும் பாதி செல்லத்தகாததாகவும் இருந்தால், செல்லத் தகாததற்கு உயில் இல்லாததாகக் கருதப்படும்.

உயில் எழுதாதிருத்தல் (Intestate)

ஒருவனோ அல்லது ஒருத்தியோ செயலாகக்கூடிய அளவில் உயில் எழுதித் தன் சொத்துகளைக் கொடுக்கவில்லை என்றால், உயில் எழுதாது இறந்து விட்டதாகப் பொருள். ஒருவன் உயில் எழுதிவிட்டதாலேயே அவன் உயில் எழுதிவிட்டு இறந்ததாக எண்ண வேண்டியதில்லை. எழுதிய உயில் செல்லக்கூடியதாக இருந்தால்தான், அவன் உயில் எழுதிவிட்டு இறந்ததாகக் கருதப்படும்.

மருமக்கள் தாயச் சட்டம்

மருமக்கள் தாய முறையில் ஒருவன் இறந்ததும் அவனுடைய சொத்துகள் அவனுடைய குழந்தைகளுக்குச் செல்லாது. மாறாக அவனுடைய சகோதரியின் குழந்தைகளுக்குச் செல்லும். அவனுடைய குழந்தைகள் தாயின் சகோதரனின் சொத்தை அடைவார்கள். சென்னை மருமக்கள் தாயச் சட்டம் 1932, திருவாங்கூர் நாயர் சட்டம், திருவாங்கூர் ஈழவர் சட்டம், திருவாங்கூர் நாஞ்சில் நாட்டு வேளாளர் சட்டம், திருவாங்கூர் சத்திரியச் சட்டம் திருவாங்கூர் கிருஷ்ணன் வகை மருமக்கள் தாயச் சட்டம், கொச்சி மருமக்கள் தாயச்சட்டம் அல்லது கொச்சின் நாயர் சட்டம் ஆகிய சட்டங்களால், இச் சட்டம் வராவிட்டால் யார்யார் ஆளப்பட்டிருப்பார்களோ அவர்களுடைய சட்டத்திற்கு மருமக்கள் தாயச் சட்டம் என்று பெயர். மேலும், திருவாங்கூர், கொச்சி அல்லது சென்னை மாநிலத்தை (பிரியாத சென்னை மாநிலம்) இருப்பிடமாகக் கொண்டு இருந்தவர்களுக்கும், இச் சட்டம் இயற்றப்படாதிருந்தால், எச் சட்டத்தால் ஆளப்பட்டிருப்பார்களோ அதுவும் மருமக்கள் தாயத்தில் அடங்கும்.

நம்பூதிரிச் சட்டம்

சென்னை நம்பூதிரிச் சட்டம் 1932, கொச்சி நம்பூதிரிச் சட்டம் அல்லது திருவாங்கூர் மலையாளப் பிராமணர் சட்டம் ஆகிய

சட்டங்களால், இச் சட்டம் வராவிட்டால் யார்யார் ஆளப்பட்டிருப் பார்களோ அவர்களுடைய சட்டத்திற்கு நம்பூதிரிச் சட்டம் என்று பெயர்.

உறவு

இச் சட்டத்தில் உறவு என்னும்போது இருவருக்கிடையே இருக்கும் முறையான உறவையே குறிக்கும். எனவே, முறையிலா மணத்தில் பிறந்தவனுக்கும் அவனுடைய தந்தை என்று கருதப் படுபவருக்குமிடையே 'உறவு' இருப்பதாக இச் சட்டப்படி கருத முடியாது. ஆனால், முறையிலா மணத்தில் பிறந்தவனுக்கு அவனுடைய தாய் உறவு ஆவாள். அவள் வழியாக அக் குழந்தை கள் தம்முள் உறவினர்; அக் குழந்தைகளின் முறையான வழித் தோன்றல்களும் தம்முள் உறவினர்.

விளைவுகள்

இச் சட்டம் வருவதற்கு முன்னால் இருந்த இந்துச் சட்ட நூல்கள், விதிகள், விளக்கங்கள் அல்லது அமலில் இருந்த சட்டத் தின் பகுதியாக விளங்கிய வழக்கம் அல்லது வழக்காறு ஆகியவை இச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ள விதிகளைப் பொறுத்த வரை செயலற்றுவிடும். இச் சட்டம் வருவதற்கு முன்னால் அமலில் இருந்த எந்தச் சட்டமும் இச் சட்டத்தில் வகைசெய்யப் பட்டுள்ள விதிகளுக்கு முரணாக இருக்கும் விஷயத்தில் செயலற்று விடும்.

இச் சட்டம் பல சகவாரிசுகளை உண்டாக்கி இருக்கிறது. பல சகவாரிசுகள் இருப்பதால், நிலம் எங்கே சிறுசிறு துண்டுகளாகி, பொருளாதார நோக்கில் பலன் அதிகம் தரமுடியாததாகி விடுமோ என்ற அச்சம் பலருக்கு இருந்தது. அதையும் இச் சட்டம் போக்கி விட்டது. அதாவது விவசாய நிலங்களைத் துண்டுதுண்டாகப் போடுவதைத் தடுக்கவோ, உச்ச வரம்பை நிர்ணயிப்பதற் காகவோ, எந்த மாநில அரசாங்கமாவது சட்டம் இயற்றி இருந் தால், அந்தச் சட்டம் இச் சட்டத்தால் பாதிக்கப்படமாட்டாது. ஏற்கெனவே உள்ள சட்டங்களை மட்டுமல்ல, இதற்குப் பின்னாலும் விவசாய நிலங்களைப் பொருளாதார நோக்கில் பயன் அதிகம் தர முடியாத துண்டுகளாக்குவதைத் தடுக்க வரும் சட்டங்களையும் இச் சட்டம் பாதிக்காது.

மகன், பேரன், கொள்ளுப்பேரன், ஆகியோர் முறையே தந்தை, பாட்டன், கொள்ளுப் பாட்டன் வாங்கிய நியாயமான

கடன்களை அடைக்கும் மதக்கடமை இச் சட்டத்தால் ரத்தாக வில்லை.[12]

உயில் இல்லாநிலையில் உரிமை இறக்கம் (Intestate Succession)

இச் சட்டத்தின் 5ஆவது பிரிவு இச் சட்டம் எந்தெந்தச் சொத்துகளுக்கு அமலாகாது என்று கூறுகிறது. 1954-ல் சிறப்புத் திருமணச் சட்டம் (Special Marriage Act) இயற்றப்பட்டது. அதிலுள்ள 21ஆவது பிரிவுப்படி, சிறப்புத் திருமணச் சட்டத்தின் கீழ்த் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு உரிமை இறக்கத்தைப் பொறுத்தவரையில், 'இந்திய உரிமை இறக்கச் சட்டம்' தான் (Indian Succession Act, 1925) அமலாகும். எனவே, சிறப்புத் திருமணச் சட்டத்தின்கீழ்த் திருமணம் செய்து கொண்டவர்களை இச் சட்டம் கட்டுப்படுத்தாது. இந்திய அரசாங்கத்துடன் அந் நாளைய சமஸ்தான அரசர்கள் சில உடன்படிக்கைகள் செய்து கொண்டிருந்தார்கள். அவர்களுடைய பிரிவினையாகாத சொத்துரிமை எப்போதும் தனி ஒருவனுக்கே செல்லும். இது சம்பந்தமாக இயற்றிய சில சட்டங்களும் உண்டு. இந்தச் சட்டம் அவ்வாறு உடன்படிக்கை அல்லது அப்போதிருந்த சட்டத்தின்படி தனியொருவன் வாரிசாகச் சொத்தை அடைவதைத் தடுக்காது. அத்தகைய சொத்துக்கு இச் சட்டம் அமலாகாது. மேலும், கொச்சி மகாராஜாவின் 29-6-1949 சாற்றுரையில் (Proclamation) கூறப்பட்டுள்ள சொத்துகளுக்கும் இச் சட்டம் அமலாகாது.

பங்குரிமைச் சொத்தில் உரிமை செல்லும் விதம்

இச் சட்டத்தின் ஆறுவது பிரிவில் ஒரு பங்குரிமையர் இறந்ததும், அவருடைய சொத்துரிமை எப்படிச் செல்லும் என்பது கூறப்பட்டுள்ளது. இந்தச் சட்டம் வந்ததற்குப் பிறகு, மிதாக்ஷரப் பங்குரிமைச் சொத்தில், இறக்கும்காலத்தில் உரிமையுள்ள ஒருவன் இறந்து போனால், சொத்திலுள்ள அவனுடைய உரிமை எஞ்சுநர் உரிமைப்படி உயிரோடு இருக்கும் பிற பங்குரிமையருக்குச் செல்லும். அதாவது இச் சட்டத்தில் கூறப்பட்டிருக்கும் விதிகளின்படி செல்லாது.

ஆனால், இறந்துபோன பங்குரிமையர் பின்னிணைப்புப்பட்டி (Schedule) (பின்னிணைப்புப்பட்டி இந்த அத்தியாயத்தின் இறுதியில் கொடுக்கப்பட்டிருக்கிறது.) முதல் வகுப்பில் சொல்லப்பட்டிருக்கும் பெண் உறவினரையோ அல்லது அதே வகுப்பில்

[12] Modi Nedubai *Vs* Mani bai 1962 GUJ. 68.

சொல்லப்பட்டிருக்கும் பெண் உறவினர் வழியாக உரிமை கொண்டாடும் ஆண்களையோ விட்டுவிட்டு இறந்திருந்தால், மிதாக்ஷரப் பங்குரிமையில் அவருக்கு இருக்கும் உரிமை உயில் எழுதியிருந்தால் அதன்படியும், உயில் எழுதாது இருந்தால் உயில் இல்லாத நிலையில் உரிமை இறக்கம் எவ்வாறு செல்லுமோ அவ்வாறும் செல்லும். அதாவது எஞ்சுநர் உரிமைப்படி செல்லாது; மாருக இச் சட்டப்படி செல்லும். மிதாக்ஷரப் பங்குரிமையர் இறப்பதற்கு முன்னர் பாகப்பிரிவினை ஏற்பட்டிருந்தால், அந்தப் பாகப்பிரிவினையில் அவனுக்கு என்ன பங்கு ஒதுக்கப்பட்டிருக்குமோ அதை அவனுடைய பங்காகக் கொள்ள வேண்டும். பங்குரிமையர் இறப்பதற்கு முன்பு ஒருவன் கூட்டுக் குடும்பத்தை விட்டுத் தனியாகப் போயிருந்தால் அவனோ அல்லது அவனுடைய வாரிசுகளோ பங்குரிமையர் உயில் எழுதாது செல்லும் காலத்தில் அவனுடைய உரிமையில் பங்கு கேட்க முடியாது.

இந்த ஆருவது பிரிவு மிக முக்கியமானது. இதில் முதலில் சொல்லப்படும் விஷயம் பங்குரிமையரின் சொத்து எஞ்சுநர் உரிமைப்படி செல்லும் என்பதாகும். இரண்டாவது சொல்லப்படுவது எஞ்சுநர் உரிமைக்குக் கூறப்படும் விலக்குகளாகும். மூன்ருவது சொல்லப்படும் விஷயம் பங்குரிமையரின் பங்கு என்ன என்பதாகும். இறுதியாகச் சொல்லப்படுவது பிரிந்துபோன ஒரு நபர் இறந்துபோன பங்குரிமையரின் சொத்தில் உரிமை கொண்டாட முடியாது என்பதாகும்.

இந்தச் சட்டம் வந்த பிறகும் ஒரு பங்குரிமையரின் சொத்துக்கு எஞ்சுநர் உரிமை அமலாகும் என்ருலும், சில நிலைமைகளில் அவ்வுரிமை அமலாகாது பின்னிணைப்புப்பட்டி முதல் வகுப்பில் சொல்லப்பட்டிருக்கும் பெண்களோ அல்லது அவர்கள் வழி உரிமை கொண்டாடும் ஆண்களோ இருந்தால், எஞ்சுநர் உரிமைப்படி சொத்து செல்லாது. மாருக உயில்வழி அல்லது அப்படி உயில் இல்லாவிட்டால், உயில் இல்லாத நிலையில் சொத்து இச் சட்டப்படி எவ்வாறு செல்லுமோ அவ்வாறு செல்லும். முன்பிருந்த சட்டத்தில் ஒரு பங்குரிமையருக்கு உயில் எழுதும் உரிமை வழங்கப்படவில்லை. ஆனல், இச் சட்டத்தில் எஞ்சுநர் உரிமை அமலாகாத நிலையில் பங்குரிமையர் உயில் எழுதலாம்.

ஆருவது பிரிவில் சொல்லப்பட்டிருப்பதை மேலும் தெளிவாகக் கூறுவதானல் மிதாக்ஷரப் பங்குரிமை அமைப்பில், ஒரு பங்குரிமையர் ஒரு மகனை மட்டும் விட்டுவிட்டு இறந்து விட்டால், எஞ்சுநர் உரிமை விதியே அமலாகும். அதைப் போலவே மகன்வழிப்

பேரனை மட்டுமோ அல்லது மகன்வழிக் கொள்ளுப்பேரனை மட்டுமோ விட்டுவிட்டு இறந்து விட்டாலும் எஞ்சுநர் உரிமை விதிதான் பொருந்தி வரும். ஆனால், மகளையோ, விதவையையோ, தாயாரையோ முன்னதாக இறந்துவிட்ட மகனின் மகளையோ அல்லது முன்னதாக இறந்துவிட்ட மகளுடைய மகனையோ முன்னதாக இறந்துவிட்ட மகளுடைய மகளையோ அல்லது முன்னதாக இறந்துவிட்ட மகனின் விதவையையோ அல்லது முன்னதாக இறந்துவிட்ட மகனுடைய முன்னதாக இறந்த மகனின் மகளையோ அல்லது முன்னதாக இறந்துவிட்ட மகனுடைய முன்னதாக இறந்த மகனின் விதவையையோ விட்டுவிட்டு ஒரு பங்குரிமையர் இறந்தால், உயில் எழுதிவைக்காவிட்டாலும், இச் சட்டத்தில் கூறப்பட்டிருக்கும் விதிகளின்படிதான் சொத்து செல்லும். ஒரு வழக்கில் ஒரு பங்குரிமையர் மகனையும், முன்னதாக இறந்துவிட்ட மகளுடைய மகனையும் விட்டுவிட்டு இறந்து போனார். இந்த இருவருமே ஒரே சமயத்தில் இறந்தவனின் வாரிசுகளாகச் சொத்தை அடையலாம் என்று அவ்வழக்கில் தீர்ப்புக் கூறப்பட்டது.[13]

உயில்வழி உரிமை இறக்கம் அல்லது உயில் இல்லாநிலை உரிமை இறக்கம் பற்றிக்கூறும் 6ஆவது பிரிவின் கட்டுவாசகம் (Proviso) கொடையாகவோ அல்லது வேறு வழியிலோ உயிருடன் இருக்கும் மற்றவர்களுக்கு மாற்றுக்கம் செய்வதைப்பற்றி எதுவும் சொல்லவில்லை என்பது கவனிக்கத் தக்கது. எனவே, கொடையும் பிற மாற்றுக்கங்களும் பழைய சட்ட விதிகளுக்கே உட்பட்டவையாகும். உயில் வழி அல்லாமல் ஒரு பங்குரிமையர் தன் சொத்தைக் கொடையாகக் கொடுத்தால், அது செல்லாது. பிரதிபலன் கருதி ஒரு பங்குரிமையர் தன் உரிமையை மாற்றுக்கம் செய்தால், இச் சட்டத்தின்படி பங்குரிமையரின் பங்கு மட்டுமே அதற்கு உட்படும். ஆனால், பங்குரிமை அமைப்பில் தந்தை அல்லது கூட்டுக் குடும்ப நிர்வாகி தன் பங்கு அளவு மட்டுமல்ல, மற்றவர்கள் பங்கையும் சேர்த்து மாற்றுக்கம் செய்யலாம். அப்படிச் செய்யப்படும் மாற்றுக்கம் நியாயமான காரணத்திற்காக இருக்கவேண்டும். முன் கடன் இருந்து அதை அடைக்க மாற்றுக்கம் செய்ய வேண்டும் என்றால், முன் கடன் ஒழுக்கக் குறைவான காரணத்திற்காகவோ அல்லது சட்ட விரோதமான காரணத்திற்காகவோ வாங்கப்பட்டிருக்கக் கூடாது. கூட்டுக் குடும்ப நிர்வாகி மாற்றுக்கம் செய்திருந்தால் மற்றப் பங்குரிமையர்கள் அதற்கு ஒப்புக் கொண்டிருக்க வேண்டும் அல்லது சட்ட காரணங்கள், குடும்ப

13 Ranganathan Chettiar *Vs* Annamalai Mudaliar 80 Mad. L.W. 258.

நன்மை இவற்றை முன்னிட்டு மாற்றுக்கம் நடைபெற்றிருக்க வேண்டும். தந்தைக்கும், கூட்டுக் குடும்ப நிர்வாகிக்கும் உள்ள இந்த உரிமை எந்த ஒரு தனிப் பங்குரிமையருக்கும் கிடையாது.

இந்த ஆருவது பிரிவு இந்தச் சட்டம் வந்ததற்குப் பின்னுல் இறக்கும் ஓர் இந்து ஆணினுடைய பங்குரிமைச் சொத்துக்கே பொருந்தி வரும். ஆகையால், 1937ஆம் ஆண்டு நிறைவேற்றப் பட்ட இந்துப் பெண்கள் சொத்துரிமைச் சட்டத்தின்கீழ் (Hindu Women's Rights to Property Act of 1939) ஒரு பங்குரிமையரின் சொத்து அவனுடைய விதவைக்குச் சென்றிருக்குமானுல், அச் சொத்து இச் சட்டத்தின் 14ஆவது பிரிவுப்படி விதவையின் முழுச் சொத்தாக மாறிவிடும். அவள் இறந்ததற்குப் பிறகு அச் சொத்து 15, 16 பிரிவுகளின்படி அவளுடைய வாரிசுகளுக்குச் செல்லுமே தவிர அவளுடைய கணவனின் வாரிசுகளுக்குச் செல்லாது.

வேறுசில சொத்துரிமைகள் செல்லும் விதம்

மிதாக்ஷரக் கூட்டுக் குடும்பத்தைப் போன்ற வேறுசில கூட்டுக் குடும்பங்கள் தென்மேற்கு இந்தியாவில் இருக்கின்றன. அவை தரவாடு, தாவழி, இலாட்டம், குதும்ப, கவறு ஆகியவை களாகும். கேரளாவில் மலபார்ப் பகுதியில் தரவாடு என்று அழைக்கப்படும் பெருங் குடும்பங்கள் இருக்கின்றன. இதில் பொது மூதாதையராக இருப்பவள் பெண். பெண்களும், அவர் களுடைய வழித்தோன்றல்களும், இறந்துவிட்ட பெண்ணினுடைய மகன்களும் உறுப்பினர் ஆவார்கள். தரவாடு என்ற அமைப்பில் பல கிளைகள் இருக்கலாம். அவை தாவழி எனப்படும். ஒரு பெண் அவளுடைய குழந்தைகள், பெண்ணின் வழிவரும் பிற வழித் தோன்றல்கள் அனைவரும் அடங்கியது தாவழி. தாவழியில் அடங்கியவர்கள் தம்முள் தனிச்சொத்தும் வைத் திருக்கலாம். தரவாட்டில் தாவழிக்குத் தனிச் சொத்து இருப்பதை மிதாக்ஷரப் பங்குரிமைக்குள் பங்குரிமை இருப்பதற்கு ஒப்பிடலாம். ஒரு பெண்ணுக்குத் திருமணமாகிவிடுவதால், அவள் தாயின் தரவாட்டிலிருந்து, கணவனின் தரவாட்டிற்குச் சென்றுவிட மாட்டாள். கேரளாவிலும் இன்னும் சில பகுதிகளிலும், மருமக்கள் தாயம், அலிய சந்தானம் என்னும் முறைகள் இருக்கின்றன. இரண்டும் பெண்கள வழியிலிருந்து உருவானவைதான் என்றுலும், இரண்டிற்குமிடையே சிறு வேறுபாடுகள் உண்டு. அலிய சந்தா னத்தில் குடும்பத்தின் மூத்த உறுப்பினர், அவர் பெண்ணுயிருந் தாலும் சரி, ஆணுயிருந்தாலும் சரி, குடும்ப நிர்வாகியாக இருப்பார். ஆனுல், மருமக்கள் தாயத்தில் மூத்த ஆண் உறுப்பினரே நிர்வாகி

யாக இருப்பார். அலிய சந்தானத்தில் மனைவி கணவனின் குடும்பத்தோடு இருப்பாள். ஆனால், மருமக்கள் தாயத்தில் தன்னுடைய தரவாட்டோடு இருப்பாள். அலிய சந்தான முறை அங்குள்ள பிராமணர்களுக்குக் கிடையாது. ஆனால், மருமக்கள் தாயமுறை எல்லா ஜாதியினருக்கும் உண்டு. அலிய சந்தானச் சட்டம் 1949ஆம் ஆண்டு இயற்றப்பட்ட 'சென்னை அலிய சந்தானச் சட்டத்'தால் மாற்றப்பட்டு, தொகுக்கப்பட்டு, பழைய சென்னை மாநிலத்தில் சில பகுதிகளில் உள்ள சிலருக்கு உரியதாயிற்று. பிற பகுதியிலுள்ள மற்றவர்களுக்கு வழக்க வழிச் சட்டமே தொடர்ந்து இருக்கலாயிற்று. குதும்ப, கவறு என்னும் முறைகள் தரவாடு, தாவழி போன்றவைகளாகும். அவை இந்தச் சட்டத்தால் (இந்து உரிமை இறக்கச் சட்டத்தால்) ரத்து செய்யப்பட்டுவிட்டன. நம்பூதிரிகள் என்பவர்கள் கேரளாவில் உள்ள பிராமணர்கள் ஆவார்கள். சென்னை நம்பூதிரிச் சட்டம் 1932, கொச்சி நம்பூதிரிச் சட்டம் 1918, திருவாங்கூர் மலையாளப் பிராமணர் சட்டம் ஆகியவை நம்பூதிரிகளுக்கு உரிய சட்டங்களாக இருந்தன. இலாட்டம் என்பதும் தரவாடு, தாவழி போன்றதே. மலபார்ப் பகுதியை ஆண்ட அந் நாளைய அரசர்களும் குறுநில மன்னர்களும் சில முக்கியமானவர்களுக்குக் கொடுத்த மானியத்தின் விளைவாக 'ஸ்தனம்' என்ற அமைப்பு ஏற்பட்டது. ஸ்தனம் உடையவர் ஸ்தனம்தார் என்று அழைக்கப்பட்டார்.

இச் சட்டத்தின் ஏழாவது பிரிவு, மேலே கூறப்பட்டவைகளில் சொத்துரிமை, இச் சட்டம் வந்ததற்குப் பின்னால் எப்படிச் செல்லும் என்பதைக் கூறுகிறது. இச் சட்டம் வராவிட்டால் எந்த ஓர் இந்துவுக்கு மருமக்கள் தாயச் சட்டம் அல்லது நம்பூதிரிச் சட்டம் அமலாகியிருக்குமோ அவன், இச் சட்டம் வந்ததற்குப் பிறகு இறந்தால், அப்படி அவன் அல்லது அவள் இறக்கும்போது, தரவாடு, தாவழி, இலாட்டம் இவற்றில் எதிலாவது சொத்துரிமை இருந்தால், அச் சொத்துரிமை இச் சட்டத்தில் கண்டவாறு உயில் வழியோ அல்லது உயில் இல்லா நிலையில் எப்படிச் செல்லுமோ அப்படிச் செல்லும். அதாவது மருமக்கள் தாயச் சட்டம் அல்லது நம்பூதிரிச் சட்டம் இவற்றின்படி அச் சொத்துரிமை செல்லாது. ஆனால், அவள் அல்லது அவன் இச் சட்டம் வருவதற்கு முன்னால் இறந்திருந்தால், இச் சட்டத்தின் விதிகள் கட்டுப்படுத்தாது. மேலும், அவன் அல்லது அவள் இறப்பதற்கு முன்பு பாகப்பிரிவினை தலைவிகிதப்படி ஏற்பட்டிருந்தால், ஒரு நபருக்கு அப் பாகப்பிரிவினையில் என்ன பங்கு கிடைத்திருக்குமோ அதைத் தரவாடு, தாவழி அல்லது இலாட்டத்தில் உள்ள பங்காகக் கொள்ளவேண்டும்.

இச் சட்டம் வராவிட்டால் எந்த ஓர் இந்துவுக்கு அலிய சந்தானச் சட்டம் அமலாகியிருக்குமோ அந்த நபர் இந்தச் சட்டம் வந்ததற்குப் பிறகு இறந்தால், அப்படி அவன் அல்லது அவள் இறக்கும்போது, குதும்ப அல்லது கவறு இதில் எதிலாவது சொத்துரிமை இருந்தால், அச் சொத்துரிமை இச் சட்டத்தில் கண்டவாறு உயில் வழியோ அல்லது உயில் இல்லா நிலையில் எப்படிச் செல்லுமோ அப்படியே செல்லும். அதாவது அலிய சந்தானச் சட்டத்தின்படி அச் சொத்துரிமை செல்லாது. மேலும், அவன் அல்லது அவள் இறப்பதற்கு முன்பு பாகப்பிரிவினை தலை விகிதப்படி ஏற்பட்டிருந்தால், அந்தப் பாகப்பிரிவினையில் என்ன பங்கு அவன் அல்லது அவள் பெற்றிருக்க முடியுமோ அதைக் குதும்ப அல்லது கவறு முறையில் உள்ள பங்காகக் கருத வேண்டும்.

7ஆவது பிரிவின் இறுதியில் 'ஸ்தனம்' என்னும் சொத்து இச் சட்டம் வந்ததற்குப் பின்னால் எப்படிச் செல்லும் என்பது கூறப் பட்டுள்ளது. ஒரு ஸ்தனம்தார் இறந்ததும் அவருடைய சொத்து, அவருடைய குடும்பத்தைச் சேர்ந்த அனைவராலும் பொதுநிலச் சொத்தாக அனுபவிக்கப்படும். ஸ்தனம்தாரின் குடும்பம் என்பதில் எல்லாக் கிளைவழிக் குடும்பமும் அடங்கும். இச் சட்டம் வந்த பிறகு ஸ்தனம்தார் இறந்தால், அவர் இறப்பதற்கு முன்பாகவே தலைவிகிதப்படி பாகப்பிரிவினை ஆகிவிட்டதாக எண்ணி, அவ ருடைய குடும்பத்தார் ஸ்தனச் சொத்தை அடைவார்கள். இவ்வாறு ஸ்தனம் உடைந்ததும் அச் சொத்தை அடைந்தவர்கள் தனிச் சொத்தாக வைத்துக் கொள்வார்கள். பின்னர் இச் சட்டத் தின்படி அச் சொத்துகள் அவர்களுடைய வாரிசுகளுக்குச் செல்லும்.

ஆண்கள் உரிமை இறக்கத்தில் பொதுவிதிகள்

உயில் எழுதாது ஓர் இந்து ஆண் இறந்துவிட்டால், அவனுடைய சொத்து எவ்வாறு செல்லும் என்பது 8ஆவது பிரிவில் கூறப்பட்டுள்ளது.

(அ) முதலில் அவனுடைய சொத்து பின்னிணைப்புப் பட்டி (Schedule) முதல் வகுப்பில் சொல்லப்பட்டிருக்கும் உற வினர்களுக்குச் செல்லும்.

(ஆ) முதல் வகுப்பில் சொல்லப்பட்டிருக்கும் வாரிசுகள் யாருமே இல்லை என்றால், இரண்டாவது வகுப்பில் சொல்லப்பட்டிருக்கும் உறவினர்களுக்குச் செல்லும்.

(இ) முதல் வகுப்பு, இரண்டாவது வகுப்பு இரண்டிலும் சொல்லப்பட்டிருக்கும் வாரிசுகள் யாருமே இல்லை என்றால் இறந்தவனின் தாயாதிகளுக்குச் (Agnates) செல்லும்.

(ஈ) தாயாதியும் இல்லை என்றால் இறந்தவனின் உறவு வழியருக்குச் செல்லும்.

எட்டாவது பிரிவு பழைய சட்டத்தில், அது மிதாக்ஷர முறையாயினும் சரி, தாயபாக முறையாயினும் சரி, பல அடிப்படை மாறுதல்களைச் செய்து, உறவின் நெருக்கம் பாசப் பிணைப்பு இவற்றின் அடிப்படையில் வாரிசுகளைத் திட்டவட்டமாக நிர்ணயித்திருக்கிறது. எட்டாவது பிரிவுப்படி வாரிசுகளை நான்கு வகையாகப் பிரிக்கலாம். (1) பின்னிணைப்புப் பட்டி முதல் வகுப்பு வாரிசுகள், (2) பின்னிணைப்புப்பட்டி இரண்டாம் வகுப்பு வாரிசுகள், (3) தாயாதிகள், (4) உறவு வழியர் ஆகியோர் நான்குவகை வாரிசுகள் ஆவர். இவ் வாரிசுகளின் நிலையும் தெளிவாக வரிசைப் படுத்தப் பட்டிருக்கிறது. முன்னதாக உள்ள வகுப்பில் எந்த வாரிசுமே இல்லை என்றால்தான் அடுத்து வரும் வகுப்பிலுள்ள வாரிசு உரிமை பெற முடியும்.

முதல் வகுப்பிலுள்ள வாரிசுகள் பின் வருமாறு :

(1) மகன்.

(2) மகள்.

(3) விதவை.

(4) தாயார்.

(5) முன்னதாக இறந்துவிட்ட மகனின் மகன்.

(6) முன்னதாக இறந்துவிட்ட மகனின் மகள்.

(7) முன்னதாக இறந்துவிட்ட மகளின் மகன்.

(8) முன்னதாக இறந்துவிட்ட மகளின் மகள்.

(9) முன்னதாக இறந்துவிட்ட மகனின் விதவை;

(10) முன்னதாக இறந்துவிட்ட மகனுடைய முன்னதாக இறந்துவிட்ட மகனின் மகன்.

(11) முன்னதாக இறந்துவிட்ட மகனுடைய முன்னதாக இறந்துவிட்ட மகனின் மகள்.

(12) முன்னதாக இறந்துவிட்ட மகனுடைய முன்னதாக இறந்துவிட்ட மகனின் விதவை.

இந்த முதல் வகுப்பில் சொல்லப்பட்டிருக்கும் வாரிசுகள் அனைவரும் சொத்தை ஒரே சமயத்தில் சம பங்குடன் அடைவார்கள். ஆனால், பேரன்கள், பேத்திகள், கொள்ளுப் பேரன்கள் ஆகியோர் பிரதிநிதித்துவ முறைப்படி சொத்தை அடையபவர்கள். ஆதலால், தங்களுடைய பெற்றோர்கள் உயிரோடு இருக்கும் காலத்தில் சொத்தை அடைய வாய்ப்பில்லை. எனவே முதல் வகுப்பில் சொல்லப்பட்டிருக்கும் 12 வாரிசுகளும் ஒரு சொத்தை ஒரே சமயத்தில் அடைவது சாத்தியமல்ல.

இரண்டாவது வகுப்பில் சொல்லப் பட்டிருக்கும் வாரிசுகள் பின்வருமாறு :

I. தந்தை.

II. மகன் வழிப் பேத்தியின் மகன்; மகன் வழிப் பேத்தியின் மகள்; சகோதரன்; சகோதரி.

III. மகள் வழிப் பேரனின் மகன்; மகள் வழிப் பேரனின் மகள்; மகள் வழிப் பேத்தியின் மகன்; மகள் வழிப் பேத்தியின் மகள்

IV. சகோதரன் மகன்; சகோதரி மகன்; சகோதரனின் மகள்; சகோதரி மகள்.

V. தந்தை வழிப் பாட்டன்; தந்தை வழிப் பாட்டி.

VI. தந்தையின் விதவை; சகோதரனின் விதவை.

VII. தந்தையின் சகோதரர்; தந்தையின் சகோதரி.

VIII. தாய் வழிப் பாட்டன்; தாய் வழிப் பாட்டி.

IX. தாயின் சகோதரன்; தாயின் சகோதரி.

இதில் சகோதரன், சகோதரி என்று சொல்லும் போது தாய் இரத்தவழி (Uterine Blood) சகோதரன், சகோதரி என்று எண்ணக் கூடாது. மேலே உள்ள 6ஆவது எண்ணில் சொல்லப் பட்டிருக்கும் தந்தையின் விதவை என்பது மாற்றாந் தாயைக் குறிக்கும். ஏனென்றால் ஈன்றெடுத்த தாய் முதல் வகுப்பிலேயே இடம் பெற்றுவிடுகிறாள். இதைப் போலவே எண் 8-ல் சொல்லப்பட்டிருக்கும் தாய்வழிப் பாட்டனும், தாய்வழிப் பாட்டியும் மாற்றாந் தாயின் தந்தையையோ, தாயையோ குறிக்காது. எண் 9ல் சொல்லப்பட்டிருக்கும் தாயின் சகோதரனும் சகோதரியும் மாற்றாந் தாயின் சகோதரனையோ, சகோதரியையோ குறிக்காது.

முதல் இரண்டு வகுப்பிலும் வாரிசுகள் இல்லை என்றால் தாயாதிகள் வாரிசுரிமை பெறுவார்கள். இறந்தவனின் தாயாதி என்பவன் இரத்த சம்பந்தத்தால் அல்லது தத்து எடுப்பால் முழுவதும் ஆண்கள் வழியில் உறவாக வருபவன். தாயாதி முழு இரத்த உறவாகவும் இருக்கலாம்; அரை இரத்த உறவாகவும் இருக்கலாம். தாயாதிகளும் இல்லை என்றால், உறவு வழியர் உரிமை பெறுவர். இறந்தவனின் உறவு வழியர் இரத்த சம்பந்தத்தால் அல்லது தத்து எடுப்பால் முழுவதும் ஆண்கள் வழி அல்லாமல் உறவாக வருபவர்.

இந்தச் சட்டம் அமலாவதற்கு முன்னால் உரிமை இறக்கப் பிரச்சினை தோன்றியிருக்குமானால், இந்த எட்டாவது பிரிவு பொருந்தாது.[14]

சொத்து செல்லும் முறை

9ஆவது பிரிவு 8ஆவது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் பின்னிணைப்பு பட்டியலிலுள்ள நபர்கள் சொத்தை அடையும் முறையைக் கூறுகிறது. முதல் வகுப்பில் சொல்லப்பட்டிருக்கும் வாரிசுகள் மற்ற வாரிசுகளை நீக்கிவிட்டு ஒரே சமயத்தில் சொத்தை அடைவார்கள். இரண்டாவது வகுப்பிலுள்ள வாரிசுகள் ஒரே சமயத்தில் சொத்தை அடைய முடியாது. இதுதான் முதல் வகுப்பு வாரிசுகளுக்கும் இரண்டாவது வகுப்பு வாரிசுகளுக்கும் உள்ள முக்கிய வேறுபாடு. இரண்டாவது வகுப்பில் உறவினர்கள் வரிசைப் படுத்தப்படுகிறார்கள். மொத்தம் 9 வரிசைகள் இருக்கின்றன. முதலில் முதல் வரிசையினர், பின்னர் இரண்டாவது வரிசையினர் என்று முறைப்படி வாரிசுகள் சொத்தை அடைவார்கள்.

வாரிசுகள் மத்தியில் விநியோகம்

அடுத்து வரும் 10ஆவது பிரிவிலும் 11ஆவது பிரிவிலும் பின்னிணைப்புப்பட்டியல் முதல் வகுப்பிலும் இரண்டாவது வகுப்பிலும் சொல்லப்பட்டிருக்கும் வாரிசுகள் எப்படிச் சொத்தைப் பிரித்துக் கொள்வார்கள் என்பது கூறப்பட்டிருக்கிறது. 10ஆவது பிரிவில் சொல்லப்படுவது:

1. உயில் எழுதாமல் இறந்தவனின் விதவை ஒரு பங்கு பெறுவாள். ஒன்றுக்கு மேற்பட்ட விதவைகள் இருந்தால் அத்தனை விதவைகளும் சேர்ந்து ஒரு பங்கு பெறுவார்கள்.

[14] Eramma *Vs* Veerupanna 1966 S.C. 1879.

2. உயிரோடு இருக்கும் மகன்கள், மகள்கள், தாயார் ஆகியோர் ஒவ்வொருவரும் ஒரு பங்கு பெறுவார்கள்.

3. ஒரு மகன் தன்னுடைய வாரிசுகளை விட்டுவிட்டு இறந்து விட்டால் அவன் வழி வாரிசுகள் அனைவரும் சேர்ந்து அவனுக்குரிய ஒரு பங்கைப் பெறுவார்கள். அதைப் போலவே ஒரு மகள் தன்னுடைய வாரிசுகளை விட்டு விட்டு இறந்துவிட்டால், அவளுடைய வழி வாரிசுகள் அனைவரும் சேர்ந்து அவளுக்குரிய ஒரு பங்கைப் பெறுவார்கள்.

4. இறந்துவிட்ட மகனின் வாரிசுகளான விதவை, மகன்கள், மகள்கள் ஆகியோர் அவனுடைய சொத்தில் சம பங்கு பெறுவார்கள். இறந்துவிட்ட மகனுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகள் இருந்தால், அவர்கள் அத்தகை பேரும் ஒரு பங்கு பெறுவார்கள். இறந்துவிட்ட மகனின் மகள்களுள் ஒருவன் இறந்து போயிருந்தால் அம் மகனுடைய கிளை ஒரு பங்கு பெறும்.

5. இறந்துவிட்ட மகளுடைய சொத்தில் அவள் வழி வரும் உயிருடன் இருக்கும் வாரிசுகளான மகன்களும், மகள்களும் சமபங்கு பெறுவார்கள்.

ஓர் ஆண் இரண்டு விதவைகளையும், மகன்களையும், மகள்களையும் விட்டுவிட்டு இறந்தால், ஒவ்வொரு மகனும், மகளும் ஒரு பங்கு பெறுவார்கள். இரு விதவையும் சேர்ந்து ஒரு பங்கு பெறுவார்கள். இரு விதவையும் சேர்ந்து ஒரு பங்கு பெற்றுக் கூட்டாக அனுபவிப்பார்கள். இரு விதவைகளில் ஒரு விதவை இறந்து விட்டால் இன்னொரு விதவையோடு கூட்டாக அனுபவித்த அவளுடைய பங்கு, அவளுடைய வாரிசுகளுக்குச் செல்லுமே தவிர உயிரோடு இருக்கும் இன்னொரு விதவைக்குச் செல்லாது.[15]

11ஆவது பிரிவில், இரண்டாவது வகுப்பில் சொல்லப்பட்டிருக்கும் வாரிசுகள் இறந்தவனின் சொத்தை எந்த விகிதத்தில் எப்படிப் பிரித்துக் கொள்வார்கள் என்பது சொல்லப்பட்டிருக்கிறது. அதன்படி இரண்டாவது வகுப்பில் ஒவ்வொரு வரிசையிலும் சொல்லப்பட்டிருக்கும் வாரிசுகள் உயில் எழுதாது இறந்தவனின் சொத்தைச் சமபங்காகப் பிரித்துக் கொள்வார்கள்.

முதல் வகுப்பில் உள்ள வாரிசுகள் யாருமே இல்லை என்றால் தான் இரண்டாவது வகுப்பில் உள்ள வாரிசுகளுக்கு உரிமை

15 Mani *Vs* Ramakrishna (1970) Mah. L.J. Note 23 Bom.

கிடைக்கும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டியது மிக முக்கியம். மேலும், அதில் கொடுக்கப்பட்டிருக்கும் 9 எண்களில் உள்ள வாரிசுகள் ஒன்றன்பின் ஒன்ருகவே உரிமை பெறுவார்கள். ஆனல், ஒரே எண்ணிலுள்ள வாரிசுகள் ஒரே சமயத்தில் சம பங்கு பெறுவார்கள். எடுத்துக்காட்டாக இரண்டாவது எண்ணில் நான்கு வாரிசுகள் இருக்கிருர்கள். அவர்கள் மகன்வழிப் பேத்தியின் மகன், மகன்வழிப் பேத்தியின் மகள், சகோதரன், சகோதரி ஆகியோர். இந்த நான்கு பேரும் ஒன்ருகச் சொத்தை அடைவார்கள்; சமமாகப் பங்கிட்டுக் கொள்வார்கள்.

தாயாதிகள், உறவு வழியர் மத்தியில் உரிமை இறக்க முறை

12ஆவது பிரிவு தாயாதிகள், உறவு வழியர் மத்தியில் உள்ள உரிமை இறக்க முறையைக் கூறுகிறது. இதில் முதல் உரிமை உறவு வழியரைவிடத் தாயாதிகளுக்கே உண்டு என்பதை நினைவில் கொள்ள வேண்டும். தாயாதிகள் மத்தியிலும் உறவு வழியர் மத்தியிலும் எந்தத் தாயாதிக்கு அல்லது எந்த உறவு வழியருக்கு முதல் இடம் கொடுப்பது என்பதை நிர்ணயிபபதில் சில விதி முறைகள் உண்டு. அவையாவன:

1. இரண்டு வாரிசுகள் இருந்தால், அதில் எந்த வாரிசுக்கு ஏறுமுறைத் (ascent) தலைமுறை இல்லையோ அல்லது குறைவாக இருக்கிறதோ அந்த வாரிசு முதல் இடம் பெறுவான்.
2. இரண்டு பேருக்குமே ஏறுமுறைத் தலைமுறைகள் ஒன்ருகவோ அல்லது இல்லாமலோ இருந்தால் இறங்குமுறைத் (descent) தலைமுறை குறைவாக உள்ள அல்லது இல்லாத வாரிசு முதல் இடம் பெறுவான்.
3. மேலே உள்ள இரு விதிகளின்படியும் யாருக்கு முதல் இடம் தருவது என்பதை நிர்ணயிக்க முடியவில்லை என்ருல், இருவரும் ஒரே சமயத்தில் சொத்தை அடைவார்கள்.

மேலே சொல்லப்பட்ட விதிகளைச் சில எடுத்துக்காட்டுகளால் எளிதாகப் புரிந்து கொள்ளலாம். முதல்விதி இரண்டு வாரிசுகள் இருந்தால், அதில் எந்த வாரிசுக்கு ஏறுமுறைத் தலைமுறை இல்லையோ அல்லது குறைவாக இருக்கிறதோ அந்த வாரிசு முதல் இடம் பெறுவான் என்று கூறுகிறது. எந்த வாரிசு கொடிவழி முன்னவரின் வழித்தோன்றலாக இருக்கிருனே அதாவது கிட்ட உறவு வழியில் இருக்கிருனே அவன் எட்ட உறவு வழியில்

வருபவனைவிட முதல் இடம் பெறுவான். மகன்வழிப் பேரனுடைய மகன்வழிப் பேரனும் சகோதரனுடைய மகன்வழிப் பேரனும் இருந்தால், இதில் மகன்வழிப் பேரனுடைய மகன்வழிப் பேரன் முதல் இடம் பெறுவான். ஏனெனில், அவன் வழித்தோன்றலாக இருக்கிறான். மேலும், இறந்தவனின் வழியில் வருவதால் கிட்ட உறவினன் ஆகிறான். சகோதரனின் மகன்வழிப் பேரனோ தன்னுடைய வழியில் வராமல் தந்தை வழியில் வருவதால் அவனுக்கு முதல் இடம் கிடைக்காது. அதைப் போலவே சகோதரனின் மகன்வழிப் பேரனா அல்லது தந்தையினுடைய சகோதரனின் மகள் வழிப் பேரனா என்ற கேள்வி சொத்துரிமைப் பிரச்சினையில் எழுந்தால், சகோதரனின் மகன்வழிப் பேரனுக்கே முதல் இடம் கிடைக்கும். ஏனெனில் சகோதரனின் வழித் தோன்றல்கள் கிட்ட வழியான தந்தையின் வழியில் உறவாகிறார்கள். ஆனால், தந்தையின் சகோதரனின் வழித்தோன்றல்கள் பாட்டன் வழியில் வருவதால் எட்ட உறவாகி விடுகிறார்கள். எனவே தாயாதிகள், உறவு வழியர் மத்தியில் வாரிசுகளை நிர்ணயிக்கும் போது எந்த வாரிசு கிட்ட உறவு எந்த வாரிசு எட்ட உறவு என்பதைக் கவனிக்க வேண்டும். இந்த வாரிசுகள் மத்தியில் ஆண், பெண் என்ற பேதம் கிடையாது. எடுத்துக்காட்டாக, தந்தைவழிப் பாட்டனின் சகோதரனும், தந்தைவழிப் பாட்டனின் சகோதரியும் சமமாகவே சொத்தை அடைவார்கள்.

இரண்டாவது விதி, இரண்டு பேருக்குமே ஏறுமுறைத் தலைமுறைகள் ஒன்றாகவோ அல்லது இல்லாமலோ இருந்தால், இறங்குமுறைத் தலைமுறை குறைவாக உள்ள அல்லது இல்லாத வாரிசு முதல் இடம் பெறுவான் என்று கூறுகிறது. அதாவது பொது மூதாதையரிடமிருந்து ஒரே வழியில் இரண்டு வாரிசுகள் இருந்தால், யார் கிட்ட உறவினனோ அவனே முதல் இடம் பெறுவான். எடுத்துக்காட்டாக, தந்தையின் சகோதரன் மகனும் தந்தையின் சகோதரனுடைய பேரனும் இருந்தால், முன்னால் சொல்லப்பட்டவனுக்கே முதல் இடம் கிடைக்கும். சொத்துக்கு உரிமைகோரும் வாரிசுகள் இருவரும் ஒரே நிலையில் இருந்தால், இருவரும் சொத்தில் சமபங்கு பெறுவார்கள். எடுத்துக்காட்டாகத் தந்தையினுடைய தந்தை வழிப் பாட்டனும் தந்தையினுடைய தாய்வழிப் பாட்டியும் சமமாகச் சொத்தை அடைவார்கள். இதில் ஆண் பெண் பாகுபாட்டிற்கு இடம் கிடையாது.

தலைமுறையைக் கணக்கிடுதல்

13ஆவது பிரிவில் தலைமுறையை எவ்வாறு கணக்கிட்டுத் தீர்மானிப்பது என்பது சொல்லப்பட்டுள்ளது. தொன்றுதொட்டு

இருந்துவரும் முறையையே இப் பிரிவு ஏற்றுக்கொண்டிருக்கிறது. தாயாதிகள், உறவு வழியர் மத்தியில் உரிமை இறக்க முறையைத் தீர்மானிக்கும் விஷயத்தில் உறவு முறையானது உயில் இல்லாமல் இறந்தவனிடமிருந்து வாரிசுகள் வரை ஏறுமுறைத் தலைமுறை அல்லது இறங்கு முறைத் தலைமுறை அல்லது இவை இரண்டிலும் கணக்கிடப்படும். அப்படிக் கணக்கிடப்படும் போது உயில் எழுதாமல் இறந்தவர் ஒரு தலைமுறையாகச் சேர்த்துக் கொள்ளப் படுவார். ஏறுமுறையிலும் இறங்கு முறையிலும் ஒவ்வொரு தலைமுறையும் தனித் தலைமுறையாகக் கொள்ளப்படும்.

பெண்ணின் சொத்து

இந்து உரிமை இறக்கச் சட்டம் வருவதற்கு முன்னால் ஸ்மிருதிகளில் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கும் சொத்துகளை மாத்திரமே பெண்கள் முழு உரிமையோடு வைத்திருந்தார்கள். மரபு முறை இறங்குரிமையாலோ அல்லது பாகப்பிரிவினையாலோ ஒரு பெண் அடையும் சொத்தில் அவளுக்கு முழு உரிமை இல்லாமல் இருந்தது. அதை அவள் உயிரோடு இருக்கும்வரை அனுபவிக்க மட்டுமே முடியும். சட்டரீதியான தேவை எழுந்தாலன்றி அச் சொத்தை அவள் மாற்றுக்கம் செய்ய முடியாது. மேலும், அவளுக்குப் பின்னர் சொத்து அவளுடைய வாரிசுகளுக்குச் செல்லாது. அதைக் கடைசியாக முழு உரிமையுடன் அனுபவித்த நபரின் வாரிசுகளுக்கே செல்லும். பெண்களுடைய சீதனச் சொத்திலும் உரிமை இறக்கம் ஒரே மாதிரியாக இருக்கவில்லை. பல்வேறு பகுதிகளில் பல்வேறு முறைகள் இருந்தன. ஆனால், இந்து உரிமை இறக்கச் சட்டம் பெண்களுக்கு இழைக்கப் பட்டிருந்த அநீதிகளை அகற்றி, சீதனச் சொத்திலும் உரிமை இறக்கத்தைச் சீர்படுத்தியது.

இச் சட்டத்தின் 14 ஆவது பிரிவு பெண்களுக்குச் சொத்தில் முழு உரிமை தந்திருக்கிறது. அதன் சாராம்சம் இதுதான். இந்தச் சட்டம் வருவதற்கு முன்னாலோ அல்லது பின்னாலோ ஓர் இந்துப் பெண் தன் உடைமையில் வைத்துக் கொண்டிருக்கும் எந்தச் சொத்தையும் இனி முழு உரிமையுடன் வைத்துக் கொள்ளலாம். அவள் வரையுரிமையுடன் வைத்துக் கொள்ள வேண்டியதில்லை. இங்கே சொத்து என்பதில் அசையும் சொத்து அசையாச் சொத்து இரண்டும் அடங்கும். அச் சொத்தை அவள் மரபுமுறை இறங்குரிமையாலோ, அல்லது வேறு வழியாலோ அல்லது பாகப் பிரிவினையாலோ அல்லது பராமரிப்புக்குப் பதிலாகவோ அல்லது பராமரிப்பு நிலுவையாகவோ (Arrears of Maintenance)

திருமணத்திற்கு முன்னும் பின்னும் உறவினராலும் மற்றவராலும் கொடுக்கப்பட்ட கொடையாகவோ அல்லது தன்னுடைய திறனாலோ அல்லது முயற்சியாலோ அல்லது விலைக்கு வாங்கியதாலோ அல்லது அனுபவப் பாத்தியதையாலோ அல்லது வேறு எந்த முறையாலேயோ அடைந்திருக்கலாம். மேலும், இச் சட்டம் வருவதற்கு முன்னால் அவள் சீதனமாக வைத்திருந்ததும் 'சொத்து' என்பதில் அடங்கும்.

ஆனால், அவள் சொத்தைக் கொடையாகவோ அல்லது உயில் வழியிலோ அல்லது வேறு முறை ஆவணத்தின்படியோ (Instrument) அல்லது உரிமையியல் நீதி மன்றத்தின் கட்டளை அல்லது தீர்ப்பாணைப்படியோ அல்லது இசைவுத் தீர்ப்பாளரின் முடிவுப்படியோ அடைந்திருந்து, அவைகள் சொத்தைச் சில கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தியிருந்தால் இப் பிரிவின் விதிகள் அவ்விதக் கட்டுப்பாடுகளுக்கு விரோதமாகச் செல்லாது.

14ஆவது பிரிவின் நோக்கம் பழைய சட்டப்படி வரை உரிமையோடு சொத்தை அனுபவித்த பெண்ணுக்கு முழு உரிமை வழங்குவதே தவிர வேறு முறை ஆவணத்தின்கீழ்ப் பெற்ற சொத்துக்களுக்கும் அவளை முழு உரிமையாளராக ஆக்குவதல்ல.[16] இந்தப் பிரிவு அமலாக வேண்டுமானால் இந்தச் சட்டம் வந்த நாளில் அவளுடைய உடைமையில் சொத்து இருந்திருக்க வேண்டும். அந்தச் சொத்தை அவள் எப்படி அடைந்தாள் என்பது இப் பிரிவிற்குச் சம்பந்தமில்லாத விஷயம். இப் பிரிவில் உடைமை என்பது நேரடி உடைமை யாகவும் (Actual Possession) இருக்கலாம்; கொள்நிலை உடைமையாகவும் (Constructive Possession) இருக்கலாம். (ஒரு வீடு குடியிருப்பவரிடம் இருப்பது நேரடி உடைமை; அந்த வீட்டில் சொந்தக்காரருக்கு இருப்பது கொள்நிலை உடைமை.) அல்லது சட்டம் அங்கீகரித்த எந்த முறையிலும் இருக்கலாம்.

14ஆவது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் சொத்து என்பதில் விவசாய நிலங்களும் அடங்கும்[17]. நில எடுப்புச் சட்டத்தின் கீழ்க் (Land Acquisition Act) கட்டாயமாக எடுக்கப்பட்ட சொத்திற்கு ஈடாகக் கொடுக்கப்படும் தொகையும் சொத்து என்பதில் அடங்கும்[18]. இந்தச் சட்டம் வருவதற்கு முன்னால் ஓர் இந்துப்

[16] Prema devi *Vs* Director of Consolidation.

[17] Shakunthala Devi *Vs* Beni Madhav AIR 1964 All 165; Amar Singh *Vs* Baldeo Singh AIR 1966 Punjab 666 (F.B.)

[18] Saila Bala Dasi *Vs* Saila Bala Dasi AIR 1916 Cal. 26.

பெண் கணவன் இறந்ததும் சொத்தை அடைந்து, அந்தச் சொத்தைத் தொடர்ந்து வைத்துக் கொண்டிருக்கும் காலத்திலேயே மதம் மாறி இருந்தால், சொத்தில் அவளுக்கு இருக்கும் வரையுரிமை முழு உரிமையாகாது. ஏனெனில், இச் சட்டம் வரும்போது அவள் இந்துவல்ல.. இந்து அல்லாதவளுக்கு இச் சட்டம் அமலாகாது.

14ஆவது பிரிவின் உட்பிரிவில், ஒரு பெண் சொத்தைக் கொடை, முறை ஆவணம், நீதிமன்றக் கட்டளை, இசைவுத் தீர்ப்பு ஆகியவற்றுள் ஏது ஒன்றினாலாவது அடைந்திருந்தால், அது விதித்திருக்கும் கட்டுப்பாட்டை மீற முடியாது என்று சொல்லப்பட்டுள்ளது. இந்த உட்பிரிவு அமலாக வேண்டுமானால் சொத்தை அவள் அதில் குறிப்பிட்டுள்ள ஏது ஒன்றினாலாவது அடைந்திருக்க வேண்டும், அதாவது சொத்தின் உரிமை மூலம், (Title) கட்டுப்பாட்டை ஏது விதிக்கிறதோ அதன்மூலம் வந்திருக்க வேண்டும்[19]. ஏற்கெனவே ஓர் இந்துப் பெண்ணுக்கு ஒரு குறிப்பிட்ட சொத்தில் இருக்கும் பாத்தியதையை ஒருமுறை ஆவணம் (Instrument) பிரகடனப்படுத்துமானால் இந்த உட்பிரிவு அமலாகாது.[20]

இந்துப் பெண்கள் உரிமை இறக்கத்தில் பொதுவிதிகள்

ஓர் இந்துப்பெண் உயில் எழுதாமல் இறந்துவிட்டால், அவளுடைய சொத்து யார் யாருக்குச்செல்லும், எந்தெந்த விதிகளின்படி செல்லும் என்பவை முறையே 15ஆவது பிரிவிலும் 16ஆவது பிரிவிலும் கூறப்பட்டுள்ளன. 15ஆவது பிரிவுப்படி கீழ்க் காண்பவர்கள் உயில் எழுதாது இறக்கும் ஓர் இந்துப் பெண்ணின் வாரிசுகளாவார்கள். சொத்து அவர்களுக்கு வரிசைப்படி செல்லும்.

(அ) முதலில் மகன்களுக்கும், மகள்களுக்கும், கணவனுக்கும் செல்லும். இதில் மகன்கள், மகள்கள் என்று சொல்லும் போது முன்னதாக இறந்துவிட்ட மகன் அல்லது மகளுடைய குழந்தைகளும் அடங்குவர்.

(ஆ) இரண்டாவதாகக் கணவனின் வாரிசுகளுக்குச் செல்லும்.

(இ) மூன்றாவதாகத் தாயாருக்கும், தந்தைக்கும் செல்லும்.

(ஈ) நான்காவதாகத் தந்தையின் வாரிசுகளுக்குச் செல்லும்.

(உ) இறுதியாகத் தாயாரின் வாரிசுகளுக்குச் செல்லும்.

19 Pattabiraman *Vs* Parijatham AIR 1970 Mad. 237.

20 Chhoojuram *Vs* Bhuri AIR 1969 Delhi 273; Sasadhar *Vs* Tara Sundari AIR 1962 Cal. 438. Janaki Dulari *Vs* District Judge AIR 1961 All 294.

மேலே சொல்லப்பட்டுள்ள உரிமை இறக்க வரிசைக்கு இரண்டு விதிவிலக்குகள் உண்டு ஒருத்தி தன் தாயாரிடமிருந்தோ அல்லது தந்தையிடமிருந்தோ மரபு முறை இறங்குரிமையாகச் சொத்தை அடைந்திருந்து, அவளுக்கு மகனோ, மகளோ அல்லது மகன் மகளுடைய குழந்தைகள் யாருமே இல்லாதிருந்தால், அச் சொத்து மேலே கண்டவாறு செல்லாது. மாறாக, தந்தையின் வாரிசுகளுக்கே செல்லும். அதைப் போலவே ஒருத்தி தன் கணவனிடமிருந்தோ அல்லது மாமனாரிடமிருந்தோ மரபு முறை இறங்குரிமையாகச் சொத்தை அடைந்திருந்து, அவளுக்கு மகனோ, மகளோ அல்லது மகன் மகளுடைய குழந்தைகள் யாருமே இல்லாதிருந்தால், அச் சொத்து மேலே கண்டவாறு (இப் பிரிவின் தொடக்கத்தில் கண்டவாறு) செல்லாது. மாறாகக் கணவனின் வாரிசுகளுக்கே செல்லும்.

இப் பிரிவில் 'அ'வில் சொல்லப்பட்டிருக்கும் வாரிசுகள் 'ஆ' வில் சொல்லப்பட்டிருக்கும் வாரிசுகளைவிட முதல் இடம் பெறுவார்கள். இதைப் போலவே முன்னால் உள்ள எண்ணில் உள்ளவர்கள் பின்னால் உள்ள எண்ணில் உள்ளவர்களைவிட முதல் இடம் பெறுவார்கள். தந்தையும் தாயும் சொத்தை அடையும்போது ஒரே சமயத்தில் அடைவார்கள். இதைப் போலவே ஒரே தலைமுறையில் இருக்கும் கணவனின் வாரிசுகள், தந்தையின் வாரிசுகள், தாயாரின் வாரிசுகள் அனைவரும் ஒரே சமயத்தில் சொத்தை அடைவார்கள்.[21] பாகப்பிரிவினையில் தந்தை பெற்ற சொத்தை அடைந்த மகள், குழந்தைகள் இல்லாமல் இறந்துவிட்டால், இச் சட்டத்தின் 15ஆவது பிரிவும் 16வது பிரிவுமே அமலாகும். மேலும், இப் பிரிவுகள் ஒரு பெண்ணுக்கு முழு உரிமை உள்ள சொத்துகளுக்கே பொருந்திவரும்.

15ஆவது பிரிவில் கூறப்பட்டிருக்கும் வாரிசுகள் எந்த முறையில் என்ன விகிதத்தில் பங்கு பெறுவார்கள் என்பது 16ஆவது பிரிவில் கூறப்பட்டுள்ளது. 15ஆவது பிரிவில் வாரிசுகள் 'அ','ஆ' 'இ', 'ஈ', 'உ' என்று வரிசைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். இதில் முதல் உரிமை 'அ' வரிசைக்கு; அடுத்த உரிமை 'ஆ' வரிசைக்கு. இம் முறைப்படி அடுத்தடுத்து வரும் வரிசையின் வாரிசுகள் உரிமை பெறுவார்கள். ஒரே வரிசையில் பல வாரிசுகள் இருந்தால் அவர்கள் ஒரே சமயத்தில் உரிமை பெறுவார்கள். உயில் எழுதாமல் இறந்தவளுடைய மகனோ அல்லது மகளோ தாயாருக்கு முன்னால் இறந்து போயிருந்தால், பின்னர் தாயார் இறக்கும்போது இருக்கும் மகனுடைய அல்லது மகளுடைய வாரிசுகள் முன்னதாக

[21] Mallappa *Vs* Shivappa AIR 1962 Mys. 140.

இறந்துவிட்ட மகன் அல்லது மகள் உயிரோடு இருந்தால் என்ன பங்கு பெற்றிருப்பார்களோ அப் பங்கைப் பெறுவார்கள். ஆனால், அவள் சொத்தைக் கணவன் அல்லது தந்தை அல்லது தாயாரிடமிருந்து மரபு முறை இறங்குரிமையாகப் பெற்றிருந்தால், அச் சொத்து 15ஆவது பிரிவில் கண்டவாறு, அவள் யார் யாரிடமிருந்து பெற்றாளோ அவர்களுடைய வாரிசுகளுக்கே செல்லும்.

17ஆவது பிரிவு

மருமக்கள் தாயம், அலிய சந்தானச் சட்டம் ஆகியவற்றால் ஆளப்படும் நபர்கள் விஷயத்தில் உரிமை இறக்கம் சம்பந்தமாகச் செய்யப்பட்டுள்ள சிறப்பு வழிகளை 17ஆவது பிரிவு கூறுகின்றது. அதன்படி கீழ்க்காண்பவர்கள் ஓர் இந்து ஆணுடைய வாரிசு ஆவார்கள்: (1) பின்னிணைப்புப்பட்டியல் முதல் வகுப்பில் சொல்லப் பட்டிருப்பவர்கள். (2) முதல் வகுப்பில் சொல்லப்பட்டிருப்பவர்கள் யாரும் இல்லை என்றால் அதே பின்னிணைப்புப்பட்டியலின் இரண்டாம் வகுப்பில் சொல்லப்பட்டிருப்பவர்கள். (3) இரண்டு வகுப்பிலுமே சொல்லப்பட்டிருப்பவர்கள் யாரும் இல்லை என்றால் அவனுடைய உறவினர்கள், (உறவினர்கள் தாயாதிகளாயிருந்தாலும் சரி, உறவு வழியராயிருந்தாலும் சரி) கீழ்க்காண்பவர்கள். உயில் எழுதாது இறக்கும் பெண்ணுடைய வாரிசுகள் ஆவார்கள். (அ) முதலில் மகன்கள், மகள்கள், தாயார் (முன்னதாக இறந்துவிட்ட மகன் அல்லது மகளுடைய குழந்தைகளும் இதில் அடங்குவார்கள்). (ஆ) இரண்டாவதாக தந்தை, கணவன். (இ) தாயாரின் வாரிசுகள். (ஈ) தந்தையின் வாரிசுகள். (உ) கணவனின் வாரிசுகள். ஆனால், ஓர் இந்துப் பெண் கணவனிடமிருந்தோ அல்லது மாமனாரிடமிருந்தோ மரபுமுறை இறங்குரிமையாகச் சொத்தை அடைந்திருந்தால், அவளுக்கு மகனோ அல்லது மகளோ (அல்லது முன்னதாக இறந்துவிட்ட மகனுடைய அல்லது மகளுடைய குழந்தைகளோ) இல்லாதிருக்கும் காலத்து, அவள் அடைந்த சொத்து. அவளுக்குப் பிறகு பின்னிணைப்புப்பட்டியலில் சொல்லப்பட்டிருக்கும் வாரிசுகளுக்குச் செல்லாது. மாறாகக் கணவனின் வாரிசுகளுக்கே செல்லும்.

உரிமை இறக்கம் சம்பந்தமாகப் பொது விதிகள்—முழு இரத்தத்திற்கு முதல் இடம்

எல்லா வகையிலும் ஒரே மாதிரியான உறவு முறை உள்ள வாரிசுகள் உயில் எழுதாமல் இறந்த நபருக்கு இருந்தால், அவர்களுள் முழு இரத்த வாரிசுகளுக்கே அரை இரத்த வாரிசுகளைவிட முதல் இடம் கிடைக்கும். இவ்வாறு 18ஆவது பிரிவு கூறுகிறது.

இரண்டுக்கு மேற்பட்ட வாரிசுகள்

19ஆவது பிரிவுப்படி இரண்டோ அல்லது அதற்கு மேற்பட்ட வாரிசுகள் ஒன்றாகச் சொத்தை அடையும்போது, இச் சட்டத்தில் வெளிப்படையாகச் சொல்லப்பட்டிருந்தாலொழிய தலைவிகிதப் படியே (per capita) சொத்தை அடைவார்கள். கிளைவிகிதப்படி (perstripes) அல்ல. மேலும், அவர்கள் பொது நிலச் சொத்துரிமையரே தவிரக் கூட்டுச் சொத்துரிமையர் அல்லர்.

தாய் வயிற்றில் இருக்கும் குழந்தையின் உரிமை

தாய் வயிற்றில் இருக்கும் குழந்தையின் உரிமை பற்றி இருபதாவது பிரிவு கூறுகின்றது. உயில் எழுதாமல் ஒருவன் இறக்கும் போது, தாய் வயிற்றில் ஒரு குழந்தை இருந்து, பின்னர் உயிரோடு பிறக்குமானால், அக் குழந்தை இறந்தவன் இறக்கு முன்னரே பிறந்த குழந்தையாகக் கருதப்படும். எனவே, அக் குழந்தைக்கு மரபுமுறை இறங்குரிமை உண்டு. உயில் எழுதாது இறந்தவன் இறந்த தேதியிலிருந்தே அக் குழந்தையின் உரிமை அதனிடம் சேர்ந்தடைந்து விட்டதாகக் கொள்ளப்படும்.

ஒரே சமயத்தில் இருவர் இறத்தல்

ஒரே சமயத்தில் இரண்டு பேர் யார் முதலில் இறந்தது என்பதைத் தீர்மானிக்க முடியாத சூழ்நிலையில் இறந்துபோனால், உரிமை இறக்கம் சம்பந்தமான செயல்களுக்காக, வேறு வகையில் நிருபிக்கப்படும் வரையில், இறந்தவர்களுள் மூத்தவனே முதலில் இறந்தவனாகக் கருதப்படுவான்.

சில முதல் நிலை உரிமைகள்

22ஆவது பிரிவில் சொத்தை அடைவதில் சிலருக்குள்ள முதல் நிலை உரிமைகள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. உட்பிரிவு ஒன்றில் உயில் எழுதாது இறந்தவனின் வாரிசுகளில் யார்யாருக்கு அந்த உரிமை உண்டு என்று சொல்லப்பட்டுள்ளது. உட்பிரிவு இரண்டில் அப்படி உரிமைகோரும் வாரிசு பிரதிபலனாகத் தர வேண்டிய தொகையின் அளவும், உட்பிரிவு மூன்றில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சகவாரிசுகள் உரிமை பெற விரும்பினால் ஏற்படும் நிலையும் கூறப்பட்டுள்ளன. ஒரு நபருக்கு அசையாச் சொத்து அல்லது வியாபாரத்தில் உரிமை இருந்து உயில் எழுதாது இறந்து போனால், அந்த உரிமை பின்னிணைப்புப்பட்டி முதல் வகுப்பு வாரிசுகளுக்குச் செல்லும். அப்போது யாராவது ஒரு வாரிசு தன் உரிமையை மாற்றுக்கம் செய்ய விரும்பினால் மற்ற வாரிசுகளுக்கு அம் மாற்றுக்கத்தைப் பெற முதல் உரிமை

உண்டு. இது போன்ற விஷயத்தில் முதல் உரிமை பெற எட்டு அம்சங்கள் முக்கியமானவை:

1. சொத்து அசையாச் சொத்தாகவோ அல்லது வியாபார மாகவோ இருக்க வேண்டும்.
2. வாரிசுகள் பின்னிணைப்புப்பட்டியலின் முதல் வகுப்பில் உள்ளவர்களாக இருக்க வேண்டும்.
3. அந்த வாரிசுகளில் ஒரு வாரிசு தன் உரிமையை மாற் றுக்கம் செய்ய முன்வர வேண்டும்.
4. மாற்றுக்கம் பெற விரும்பும் வாரிசின் உரிமை முதல்நிலை உரிமையே தவிர முழு உரிமை அன்று.
5. மாற்றுக்கம் செய்வதற்கு நிர்ணயிக்கப்படும் விலையைச் சம்பந்தப்பட்டவர்களே முடிவு செய்து கொள்ளலாம். முடிவு செய்ய முடியவில்லை என்றால் நீதிமன்றத்தால் முடிவு செய்யப்படும்.
6. அதற்காக நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும்.
7. நீதிமன்றம் நிர்ணயிக்கும் விலையை ஒப்புக்கொள்ள மாற் றுக்கம் பெறுபவன் மறுத்தால் செலவுத் தொகையைக் கொடுக்க வேண்டும்.
8. ஒன்றுக்கு மேற்பட்ட வாரிசுகள் மாற்றுக்கம் பெறப் போட்டியிட்டால் அதிக விலை தருபவனுக்கே அதிலும் முதல் உரிமை கிடைக்கும்.

குடியிருக்கும் வீடு

23ஆவது பிரிவு குடியிருக்கும் வீட்டைப் பாகம் பிரித்துக் கொள்வது சம்பந்தமாகவும் அதில் ஆண் வாரிசுகளுக்கும் பெண் வாரிசுகளுக்கும் இருக்கும் உரிமை சம்பந்தமாகவும் கூறுகிறது. இப் பிரிவின் சாராம்சம் கீழ்வருமாறு:

1. இறந்த நபர் ஆணாயிருந்தாலும், பெண்ணாயிருந்தாலும் உயில் எழுதாது இறந்திருக்க வேண்டும்.
2. வாரிசுகள் பின்னிணைப்புப்பட்டியலின் முதல் வகுப்பில் உள்ளவர்களாக இருக்க வேண்டும்.
3. இறந்துபோன நபரின் சொத்தில் குடியிருக்கும் வீடும் இருக்க வேண்டும்.
4. அந்த வீட்டில் இறந்துபோன நபரின் குடும்பத்தார் குடி யிருக்க வேண்டும்.

5. ஆண் வாரிசுகள் அவ் வீட்டைப் பிரிக்கக் கோருமுன் பெண் வாரிசுகள் பாகப்பிரிவினை கேட்க முடியாது.

6. பிரிக்கப்படும்வரை அவ் வீட்டில் இருக்கப் பெண் உறுப்பினருக்கு உரிமை உண்டு. பெண் உறுப்பினர் மகளாயிருந்தால் அவள் திருமணம் ஆகாதவளாக அல்லது விதவையாக அல்லது கணவனைவிட்டுத் தனியாக வாழ நேரிட்டவளாக இருக்க வேண்டும்.

ஓர் இந்து ஆணோ அல்லது பெண்ணோ உயில் எழுதாது இறந்து போனால்தான் இந்தப் பிரிவு அமலாகும். ஓர் ஆண் உயில் எழுதாது இறந்துபோனால், குடியிருக்கப் பாத்தியதை உள்ள பெண் வாரிசுகள் அவனுடைய மகள், விதவை, தாயார், முன்னதாக இறந்துவிட்ட மகனுடைய மகள் முன்னதாக இறந்துவிட்ட மகளுடைய மகள், முன்னதாகஇறந்து விட்ட மகனின் விதவை, முன்னதாக இறந்துவிட்ட மகனுடைய முன்னதாக இறந்த மகனின் மகள் ஆகியோர் ஆவர். ஒரு பெண் உயில் எழுதாது இறந்துபோனால், குடியிருக்க பாத்தியதை உள்ள பெண் வாரிசுகள் மகள்கள், முன்னதாக இறந்துவிட்ட மகனுடைய மகள்கள், முன்னதாக இறந்துவிட்ட மகளுடைய மகள்கள் ஆகியோர் ஆவர். இதில் திருமணமாகாத மகள் கற்புநெறி தவறியவளாக இருந்தாலும், குடியிருக்கும் உரிமையைக் கேட்கலாம்: திருமணம் ஆகாத மகள் திருமணம் செய்து கொண்டதும் குடியிருக்கக் கோரும் உரிமையை இழந்து விடுவாள். அதைப் போலவே விதவை மகள் மறுமணம் புரிந்து கொண்டதும் அவ்வுரிமையை இழந்து விடுவாள்.

விதவை மறுமணம்

முன்னதாக இறந்துவிட்ட மகனின் விதவை, முன்னதாக இறந்துவிட்ட மகனுடைய மகனின் விதவை, சகோதரனின் விதவை ஆகியோர் உயில் எழுதாமல் இறந்துவிட்ட நபரின் வாரிசாக இருந்து உரிமை இறக்கம் வரும் தேதியில் மறுமணம் புரிந்து கொண்டவர்களாக இருந்தால், அவர்கள் சொத்தை அடைவதற்கு உரிமை கிடையாது. 24ஆவது பிரிவில் சொல்லப்பட்டிருப்பதை, வேறு வார்த்தைகளில் சொல்வதானால், உரிமை இறக்கம் நடந்த பிறகு மேலே சொன்ன விதவைகள் மறுமணம் புரிந்துகொண்டால், சொத்தை அடையும் உரிமையை இழக்கமாட்டார்கள். ஆனால், உரிமை இறக்கம் ஏற்படுவதற்கு முன்பு மறுமணம் புரிந்து கொண்டால் அவர்களுக்குச் சொத்தை அடையும் உரிமை கிடையாது.

கொலைகாரனுக்குத் தகுதியில்லை

25ஆவது பிரிவுப்படி கொலை செய்தவனோ அல்லது கொலைக்கு உடந்தையாக இருந்தவனோ கொலை செய்யப்பட்டவனின் சொத்தை அடைய முடியாது. அதைப்போலவே உரிமை இறக்கத்தை முன்னிட்டுக் கொலை செய்தவனோ அல்லது அதற்கு உடந்தையாக இருந்தவனோ அந்தக் குற்றத்தின் பயனாகச் சொத்தை அடைய முடியாது. கொலையுண்டவனின் சொத்தை அதைச் செய்தவனும், செய்ய உடந்தையாக இருந்தவனும், அக் குற்றத்தின் பயனாக அடையக்கூடாது என்பது நேர்மை நெறியின் அடிப்படையில் எழுந்த கோட்பாடாகும்.[22] இக் கோட்பாட்டிற்கு இப் பிரிவில் சட்ட வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது.

மதமாற்றம்

இச் சட்டம் வருவதற்கு முன்னாலோ அல்லது பின்னாலோ இந்து ஒருவன் மதம் மாறியதாலே இந்துவாக இல்லாதிருந்தால், மதம் மாறியதற்குப் பிறகு அந்த நபருக்குப் பிறந்த குழந்தைகளும் அவர்களுடைய வழித் தோன்றல்களும் (உரிமை இறக்கம் ஏற்படும் காலத்தில் அக் குழந்தைகளும், வழித் தோன்றல்களும் இந்துவாக இருந்தாலொழிய,) வேறு இந்து உறவினரின் சொத்தை அடைய முடியாது. இந்த 26 ஆவது பிரிவு மதம் மாறியவன் சொத்தை அடைவதைத் தடுக்கவில்லை ஏற்கெனவே வகுப்புத் தகவவின்மை நீக்கச் சட்டம் ஒருவன் மதம் மாறியதால் சொத்துரிமை இழப்பதை நீக்கி விட்டது. அந்த அளவில் இப் பிரிவு அதற்கு முரணாக இல்லை. இந்தப் பிரிவு அப்படி மதம் மாறியவனின் குழந்தைகள் அவனுடைய பிற உறவினர்களின் சொத்தில் பாத்தியதைக் கொண்டாடுவதையே தடை செய்கிறது. ஆனால், இதற்கும் ஒரு விதி விலக்கு உண்டு. மதம் மாறியவனின் குழந்தைகள் இந்துவாக மாறிவிட்டால் அவர்கள் தந்தையின் உறவினர்கள் சொத்தில் உரிமை கொண்டாடலாம். எடுத்துக்காட்டாக 'அ' 'த' என்று இரண்டு சகோதரர்கள் இருப்பதாக வைத்துக்கொள்வோம். 'த' கிறிஸ்தவனாக மதம் மாறிக் குழந்தைகளையும் பெறுகிறான். 'அ' வின் சொத்துக்கு மதம் மாறிய 'த' வாரிசாக இருக்க வாய்ப்புண்டு. ஆனால், அவனுடைய குழந்தைகளுக்கோ அல்லது வழித்தோன்றல்களுக்கோ வாரிசாக இருக்க உரிமை கிடையாது. ஆனால், 'த' வின் குழந்தைகள் பின்னாளில் இந்துவாக மாறி 'அ' வின் சொத்துக்கு உரிமை இறக்கம் உண்டாகும் நாளில் இந்துவாக இருந்தால் அப்போது உரிமை உடையவர்கள் ஆவார்கள்.

[22] Kencha *Vs* Girimallappa 46 B 569 47 M.L.J. 401.

தகுதி இல்லாத வாரிசும் உரிமை இறக்கமும்

27ஆவது பிரிவுப்படி எந்த ஒரு நபருக்காவது சொத்தை அடைவதற்குந் தகுதியில்லை என்றால், அந்த நபர் உயில் எழுதாது இறந்த நபருக்கு முன்னரே இறந்துவிட்டதாக எண்ணப்பட்டு, அந்த அடிப்படையில் சொத்தும் அவரைவிடுத்து ஏனைய உரிமை யுடையோருக்குச் செல்லும்.

எந்த ஒரு நபரும் நோய், குறை அல்லது உடல் ஊனம் ஆகிய வற்றின் அடிப்படையில் உரிமை இறக்கத்தை இழக்க வேண்டிய தில்லை என்று 28ஆவது பிரிவு கூறுகின்றது. இந்தச் சட்டத்தில் ஏதாவது அது பற்றிச் சொல்லப்பட்டிருந்தாலொழிய வேறு அடிப் படையில் நோயோ, குறையோ அல்லது உடல் ஊனமோ ஒரு தகுதியின்மையாகாது.

உயில் எழுதாது இறந்துவிட்ட நபருக்குத் தகுதி உள்ள வாரிசே கிடையாதென்றால், அந்த நபருடைய சொத்து அரசாங் கத்திற்குச் செல்லும் என்று 29ஆவது பிரிவு கூறுகின்றது. ஒரு வாரிசு இருந்தால், அவனுக்கு என்னென்ன கடமைகளும் பொறுப்புகளும் உண்டோ அவைகளுக்கு உட்பட்டு அரசாங்கம் அச் சொத்தை எடுத்துக் கொள்ளும்.

உயில்வழி உரிமை இறக்கம்

30ஆவது பிரிவுப்படி எந்த இந்துவும் இந்திய உரிமை இறக் கச் சட்டம் 1925ல் (Indian Succession Act, 1925) கூறியுள்ள வாறு அல்லது அந்தச் சமயத்தில் இந்துக்களுக்கு அமலில் உள்ள சட்டத்தில் கூறியுள்ளவாறு, கொடுக்கப்படக் கூடிய சொத்தை உயில் வழியாகக் கொடுக்கலாம். கொடுக்கப்படக் கூடிய சொத்து என்று சொல்லும்போது அதில் மிதாக்ஷரப் பங்குரிமை, தரவாடு, தாவழி, இலாட்டம், குடும்ப அல்லது கவறு ஆகியவற்றில் ஒருவனுக்குள்ள உரிமை யாவும் அடங்கும். இந்தப் பிரிவின் முக்கிய அம்சம் பங்குரிமையருக்கு உயில் எழுதும் உரிமை கொடுக்கப்பட்டிருப்பதுதான், இந்த உரிமை மருமக்கள்தாயம், அலியசந்தானம், தரவாடு, தாவழி, இலாட்டம் ஆகியவற்றின் உறுப்பினர்களுக்கும் உண்டு.

31ஆவது பிரிவு இறுதிப் பிரிவு. இச் சட்டத்தால் ரத்தான சட்டங்கள் யாவை என்று அது கூறுகின்றது. இந்து மரபு முறை இறங்குரிமைச் (திருத்தம்) சட்டம் 1929 (The Hindu Law of Inheritance (Amendment) Act of 29) இந்து மகளிர் சொத் துரிமைச் சட்டம் 1937 (Hiudu Women's Rights to Property Act 1937) ஆகியவை ரத்து செய்யப்பட்ட சட்டங்களாகும்.

பின்னிணைப்புப் பட்டியல்
(SCHEDULE)

வாரிசுகள்

வகுப்பு I

1. மகன்
2. மகள்
3. விதவை
4. தாயார்
5. முன்னதாக இறந்துவிட்ட மகனின் மகன்
6. முன்னதாக இறந்துவிட்ட மகனின் மகள்
7. முன்னதாக இறந்து விட்ட மகளின் மகன்
8. முன்னதாக இறந்துவிட்ட மகளின் மகள்
9. முன்னதாக இறந்துவிட்ட மகனின் விதவை
10. முன்னதாக இறந்த மகனுடைய முன்னதாக இறந்து விட்ட மகனின் மகன்
11. முன்னதாக இறந்துவிடட்ட மகனுடைய முன்னதாக இறந்து விட்ட மகனின் மகள்
12. முன்னதாக இறந்து விட்ட மகனுடைய முன்னதாக இறந்து விட்ட மகனின் விதவை

வகுப்பு II

(I) தந்தை

(II) மகன் வழிப் பேத்தியின் மகன்; மகன் வழிப் பேத்தியின் மகள்; சகோதரன்; சகோதரி

(III) மகள் வழிப் பேரனின் மகன்; மகள் வழிப் பேரனின் மகள்; மகள் வழிப் பேத்தியின் மகன்; மகள் வழிப் பேத்தியின் மகள்

(VI) சகோதரன் மகன்; சகோதரி மகன்; சகோதரன் மகள்; சகோதரி மகள்

(V) தந்தை வழிப்பாட்டன்; தந்தை வழிப்பாட்டி

(VI) தந்தையின் விதவை; சகோதரனின் விதவை

(VII) தந்தையின் சகோதரர்; தந்தையின் சகோதரி

(VIII) தாய்வழிப்பாட்டன்; தாய்வழிப் பாட்டி

(IX) தாயின் சகோதரன்; தாயின் சகோதரி

(இதில் சகோதரன் சகோதரி என்று சொல்லும்போது தாய் இரத்த வழிச் (Uterine Blood) சகோதரன், சகோதரி என்று எண்ணற்க.)

கலைச்சொற்கள்

A

Abinitio	—	ஆரம்பத்திலிருந்து
Absolute Estate	—	முழு உரிமைச் சொத்து
Accretion	—	சேர்மானம்
Accrual	—	உரிமைச் சேர்வு; உரிமை அடைவு
Actual Possession	—	நேரிடை உடைமை
Adoption	—	தத்து எடுப்பு
Adultery	—	பிற நபர் புணர்தல்
Adverse Possession	—	எதிர் நிலை உடைமை
Affidavit	—	பிரமாணப் பத்திரம்
Agnate	—	தாயாதி; தந்தை வழியர்
Alienation	—	மாற்றுக்கம்
Alience	—	மாற்றுக்கம் பெறுபவர்
Alimony	—	பிரிமனைப் பணம்
Anticcdent Debt	—	முன் கடன்
Appeal	—	மேன் முறையீடு
Arbitation	—	இசைவுத் தீர்ப்பு
Arrears	—	நிலுவை
Ascendants	—	ஏறு முறை உறவினர்

B

Benami Transaction	—	பினாமி நடவடிக்கை
Beneficial Interest	—	பயன்பெறும் பாத்தியதை
Beneficiary	—	பயனாளி
Bigamy	—	இரு துணை மணம்

C

Case Law	—	தீர்ப்பு வழிச் சட்டம்
Character	—	குணாம்சம்
Charge	—	பிணை
Civil Jurisdiction	—	உரிமையியல் அதிகாரம்
Code of Civil Procedure	—	உரிமையியல் நடைமுறைச் சட்டம்

C—cont.

Code of Criminal Procedure	— குற்றவியல் நடைமுறைச் சட்டம்
Cognate	— உறவு வழியர்
Collateral Descendant	— கிளை வழி இறக்கம்
Collusion	— வஞ்சக் கூட்டு
Common Law	— செய்யாச் சட்டம்
Commentary	— உரை
Congenital	— பிறவியிலேயே உள்ள
Conjugal Rights	— தாம்பத்திய உறவு உரிமைகள்
Consanquinity	— இரத்த உறவு
Consideration	— பிரதி பலன்
Constructive Posssession	— கொள்நிலை உடைமை
Contingent Interest	— நிகழ்வடை உரிமை
Co-Parcener	— பங்குரிமையர்
Custom	— வழக்கம்

D

Damages	— இழப்பீடு
Decree	— தீர்ப்பாணை
Deed	— ஒப்பாவணம்
De-Facto	— நிகழ்வு நிலை
De-Factoguardian	— நிகழ்வுநிலைக் காப்பாளர்
Dependent	— சார்ந்திருப்பவர்
Descendant	— வழித்தோன்றல்
Directory	— அறிவுரைக் கட்டளையாக
Disability	— தகவின்மை
Discretion	— விருப்புத் தேர்வு
Disillusion	— கலைப்பு
Divorce	— மணமுறி
Document	— ஆவணம்

E

Enactment	— இயற்றிய சட்டம்
Equity	— நேர்மை நெறி
Estate	— நிலச் சொத்து
Estoppel	— முரண் தடை
Evidence	— சான்று
Execution	— நிறைவேற்றம்
Exparte	— மறு தரப்பில்லா
Express	— வெளிப்படை

F

Fiduciary Relationship — நம்பக உறவு
Fraud — மோசடி

G

Gift — கொடை
Guardian — காப்பாளர்

H

Half Blood — அரை இரத்தம்
Heir — வாரிசு
Heriditary — பரம்பரையான

I

Idiot — பிறவி மந்தன்
Illegitimacy — முறையிலா மணப் பிறப்பு
Impartible — பிரிக்க முடியாத
Impotency — நபும்சகம்
Immovable property — அசையாச் சொத்து; தாவரச் சொத்து
Incamera — மறைவாக
Inheritance — மரபு முறை இறங்குரிமை
Injunction — உறுத்துக் கட்டளை
Insanity — பித்து நிலை
Instrument — முறையாவண
Interest — நலன்
Interest vested — சேர்ந்தடை உரிமை
Intestate — உயில் எழுதாமல்

J

Joint and several Liabilities — கூட்டுத் தனித்தனிப் பொறுப்பு
Joint and Tenancy — கூட்டு நிலச் சொத்துரிமை
Judicial Separation — நீதி முறைப்பிரிவு
Legislation — சட்டமியற்றல்

L

Legislature — ஆட்சி மன்றம்
Legitimacy — முறைமணப் பிறப்பு
Lexloci — தலச் சட்டம்
Liability — பொறுப்பு நிலை

L—cont.

Life interest	—	ஆயுள் உரிமை
Limited Estate	—	வரை சொத்துரிமை
Limited Interest	—	வரை உரிமை
Lunacy	—	பித்து நிலை

M

Maintenance	—	பராமரிப்பு
Major	—	உரிமை வயது வந்தவர்
Majority	—	உரிமை வயது
Mandatory	—	உரிமைக் கட்டளையாக
Mortgage	—	அடைமானம்
Movable property	—	அசையும் சொத்து

N

Nagative	—	எதிர் மறையான
Notice	—	அறிக்கை
Null and void	—	இல்லா நிலையது

O

Order	—	கட்டளை

P

Partition	—	பாகப்பிரிவினை
Per-Capita	—	தலை விகிதம்
Personal Law	—	இனமுறைச் சட்டம்
Perstripes	—	கிளை விகிதம்
Possession	—	உடைமை
Preamble	—	தோற்றுவாய்
Presumption	—	துணிபு
Primafacie	—	முதல் நோக்கு
Proclamation	—	சாற்றுரை
Promissory note	—	கடன் உறுதிச் சீட்டு
Propositus	—	கொடி வழி முன்னவர்
Provisoo	—	கட்டு வாசகம்

Q

Qualified Interest	—	வரையறை உரிமை

R

Receiver	—	பேணுநர்
Recital	—	வாசகங்கள்

R—cont.

Repeal — ரத்து
Resjudicata — தீர்ப்புத் தடை
Reversional — பின்னடை உரிமையர்

S

Saving clause — விலக்கு வாசகம்
Schedule — பின்னிணைப்பு பட்டியல்
Schools — முறைகள்
Section — பிரிவு
Spes successionus — எதிர் நோக்கு இறங்குரிமை
Statute — இயற்றிய சட்டம்
Step-Mother — மாற்ருந்தாய்
Substantive Law — நிலைமுறைச் சட்டம்
Succession — உரிமை இறக்கம்
Surrender — வரையுரிமை விடுப்பு
Survivorship — எஞ்சுநர் உரிமை

T

Tenancy-In-Commission — பொதுநிலச் சொத்துரிமை
Testamentary — உயில் பற்றிய
Title — உரிமை மூலம்
Title Deeds — உரிமை மூல ஆவணம்
Transfer — உரிமை மாற்றம்

U

Usage — வழக்காறு
Uterine Blood — தாய்வழி இரத்த உறவு

V

Veneral Disease — மேக நோய்
Vested Interest — சேர்ந்தடை உரிமை
Void — இல்லா நிலையது
Voidable — தவிர்தகு

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
28	14	உறுத்துக்கடனுல்	உறுத்துக்கட்டளையால்
50	4	Degree	Decree
52	33	தன்வருமானம்	தனிவருமானம்
80	1	துறையிலா	முறையிலா
100	13	கொடுக்கவும்	தொகுக்கவும்
130	2	மங்கை	பங்கை
133	18	சம்பந்தத்தையும்	சம்மதத்தையும்
158	4	அவனுடைய	அவளுடைய
158	8	Reversions	Reversioners